தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி - 620 002.

தமிழாய்வுத்துறை - ஆய்விதழ்

வளன் ஆயம்



இதழ் - 13

மார்ச் 2010

வளன் ஆயம்

ஆய்விதழ்

இதழ் - 13 மார்ச் – 2010

வெளியீடு

தமிழாய்வுத்துறை

தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,

(A+ தரத்தகுதியும், செயல்திற ஆற்றல் வளத்தகுதியும் பெற்றது)

திருச்சிராப்பள்ளி–620 002.

இதழ் விவரம்

ஆய்விதழ் : **வளன் ஆயம்** இதழ் - 13

பதிப்பு : மார்ச், 2010

வெளியீடு : **தமிழாய்வுத்துறை**
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
A+ தரத்தகுதியும் செயல்திற ஆற்றல்
வளத்தனித்தகுதியும் பெற்றது.
திருச்சிராப்பள்ளி - 620 002.

எழுத்து : 12 புள்ளி

பக்கங்கள் : 240

விலை : ரூ.200

அருள்திரு. பி. சூசை சே.ச.
அதிபர்,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி–2.

வாழ்த்துரை

10–03–2010

உயர்தனிச் செம்மொழியாகவும் பண்பட்ட மொழியாகவும் திகழ்வது நம் தாய்மொழியாம் தமிழ்மொழியாகும். இத்தகைய வளமிக்க தமிழ்மொழியில் காலந்தோறும் பல்லாயிரக்கணக்கான இலக்கியங்கள் தோன்றி வருகின்றன. அவற்றில் பல்வேறு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய இலக்கியத்திறனாய்வுப் பணியினை எம் கல்லூரித் தமிழாய்வுத்துறையானது சிறப்பாகச் செய்து வருவதைக்கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். தூய வளனார் கல்லூரித் தமிழாய்வுத்துறை மேற்கொண்டு வரும் இலக்கிய ஆராய்ச்சிப் பணியின் ஒரு பகுதியாகத் திகழ்வதுதான் 'வளன் ஆயம்' என்னும் ஆய்விதழ் ஆகும்.

ஆண்டுதோறும் வெளியிடப்பட்டுவரும் தமிழ்த்துறைப் பேராசிரியர்களின் ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெறுவதோடு, நாடறிந்த தமிழறிஞர்களின் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளும் இடம் பெறுவது பாராட்டத்தக்க முயற்சியாகும். அந்த வகையில் 13வது ஆய்வு இதழாக இவ்வளனாயம் இதழ் தற்போது வெளிவருகின்றது. கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் இந்த இதழ் வெளிவரப் பெரிதும் முயற்சி மேற்கொண்ட தமிழ்த்துறைத் தலைவர், ஏனைய பேராசிரியப் பெருமக்கள், அறக்கட்டளைச் சொற்பொழிவாளர்கள் அனைவருக்கும் எனது அன்புகலந்த நல்வாழ்த்துக்கள்.

அருள்திரு. பி.சூசை சே.ச.
அதிபர்.

அருள்திரு. இர.இராசரத்தினம் சே.ச.,
முதல்வர்,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-2

அணிந்துரை

தமிழிலக்கியங்களையும் தமிழர் பண்பாட்டையும் வளர்த்தெடுக்கும் பெரும்வேள்வியில் ஈடுபட்டு வருகின்ற எம் கல்லூரியின் தமிழ்த்துறை, நூல்களை வெளியிடும் முயற்சியில் முன்னணியில் நின்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்து வருகிறது. தமிழ் ஆய்வுகளின் புதிய நோக்குகளையும் போக்குகளையும் தமிழுலகிற்கு அடையாளப்படுத்தும் விதத்தில் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகின்ற ‘வளன்ஆயம்’ ஆய்விதழ் இக்கல்வியாண்டும் புதுப்பொலிவுடன் நம் கைகளில் தவழ்கிறது.

கருத்துப்பெட்டகமாக விளங்குகின்ற இந்த ஆய்விதழில் சங்க இலக்கியம் தொடங்கி ஹைகூ கவிதைகள் வரையிலான தமிழ்ப்பரப்பின் ஆய்வுத்தடங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. வாய்மொழி வழக்காறுகளாக அறியப்படுகின்ற நாட்டுப்புற இலக்கியங்கள் புதிய நோக்கில் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. கிறித்தவம் தமிழுக்கு ஆற்றியுள்ள பங்களிப்பைப் பெருமிதத்துடன் சான்று காட்டி விளக்குவதோடு, தமிழக சேசுசபை முன்வைக்கின்ற சுற்றுச்சூழல் குறித்த சிந்தனைகளையும் பறைசாற்றுகிறது. புவிவெப்பமடைதல் ஏற்படுத்தும் விளைவுகளைக் குறித்த ஆழ்ந்த கவலை இதனுள் பதிவுசெய்யப்பெற்றுள்ளது.

மனித வாழ்க்கையின் சார்புநிலைகளையும், ஆரோக்கிய வாழ்விற்கு மேற்கொள்ளவேண்டிய பயிற்சியினையும், ஆன்மீக நெறிகளில் காணலாகும் உலகாயுதத்தையும் எடுத்துக்காட்டுவதால் இதனை வாழ்வியல் நூலாகவும் அறியமுடிகிறது. தமிழில் நாள்தோறும் வளர்ந்துவருகின்ற புதிய திறனாய்வுப் போக்குகளை எடுத்துரைக்கும் விதத்தில் ஒப்பிலக்கியம், எதிர்காலவியல், நவீனத்துவம் போன்ற கட்டுரைகளும் இதனுள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு இலக்கணம், இலக்கியம், வாழ்வியல், சூழலியல், திறனாய்வு, கிறித்தவம் போன்ற பன்முகச்சிந்தனைகளைக் கொண்டதாக வெளிவரும் இவ்விதழ் ஆய்வாளர்களுக்கு புதிய ஆய்வுக்களங்களைக் கண்டறியத் துணைசெய்யும் என்பதில் ஐயமில்லை. தமிழ்த்துறையின் இத்தகைய எழுத்துப்பணிகள் தமிழுக்கும் நாளைய தலைமுறைகளுக்கும் பயன்படும் விதத்தில் நாளும் தொடரவேண்டும் என்று வாழ்த்துகிறேன். கல்விவழி மனிதம் மலரச்செய்யும் நோக்கில் இலக்கியங்களை மட்டுமன்றி உறவுகளை மலரச்செய்யும் புதிய மாண்புகளையும் மாணவர்களுக்குப் புலப்படுத்தும் தமிழ்த்துறையின் முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

திருச்சிராப்பள்ளி-2
10-03-2010

அருள்திரு. இர. இராசரத்தினம் சே.ச.
முதல்வர்

முனைவர் அ.குழந்தைசாமி,
துறைத் தலைவர்.
தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-2

பதிப்புரை

தமிழகத்தின் மையப்பகுதியாக விளங்கும் திருச்சிராப்பள்ளியில் ஒரு சிறந்த கலைக்கோயிலாகத் திகழ்வது தூய வளனார் கல்லூரியாகும். 'உண்மைக்கும் நன்மைக்கும்' என்னும் விருதுவாக்கினை நடைமுறைப்படுத்தி வரும் இக்கல்லூரியின் ஒப்பற்ற துறையாக விளங்குவது தமிழாய்வுத் துறையாகும். இத்துறையில் ஆய்வுசெய்து இதுவரை 27 முனைவர்களும், நூற்றுக்கும் மேற்பட்ட இளமுனைவர்களும் உருவாகியுள்ளனர். ஆண்டுதோறும் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் சிறந்த நூல்களையும் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் படைத்து வருகின்றனர். தற்போது நாற்பதுபேர் இத்துறையில் முனைவர்பட்ட ஆய்வினைச் செய்து வருகின்றனர். மேலும் 'வளன் ஆயம்' என்னும் ஆய்விதழை ஆண்டுதோறும் வெளியிடும் துறையாகவும் தமிழ்த்துறை திகழ்கின்றது. தற்போது 13ஆம் இதழாக இவ்விதழ் வெளிவருவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த இதழில் தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளர்களின் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளும், தமிழ்த்துறைப் பேராசிரியர்களின் ஆய்வுக் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. இவ்விதழுக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் கட்டுரை எழுதி வழங்கியுள்ள தமிழ்ச் சான்றோர்களுக்கு என் மனமார்ந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். இந்த இதழ் உருவாகி வெளிவருவதற்கு இடைவிடாத உற்சாகத்தையூட்டிய கல்லூரி முதல்வர் அருள்முனைவர் இர. இராசரத்தினம் சே.ச. அடிகளார்க்கு என் இதயப்பூர்வமான நன்றியை உரித்தாக்குகின்றேன். தமிழ்த்துறையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி வரும் எம் அதிபர் தந்தை அருள்திரு. பி. சூசை சே.ச., தமிழ்ப்பற்றுமிக்க எம் செயலர் தந்தை அருள்முனைவர்

S.ஜான்பிரிட்டோ சே.ச. ஆகியோருக்கும் பெரிதும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இதில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளை பல்வேறு பணிகளுக்கிடையேயும் அழகுற அச்சாக்கம் செய்து கொடுத்த அருமை இளவல் பேரா.லா.சார்லஸ் அவர்கட்கு மனம் நிறைந்த பாராட்டுக்களையும் நன்றியையும் கூறிக்கொள்கின்றேன். ஆய்வுக் கட்டுரைகளைத் திருத்தம் செய்து கொடுத்த அன்புப் பேராசிரியர்கள் ஞா. பெஸ்கி, செ. கென்னடி, ஜா.பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ் ஆகியோர்க்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

வாழ்க வையகம்!

இவண் அன்புடன்,

12–03–2010 முனைவர் அ.குழந்தைசாமி

திருச்சிராப்பள்ளி–620 002. துறைத்தலைவர்.

உள்ளடக்கம்

17. இலியட் காப்பியத்தில் நம்பிக்கைகள்
பேரா.பாக்கிய செல்வ ரதி
18. ஜி.யு.போப் அவர்களின் தமிழ்ப்பணி
முனைவர் இராம. குருநாதன்
19. தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வுகள்
முனைவர் இரா. மோகன்
20. தமிழ் ஆராய்ச்சியில் இன்றைய நிலை
பேரா.கு.வெ.பாலசுப்பிரமணியன்
21. பரிமேலழகரின் உரைத்திறன்
முனைவர் சா.சிற்றரசு
22. இக்காலத் தமிழும் இலக்கணமும்
முனைவர் பா.மதிவாணன்
23. இத்தாலியிலிருந்து வந்த சின்ன சவேரியார் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஆற்றிய பணி
முனைவர் ச.சாமிமுத்து
24. முனைவர் ச.சாமிமுத்துவின் ஆதியாகம காவியத்தில் இறையனுபவம் - இலக்கியப் படைப்பு நுட்ப நோக்கு
முனைவர் அ. அந்தோனிகுருசு
25. தஞ்சைப் புலவர் தாமஸ் படைப்புகளில் கவித்திறன்
முனைவர் இர.ஆரோக்கியசாமி
26. புராதன தமிழ்ச் சமூகமும் சங்க மரபுகளின் தோற்றமும்
முனைவர் சிலம்பு நா.செல்வராசு
27. அகத்திணைக் கோட்பாடுகள்
முனைவர் க. சேக்மீரான்
28. மலைபடுகடாம் - ஓர் அறிமுகம்
முனைவர் ப.ஆறுமுகம்
29. புவி வெப்பமடைதல் - விளைவும் தீர்வும்
பேரா.தி.வெ.இராசேந்திரன்
30. அறநூலாரின் நீராதாரச் சிந்தனைகள்
முனைவர் டே.கிறிஸ்துமணி
31. சுதேசமித்ரன் இதழ் தொகுப்பில் வெளிவந்த கவிதைகளில் சூழலியல் சிந்தனைகள்
ஜா.அருணா

தமிழில் ஒப்பிலக்கியத் தோற்றமும் வளர்ச்சியும்

முனைவர் அ.குழந்தைசாமி,
தமிழ்த்துறைத் தலைவர்,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-2

திராவிட இலக்கியங்களையும், இந்திய இலக்கியங்களையும் ஒப்பு நோக்கிக் கற்றவனுடைய கல்வியறிவு மிகவும் பரந்துள்ளதாய் இருத்தல் ஒருதலை. இந்த ஒப்பு நோக்கும் கல்வி நமது அறிஞர்களுடைய குறுகிய மனப்பான்மை என்னும் திண்ணிய சுவரை இடித்துத் தகர்த்துவிடும் என்று எஸ். வையாபுரிப்பிள்ளை ஒப்பியல் துறையின் இன்றியமையாமையைப் புலப்படுத்துவார்.

தமிழில் ஒப்புநோக்கும் பரந்த நோக்கு இல்லாமையை ஒப்பிலக்கணத் தந்தையாகிய கால்டுவெல் அவர்கள் "ஐரோப்பாவில் ஒப்பியல் கல்வி, ஒவ்வோர் அறிவியல் துறையிலும் செழித்துள்ளது. திராவிடரோ தங்கள் மொழிகளைப் பிறவற்றுடன் ஒப்புநோக்க ஒருபோதும் முயன்றதில்லை. மேன்மேலும் தங்கள் மொழிகளைப் படித்தறிவதில் மிகுந்த ஆர்வம் கொண்டார்கள். இதனால் பரந்த கூரிய நோக்கு அற்றவராயினர். பகுத்து அறியும் திறனும் அற்றவராயினர்" என்கிறார்.

தமிழில் அண்மைக்காலமாகக் குறுகிய வட்டத்திலிருந்து வெளியேறி உலகளாவிய பார்வையைப் பண்பாட்டுப் பாவலை ஆராயும் ஒப்பீட்டுத் திறன் தமிழ் இலக்கியத் திறனாய்வாளரிடையே அரும்பிப் போதாகி மலராக மலரும் எண்ணம் முகிழ்த்துள்ளது.

உலக நோக்கில் பரந்த சிந்தனையுடைய மொழி தமிழ். ஒப்பிலக்கிய எல்லை பரந்துபட்ட ஒன்று. பிற இந்திய மொழி இலக்கியங்களுடனும், ஐரோப்பிய மொழி இலக்கியங்களுடனும் ஒப்பு நோக்கிக் காணும் அளப்பரிய பரப்புடையது.

தமிழில் 1885இல் ஜி.யு.போப் ஒப்பிலக்கிய உணர்வை ஊட்டினார். பழைய தமிழ்க் காப்பியங்களுக்கும், அவற்றிற்குச் சமமான கிரேக்க இலக்கியங்களுக்கும் உருவத்திலும் உள்ளடக்கத்திலும், சமுதாய நிலைமையிலும் பெரும் ஒற்றுமை காணப்படுகிறது.

1923இல் தென்னிந்திய வரலாறு என்னும் நூலை வெளியிட்ட எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கார், சங்க சான்றோர் செய்யுட்கள்,

ஓமரது இலியது காப்பியம் தோன்றக் காரணமாயிருந்த வீரக்கதைகளை ஒத்தனவாய் உள்ளன என்னும் ஒப்பிலக்கிய கருத்தைக் குறிப்பிட்டார்.

பேரா.என்.கே.சித்தாந்தா 1927இல் இந்திய வீரயுகம் என்னும் நூலில் தமிழ்ப்புறத்திணைப் பாடல்கள் பிறமொழிகளில் காணப்படும் வீரப்பாடல்க்ளுடன் ஒப்புநோக்கி ஆராயப்படும் பாங்குடையவை எனக் கருதுகிறார்.

1921-22இல் வ.வே.சு.ஐயர் சிறையில் எழுதிய கம்பராமாயணம் பற்றிய நூல் 1950இல் வெளிவந்தது. கம்பராமாயணத்தைக் கிரேக்க, இலத்தீன், ஆங்கிலக் காப்பியங்களுடன் ஒப்பிட்டுள்ளார். கம்பராமாயணத்தை ஓமரின் இலியட் காவியத்தோடும், வெர்ஜில் எழுதிய 'ஈனிட்' என்னும் காவியத்தோடும், மில்டனின் இழந்த துறக்கத்தோடும் ஒப்பிட்டுக் கூறியுள்ளார். மேலும் வியாசர், வால்மீகி இவர்களின் காப்பிய இலக்கணங்களையெல்லாம் கம்பன் வென்று விட்டதாகத் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார். வ.வே.சு.ஐயர் ஒப்பிலக்கியத் திறனாய்வு முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்கிறார். மேலைநாட்டுக் காப்பியங்களோடு இவர், ஒப்பீட்டு ஆய்வு நிகழ்த்தியது தமிழில் புதிய விடியலைத் தோன்றச் செய்தது.

1929இல் வெளிவந்த சோமசுந்தர பாரதியாரின் திருவள்ளுவர் என்ற நூல் பல்வகைத்தமிழ் நூல்களையும் குறளோடு ஒப்புமை காட்டும் நூலாகும்.

1952இல் காவியகாலம் என்னும் நூலை வெளியிட்டு வையாபுரிப்பிள்ளை புறப்பாடல்கள் வீரயுகப் பாடல்களோடு தொடர்புடையன என விளக்குகிறார்.

1953இல் ஈழத்தமிழறிஞர் தனிநாயகம் அடிகள் பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை என்னும் ஆய்வு நூலில் இயற்கை பற்றிய பழந்தமிழ்ச் செய்யுட்களைக் கிரேக்க இலத்தீன் கவிதைகளோடு ஒப்பிட்டு நோக்கியுள்ளார். திருவள்ளுவரை உலக நோக்கில் ஒப்புமைப்படுத்தி உரைத்தார்.

முனைவர் வ.சுப.மாணிக்கம் 1952இல் வெளியிட்ட 'தமிழ்க்காதல்' என்னும் ஆராய்ச்சியுரையில் கிரேக்க இலக்கியங்கள் காட்டும் பெண்மையைச் சங்கச் செய்யுட்களுடன் ஒப்பிடுகிறார். ஒப்பியல் நோக்கில் தமிழ் இலக்கியக் கட்டுரைகள் பல எழுதியுள்ளார்.

தமிழ்ப் புறப்பாடல்களையும், கிரேக்கக் காவியங்களையும் ஒப்பிட்டு ஒப்பியல் நோக்கில் விரிந்த பார்வை செலுத்திய கலாநிதி. கைலாசபதி 1966இல் தமிழில் வீரயுகப்பாடல்கள் என்னும் ஆராய்ச்சி நூலை வெளியிட்டார்.

முனைவர் மு.வ. எழுதிய பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை பற்றிய ஆய்வு ஒப்பிலக்கியப் பார்வை கொண்டது. 1966இல் கைலாசபதி வெளியிட்ட 'ஒப்பியல் இலக்கியம்' குறிப்பிடத்தக்க நூலாகும். ஒப்பியலின் தத்துவங்கள், தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வு ஆகிய இரு கட்டுரைகளும் ஒப்பியல் குறித்த சிந்தனையுடையவை. அவரது இருமகாகவிகள் என்ற ஒப்பிலக்கிய நூல் பாரதி, தாகூர் இருவரையும் பல கோணங்களில் ஒப்பிடும் நூலாகும்.

எஸ்.இராமகிருஷ்ணனின் கம்பனும் மில்டனும்(1969) என்ற நூல் சுருங்கிய அளவில் வெளியிடப்பட்ட நூல். இது ஆராய்ச்சியுரையாகப் பெருநூலாகப் பின்னர் மலர்ந்தது. 1973இல் தமிழண்ணல் எழுதிய சங்க இலக்கிய ஒப்பீடு ஒப்பிலக்கிய அறிமுகம் ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்க நூல்கள். 1975இல் கோ.சுந்தரமூர்த்தி எழுதிய பழந்தமிழ் 'இலக்கியக் கொள்கைகள்', கதிர்மகாதேவன் எழுதிய கவிதை 'கிழக்கும் மேற்கும்' முதலான நூல்கள் ஒப்பிலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையானவை.

தொ.மு.சி.ரகுநாதனின் 'கங்கையும் காவிரியும்', பாரதியும் ஷெல்லியும்' முதலான நூல்கள் ஒப்பியல் பார்வையில் வெளிவந்தவை. சி.கனகசபாபதி எழுதிய 'பாரதி-பாரதிதாசன்' பற்றிய ஒப்பீட்டு நூல் விரிந்த பார்வையுடையது.

மகாகவி பாரதியாரின் கவிதைகளில் மேலைநாட்டுப் புலவர்களின் தாக்கம் The impact western troughts என்னும் ஒப்பிலக்கிய நூலில் டாக்டர் வி.சச்சிதானந்தம் பாரதியை ஷெல்லி, கீட்ஸ், விட்மன், ்பைரன் போன்ற புலவர்களோடு ஒப்பீடு செய்த ஆய்வு நூல் குறிப்பிடத் தகுந்த நூலாகும். பாரதியையும் விட்மனையும் ஒப்பிட்டு விரிவாக ஆய்ந்த அவரது டாக்டர்பட்ட நூல் பரந்த பார்வை உடையது. ஒப்பியல் குறித்த அவரது கட்டுரைகள் ஆழ்ந்த சிந்தனையையும், ஈடுபாட்டையும் வெளிப்படுத்துவனவாகும்.

பேரா.தெ.பொ.மீனாட்சிசுந்தரம் பொறியியல் துறையிலும் ஒப்பியல் இலக்கியத் துறையிலும் ஆற்றியுள்ள பணிகள் போற்றற்குரியனவாகும். பேரா.சீனிவாசராகவன், ஜி.வான்மிகநாதன், கி.சந்திரசேகரன், ஏ.கே.இராமானுசம், பி.ஸ்ரீ, ரா.ஸ்ரீதேசிகன் போன்றோர் ஒப்பியல் நோக்கில் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

பேரா.முனைவர் கே.செல்லப்பன் அளித்து வரும் கட்டுரைகள் பல ஒப்பியல் நோக்கில் விரிந்த பார்வை உடையன. ஒப்பிலக்கியம் தொடர்பாக பேரா.ஜான் சாமுவேல் எழுதிய நூல்கள் குறிப்பிடத்தக்கன ஆகும். முனைவர் க.த.திருநாவுக்கரசு, முனைவர் தா.வே.வீராசாமி, சு.பாலசந்திரன், சண்முகம், இரா.குளோரியா, து.திருஞானசம்பந்தம், தி.ச.குப்புசாமி, மா.செண்பகம், சிற்பி, சு.நடராசன், டேனியல் தேவசங்கீதம், பத்மநாபன், விஜயலக்குமி போன்றோர் ஒப்பியல் நோக்கில் அவ்வப்போது தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்களையும் கட்டுரைகளையும் அளித்து வருகின்றனர். இவ்வாறு ஒப்பியல் ஆராய்ச்சி வளர்ந்து வரும் ஒரு சிறந்த துறையாகத் திகழ்கின்றது. எதிர்காலத்தில் தமிழ்நூல்களைப் பிறமொழிநூல்களுடன் ஒப்பிட்டு ஆராயும் போக்கு ஆய்வாளர்களிடையே காணப்பட வேண்டும். அப்போதுதான் மகாகவி பாரதியார் குறிப்பிடுள்ளதைப் போலத் தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்.

****

மனித வாழ்வும் சார்பு நிலையும்

அருள்தந்தை முனைவர் சி.மணி வளன், சே.ச.,
இணைப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-2

மனிதன் என்னும் பொழுது ஒரு சமுதாயமே இவன் தன் பின்னணியாக விளங்குகிறது. "தனி மரம் காடாதல் இல்" என்பது தமிழ் இலக்கியக் கூற்று. அவ்வாறே சமுதாயத்திற்கு அப்பாற்பட்ட ஒருவனை மனிதன் என யாம் கணிப்பதில்லை. காட்டில் விலங்குகளிடையே காணாமற் போய்விட்ட குழந்தை அங்கு வளர்ந்துவிட்ட பின்பு அதனைக் காணும் மனிதர்கள், வளர்ந்து இளைஞனாகி விட்டவனை இளைஞன் என்று அழைக்க முடியவில்லை. ஏனெனில் அவன் மிருகமாகி விட்டான். மிருகப் பண்புகளேஅவனிடம் இருந்தன. இது ஒரு பக்கம். இன்னொரு வழி கண்டால் சமுதாயத்திற்கு அப்பாற்பட்டுத் திடீர்காட்சி தருபவன் ஒருவன் ஒருவேளை இருந்தால், அவன் கடவுளாகத்தான் இருப்பான், மனிதன் அல்லன்.

ஆக, மனிதன் என்பவன் சமுதாயச் சூழலில் இருப்பவன். இம்மனிதன் சார்பு நிலையுடையவன். கொடுத்தும் வாங்கியும் உறவால் நிறைந்தும் உயிர் வாழ்பவன். மனித குலத்தின் உட்சார்பு நிலையைக் (Inter dependency) கண்டு தெளிந்து அதன் பிற பிரவாகங்களைக் காணலாம்.

சார்பு நிலையின் சாளரங்கள்

சார்பு என்ற பொருள் தரும் தமிழ்ச் சொற்கள் பல உள. அவற்றை அடைக்கலம், அணைவு, இடம், உதவி, கிட்டுகை, சேர்பு, தயவு, பற்று, துணை, புகலிடம், நம்பியிருத்தல், ஒருதலைப்பட்சம் எனலாம்.

இவ்வார்த்தையில் ஒரு சில கருத்து வேற்றுமைகள் இருப்பினும் இவற்றின் உள்ளார்ந்த பொருள் "பிறர் தயவு" என்பதில் உள்ளடக்கம் என்றுரைக்கலாம். சார்பு பற்றிச் சிந்திக்கும் போது அதன் பல்வேறு கோணங்களை எடுத்துக்காட்டுவர் அறிஞர். சார்ந்திருக்கும் மனப்பாங்குச் சான்றோர் முதல் சாதாரணர் வரை சகலருக்கும் உண்டு. என்றாலும் அதில் வேறுபாடு இல்லாமல் இல்லை.

அவையாவன.

1. சீர அழிச்சார்பு
2. சீர்மைச் சார்பு

1. சீர் அழிச்சார்பு

சீரான நிலையை அழிக்கும் சார்பு இது. வாழ்வைப் பாழாக்கிப் பண்பாட்டைத் தூளாக்கி விடும் இச்சார்பு, இருப்பதை இல்லையென்றும், இல்லாததை உண்டென்றும் சொல்ல வைப்பது, நன்மையின் வடிவில் தீமையை உட்புகுத்துவது.

ஆபத்திலிருந்தும் அயலவன் தொடர்பிலிருந்தும், அதிர்ச்சிச் செயல்களில் இருந்தும் எனப் பல்வேறு சூழல்களில் இருந்தும் ஒரு வாரும் குழந்தையைப் பெற்றோர் பாதுகாக்கின்றனர் என வைத்துக் கொள்வோம். உலகமறியாமல் பெற்றோரைச் சார்ந்தே வளரும் இந்நபரின் வாழ்வு, ஒரு தோல்வியாகவே நிறைவு பெறுகின்றது. பொத்திப் பொத்திப் பாதுகாத்துத் தம்மைச் சார்ந்தே வாழும்படிச் செய்து விட்டனர் பெற்றோர். இப்பொழுது பிஞ்சுப் பருவம் தாண்டிப் பெரியவன் ஆகிவிட்ட போதும் உலகை எதிர்கொள்ளத் திடனில்லா மனநிலை இவரிடம். "அஞ்சியஞ்சிச்சாவார், இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே" (பாரதியார்).

2. சீர்மைச்சார்பு

நாம் இயல்பாகவே இயற்கையில் காணும் சார்பு இது. செடி, கொடிகள், தோன்றி வளர்ந்து காய்த்துக் கனிதர அவற்றிற்குக் காற்று, நீர், ஒளி தேவை. இயற்கையின் கூறுகள் இயற்கையைச் சார்ந்தே உள்ளன.

பசு கன்றை ஈன்றது என்று கொள்வோம். தன் தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்த அடுத்த நிமிடமே அக்கன்று எழுந்து துள்ளிச் செல்கின்றது. தன் தாயிடம் பால் குடித்து வளரும் சார்புநிலை (பிஞ்சுப்பருவத்தில்) இருப்பினும் தன் சுதந்திரத் தன்மையைப் பிறந்தவுடன் காட்டித் துள்ளியது.

ஆனால் மனிதன் மனிதனை மிகவும் (சீர்மைச்சார்பில்) சார்ந்து வாழவேண்டும் எனும் தத்துவத்தை உள்ளடக்கி இருப்பதால் தானோ பிறந்த குழந்தை தன் தாயையோ பிறரையோ மிகவும் சார்ந்த நிலையில் (கன்று குட்டி போல் அல்லாமல்) உள்ளது. தொடர்ந்து வாழ்நாள் முழுவதும் மனிதன் பிறரைச் சார்ந்து வாழ்கிறான் என்பதை யாரும் மறுக்க முடியாது. பெற்றோர் தம் குழந்தைகளைச் சீர்மைச் சார்பில் வளர்க்கும்போது

குழந்தைகள் பண்பு நலன்களுடன் வளர்கின்றனர். தாம் பெரியவராகும் போது நற்குணங்கள் இவர்களுள் உள்ளடக்கிய ஒளிச்சுடராய் மிளிர்கின்றன.

முன்னேற்றப்பாதையை நோக்கிக் கடமையுணர்வுடன் குணநலன்களோடு செயல்பட்டு வெற்றி வாகைசூட சீர்மைச் சார்பு துணை நிற்கின்றது. ஏனெனில் "ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்" (புறநானூறு) தம் வழி நடத்துதல் இங்கு உறுதுணையாகின்றது. குடும்பத்திலோ, உலக வாழ்வின் பல்வேறு துறைகளிலோ சீர்மைச் சார்பு சிறப்புடைத்தே.

அன்றைய தமிழ்ப் பண்பாட்டில் சார்புநிலை

"தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா" எனும் இக்காலக் கோஷம் அக்காலத்தில் செயல்வடிவில் இருந்தது எனலாம். தமிழன் கடல் கடந்து உலக நாடுகளில் தன் பெருமையை நிலை நாட்டினான். ஆனால் உள்ளுக்குள் என்ன நிலை?

"வடவேங்கடம் தென்குமரி, ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்தைச்" (தொல்காப்பியம்) சிறப்பாகச் சேர, சோழ, பாண்டியர் என்ற மன்னர் ஆண்டனர்.

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்ற புறநானூற்றின் கூற்றுப்படி மன்னனின் வாழ்வே மக்களின் வாழ்வாக இருந்தது. மக்களுக்கு மன்னனே உயிர், பிற ஏதுமல்ல. எனவே இம்மன்னனுக்கு எதுவும் செய்யத் தயாராக இருந்தனர் மக்கள். இம்மன்னனைப் புகழ்ந்து பாடுவதே புலவர் தன் வாழ்வாக இருந்தது. இவர்தம் பிழைப்புக்கு வழியாக இருந்தது.

'எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே' என்று மன்னர் தம் வள்ளண்மையைப் பாடித்திரிந்தனர்.

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழும் குடி." (குறள்42)

என்ற திருக்குறள் தமிழ் மக்களின் சார்புப் பண்பாட்டை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றதன்றோ நாட்டில் இந்நிலை. வீட்டில் பெற்றோர் சொற்படி கேட்டுச் சார்ந்து வாழ்வதே சிறப்பானதாகக் கருதப்பட்டது. எனவேதான், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்ற பழமொழிகள் பழக்கத்தில் வந்தன.

கல்வியைப் பொருத்தமட்டில் மாணாக்கன் ஆசானைச் சார்ந்து வாழும் கட்டாய நிலை இருந்தது. வாய்மொழிப் பாடம்

கற்றதால் ஆசான் கட்டளைப்படி மாணாக்கன் நடந்து கொள்ள வேண்டும். சான்றாக நன்னூல் நூற்பா (40) வைக் காணலாம்.

"கேட்டவை கேட்டவை விடாது உள்ளத்தமைத்துப்
போவெனப் போதல் என்மனார் புலவர்"

இவ்வாறு இன்னும் கூறிக் கொண்டே செல்ல முடியுமாதலால் இனி இக்காலத் தமிழ்ப் பண்பாட்டின் சார்பு பற்றி அறிவோம்.

இன்றைய தமிழ்ப் பாண்பாட்டில் சார்பு

உயிரில் ஊறிவிட்ட பழமைச் சார்புநிலைப் பண்பு இன்றும் தமிழனிடம் இல்லை என்று சொல்வதற்கில்லை. இதை நன்குணர்ந்த அரசியல்வாதிகள் அரசியல் ஆதாயம் தேடிக் கொள்வதில் வல்லவர்களாயுள்ளனர்.

இக்காலத்தில், அரசியலே அனைத்துத் துறைகளிலும் புகுந்து ஆட்டிப் படைக்கின்றது. அரசியல் சார்புடையதாகவே அனைத்தும் நிகழ்கின்றன. மன்னனைச் சார்ந்தே வாழ்ந்து விட்டனர் அக்காலத் தமிழர். அரசனுக்குப் பதிலாக இன்று தலைவனைச் சார்ந்தே வாழத்துடிக்கின்றனர். இவ்வாறாக, இன்றைய அரசியல் நிகழ்வுகளின் சார்பு நிலையைப் பொருத்தே தமிழனின் பொருளாதார, சமய, பண்பாட்டுச் சார்பு அமைந்துள்ளது எனில் அது மிகையாகாது. அன்று, குழந்தைப் பருவம் முதல் இளமை வரை தந்தையைச் சார்ந்திருந்த பெண் திருமணத்தின் பின் கணவனைச் சார்ந்தே வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டாள்.

"தெய்வந்தொழஅள் கொழுநன் தொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (குறள்-65)

என்றபடி கணவனை, எத்தகைய தீயவனாக இருப்பினும் தெய்வமாக வணங்கினாள் பெண். கணவனைச் சார்ந்தே வாழ்ந்தாள். இன்றும் அந்நிலைதான். ஆண் பெண் சமத்துவமற்ற நிலை.

"கல்லானாலும் கணவன்,
புல்லானாலும் புருஷன்"

என்று கொண்டு குடிகாரக் கணவனை, பரத்தமைக் கணவனை ஒதுக்கிவிட முடியாமல் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், சார்பு நிலையிலே பரிதவிக்கும் பெண்மையை என்னவென்பது. சம உரிமை எங்கே? சமத்துவம் எங்கே?

சார்புநிலையின் பன்மைப் படலங்கள்

சார்புத்தத்துவம் மனிதனிடம் இரண்டறக் கலந்ததாய் உள்ளது. உடலைச் சார்ந்து உயிர் இருக்கின்றது. உயிரைச் சார்ந்து உடல் வளர்கின்றது. உயிரற்ற உடல் பயனற்றதாகி

விடுகின்றது. உடலற்ற உயிர் மானிடரிடையே அன்றாட உறவுகளில் உலவுவதில்லை. எனவே, உயிரும் உடலும் ஒன்றையொன்று சார்ந்து பின்னிப் பிணைந்த நிலையே மனிதனின் முழுமை நிலையாகும்.

மனிதரும் சமுதாயமும் உயிரும் உடலும் போன்றுதான், உயிரான மனிதனின் உறவுநிலை சமுதாய உடலாக உருப்பெறுகின்றது. அதே வேளை சமுதாய உடலை விட்டு உறவின்றித் தனியே இருக்கும் மனிதன் என்னும் உயிர் உண்மையான சூழல் நிலையில் வாழ்வதில்லை. எனவே, தானே தனிமையில் அழிகின்றது. ஆக மனிதனிடம் உள்ள அடிப்படைக் கோட்பாடு சார்புநிலை. இச்சார்பு நிலையை மனிதன் எப்படி எல்லாம் திசை திருப்புகின்றான் எனக் காண்போம்.

அ. பொருளுக்காகவே பொருளைச் சார்ந்திருக்கும் நிலையினர்

“அடங்காத ஆசையில் - பல
மடங்காத பொருள் சேர்க்கத்
திடங்காத்த மனத்தோடு-தம்
உடன் உள்ளோர் அழிப்பாரே“ -(மணி வளன்)

இந்தச் சார்புடையவருக்குப் பணமே பெரிது பதவியே மேலானது. ஆண்டானாயிருந்து ஆதிக்கம் செலுத்த விரும்பும் கூட்டம். ஏகாதிபத்தியத்தில் ஏகினவர்கள் மேடைப்பேச்சும் கனிவு மொழியும் இவர்களுக்குக் கைவந்த கலை. இத்தகையோரைக் குறித்துத் தானோ,

“உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்”. என்று இராமலிங்க அடிகள் கூறியுள்ளார் போலும்.

இவர்கள் பரிசேயக் கூட்டம். வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள். பணம், பதவிக்காக மதிப்பீடுகளை விலை பேசுபவர்கள். இவர்களுக்கு மனித மாண்பும், மானிட மதிப்பீடுகளும் இரண்டாவதுதான். “விலையுயர்ந்த ஆடையும் மெல்லிய உடையும் அணிந்து நாள்தோறும் ஆடம்பரமாய் விருந்தாரும்” (திருவிவிலியம் லூக்காஸ் 16-119)

பணம், பொருளுக்காக் மனிதனைப் பயன்படுத்துபவர்கள் “பளுவான சுமையைக் கட்டி மக்களுடையதோள் மேல் வைக்கிறார்கள். தாங்களோ அதை ஒரு விரலாலும் அசைக்க மாட்டார்கள்”(மத்தேயு 23-4). இவர்கள் மானிடரை ஒடுக்கும் வர்க்கம் மானிடரை அடிமைகளாக்கும் கூட்டம். உலகில் முதல் நிலை(first world countries) நாடுகளை நாம் இத்தகையோராய்ச்

சொல்லமுடியும். தங்கள் மனச் சாந்திக்காக, தங்கள் ஆதிக்கம் வேரூன்றி இருப்பதற்காக தங்கள் சுயநலத்திற்காகவே ஏழைநாடுகளுக்கு உதவுபவர்கள் இவர்கள்.

ஏழை மக்களுக்கு உதவி செய்து தங்கள் சுயநலத்தை நிலைநாட்டும் பணக்காரர் உண்டு. இவர்களால் சமத்துவம், சகோதரத்துவம், நீதிமலர்வது குதிரைக் கொம்புதான்.

ஆ. பொருளைச் சார்தல் மனிதனுக்காகவே எனும் நிலையினர்:

இவர்கள் சொத்துச் சேர்த்து நன்கு செலவழிக்க விரும்புபவர்கள். ஏனெனில்

செல்வம் மானிடர்க்காகவே
மானிடர் செல்வத்திற்காகவே அன்று

என்னும் தத்துவம் உடையவர்கள். தங்களது செல்வத்தால் பிறரும் பயனடைய எண்ணம் கொண்டவர்கள். உலக மானிடர் நல்வாழ்வுப் பணியில் தங்கள் சேவையை அளிக்க முன்வருபவர்கள். நன்கொடைகள் வழங்கிச் சமூகப் பணிகள் நிவாரணப் பணிகள் இவற்றில் உறுதுணையாய் இருப்பவர்கள். தங்கள் உடைமைகளைப் பகிர்வதில் இன்பம் கொள்பவர்கள்:

"செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே"(-புறநானூறு)

என இவர்கள் உணர்ந்தவர்கள் போலும்!

இவர்கள் நல்லெண்ணத்தோடு மக்களுக்கு உதவிய போழ்தும் சமுதாயப் பிரச்சினைகளின் அடிப்படைக் காரணங்களை அலசாதவர்கள். துயர் துடைப்புப் பணிகள் மூலம் மக்களின் சார்பு வாழ்வுக்கு அடிகோலுபவர்கள். இவர்களது உதவி மக்களிடையே ஒற்றுமையை வளர்த்துப் பொது நல ஈடுபாட்டைக் கொண்டு வரும் என்று சொல்வதற்கில்லை.

இ. மனிதர் மனிதரைச் சார்தல்

இங்குக் கடவுளுக்கு இடமில்லை. கடவுள் உண்டு என்பவன் முட்டாள்(ஈ.வெ.ரா. பெரியார்). பொருளாதார மேம்பாட்டுக் கொள்கைக்கு முக்கியத்துவம் இங்கு உண்டு. உழைப்பே உன்னதநிலை(தெய்வமாகும்). இவர்களிடையே பொதுவுடைமைக் கோட்பாடு முதன்மையிடம் பெறுகிறது. விரும்பினும் விரும்பாவிடினும் பொருளாதாரச் சமத்துவநிலை இங்கு உண்டாக்கப்படுகிறது. தத்தம் தேவைகளுக்கு ஏற்ப அனைவரும் அனைத்தையும் பெற்று வாழ அழைக்கப் படுகின்றனர். மனிதர்

மனிதரைச் சார்ந்து வாழவேண்டும் என்று வலியுறுத்திப்படுகின்றது. இவர்களது சார்புநிலை இவர்களே விரும்பி ஏற்றதுமல்ல இவர்களை விடுவிப்பதுமல்ல. அதனால் இவர்களிடையே கூட்டுச் சிந்தனைக்கு வழியில்லை. தனிமனித உரிமைக்கும் சுதந்திரத்திற்கும் இடமில்லை.

ஈ. இறைவனைச் சார்தல்

இறைவனைக் காணாத மாபெரும் சக்தியாகக் காண்பர் இம்மக்கள். உலகின் இயற்கைச் சக்திகளுக்கு அப்பாற்பட்ட இந்தக் கடவுள் இயற்கையின் மூலம் வெளிப்படுகின்றார் என்று நம்புபவர்கள் இவர்கள். இதனால் சூரிய நமஸ்காரம் செய்வர். அனைத்து இயற்கை வழிபாடுகளிலும் ஈடுபாடு கொள்வர். மூடநம்பிக்கைக இவர்களது வாழ்வை ஆக்கிரமிக்க விட்டுவிடுவர். காலம், நேரம், சகுனம் என்று பார்ப்பவர்கள் இவர்கள். புரியாத ஆன்மீகத்திற்கு மட்டும் சிறப்பிடம் தருபவர்கள்.

இறையில் சார்பு

சார்புநிலையின பல்வேறு நிலைகளைக் கண்ணுற்றோம். மனிதன் ஆள்பவனாயிருந்து மற்றவனை அடிமையாக்கவே தயாராக உள்ளான். அழிவுச்சார்புக்குத் தன் அடுத்தவனை உட்படுத்துவது பற்றி இவன் கவலை கொள்வதேயில்லை.

ஆனால் தமத்திருத்துவம்-மூன்று ஆட்கள், ஆனால் ஒரே கடவுள்-எனப்படும் மூவொரு கடவுளின் உறவு நிலையில் தோழமையே துலங்குகிறது. தோழமையில் பகிர்தல் பங்கெடுத்தல் அனைவருக்கும் உண்டு. இதை நன்கு உற்று நோக்கின். தமத்திருத்துவமானது அன்பின் உட்சார்பு நிலைக்கு (loving inter dependence) மிகக் சிறந்த நல்மன மாதிரியாகத் திகழ்கின்றது என உணரமுடியும்.

புதிய சமுதாயம் மலர உட்சார்பு நிலையினை உருவாக்க வேண்டும். அழிவுச்சார்புக்குக் காரணமானவற்றை அறவே போக்க வேணடும். வர்க்கரீதியான செயல்பாடு மறைய வேண்டும்.

உட்சார்பு நிலையில் உதிக்கும் புதிய சமுதாயம்

இயேசு அமைத்திடும் புதிய சமுதாயம் தளைகள் அறுத்த அடிமை விலங்கு ஒடிந்த, பிளவுகள் நீங்கிய புதிய தொரு உலகம். இப்புது உலகில் மலரும் இறையரசு ஒரு ஆட்சிக்களம் (territory) அல்ல. ஒரு அரசு அதிகாரம் (royal power) அல்ல ஒரு திருச்ச்பைய்ும் அல்ல (It is not the church).

மாறாக எங்கெல்லாம் மனிதனின் விடுதலைக்கு விடுதலை தரும் சமூக உறவுக்கு உறவால் நிலைக்கும் உட்சார்பு நிலைக்கு ஒருவன் பாடுபடுகிறனோ அங்கெல்லாம் இறையரசு மலர்கிறது வெளிப்படுகிறது.

எனவே இறையரசு கொண்டும் புதிய சமுதாயம் திருச்சபைக்குள்ளாக இருக்க வேண்டும் என்பதில்லை. திருச்சபைக்கு வெளியே எம்மதத்தினரிடமும் எங்கும் இருக்கலாம்.

ஆக புதிய சமுதாயத்தை உருவாக்கும் மூலமாகவே (root) சமயங்கள் அமைய வேண்டுமே தவிர பிளவுக்கு அல்ல. எனவே ஒவ்வொரு சமுதாயமும் தத்தம் கொள்கைகளைப் பாதுகாக்கும் எண்ணத்தை விடுத்து சமயப் பொதுநோக்கில் உறவாடி புதிய சமுதாயம் தோற்றுவிக்க வேண்டும்.

இவ்வாறாக to be religious is inter - religious என்றும் to the human is inter-human என்றும் நாம் உணர்கிறோம்.

To the human is inter-dependent ஆகும்.

மனிதன் உறவுக்காகப் படைக்கப்பட்டவன். உறவால் மனித மாண்பு முழுமையடைகிறது. எனவே உறவை இணைக்கும் பாலமாகச் சமயங்கள் விளங்கிட வேண்டும். மனிதன் மனிதனாக வாழச் சமயங்கள் வழி வகுக்க வேண்டும். புரையோடி நிற்கும் விதியில் சதிகளைத் தகத்தெறிந்து சம்பிரதாயங்களுக்குச் சாம்பிராணி போடுவதை நிறுத்திவிட்டு மனித மாண்பைக் கட்டிக் காப்பதே சமயங்களின் முக்கியப் பணிகளாக அமைந்திடல் வேண்டும்.

ஆனால் சமயங்கள் அழிவுச் சார்பு நிலைக்கு மக்களை ஆளாக்கி அவர்தம் மாண்பு மங்கி மடிந்திடச் செய்வதையே காண்கிறோம். சமயங்கள் மக்களை மயக்கும் மதுவாக உள்ளன (கார்ல்மார்க்ஸ்) என்றாலும் இறையரசின் ஒளிக்கற்றைகள் பல்வேறு மூலைகளில் ஒளிர்வதையும் நாம் மறுக்க முடியாது.

உட்சார்பின் முழுமை நோக்கி

உட்சார்பில் உயர்வாழ்வு காண மானிடர்க்கு உள்ளாற்றல்(potential) உண்டு. ஆனால் சுயநலவாதிகள் எளியவரின் உட்சார்பு நிலையை அழிக்கும் ஆதிக்கவாதிகளாகி விடுகின்றனர். இத்தகையோரை ஒடுக்க வேண்டும். இதற்கு எளியோர் எழுச்சி பெற வேண்டும்.

மக்களிடையே சிறப்பாக அழிவுச்சார்புக்கு ஆளாகிவிட்ட எளியவரிடையே எழுச்சி உதயமாக வேண்டும். இதற்கு அடிப்படையாக இம்மக்கள் விழிப்புணர்வு பெறல் அவசியம். இவ்விழிப்புணர்வு தம்மைச் சுற்றி நடைபெறும் சமூக, பொருளாதார, சமய நிகழ்வுகளை நுண்ணறிவில் பகுத்தாயும் அடித்தளத்ததை மக்களுக்குத் தர வேணடும். இதுவே புரட்சிக்கு வித்திடும்.

பண்பாடு மாற்றத்திற்கு விழிப்புணர்ச்சியே உயிர்மூச்சு. அழிவுச்சார்புப் பண்பாட்டில ஊறிவிட்ட மக்கள் இந்நிலையிலிருந்து விடுதலை பெற வேண்டும். இதற்கு மக்களிடையே ஒற்றுமை தேவை. இந்த ஒற்றுமை வெற்றியைக் கொண்டு வரும்

வெற்றியைப் படைப்போம் வாருங்கள்-நிதம்
ஒற்றுமை வளர்ப்போம் வாருங்கள்
புதியதோர் உலகம் காண்போமே- நம்மில்
வதியும் தீமையை அழிப்போமே!. (மணி வளன்)

******

புவி வெம்மையுயர்வுக் காரணிகள் எதிர்வினைகள்

919

பேரா. இ. சூசை,
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, தூய வளனார் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-2.

புகுமுன்

மானுடம் அறிவியலில் வளர வளர சூழலியல் அழிவை நோக்கி தள்ளப்படுகிறது. நுகர்வு வெறி மிகுவதால் புதிய வேதிப்பொருள் சார்ந்த வீட்டுப் பயன்பாடுப் பொருள் உற்பத்தி மிகுகிறது. உற்பத்தி மலிவினால் பொருள்கள் எளிமையாக்கப்படுகின்றன. நுகர்வு மிகும்போது வேதிக்கழிவுகள் அளவின்றி பெருகுகின்றன. காற்று மண்டலம், கடல் மண்டலம், நிலத்தடி நீர், வயல்வெளி, விலங்கினம், மானுடம் என அனைத்தும் அழிவினை நோக்கித் தள்ளப்படுகின்றன. அழிவை முன்னுணர்ந்து தடுத்தல் அறிவாளர்களின் அறக்கடமை என்பதை உணர வேண்டும். வெம்மை குளிர் தன்மைகளின் மாற்றத்தால் விளைபொருள் வறட்சி, தட்டுப்பாடு ஏற்படுதலும் காணப்படுகிறது. மானுடம் இதனை உணர்ந்து தம் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள வேண்டும். இன்றேல், தானே பறித்த குழியில் வீழ்ந்து அழியும் என்பது உறுதி. கலை இலக்கியம் சார்ந்த சமுதாயம் ஒவ்வொரு கடைகோடி மனிதனுக்கும் இதனை உணர்த்த வேண்டும். உலக சமுதாயத்தின் மேட்டுக்குடிகள் எனக் கருதிக் கொள்ளும் அமெரிக்க, ஐரோப்பிய சமுதாயமும் தன் போக்கினைத் திருத்திக் கொள்ள வேண்டும். வளரும் நாடுகள் தம் வளர்ச்சித் திட்டங்களை இதனடிப்படையில் அமைத்துக்கொள்ளல் நன்று.

கேடுதரும் கரிவளி (CO2) உற்பத்தி மையங்கள்

கரிவளி (Carbon Dioxide) மிகுதியாக வெளிவரும் மையங்களில் ஒன்று அனல்மின் நிலையங்கள். புவி வெம்மையுயர்விற்கு இவற்றின் பங்களிப்பு 40% என்பது அதிர்ச்சி தரும் புள்ளிவிவரமாக உள்ளது. அமெரிக்க நாட்டில் உள்ள அனல்மின்நிலையங்கள் வெளியிடும் கரிவளி தரும் சூழல் கேடுபோலவே இந்திய அனல்மின் நிலையங்களும் வெளியிடுகின்றன. 93% கரிவளியாக மாறுவதால் மின் நுகர்வு சந்தையில் பங்காளிகளாக உள்ள நாம் அனைவரும்

புவிவெம்மையுயர்வுக் காரணிகளாக அமைகிறோம். நாளுக்கு நாள் மின் நுகர்வு தொழில் மையங்கள் மிகுகின்றன. தமிழ்நாட்டில் அனல்மின்நிலைய மின்சாரம்தான் மிகுதி என்பதை உணரவேண்டும். சூரிய மின் உற்பத்தி சாதனங்களை வாங்கி தனிவீடுகள் முதல் தொழில் மையங்கள் வரை பயன்படுத்தும் நுகர்வு மனமாற்றம் வரவேண்டும். நிதிச்செலவு கொஞ்சம் கூடும்தான். மின்நுகர்வு உளப்பாங்கு மாற வேண்டும். அனல்மின் நுகர்வு கொஞ்சம் கொஞ்சமாக தடைசெய்யும் அளவிற்கு வளர வேண்டும். கேடுதரும் கரிவளி உற்பத்தி நிலையங்களான அனல்மின் நிலையங்கள் மூடப்பட வேண்டும். காற்று மின் உற்பத்தி, நீர்மின் உற்பத்தி, கழிவு மின் உற்பத்தி என மின் உற்பத்தி தன்மைகளை மாற்றி, மையமாநில அரசு திட்டங்கள் அதற்கான நிதி உதவிகள் (மான்யம்) மடைமாற்றம் செய்யப்பட வேண்டும்.

வாகனப்புகைக் கட்டுப்பாடு எனும் அறக்கடமை

இயந்திர வண்டிகள் மிக வேகமாகப் பெருகி நகரச்சாலை நெருக்கடிகளை உருவாக்குகின்றன. அதைவிட கரிவளி வெளியீட்டில் 33% வாகனப்புகை பங்களிப்பு ஆகும். தமிழர்கள் இயந்திரங்களின் பழுதுகளை நீக்காமலே, புகை தள்ளவைக்கும் கலைகளைக் கற்றவர்கள். பெட்ரோல், டீசலுக்குப் பதிலாக மண்ணெண்ணை ஊற்றி புகை உற்பத்தி செய்வதைப் பாவச்செயலாக நினைக்க வேண்டும். பேருந்துகளை ஓரம் கட்டாமல் நடுச்சாலையில் நிறுத்தி செயற்கை வாகன அணிவகுப்பு ஏற்படுத்துவர். அவை கக்கும் புகை மண்டலம் நச்சு மண்டலம் என ஓட்டுநர்கள் உணர வேண்டும். ஒரு மனிதனின் திமிர்ச்செயல், அறியாச் செயல், புவி வெம்மைக்குக் காரணியாக அமைகிறது. ஓட்டுநர் உரிமம் தருமுன் இதற்கான சான்றிதழ் படிப்பினைக் கட்டாயமாக்கி, கரிவளியின் தீமைகள், உள்ளிட்ட பாடத்திட்டங்களை வகுத்து கற்பிக்க வேண்டும். வாகன வசதி இல்லாத இடங்களில் உதவுவதுபோல, நகர மக்களும் பிறரை ஏற்றிச் செல்லும் உளப்பாங்கினை உருவாக்கிக் கொள்ள வேண்டும். பொது வாகனத்துக்குள் நெரிசல் இருக்கிறது. தனியார் வாகன நெரிசல் சாலையை நிறைக்கிறது. வெற்று வாகன பயணம் தவறு என்ற மனநிலை உருவாக்கப் பெற வேண்டும். ஒரு வாகனத்தில் தனி மனிதன் செல்வது பாவச்செயல் என்ற கருத்தியல் வளர வேண்டும். அறிமுகமான, நல்லவர்களை ஏற்றிச் செல்வதில் தீங்குகள் வருவதில்லை. வாகனங்களில் எரிவாயு பயன்பாடு கட்டாயமாக்கப்பட வேண்டும்.. டெல்லி

முதலான பெருநகரங்கள் மட்டுமன்றி நாடெங்கும் எரிவாயு பண்பாடு வளர வேண்டும்.

காடுகளின் அழிவும் கரிவளியின் உயர்வும்

தாவரம் மனித கழிவினை உண்டு, உயிர்வளி ஊட்டும் என்பது யாவரும் அறிந்ததே. இறந்தும் பலன்தரும் மரங்களை வீழ்த்துவது சமூகக்குற்றம் என்ற மனநிலை உருவாக வேண்டும். வீட்டுப் பயன்பாடு, கட்டிடத்துறைகளில் மரங்களுக்கு மாற்றுப் பொருள் பயன்பாட்டுப் பழக்கமும், உற்பத்தி பயிற்சியும் வேண்டும். காகித உற்பத்தி, சூளை வேலைகள் என மரநுகர்வு வாய்ப்புகள் குறைக்கப்படல் நன்று. கரிவாயு உற்பத்தி, உயிர்வளி அழிப்பு என இருவகையில் சமூகத்திற்குக் கேடு நடைபெற காடுகளின் அழிவு காரணியாகிறது. எனவே, மரக்கன்று நடுதல், சமூகக்காடு வளர்த்தல், தனியார்க் காடு வளர்க்க ஊக்கம், என பன்முனை செயல்பாடு அவசியமாகும்.

வேதி உரக்கழிவு, உரப்பயன்பாட்டுக் காரணிகள்

இருபதாம் நூற்றாண்டில் நைட்ரசன் உரப் பயன்பாடு ஆல்போல் தழைத்துள்ளது. நைட்ரசன் கழிவுகள் கரிவளியைவிட முந்நூறு மடங்கு வெப்பமூட்டுதலைச் செய்கின்றன. விலங்குகளின் கழிவுகளைப் பயன்படுத்துதல், இயற்கை உரம் பயன்பாடு இவற்றை நவீன வேளாண் பல்கலைக் கழகங்கள் நடைமுறைக்கேற்ப கற்பித்தல் வேண்டும். அமெரிக்க மலட்டுத்தனமான வேதி உரச் சிந்தனைகளை நம் நாட்டில் உயர்த்தி பிடிப்பது தவறு அறிவாளர்களைச் சமூக விரோதிகளாகப் பார்க்கும் காலம் வந்துள்ளது. உரத்தைப் ப்யன்படுத்தி நிலங்களை மலட்டு மண்டலங்களாக்கும் பணி வளர்கிறது. நிலத்தடிநீர் முழுதும் மாசாகி விட்டது. பெய்யும் மழையும், மழைநீர் சேகரிப்பும் உர வேதிக்கழிவுகளைத் தூய்மைப்படுத்தும் அளவிற்கு இல்லை. குடிநீரில் நைட்ரேட் அளவு மிகுந்து உள்ளது. தூய்மைப்படுத்தாத நீரினைக் குடிக்க இயலாத வகையில் நிலத்தடி நீர் வீணாகி உள்ளது. புறச்சூழலை விடவும், பூமியின் அகச்சூழலை நைட்ரசன் மேன்மேலும் வீணாக்குகிறது. மனிதனின் உடல் நலத்திற்கும் கேடு பயக்கிறது.

கடல்மட்ட உயர்வு எனும் எதிர்வினை

அண்டார்டிகா, கிரீன்லாந்து போன்ற பனிநிலப்பகுதிகளில் பேரளவில் உருகிட புவி வெம்மை உயர்வு அடிப்படையாகும். அமெரிக்க நாட்டு கரிவளி கழிவுகள் 40% எனும்போது வளர்ந்த

நாடுகள் தம் நாட்டு கட்டமைப்புகளை மாற்றுவது அவசர அவசிய கடமையாகிறது. ஏற்கெனவே மாலத்தீவு தேர்தல் அறிக்கையில் இந்தியாவில் நகர்கள் உருவாக்கி மாநிலத்தீவினரைக் குடியேற்றுவோம் எனக் கூறியுள்ளனர். இந்தியா நாட்டில் நகர்களை உருவாக்கி குடியேறினால் ஒழிய சில ஆண்டுகளில் மாலத்தீவு மூழ்கு நிலைக்கு வந்துவிட்டது. ஒரு நாடே பிறிதொரு நாட்டிற்கு இடம்பெயரும் அவலம் புவி வெம்மையாதலால் நிகழ்கிறது. பூம்புகார், தென்மதுரை, கபாடபுரம் என நாம் இழந்த மாந்தர்கள், நகரங்கள் பற்பலவாயுள்ளன. கடல்மட்ட உயர்வால் தென்னிந்தியா மூழ்கும் நிலை வரும். 15,000 ஆண்டுகளுக்கு முன் ஆண்டுக்கு 14 மி.மீ. கடல் மட்டம் உயர்ந்தது உண்டு. தற்போது 3.3 மி.மீ. உயர்கிறது. கடந்த பனியுகங்களில் கடல் மட்டம் கீழே இருந்தது. மக்கள் நடந்து சென்ற பல்வேறு தீவிடைப்பகுதிகள் இன்று மூழ்கியுள்ளன. சைபீரியா முதல் அலாஸ்கா வரை தரையில் நடந்தே சென்ற காலங்கள் உண்டு. அந்தமான் தீவுப்பகுதிகளில் பலவற்றை கடல் கொண்டுவிட்டது என்பதை உணர வேண்டும்.

புவி வெம்மையும் இயற்கைப் பேரழிவுகளும்

உலக அளவில் வேகமாகச் சீறிப்பாயும் புயல் உருவாவதற்கு அடிப்படையான காற்று வெற்றிடம் தோன்றுகிறது. வெம்மையினால் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்பிட பெரும்புயல் உருவாகிறது. குளிர், கோடை பருவ மாற்றங்கள் நிகழ்கின்றன. இதனால் பருவகாலப் பயிர்கள் விளைவதில்லை. பருவ மாற்றத்தால் ஏற்பட்ட மிகுக்குளிரினால் 1997இல் சீனநாட்டில் நெல் விளைச்சலில் கடும் சரிவு ஏற்பட்டது. மிகுவெம்மை போலவே மிகுக்குளிர் எனும் மாறும் தன்மையும் உருவாகிறது. வெம்மைநிலப் பயிர்களின் விளைச்சல் அற்றுப்போகும் வாய்ப்புகள் உருவாகின்றன. புவி வெம்மையால் 30 இலட்சம் பேர் இறந்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டு பிற்பகுதி புயல் சேதங்களுக்கு வெம்மை அடிப்படைக் காரணியாகும். 90% பருவகால மாற்றத்தால் மிகு பயிர்ச்சேதம் விளைந்திடும் கேடு சூழ்ந்துள்ளது.

வேதிகடல்நீரின் எதிர்வினைகள்

வெம்மையாதலாலும், வேதிநீர் கலப்பினாலும் கடல்வாழ் உயிரினங்கள் அழிகின்றன. அணு உலைக் கழிவுநீர் இதில் பெரும்பங்கு வக்கிக்கிறது. ஆலைநீர் கழிவுகள் இறுதியாகச்

சேருமிடம் கடலாக இருப்பதால் கடல் பெரும் விளைவுகளைச் சந்திக்கிறது. அவ்வப்போது கடல்வாழ் உயிரினங்கள் வாழ வழியற்று கூட்டுத் தற்கொலைகள் நடத்துகின்றன. மனிதன் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். மீன்களின் அழிவு எதிர்காலத்தை அச்சுறுத்துகிறது. கடல் வளம் அழிந்தால் மானுடம் படும் துயர் அளவில்லாமல் பெருகும். நெடுங்கடலின் நீர்மை குன்றிட மனிதனின் செயல்பாடுகள் அதிகரிக்கின்றன.

சூழல் மாசினால் விலங்குகளின் அழிவு

தொழிற்சாலை நீர்க்கழிவு, புகைக்கழிவு, பொருள் கழிவு, மருத்துவமனைக் கழிவு என நவீனக் கழிவுகளால் இனம்புரியாத நோய்த்தாக்குதல்கள் பெருகுகின்றன. சமீபத்திய ஆய்வு ஒன்றில் சூழல் மாற்றத்தால் ஒரு மில்லியன் உயிரினங்கள் அழிந்து உள்ளதாக அறிய முடிகிறது. மானுடம் தன் வசதிகளைப் பெருக்கிக் கொள்ள பிற உயிர் இனங்களை வேரோடு அழிப்பது அறம் அற்ற செயலாகும்.

முடிவுரை

மானுடம் வளர வளர உலக உயிர்களைக் காக்கும் சிந்தனையும் வளர வேண்டும். தான் வாழ பிற இன அழிப்புக் கொள்கை மானுடம் மறத்துப் போனச் செயலாகும். ஒரு சிறு மண்ணாங்கட்டி உடைந்தால் என் இதயம் உடைகிறது என்ற இராமலிங்க வள்ளலார் பிறந்த மண்ணைச் சார்ந்தவர்கள் நாம்.

புவி வெம்மையாதலுக்குக் காரணியான கரிவளி இந்திய நாட்டிலிருந்து 2% இருப்பதாக ஒரு ஆய்வுக் கூறுகிறது. இந்தியர்களை விடவும் அமெரிக்க ஐரோப்பிய மாந்தர்களின் வேதிக்கழிவுகள் பெரும் சீரழிவினைத் தருகின்றன. எனினும் நாம் தற்காப்பு நடவடிக்கையாக முன் உணர்ந்து தடுக்க வேண்டும். இந்திய நாட்டில் புவி வெம்மையாதல் பற்றிய ஆய்வுகள் வரவில்லை. சரியான ஆய்வு முடிவுகள் வந்தால் பன்னாட்டு சமுதாயத்தின் முன் நம் நிலை கேலிக்குரியதாக அமையும். பல்கலைக்கழகங்கள், அறிவுச் சமுதாயம், இத்திசையில் தம் ஆய்வுகளைத் திருப்பி குடிமக்களை நேர்வழிப்படுத்திட வேண்டும்.

****

நல் உறவின் நாயகர் வீரமாமுனிவர்

அருள்தந்தை முனைவர் ஆ.ஜோசப், சே.ச.,
தமிழாய்வுத்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம்பெற்ற இத்தாலி நாட்டுத் தமிழ் அறிஞர் வீரமாமுனிவர் 1680ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 8ஆம் நாள் இத்தாலி நாட்டில் பிறந்தார். இவரது இயற்பெயர் ஜோசப் கான்ஸ்டான்டைன் பெஸ்கி. ஏறத்தாழ 40 ஆண்டுகள் தமிழகத்தில் வாழ்ந்த வீரமாமுனிவர் தடம் பதிக்காத இலக்கிய வகைகள் இல்லையென்று சொல்லக்கூடிய அளவிற்கு பல்வேறு இலக்கியப் படைப்புக்களைப் படைத்துள்ளார்.

செல்வக் குடும்பத்தில் பிறந்த இவர் பல மொழிகளில் புலமை பெற்ற வித்தகர். இசைப்பிரியர், வைத்தியம் அறிந்தவர், திருக்கோவில் அமைக்கும் திறனுடையார், உலகில் ஆட்சியிலும் சமய நிர்வாகத்திலும் சமர்த்தர், கடும் உழைப்பாளி, தடைகளையும், எதிர்ப்புக்களையும் கண்டு தயங்காதவர். இவரது கலைப்பணியும், மறைப்பணியும் மறக்க முடியாதவை. தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற உயர்ந்த இலட்சியத்தால் தூண்டப்பெற்ற இம்முனிவரது வாழ்வும், படைப்புக்களும் பலருக்கும் பயன்படக்கூடிய விதத்தில் இருந்தன என்றால் அது மிகையல்ல.

வீரமாமுனிவர் ஒரு மறைப்பணியாளர். இத்தரணி தழைக்க வேண்டும் என்று தன் உயிரைத் தியாகமாகத் தந்த இயேசுபெருமானின் தொண்டர். உலகப் பொதுமறையை உலகுக்குத் தந்து ஏற்றத்தாழ்வு இல்லா சமுதாயம் நிலவ வேண்டும் என்று கூறிச் சென்ற திருவள்ளுவரின் கொள்கைகளில் ஆழமான ஈடுபாடு கொண்டவர். எந்த அளவுக்குத் திருவள்ளுவரின் கருத்துக்கள் இவர் உள்ளத்தை ஈர்த்தது என்றால் இந்தக் கருத்துக்கள் அனைத்தும் ஒரு மொழியில், குறுகிய இடத்தில் மட்டும் நின்றுவிடக்கூடாது. மாறாக அனைவர்க்கும் பயன்படவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் முதன் முதலாகத் திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தவர். எனவே அனைவரையும் அரவணைத்து வாழவேண்டும். நட்புக்கு

இலக்கணமாகத் திகழவேண்டும் என்ற உயர்ந்த பண்புகளைத் தன்னகத்தே இயல்பாகக் கொண்டவர். எனவே, ஒருவேளை மறந்தும் இந்த நட்பு இலக்கணத்துக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய வகையில் வீரமாமுனிவர் வாழ்ந்திருப்பார் என்று கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாது. எனவே, ஒருசிலர் கொண்டுள்ள தவறான கருத்து தவறு என்பதை நிலைநிறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

பரமார்த்த குரு கதையில் குறிப்பிடப்படும் துறவி யார்?

வீரமாமுனிவர் பெயரை என்றும் நிலைநிற்கச் செய்தது அவர் இயற்றிய பரமார்த்த குரு கதை. இது ஏறக்குறைய உலகிலுள்ள பண்பட்ட மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. முனிவரே முதன்முதலாக அதை இலத்தீனில் மொழிபெயர்த்ததோடு மாணவர் நலம் விரும்பி ஒரே பக்கத்தில் ஒரு பகுதி தமிழாகவும் மற்றொரு பகுதி அதற்குரிய இலத்தீனாகவும் வெளியிட்டார். இலத்தீன் மொழி, மேல் நாட்டில் அக்காலத்தில் பொதுமொழியாக வழங்கியபடியால் அதை அறிந்த பல நாட்டு அறிஞர்கள் தத்தம் மொழியில் எளிதில் அக்கதையை மொழிபெயர்க்க முடிந்தது. திருக்குறளும் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டாலும், அதன் கருத்தும் அழகும் மொழி பெயர்ப்பில் எளிதில் அமைவதில்லை.

அன்றியும் தமிழ் உரையாசிரியர் போல், பலர் அந்தந்த மொழிகளில் அமைத்து அதன் பொருளை நன்கு விளக்கவுமில்லை. மேலும் குறள் படித்துணர்வதற்குரிய எளிய நூலன்று. சுருங்கி அமைந்திருப்பதால் அதற்கு விளக்கம் அதிகமாய்த் தேவைப்படுகின்றது. இதற்கு நேர்மாறாக, பரமார்த்த குருகதை பாமர மக்களும் அறியக்கூடிய எளிய நடையில் அமைந்ததோடு. நகைச்சுவையோடு முழுதும் அமைந்தது. ஆகவே குறளினும் இதைப் பொதுமக்களும் வெளிநாட்டாரும் படித்தறிந்திருப்பதில் வியப்பில்லை.

பரமார்த்த குரு கதை தமிழ்நாட்டில் வழங்கின கதை வீரமாமுனிவர் இந்நூலை எழுதவில்லை என்று சொல்வாரும் உண்டு. நல்லவேளை முனிவரே கைப்பட எழுதிய பரமார்த்த குரு தமிழ்க்கதையில் ஒரு கதையும், இலத்தீன் மொழிபெயர்ப்பின் பெரும்பகுதியும் நம்மிடம் உள்ளன. மேலும், காரைக்காலில் பல்லாண்டு வாழ்ந்த மேல்நாட்டறிஞர் வேன்சான் என்பவர், இக்கதை மேல்நாட்டுக் கதை என்றும், அந்த அளவுக்கு அதில் மேனாட்டுக்

கருத்துப் பொதிந்து இருக்கிறது என்றும் பல சான்றுகள் தருகிறார். அப்பாவிப் பரமார்த்த குருவும், அறிவற்ற சீடரும் என்ற இந்திய நாட்டுக் கதை அடிப்படையில் மேல்நாட்டுக் கதையே என்கிறார்.

வரலாற்று ஆசிரியரான திரு. கே.கே. பிள்ளை பரமார்த்த குரு கதையில் வரும் குரு இந்து சந்நியாசியைக் குறிக்கிறது என்று கூறுகிறார். இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை.

ஏனென்றால், செந்தமிழ் பயில்வோருக்குத் துணை நிற்கச் செந்தமிழ் இலக்கணமும், பாட்டப்புத்தகமாகத் தேம்பாவணி 28ஆம் படலச் சுருக்கமாகிய வாமன் கதையும் அதற்கு அகராதியாகச் சதுரகராதியும் இயற்றினார். அதேபோல பேச்சுத் தமிழுக்குத் துணையாகக் கொடுந்தமிழ் இலக்கணமும், அதற்குப் பாடப்புத்தகமாக பரமார்த்த குரு கதையும் அதற்கு அகராதியாகத் தமிழ், இலத்தீன், போர்த்துக்கீசிய - இலத்தீன் அகராதியும் எழுதினார். எனவே, இந்து முனிவர்களையோ, தரங்கம்பாடியில் தங்கி பணிபுரிந்த லூத்தரன் சபைக் குருக்களையோ இகழ்ந்து, சிலர் கூறியிருப்பதுபோல, பரமார்த்த குரு கதையை அவர் இயற்றவில்லை. இதற்குரிய இலத்தீன் முகவுரையைப் படித்தாலே இது தானே விளங்கும். முற்றிலும் வேறுபட்ட தமிழ் மொழியைப் பயிலுங்கால் ஏற்படும் சோர்வையும், தளர்ச்சியையும் போக்க, நகைச்சுவைமிக்க இக்கதையை எழுதினதாகக் கூறுகிறார். கதை, நாட்டுக் கதையாயினும், ஊடே மேல்நாட்டுக் கதைகள் அதில் நிறைய இருக்கின்றன.

கழுதை உப்புப் பொதியை ஆற்றில் சுமந்து சென்றதும், நாய் நிழலைக் கண்டு கறியை இழந்ததும் (கதை 1) குதிரை முட்டை வாங்கியதும் (கதை 2) சுட்ட கறி வாசனைக்கு பணச்சத்தத்தால் ஈடுகட்டியதும் (கதை 3) சிறுநீர் வரியும் (கதை 5) கிளையை முளையிலிருந்து வெட்டியதும் (கதை 6) போன்ற பல பிறவும் வேன்சான் தமது ஆய்வுக் கட்டுரையில் எடுத்துக்காட்டுகிறார். அப்பாவிப் பரமார்த்த குருவும், அறிவற்ற சீடரும் என்ற இந்திய நாட்டுக் கதை அடிப்படையில் மேல்நாட்டுக் கதையே பெரும்பாலும் இடம்பெறுகிறது என்கிறார் இவர். 1822ஆம் ஆண்டு இக்கதையை பாபிங்கடன் அவர்கள் இலண்டனில், தமிழிலும் ஆங்கில மொழிபெயர்ப்பிலும் வெளியிட்டார். நூலில் வரும் சொற்களை எல்லாம் பொறுக்கி அகராதி வரிசைப்படுத்தி, ஒவ்வொரு சொல்லுக்கும் ஆங்கிலத்தில் பொருள் கூறி வெளியிட்டிருக்கிறார். மேலும், முதல் கதையில் வரும் சொல்

ஒவ்வொன்றிற்கும் இலக்கணம் கூறி இருக்கிறார். இதுவரை வெளிவந்த பதிப்புக்களில் எல்லாம் இதுவே சிறந்த ஆராய்ச்சி நூலாகக் கருதப்படுகின்றது. ஆனால் வீரமாமுனிவர் எழுதிய கொடுந்தமிழ்ப் பாடநூலின் சொற்களையும் சொற்றொடர்களையும் திருத்திச் செந்தமிழாக்கிப் பதித்திருக்கிறார் என்பது வருந்தத்தக்கதாகும்.

பரமார்த்த குரு கதையில் வீரமாமுனிவர் பல நூற்றாண்டுகளாக, படித்தவரும் பாமர மக்களும் பேசும் படிச்ச, அவிஞ்ச, வாற, போற, மிழி, போச்சு முதலிய சொற்களைப் பயன்படுத்துகின்றார். இந்நிலையில் 'கடிசொல் இல்லை காலத்துப் படினே' என்ற தொல்காப்பிய நூற்பா நினைவுகூறத்தக்கது. முனிவரது நோக்கத்தை அறியாது, பிற்காலத்தில் வந்த பதிப்பாளர்கள் இத்தகைய பேச்சு வழக்குச் சொற்களைப் பெரும்புலவர் வீரமாமுனிவர் எழுதியிருக்க முடியாது என்று தவறாய் எண்ணி, செந்தமிழில் திருத்தி அச்சிட்டிருக்கின்றனர். இதுவே பல குழப்பங்களுக்கு வித்திட்டது.

வீரமாமுனிவர் இந்தத் துறவியரையோ, தரங்கம் பாடியரையோ இகழ்ந்து இக்கதையை எழுதினார் என்பது முற்றிலும் தவறு. அக்காலத்தில் தமிழ்ப்பாடமாக அமைந்த நூல்கள் பிழைமயமாய் இருந்தபடியால், இதைக் கொடுந்தமிழ் அல்லது பேச்சுத்தமிழ் நடைக்கு மாதிரியாக எழுதியதாகவும், எழுத்து, உச்சரிப்பு, அமைப்பு முதலியவற்றில், முற்றிலும் மேனாட்டு மொழிகளில் நின்று தமிழ்மொழி வேறுபடுவதால், அம்மொழியைக் கற்கும் மேனாட்டு மாணவர் சோர்வுறாதபடி, நகைச்சுவை கொண்ட இக்கதையில் மேனாட்டுக் கதைகளுள் பலவற்றைத் தாம் சேர்த்ததாகவும் வீரமாமுனிவரே குறிப்பிடுவதைக் கவனிக்க வேண்டும். கொடுந்தமிழ் இலக்கணம் எண் 14இல் வரும் உடம்படு மெய் ஒழுங்கை, இக்கதையைப் படிக்கும்போது நினைவுறுத்துகிறார். நெடிலுக்குப் பின்னும், குற்றியல் உகரம் நீங்கிய உகரத்துக்குப் பின்னும், உயிரில் தொடங்கும் சொல் வருமாயின் ய, வ இடையே வரும். அதாவது இ - ஈ, எ - ஏ, ஐ பின் யகரமும் பிற உயிர்களுக்குப்பின் வகரமும் வரும் என்று கூறுகிறார். இவ்வொழுங்கு கவனிக்கப்படாவிடில், பல சொற்கள் தெளிவாக இரா; அகராதியிலும் காணப்படா என்று எச்சரிக்கிறார். இந்த முகவுரைப் பகுதி இதுவரை வந்த எல்லாப் பதிப்புக்களிலும் விடப்பட்டிருக்கிறது. இதுவும் இந்தக் குழப்பத்திற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

பரமார்த்த குருவின் ஐந்தாம் கதையில் பணத்தாசையால் சிறுநீர் வரி விதித்த மன்னனையும், அதைக் கண்டித்த மகன் தீத்து என்றும் தாம் கைப்பட எழுதிய செண்பகனூர்ச் சுவடியில் வரும் இலத்தீன் மொழிபெயர்ப்பில் பிறைக்கோட்டுள் குறிப்பிடுகிறார். இச்செய்தி இலத்தீனிலோ, தமிழிலோ எந்தப் பதிப்பிலும் இதுவரை வந்ததாகத் தெரியவில்லை என்று அருட்தந்தை இராசமாணிக்கம் குறிப்பிடுவது மிகவும் கவனிக்கத்தக்கது.

1822ஆம் ஆண்டு இலண்டனில் ஆங்கில மொழி பெயர்ப்போரும், பல விளக்கக் குறிப்புகளோடும் வெளியிட்ட பாபிங்டன், பரமார்த்த குரு கதையில், ஆற்றைக் கடந்த முதல் கதையைப் போல 'The merry Tales of the wise men of Gotham' என்ற கதைப்புத்தகத்தில் பத்தாம் கதையாக வருவதாகக் கூறுகிறார். இரண்டு நாட்டிலும் இக்கதை வருவதால், எப்படி இது நேர்ந்தது என்று வினவுகிறார். எனவே வீரமாமுனிவர் பரமார்த்த குரு கதையை எழுதியதின் நோக்கம் இந்து சந்நியாசிகளை இழிவுபடுத்துவதற்காக அல்ல என்பது உறுதியாகத் தெரிகிறது.

வைதீஸ்வரன் கோவில் சென்றபோது, வினைதீர்த்தான் மீது இவர் அவ்விடத்திலேயே பாடியதாக முத்துச்சாமி பிள்ளை கூறும் 'வாதக்கால் தமக்கு' என்ற பாடல் புலவர் காளமேகம் பாடிய தனிப்பாடலாக இருப்பதால், முனிவர் அதை இயற்றவில்லை. ஒருவேளை அந்தப் பாடலை மேற்கோளாக அங்குக் கையாண்டு பாடியிருக்கலாம். இதை விடுத்து வீரமாமுனிவர் இந்துத் தெய்வங்களைப் பழித்துப் பாடியுள்ளார் என்று கூறுவது கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகும்.

வீரமாமுனிவரும் தரங்கம்பாடியினரும்

இருவேறு கொள்கைகளையுடைய குழுவினரிடையே மோதல் ஏற்படுவது இயல்பு. ஆனால் கொள்கையளவில் எதிர்ப்பு தெரிவித்தாலும், நல்லுறவுக்கு முயற்சி எடுப்பதே நல்ல மனிதர்களின் உயரிய பண்பாகும். இத்தகைய பண்பில் சிறந்து விளங்கியவர் வீரமாமுனிவர் ஆவார்.

இயேசுசபையினரின் முக்கியப் பணிகளில் சென்று மறுநெறிக் கிறித்தவ சபையினரின் கொள்கைகளை எதிர்ப்பதற்காகவே. எனவே, இத்தகைய பின்புலத்தில் வீரமாமுனிவர் வளர்ந்தாலும் உரையாடல் மனப்பான்மையில் பின்தங்கி விடக்கூடாது என்ற கண்ணோட்டத்தில் அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள்

அனைத்தும் குறிப்பிடத்தக்கவை; போற்றுதற்குரியவை. பிரித்தாளும் பண்பை மையமாகக் கொண்டு வாழ்வோர் குறுகிய மனநிலையுடையவராவார். இவர்களால் சமூகத்திற்கு எந்தப் பயனும் இல்லை. எனவேதான் பண ஆசையின் காரணமாகக் கத்தோலிக்கத் திருமறையிலிருந்து லூத்தரன் சபைக்குச் சென்ற இராஜநாய்க்கனை கத்தோலிக்கத் திருமறையைச் சார்ந்த வேதியர்களும், மக்களும், குழப்பம் விளைவிக்கும் அவனை ஒழித்துக் கட்ட வேண்டும் என முயன்ற போது அது உரையாடல் மனப்பான்மைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும் என எண்ணி வீரமாமுனிவர் அச்செயலைத் தடுத்துள்ளார்.

வீரமாமுனிவர் தனது தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மறுநெறிக் கிறித்தவர்களின் கொள்கைகளுக்கு எதிராகப் பல நூல்களையும், கடிதங்களையும் எழுதினார். ஆனால், பகையை மறந்து உறவுக்குக் கைகொடுத்து மனித நேயத்தைக் கட்டிக்காத்தார். கொள்கையளவில் தரங்கம்பாடியில் இருந்த லூத்தரன் சபையினரோடு வீரமாமுனிவர் மாறுபட்டிருந்தாலும் மனித நேயத்தோடு அவர்களோடு நட்புறவு கொள்ள பலமுறை முயன்றுள்ளார். அண்மையில் கிடைத்த கடிதம் இதற்குத் துணைபுரிகின்றது.இதைக் கண்டுபிடித்து மொழிபெயர்த்துத் தந்த பெருமை தே.நொபிலி ஆராய்ச்சி மையத்தின் இயக்குநராய் இருந்த மறைந்த அருட்தந்தை இராசமாணிக்கம் அவர்களைச் சாரும்.

1728ஆம் ஆண்டு பெப்ருவரித் திங்கள் 8ஆம் நாள் தரங்கம்பாடியில் இருந்த லூத்தரன் சபையைச் சார்ந்த வால்த்தர் என்பவருக்கு (Walther) வீரமாமுனிவர் கடிதம் எழுதியுள்ளார். ஏற்கெனவே இரு குழுக்களுக்கும் இடையே அமைதியும், நட்பும் வேண்டி எழுதிய வால்த்தரின் கடிதத்திற்குப் பதில் கடிதமாகத்தான் இது அமைந்துள்ளது. இக்கடிதத்தில் வீரமாமுனிவர் பயன்படுத்தியுள்ள பணிவுமிக்க வார்த்தைகள் வியப்படையச் செய்கின்றன. பண ஆசையால் கத்தோலிக்கத் திருமறையிலிருந்து லூத்தரன் சபைக்குச் சென்ற இராஜநாயக்கனைப் பற்றி மிகுந்த கவனமாக இருக்க வேண்டும் என எச்சரிக்கை விடுக்கின்றார். பழையவற்றை மறந்து விட்டு மீண்டும் நட்புடன் பணியாற்றுவோம் என்று தமது விருப்பத்தை இக்கடிதத்தில் வெளிப்படுத்துகின்றார். ஆனால் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை. வீரமாமுனிவரின் ஆசை நிறைவேறவில்லை. லுத்தேரினத்தியல்பு என்ற கடிதத்தை

வீரமாமுனிவர் புறநிலைக் காப்பியனார் என்ற புனைபெயரில் குளுந்தமிழ்ச் சாத்தன் என்ற தம் உபதேசிக்கு லுத்தேரானிகள் யார் என்று விளக்கி எழுதியது போல் இந்நூல் அமைந்துள்ளது. காலத்தின் சூழ்நிலையால் லுத்தரினச் சபையினரை கடுஞ்சொற்களால் எழுத முற்பட்டபோது அதில் தன் பெயரை புனைபெயரால் எழுதி வெளியிட்டதே அவருடைய மனநிலையைக் காட்டுகிறது.

சொந்த நாடு, மொழி, உற்றார், உறவினர், உயர்ந்த வசதியான வாழ்க்கை அனைத்தும் துறந்து, பஞ்சம், படை, நோய் மிகுந்த காலத்தில் அரசாங்கக் கொந்தளிப்பாலும், போராட்டங்களாலும் அவருக்கும் அவர் கண்காணித்து வந்த மக்களுக்கும் பாதுகாப்பில்லாத சூழ்நிலையில், அடிப்படை வசதி இல்லாத பட்டிக்காட்டுச் சிற்றூரில் தங்கி, தியாக வாழ்க்கை நடத்தியவர் நம் அருள்மாமுனிவர். கொடுந்தமிழ், செந்தமிழ் இலக்கணம், பெருங்காப்பியம், சிறுகாப்பியம், பரமார்த்த குருகதை போன்ற நகைச்சுவைமிக்க சிறுகதை, வேதவிளக்கம் போன்ற இறையியல் நூல்கள், நீண்ட கடிதங்கள், மொழிபெயர்த்த நூல்கள், வானநூல், தோட்டக்கலை, அரசர் ஆளுநர் தம் தூதுவர், கிறித்தவ மறைக்குரு தியாக வாழ்க்கை, எழுத்துச் சீர்திருத்தம் முதலிய பல துறைகளில் சிறந்தோங்கி, நடமாடும் பல்கலைக்கழகமாக முனிவர் தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்தார். இவரது ஈடு இணையில்லா அர்ப்பண வாழ்வையும் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் அவர் ஆற்றிய தொண்டையும் தமிழ் கூறு நல்லுலகம் பெருமையோடும் நன்றியோடும் என்றும் நினைவு கூறுகின்றது.

துணை நின்ற நூல்கள்

1. முனைவர் இராசமாணிக்கம், சே.ச., ''வீரமாமுனிவர் தொண்டும் புலமையும்''.
2. ரம்போலோ மாஸ்கரேனஸ் -'கிறிஸ்தவத் தமிழ்த்தொண்டர்கள்'.
3. முனைவர் ஆ. ஜோசப், சே.ச. – 'கித்தேரியம்மாள் அம்மானை'.
4. இன்னாசி – 'வீரமாமுனிவர் சில ஆய்வுகள்'.
5. Dr. K. Meenakshi Sundaram – 'The Contribution of European Scholars to Tamil'.

****

தமிழில் எதிர்காலவியல்

பேரா. ஞா. பெஸ்கி,
தமிழ்த்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-2.

அறிவியல் தொழில் நுட்பங்கள் விளைவித்த புதுமைகள் தனிமனித வாழ்க்கையிலும் சமூகவாழ்க்கையிலும் எண்ணற்ற முன்னேற்றங்களை உருவாக்கியுள்ளன.எனினும் வளர்ச்சியின் ஊடாக அவை ஏற்படுத்திய பாதிப்புகள் அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்தியுள்ளன. அதனால் எதிர்காலத்தைக் குறித்த அச்சமும் அதனை எதிர்கொள்வதற்கான திட்டமிடலும் இன்றைய நடைமுறையாக மாறியுள்ளது. அரசியல், சமயம், பொருளாதாரம், சுற்றுச்சூழல், அறிவியல், மருத்துவம் போன்ற பல்வேறுதளங்களில் கடந்த கால வரலாறுகளின் அடிச்சுவட்டில் நிகழ்கால மாற்றங்கள், எதிர்கால விளைவுகள் ஆகியவற்றைக் குறித்துச் சிந்திக்கும் வகையில் வளர்ந்துவரும் துறையே எதிர்காலவியலாகும். இத்தகைய எதிர்காலவியல் குறித்த அறிமுகமும் தமிழிலக்கியப் பரப்பில் எதிர்காலவியலின் செல்வாக்கும் விளக்கப்படுவது இங்கு இன்றியமையாததாகிறது.

எதிர்காலவியல் - சொற்பொருள் விளக்கம்

"எதிர்காலக் கல்வி, முன்கூட்டிய பார்வை அல்லது எதிர்காலவியல் என்பது சாத்தியமான, நிகழக்கூடிய அல்லது விரும்பத்தக்க எதிர்காலத்தையும் அதனை அடியொற்றிய உலகப்பார்வையையும் தொன்மத்தையும் எடுத்துரைக்கின்ற தத்துவமாக, அறிவியலாக, கலையாக, செயல்முறையாக அமைந்ததே ஆகும்" என்று விக்கிபீடியா கலைக்களஞ்சியம் வரையறுக்கிறது.

Futurum என்னும் இலத்தீன் சொல்லும் logos என்னும் கிரேக்கச்சொல்லும் இணைந்து உருவாகியுள்ள Futurology என்னும் ஆங்கிலச்சொல்லுக்கு *'எதிர்காலம் குறித்த கல்வி'* என்னும் பொருளை அறிவியல் கலைச்சொற்றொகுதி குறிப்பிடுகிறது. எதிர்காலவியல், வருங்கால இயல், வருநாளியல், என்று வெவ்வேறு வழக்குகள் இச்சொல்லைக் குறித்துத் தமிழில் வழங்கிவருகின்றன. எனினும்,

"இறப்பே நிகழ்வே எதிர்வென்னும்
திறத்தியல் மருங்கில் தெரிந்தனர் உணரப்
பொருள் நிகழ்வு உரைப்பது கால மாகும்"

என்னும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் கருத்து அடிப்படையில் இதனை எதிர்காலவியல் என அழைப்பது சாலத்தகுந்தது.

எதிர்காலவியல் என்னும் சொல் உணர்த்தும் பொருண்மையைப் பல்வேறு அறிஞர்கள் வரையறுத்துள்ளனர். "*பல துறைகளில் காணப்படும் வளர்ச்சிகளின் பிற்கால விளைவுகளை ஒட்டுமொத்தமாக ஆராய்ந்து எதிர்கால வாழ்வை இவை எவ்வாறு பாதிக்கும் என்பதையும் எந்தவிதமான வளர்ச்சிகள் நாளைய வாழ்க்கைக்குத் தேவை என்பதையும் ஆராய்கிறது எதிர்காலவியல்*" (ப.100) என்னும் பாப்கிரஸின் வரையறையை யோகமூர்த்தி எடுத்துக்காட்டியுள்ளார்.

நாராயணன்கரன் ரெட்டி, "*எதிர்காலவியல் என்பது விழிப்புணர்வாலும், நனவுநிலையாலும் அறியப்படுகிறது. இது இரு துறைசார் அறிவாக மட்டுமன்றி பல்துறைசார் அறிவாகவும் அமைந்துள்ளது. நிகழ்காலத்திலிருந்து எதிர்காலத்திற்குச் செல்வதற்கான தடங்களை வரைவதை விட மிகுதியான மாற்றுவாய்ப்புகளைக் கொண்டுள்ளது*" (ப.3) என்று வரையறுத்துள்ளார்.

ச.சிவகாமி, "*இன்றைய செயல்பாடுகளின் நாளைய விளைவுகளைக் கணித்துரைப்பது நாளைய எதிர்பார்ப்பிற்கேற்ப இன்றைய செயல்களைத் திட்டமிடுவது எதிர்காலவியல்*" (ப.4.) என்று பொருள் கொள்கிறார்.

இவை போன்ற வரையறைகளின் அடிப்படையில் எதிர்காலவியல் என்பதை "மானிட சமூகத்தின் இறந்தகால, நிகழ்கால நிலைகளை மனத்துள் கொண்டு எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதை மனிதச் சமுதாய முன்னேற்றம் என்னும் இலக்கை முன்னிட்டு அறிவியல்வழியில் உய்த்துணரும் துறை" என்று பொருள் கொள்ளமுடிகிறது.

எதிர்காலவியலின் வரலாறு

எதிர்வியம் (Futurism) என்னும் இத்தாலியக்கலை இயக்கமாகவே இது 1909 இல் இத்தாலியக் கவிஞர் பில்போ டொமாஸோ மாரினெட்டி என்பாரால் உருவாக்கப்பட்டது.

இவ்வியக்கம் புனைவியல் சார் மிகைஉணர்ச்சிப் போக்கை எதிர்த்தும் பழைமையைப் பாதுகாக்கும் அனைத்து அமைப்புகளை அழிக்கத் தூண்டியும் மொழியின் தொடர் அமைப்பு ஒழுங்கைச் சிதைப்பதை வலியுறுத்தியும் செயல்பட்டுவந்தது. பாரிஸ், இலண்டன், பெர்லின் ஆகிய நகரங்களில் எதிர்காலத்துவம் தொடர்பான ஓவியக் கண்காட்சிகளும் நடத்தப்பெற்றன. எனினும் முதல்உலகப்போருக்குப் பின் எதிர்வியம் என்னும் இயக்கம் தன்செல்வாக்கை இழந்துவிட்டது.

எனினும் எதிர்காலவியல் (Futurology) என்னும் சொல் ஓஸிப் கே. பிளெட்ச்தீம் என்னும் ஜெர்மானியப் பேராசிரியரால் உருவாக்கப்பட்டு நிகழ்தகவுசார் அறிவியலை உள்ளடக்கிய புதிய அறிவுத்துறையாக அறிமுகம் செய்யப்பெற்றது. இதனை ஒரு கல்விமுறையாக வடிவமைத்த பெருமை ஆல்வின் டோ.ஃப்ளர் என்னும் அமெரிக்கரைச் சாரும். தொடர்ந்து இன்று ருசியா, பிரான்சு, மேற்கு ஐரோப்பா, இந்தியா போன்ற பலநாடுகளில் முன்குறிகாட்டல், எதிர்காலஆய்வு, எதிர்காலவியல், எதிர்காலவியல் கல்வி என்னும் பெயரில் வளர்ந்து வருகிறது.

எதிர்காலவியலின் இயல்புகள்

எதிர்காலம் பெறவிருக்கின்ற உண்மைநிலையை அளிக்கும் நிகழ்தகவுசார் அறிவியலாகும். இது பலதுறைகளின் ஒருங்கிணைந்த செயல்பாடாகவும் பல்துறைக்கல்விக்கான தொகுப்புக்களனாகவும் அமைகிறது. இச்சிந்தனைகள் பொதுத்தன்மை இயல்பினவாக அமைகின்றன. போர், வறுமை, சமூகஅநீதி, சுற்றுப்புறச்சூழல் சீர்குலைவு ஆகியவற்றை முதன்மைச்சிக்கல்களாக அழுத்திக்காட்டுகிறது. உடனடிச் சிக்கல், அவசரச் சிக்கல் என்னும் இருநிலையில் இது சிக்கல்களை அணுகுகிறது. இதன் அனைத்துத் திட்டங்களும் மனிதனுக்குச் சிறப்பளிப்பதையும் வாழ்வை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. அடிமை நிலை, காலனிஆதிக்கம், வல்லரசு மேலாண்மை, இனவேறுபாடு ஆகியவற்றை இலக்காகக் கொண்டு அதற்கான உலக இயக்கத்துடன் ஒருங்கிணைத்துச் செயல்படுவது இதன் சிறப்பம்சமாகும்.

எதிர்காலவியலின் பயன்கள்

எதிர்காலவியல் இன்றைய உலகச் சிக்கல்களை ஆராய்தல், எதிர்கால மேன்மைக்கான நலத்திட்டங்களை அளித்தல், அத்தகைய மேன்மைக்கான இலக்கை அடையத் தேவையான

நடைமுறை உத்திகளைக் காட்டுதல் ஆகிய பயன்களைக் கொண்டு அமைகிறது. அனைத்துத்துறைகளிலும் திட்டமிடுநர்க்கும் கொள்கை உருவாக்குநர்க்கும் தேவையான தரவுகளையும் குறிப்புகளையும் கொடுத்து உதவுகிறது. புதிய கண்டுபிடிப்புகளைக் கண்டறிவதற்கான எண்ணங்களை உருவாக்குகிறது. பல்வித வாழ்வியல் முறைகளுள் ஏற்புடையதைத் தேர்வு செய்ய ஊக்கமளிக்கிறது. மனிதன், இயற்கை, சமூகம் ஆகியன எதிர்கொள்ளும் சிக்கல்களை அடையாளம் காட்டவும் அவற்றைத் தீர்ப்பதற்கும் பெரிதும் பயன்படுகிறது.

தமிழில் எதிர்காலவியல் சிந்தனைகள்

1989 இல் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட எதிர்காலவியல் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், காந்தி கிராமப் பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பாடமாக்கப்பட்டுள்ளது. இதனைக் குறித்த கருத்தரங்குகள் பரவலாக ஆங்காங்கே நடத்தப்பெற்றுள்ளன. எனினும் எதிர்காலவியலின் கூறுகளைத் தமிழின் பல்வேறு கால இலக்கியங்களில் கண்டுணரமுடிகிறது.

பண்டைத்தமிழர்மரபில் எதிர்காலவியல்

தமிழரிடையே இருந்த யாப்பு வடிவங்களைக் கொண்டு எதிர்கால வரவுகளை முன்உரைத்த,

விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே"

என்னும் தொல்காப்பியரின் சிந்தனை தமிழரின் எதிர்காலவியல் சிந்தனைத்தளத்தை வெளிக்காட்டுகிறது. சங்கஇலக்கியத்தின் பல பாடல்களில் வாழ்த்து, நிமித்தம், கனவு, நிலையாமை, மறுமை போன்ற பல எதிர்காலவியல் கூறுகளைக் கண்டறியமுடிகிறது.

திருக்குறளில் எதிர்காலவியல் எடுத்துரைக்கும் நிகழக்கூடிய எதிர்காலம், நிகழ வாய்ப்புள்ள எதிர்காலம், எதிர்பார்க்கும் எதிர்காலம் என்னும் மூவகைச் சிந்தனைகளும் காணக்கிடைக்கின்றன. "*ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தாற் செயின்*" என்னும் குறள் நிகழக்கூடிய எதிர்காலத்தையும் "*தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை வீயாது அடி உறைந்தற்று*" என்னும் குறள் நிகழ வாய்ப்புள்ள எதிர்காலத்தையும் "*வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்*" என்னும் குறளில் எதிர்பார்க்கும் எதிர்காலமும் உணர்த்தப்படுகின்றன. இவை

மட்டுமன்றி எதிர்காலத்திற்கான திட்டமிடுதல், எதிர்கால நோக்கின் இன்றியமையாமை போன்ற நிலைகளையும் குறளில் அறிந்துகொள்ளமுடிகிறது. அவ்வாறே பாட்டியல் நூல்கள் வெவ்வேறாக எடுத்தியம்பும் சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை வரையறையும் ஐம்பெருங்காப்பியங்களின் கதைப்போக்கினூடாகக் கதையாடல் நிலையில் காணப்படுகின்ற கருத்துநிலைகளும் தமிழரின் எதிர்காலவியல் சிந்தனைகளைப் பறைசாற்றுகின்றன.

எதிர்காலவியல் இலக்கியப்படைப்புகள்

காலந்தோறும் வடிவம்,உள்ளடக்கம், வெளிப்பாட்டுமுறை, உத்திகள் ஆகிய நிலைகளில் மாற்றங்களைச் சந்தித்து வருகின்ற தமிழிலக்கியத்தின் எதிர்காலத்தை ஆய்வு செய்வதும் எதிர்காலவியல் சார்ந்ததே ஆகும். இதுமட்டுமன்றி எதிர்காலவியல் சார்ந்த புத்திலக்கியப் படைப்புகளும் தமிழில் வெளிவந்துள்ளன. மு.வரதராசனாரின் கி.பி. 2000 (சிந்தனைக்கதை),. சுஜாதாவின் சொர்க்கத்தீவு, தேவன் வருகை, நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம், என் இனிய இயந்திரா ஆகிய படைப்புகள், கஸ்தூரி ரங்கன் தினமணியில் தொடராக எழுதிய கி.பி. 2084, புதுஉலகம் இன்றே ஆகிய படைப்புகள், ஆர்னிகா நாசரின் ஆண்கர்ப்பம், டினோசர் ஜாக்கிரதை உள்ளிட்ட ஆனந்தவிகடன் சிறுகதைகள் போன்றவை எதிர்காலவியல் இலக்கியப் படைப்புகளுள் குறிப்பிடத்தக்கவை.

1957 இல் மு.வ. ‘ஒரு வகுப்பறைக்கு மாணாக்கர் இருபதுபேர் மட்டும் இருப்பர்.பாடப்பகுதி காட்சிப்பொருளாகவே விளக்கப்படும். மாணாக்கரிடம் வினா கேட்டும் வினா எழுப்பச் செய்தும் தூண்டப்படுவர். வல்லுநர் கொண்டு சொற்பொழிவாற்றச் செய்வர். மாணாக்கர் ஆய்வுக்கட்டுரை படைப்பர். தெருக்கள்தோறும் கல்விநிறுவனங்கள் தோறும் நூல் நிலையம் அமைக்கப்பட்டிருக்கும்’ என்று 2000 இன் கல்விநிலையை எதிர்காலவியல் நோக்கில் 2000 (சிந்தனைக்கதை) என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இருநூற்று எழுபத்தாறு எழுத்து எங்கே? முப்பத்து மூன்று எங்கே. Asc code இல் சுலபமாக அடக்கிவிட்டோம். இதைத் தான் எங்கள் பள்ளியிலும் இனி சொல்லிக் கொடுக்கப்போகிறோம் (பக்72, 72) என்னும் சொர்க்கத்தீவின் பகுதி தமிழ் மொழியின் எதிர்கால மாற்றத்தை எடுத்தியம்புகிறது.

குடும்பஉறவில் ஏற்படப்போகின்ற மாற்றத்தை என் இனிய இயந்திராவில், *"உங்கள் இருவருக்கும் ஆண்குழந்தை பெற்றுக்கொள்ள அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. பெயர் மணி. இந்த அனுமதிப்பத்திரம் 2022 –ம் ஆண்டு சூன் இருபத்தைந்து வரை செல்லும். அதற்குள் கர்ப்பம் ஏற்படவில்லையெனில் அரசின் மக்கட்தொகை கட்டுப்பாட்டுப்பிரிவின் பகுதியில் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். கர்ப்பம் பெண்குழந்தை என்று தெரிந்தால் உடனே ம.க. பிரிவின் D பகுதிக்குத் தகவல் தெரிவிக்கவேண்டும். மீறினால் குற்றம்"* (பக்.5-6) என்று பதிவுசெய்துள்ளளார். ஆர்னிகா நாசரோ தம் 'ஆண்கர்ப்பம்' சிறுகதையில் ஆண் கர்ப்பமடையும் அதிசயத்தை எடுத்தியம்புகிறார்.

சுஜாதாவின் 'தேவன் வருகை' நூலில் *"கவனிக்கவும் ' கவனிக்கவும் ' படகு கடலுக்குள் செல்லப்போகிறது. இன்னும் மூன்று நிமிடங்களில் நாம் சென்னை நகரை அடையப்போகிறோம். . . இருபத்து ஒன்றாம் நூற்றாண்டின் இறுதியில் கடலில் மூழ்கிய சென்னை நகரத்தின் புராதனக் கட்டடங்கள் நவீன ரசாயனத்தின் உதவியால் பாசி நீக்கப்பட்டுச் சுத்தப்படுத்தப்பட்டு... உங்களுக்காகக் காத்திருக்கிறது. ... உங்கள் படகு சென்னை நகரின் புராதன வீதிகளின் ஊடே மிதந்து செல்லும்"* (ப.105) என்னும் வருணனையை அமைத்துள்ளது புவிவெப்பமடைதல் என்னும் எச்சரிக்கையின் வெளிப்பாடே ஆகும். இவ்வாறு புத்திலக்கியங்களில் அறிவியல் வளர்ச்சி, உறவுச்சிதைவுகள், சூழல் மாசுபாடு போன்ற எதிர்கால அச்சுறுத்துதல்கள் சித்திரிக்கப் பெற்றுள்ளன.

தொகுப்புரை

நிகழ்காலத்தின் வெளிச்சத்தில் எதிர்காலத்தைக் குறித்துச் சிந்திக்கும் அறிவியல் துறையாக எதிர்காலவியல் வளர்ந்து வந்துள்ளது. இன்று அனைத்துத் துறைகளிலும் செல்வாக்கு பெற்றுள்ள இத்துறை மானிடவியல், சமூகவியல், உளவியல், சூழலியல் போன்ற பல துறைகளோடு நெருக்கமான உறவைக் கொண்டு அமைந்துள்ளது. தொல்காப்பியத்தில் விதைக்கப்பெற்றுள்ள எதிர்காலவியல் சிந்தனைகள் இன்று எதிர்காலவியல் சார்ந்த புத்திலக்கியங்களைப் படைக்கும் சாதனை வரை தமிழிலக்கியப்பரப்பில் மேன்மையைக் கண்டுள்ளது.

ஓலைச்சுவடிகளில் வெளிப்பட்ட தமிழ்மொழியை இன்று கணினியிலும் இணையத்திலும் ஆட்சிசெலுத்தச் செய்ததும் தமிழனின் எதிர்காலவியல் சிந்தனை வயப்பட்டதே எனில் அது மிகையாகாது.

துணைநின்றவை

1. சிவகாமி.ச., தமிழ் இலக்கியத்தில் எதிர்காலவியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை, முதற்பதிப்பு, 2001.
2. சுஜாதா, என் இனிய இயந்திரா, குமரிப்பதிப்பகம், நாகப்பட்டினம், முதற்பதிப்பு, 1992
3. சுஜாதா, சொர்க்கத்தீவு, குமரிப்பதிப்பகம், நாகப்பட்டினம், முதற்பதிப்பு, 1975
4. சுஜாதா, தேவன் வருகை, குமரிப்பதிப்பகம், நாகப்பட்டினம், முதற்பதிப்பு, 1977
5. யோகமூர்த்தி.ஆ., எதிர்காலச்சிந்தனை- சுற்றுச்சூழல், சேகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1993
6. Narayankaran Reddy, Problems of futurology, Sterling Publishers Private Limited, NewDelhi,1985
7. http://nandakanan.tripod.com/scienceterms.htm
8. http://wordnet.princeton.edu/perl/futurology.

****

ஆரோக்கிய வாழ்விற்கு திருமூலர் சுட்டும் மூச்சுப் பயிற்சி

முனைவர் ஆ.ஜோசப் சகாயராஜ்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
தூய வளனார் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

தமிழில் யோகத்திற்கு அடிப்படையான நூல் திருமந்திரம். இவ்யோக முறை மனிதகுலம் இன்பமாக வாழ இன்றியமையாத ஒன்றாகப் பயன்படுகிறது. யோகா என்ற அகத்தவத்திற்கு எட்டு படிநிலைகள் உண்டு எனத் திருமூலர் கூறுகிறார். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தி எட்டையும் "அட்டாங்க யோகா" என்கிறார் திருமூலர். இவற்றுள் தினமும் செய்ய வேண்டியவை ஆசனம். மூச்சுப்பயிற்சி தியானம் ஆகும். தினமும் குறைந்தது 30 நிமிடங்களாவது இதனைச் செய்ய வேண்டும் என இன்றைய யோக மருத்துவர்கள் கூறுகின்றனர். இதனையே 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திருமூலர் தமது மூன்றாவது தந்திரத்தில் விளக்கமாகவும் விரிவாகவும் கூறியுள்ளார்.

பிராணாயாமம்

பிராணன் + யாமம் = பிரணாயாமம். பிராணன் என்றால் உயிர் மூச்சு. யாமம் என்றால் வழிப்படுத்துதல். அதாவது மூச்சைக் கட்டுப்படுத்தி தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல் என்று பொருள். எனவே மனிதனின் உயிர் ஆகிய சுவாசத்தைப் பயிற்சியின் மூலம் சரியான எண்ணிக்கையில் சுவாசிக்கச் செய்வதே பிராணயாமம் ஆகும். இதை மூச்சுப் பயிற்சி என்றும் கூறலாம். மூச்சுப் பயிற்சி உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவுகிறது. மனித உடலில் கோடிக்கணக்கான செல்கள் உள்ளன. இவை சரிவர இயங்கினால் தான் மனிதன் நோயற்று வாழ முடியும். மூச்சுப் பயிற்சி செய்வதினால் உடலுக்குத் தேவையான பிராண வாயு கிடைக்கிறது. இன்றைய காலத்தில் இம்மூச்சுப் பயிற்சியை 'வாழும் கலை' (Art of Living) என்ற அமைப்பினர் மக்களிடையே பரப்பி வருகின்றனர். மருத்துவர்களும் மூச்சுப் பயிற்சி மனிதனை நோயின்றி வாழ வைக்கும் எனக் கூறுகின்றனர். இம்மூச்சுப்பயிற்சி செய்வதால் ஏற்படும் பயனைத் திருமூலர்,

"புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டால்
கள்ளுண்ண வேண்டாம் தானே களிதரும்
துள்ளி நடப்பிக்குஞ் சோம்பி தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னோம் உணர்வுடையோருக்கே"

என்ற பாடல் வழி எடுத்துரைக்கின்றார். பறவை முட்டையிலிருந்து வெளிவந்தவுடன் பறப்பது போல் மனிதனும் உலகில் பிறந்தவுடன் மூச்சு விட்டு வாங்குகிறான் என்பதையே 'புள்ளினும் மிக்க' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். இம்மூச்சினை முறைப்படி பயிற்சி எடுத்து வெளியிட்டு வந்தால் நோயற்ற பெருவாழ்வைப் பெற முடியும் என்கிறார் திருமூலர். காற்றை உள்ளிழுத்து வெளியிடும் பொழுது இடது மூக்கு வழியாக வெளியிட்டால் அதனை இடங்கலை என்றும், வலது மூக்கு வழியாக வெளியிட்டால் அதனைப் பிங்கலை என்றும் அழைக்கின்றனர்.

மூச்சுப் பயிற்சி செய்யும் முறை

மூச்சுப் பயிற்சியைத் தரையில் அமர்ந்து செய்யக் கூடாது. ஒரு பாய் அல்லது பலகையின் மீது அமர்ந்து காலை சூரிய உதயத்தின் போதும், மாலை சூரியன் அஸ்தமன காலத்திலும் செய்ய வேண்டும். இம் மூச்சுப் பயிற்சியின் அடிப்படையில் காற்றை வயிற்றில் அடக்கினால் உடலில் முதுமை தோன்றாது என்பதனை,

"வளியினை வாங்கி வயத்தில் அடக்கிப்
பளிங் கொத்துக் காயம், பழுக்கினும் பிஞ்சாம்"

எனும் வரிகள் எடுத்துரைக்கின்றன. இம்மூச்சுப் பயிற்சியை முறைப்படி செய்வதால் கூற்றுவனை விரட்ட முடியும் என்பதை,

"ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியதுவாமே"

என்ற பாடல் வழி கூறுகிறார் திருமூலர்.

மூச்சுப்பயிற்சியை ஆரம்பிக்கும் போது அமர்ந்த நிலையில் முதலில் வலது கட்டை விரலால் வலது நாசியை மூடி இடது நாசியின் வழியாக மெதுவாகக் காற்றை உள்ளே இழுக்க வேண்டும். பிறகு இடது நாசியினை மோதிர விரல் மற்றும் சிறுவிரல் கொண்டு மூடி சில வினாடிகள் காற்றை உள்ளே நிறுத்த வேண்டும். காற்றை நிறுத்துவது என்பது கஷ்டபடாமல் செய்ய வேண்டிய காரியமாகும். ஆரம்பத்தில் இது சிறிது கடினமாகத் தோன்றினாலும். தொடர்ந்து பயிற்சி செய்தால்

நாளடைவில் காற்றை உள்ளே சில வினாடிகள் அடக்கி வெளியே விடலாம். எனவே, அவரவர்களால் முடிந்த அளவு நேரம் காற்றை உள்ளே அடக்கினால் போதுமானது. நீண்ட நேரம் மூச்சை அடக்குவது நல்லதல்ல. இப்பொழுது வலது கட்டை விரலை எடுத்துவிட்டு மிக மெதுவாக வலது நாசியின் வழியாக காற்றை வெளியிட வேண்டும். சில வினாடிகள் கழித்து மீண்டும் வலது நாசியில் காற்றை இழுத்து நிறுத்தி வலது நாசியைக் கட்டை விரல் கொண்டு மூடி, இடது நாசியின் வழியாக வெளியிட வேண்டும்.

இவ்வாறு ஒரு முறை செய்வது ஒரு பிராணாயாமம் ஆகும். இவ்வாறு ஒரு நாளைக்கு காலை மாலை இரு வேளைகளிலும் செய்வது மிகச் சிறந்த செயலாகும். இரு வேளை செய்ய முடியாதவர்கள் தினமும் ஒரு வேளையாவது செய்து வர வேண்டும்.

மூச்சுப் பயிற்சியின் போது வெளிக்காற்றை உள்ளே கிரகித்துக் கொள்வது பூரகம் (Inspiration) என்றும், சுவாசித்தக் காற்றை உள்ளே நிறுத்துவது 'கும்பகம்' (Rotation) என்றும் நிறுத்திய காற்றை வெளியே விடும் போது 'இரேசகம்' என்றும் மூன்று நிலைகளாகக் கூறப்பட்டுள்ளது. இந்த மூன்று நிலைகளும் எந்தெந்த அளவுகளில் இருக்க வேண்டும் என திருமூலர் திருமந்திரத்தில்,

"ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பகம் அறுபத்து நாவதில்
ஊறுதல் முப்பத்து திரண்டில் ரேசகம்
மாறுதல் ஒன்றின் கண்வந் சமமாமே"

இப்பாடலின் கருத்துப்படி உள்மூச்சான 16 மாத்திரைகள் உள்ளே நிறுத்தும் கும்பகத்திற்கு 64 மாத்திரைகள். வெளியே இடும் இரசகத்திற்கு 32 மாத்திரைகள் என்பது கால அளவாகும். இம்மூச்சுப் பயிற்சியானது பதினோரு முறைகள் உள்ளன. 1) ஏகநாடி சுத்தி, 2) நாடி சுத்தி, 3) பஸ்திரிகா, 4) கபாலபதி, 5) ஷீதலி, 6) சீத்காரி, 7) உஜ்ஜயி, 8) சூர்ய பேதனா, 9) சந்திரபேதனா, 10) அனுலோமா விலோமா, 11) பிரம்மரி ஆகியனவாகும்.

நோயற்று இருப்பதற்குரிய வழிமுறைகள்

பத்மாசனம் சிங்காதனம் போன்ற ஆசனங்களை 1-5 நிமிடங்கள் செய்யலாம். இவ் ஆசனங்கள் தியான நிலைக்கு ஏற்ற ஆசனங்களாகும். மனதை எளிதாக ஒருமுகப்படுத்தி, மூச்சுப்

பயிற்சியும் செய்யலாம். வழிபாடு, தவத்திற்கு ஏற்றவை. இவ்ஆசனங்களை மூச்சுப் பயிற்சியோடு சேர்த்துச் செய்வதால் நரம்புகளின் சக்தி அதிகரிக்கிறது. தேவையற்ற சதையைக் குறைக்கிறது. உடலை அழகாக வைத்துக்கொள்ள உதவுகிறது. மனச்சோர்வை நீக்கி, ரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்கிறது. நுரையீரல் இயக்கத்திற்கும், மூட்டுகள் முழங்கால் நோய்களுக்கும் உதவுகின்றன. சுவாச உறுப்புக்களைப் பலப்படுத்துகிறது. ஞாபக சக்தியை அதிகரிக்கிறது.

மூச்சுப் பயிற்சியையும் ஆசனங்களையும் இறைவழிபாட்டோடு இணைத்துக் கொண்டால் அது தியானம் ஆகிறது. உடம்பின் முக்கியமான ஆறு உறுப்புகளிலும் யோகாசனத்தில் அமர்ந்து மூச்சுப்பயிற்சி செய்து உள்ளிழுத்தக் காற்றை, நிறுத்தும் பயிற்சியைக் கைக்கொண்டால் இறையருளைப் பெற முடியும். நயனமாகிய நாட்டம் இரண்டினையும் நடு மூக்கின் மேல் வைத்து உயிர்த்தெழுந்து புறத்துப் போகும் உயிர்ப்பினை அகத்தே அடக்கி, பிறப்புத் துன்பம் நீங்குமாறு சிவனை நினைத்து யோக நிலையில் இருந்தால் துன்பம் நீங்கும் உடம்பினுக்கு அழிவில்லை, மேலும் அகத் தவத்தால் உடல் உள்ளே,

"மணி கடல் யானை வார்குழல் மேகம்
அணி வண்டு தும்பி வளை பேரிகையாழ்
தணித் தெழு நாதங்ள் தாமிவை பத்தும்

உண்டாகும். இது இறைவனைப் பணிந்தவர்களுக்கு மட்டும் ஏற்படும் என்கிறார் திருமூலர். உயிர்ப்பை மூலத்திடத்து முறைப்படச் சிக்கெனப் பிடித்து, பிங்கலை, இடங்கலை நாடி வழி மாறி மாறிப் பயிறல் வேண்டும். குறித்த நாழிகை வரை அகத்தே தடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்தால் உயிர்நிலையாகிய உடம்பை சிவபெருமான் காத்து அருள்வான் என்ற கருத்தில்,

"முக்குண மூடற வாயுவை மூலத்தே
சிக்கென மூடித் திரித்துப் பிடித்திட்டுத்
தக்க வலமிடம் நாழிகை சாதிக்க
வைக்கும் உயிர்நிலை வானவர் கோனே"

என்ற பாடலைத் தந்துள்ளார். இவ்வாறு மனிதர்கள் நோயற்று நீண்ட நாள் வாழ வழிமுறைகளை எடுத்துரைத்துள்ளார். முக்கிய உறுப்புகளுக்கு பிராணவாயு அதிகமாக கிடைப்பதற்குரிய மூச்சுப் பயிற்சியையும், உடற்பயிற்சியையும் மேற்கொண்டால் மனிதன் நீண்ட நாள் வாழமுடியும் என்பதை திருமூலர்,

'ஈராறு கால்கொண்டு ஏடுத்த புரவியைப்

பேராமற் கட்டிப் பெரிதுணர வல்விரேல்
நீராயிரமும் நிலமா யிரத்தாண்டும்
பேராது காயம் பிரான் நந்தி ஆணையே"

என்று கூறியதோடு தாம் அதிக நாள் வாழ்வதற்கு மேற்கூரிய ஆசனப் பயிற்சி, மூச்சுப் பயிற்சியுமே காரணம் என்கிறார்.

"புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்படவுள்ளே நின்மலமாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமம் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடையோனே"

என்கிறார் திருமூலர் பிராண சக்தி வீணாகப் போகாமல் காப்பதே நீண்ட காலம் வாழ்வதற்கு வழியாகும். அட்டாங்க யோகத்துள் ஒன்றாகிய யோகத்துள் பிராணாயாமம் நாம் நீண்ட காலம் வாழ வழி செய்கிறது.

மூச்சுப் பயிற்சியின் பலன்கள்

1. மூச்சுப் பயிற்சியின் முக்கியமான பலன் உடலில் இருந்து கழிவுகள் வெளியேற்றப்படுவது தான்.
2. சுவாசம் செல்லும் பாதையான மூக்கு முதல் நுரையீரல் வரை உள்ள அனைத்துப் பகுதிகளிலும் உள்ள கழிவுகளை அகற்றி சுத்தம் செய்து வலுப்படுத்தி நுரையீரலைப் பாதுகாக்கிறது.
3. மூச்சை உள்நிறுத்தி மெதுவாகச் சுவாசித்து செய்யும் பயிற்சிகளால் ரத்த ஓட்டத்தில் அழுத்தமும் வேகமும் ஏற்படும். இவ்வாறு செய்யும்போது உடல் முழுவதும் ஆக்ஸிஜன் சென்று சேருவதும், உடலில் இருந்து கார்பன்டை ஆக்ஸைடு வேகமாக வெளியேறுவதும் என உடல் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது.
4. மூச்சுப் பயிற்சியால் வயிறு, கல்லீரல், கணையம் என வயிற்றில் உள்ள அனைத்து உறுப்புகளும் சீரான முறையில் செயல்பட உதவுகிறது.
5. உடலில் ஏற்படும் அதிகச்சூடு, அதிகக் குளிர்ச்சி போன்ற நிலைகளை சமன்படுத்துகிறது.
6. முகத்தைப் பொலிவுடன் வைக்க உதவுகிறது. மலச்சிக்கல் வராமல் பாதுகாக்கிறது.
7. மூச்சுப் பயிற்சியின் மூலம் மூளைச்செல்களுக்கு ஆக்ஸிஜன் செல்வதால் தொடர்ந்து ஏற்படும் தலைவலி, டென்சன், மயக்கம், மறதி போன்ற பிரச்சனைகளில் இருந்து விடுபடலாம்.

இங்ஙனம் மூச்சுப்பயிற்சியையும் யோகத்தின் உண்மையை அதாவது மெய்ப்பொருளான இறைவனை அடைவதையும் இணைத்துச் சிறப்பாகக் கூறியுள்ளார்.

"உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்"
"உடம்பை வளத்தேன் உயிர் வளர்த்தேனே"

என்பதற்கு ஏற்ப நீண்ட நாள் உடல் நலத்தோடு வாழ்வதற்கு தாம் மேற்கொண்ட வழிமுறைகளை உலகிற்கு எடுத்துரைத்து மனிதர் நலன் சிறக்கப் பாடுபட்டுள்ளார் திருமூலர்.

****

நாட்டுப்புறத் தொழிற்பாடல்கள் காட்டும் பெண்ணுரிமை மீறல்கள்

பேரா.செ.கென்னடி,
தமிழாய்வுத்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-2.

அறிமுகம்

பெண்கள் மொத்த ஜனத்தொகையில் ஐம்பது விழுக்காடு இருப்பினும் அவர்கள் பலமற்றவர்களாகவே கருதப்படுகின்றனர். குழந்தைகளைப் பெற்றெடுக்கும் இயந்திரங்களாய், அடுப்பு வேலை பார்ப்பவர்களாய், அந்தப்புரத்தின் அலங்காரப் பதுமைகளாய் பெண்களைப் பார்த்து விட்டதால் இன்றும் கூட இத்தகைய பணிகளைப் பெண்கள் செய்ய வேண்டுமென ஆண்கள் சமூகம் எதிர்பார்க்கின்றது. ஆணாதிக்கத்தின் வெளிப்பாடாகப் பெண்கள் வீட்டிலும், வெளியிலும் அலுவலகங்களிலும், வேலை செய்யும் இடங்களிலும், கிராமங்களிலும், நகரங்களிலும் பல பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர்.

கட்டாயத் திருமணங்கள், வரதட்சணைக் கொடுமை, விதவை மறுமண எதிர்ப்பு, கற்பழிப்பு, கட்டாயக் கருக்கலைப்பு, ஏமாற்றுதல், சித்திரவதைக்கு உள்ளாக்குதல், இப்படிப் பெண்கள் நாள்தோறும் சந்திக்கின்ற பிரச்சினைகளின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இப்படிப்பட்ட பிரச்சினைகளின் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், புதினங்கள் போன்ற இலக்கியங்கள் வாயிலாகவும், தகவல் தொடர்பு ஊடகங்கள் வாயிலாகவும் காலங்காலமாக வெளிப்படுத்தப்படுகின்றன. இத்தகைய கொடுமைகள் நாட்டுப்புறத் தொழிற்பாடல்களில் எவ்வாறு வெளிப்படுத்தப்படுன்றன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. பெண்சிசுக் கருவதை

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை நல்ல வழியில் பயன்படுத்தி மக்களை நாகரீக உலகத்திற்குக் கொண்டு செல்ல முடியும். ஆனால் அதைத் தவறாகப் பயன்படுத்தி ஒரு இனத்தையே அழிக்கும் கொடுமை நமது மண்ணில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்தில் அவர்கள் வயிற்றில் இருக்கும் கருவின் வளர்ச்சி நிலையைக் கண்டறிவதற்காக 'அமினியோ செண்டசிஸ்' என்னும் மருத்துவப் பரிசோதனை நடத்தப்படுகிறது. ஆனால் அதே முறையைப் பயன்படுத்திக்

கருவில் இருக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? என்பதைக் கண்டறிந்து பெண்ணாக இருந்தால் அதைத் தாயின் கருப்பையிலேயே கலைத்துக் கொலை செய்யும் நிலைக்கு மக்கள் துணிந்து விடுகின்றனர்.

அதைப்போலவே மற்றொரு அறிவியல் முறை ஸ்கேன் என்பதாகும். இத்தகைய நவீன முறையால் கருவில் இருக்கும் குழந்தை கண்டறியப்பட்டு அழிக்கப்படும் கொடுமை நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

அறிவியலாவது
அங்கீகரித்ததா பெண்ணை
பெண் குழந்தை என்றால்
கர்ப்பத்திலேயே கலைத்துப் போட
கண்டுபிடித்தது தானே
ஸ்கேன் மருத்துவ வசதி

என்ற முகவை முத்துவின் கவிதை வரிகள் சிந்திக்கக் தக்கவை. இத்தகைய கருக்கலைப்புக் கொடுமையை நாட்டுப்புறப் பாடல்களிலும் காணமுடிகிறது.

கூடையிலே கல் பொறுக்கி
கோவிரங்க உண்டு பண்ணி
கோவிரத்து உள்ளால -- ஒரு
குயிலு வந்து முட்டையிடும்
குயிலு வெரட்டாதீங்க
குயிலு முட்டையை எடுக்காதீங்க
குயிலோ(ள்) விடும் கண்ணீரு
கொடியா(ள்) தல காக்குமுங்க.

என்று கருக்கலைப்புச் செய்தி ஒரு முட்டை படிமமாகப் பாடப்படுகின்றது. மற்றொரு பாட்டில் இத்தகைய கருக்கலைப்பு வெளிப்படையாகப் பாடப்படுகின்றது.

எருக்கம் பாலு இரு நாலி
கள்ளிப் பூ வெத நாலி
கை மருந்தத் தின்டு விட்டு
களிச்சுக்கடி ஓ(வ்) வகுத்த

கருவில் இருக்கும் குழந்தை பெண் என்பதை அறிந்து கருவைக் கலைக்க எருக்கம் பாலையும், கள்ளிப் பூவையும் தின்னுமாறு கணவனால் கட்டாயப் படுத்தப்படும் நிலையை இப்பாடல் விளக்குகிறது.

2. பெண்சிசுக் கொலை

வசதி படைத்தவர்கள் கருவில் இருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்பதைக் கண்டறிந்து பெண்ணாக இருந்தால் அதைக் கருவிலேயே கலைத்து விடுகின்றனர். ஆனால் வசதியில்லாத ஏழை மக்களுக்கு இத்தகைய வாய்ப்பு இல்லாததால் குழந்தை பிறந்தவுடன் தான் அது ஆணா பெண்ணா என்பது தெரிய வரும். ஒரு வேளை அக்குழந்தை பெண்ணாக இருக்குமானால் அதைக் கொல்வதற்குப் பல்வேறு வழிமுறைகளைக் கையாளுகின்றனர். கள்ளிப்பால், எருக்கம்பால், நெல்மணி போன்றவற்றில் ஏதாவது ஒன்றை வாய்வழியாகக் கொடுத்து குழந்தையைச் சாகடிக்கின்றனர்.

பெண்ணாய் உருவெடுத்தால்
கருவிலேயே நீளும் கொலைக் கரங்கள்
தவறினால் - கழுத்தை நெறிக்கவும்
தயங்குவதில்லை.

என்ற கவிதை வரிகளின் கருத்திற்கேற்ப இன்றைக்குப் பல்வேறு முறைகளில் பெண் குழந்தைகள் கொல்லப்படுகின்றனர்.

ஈரத்துணியைச் சுற்றி வைத்தல், பூச்சி மருந்து, புகையிலைச் சாறு, தூக்க மாத்திரை, செம்பாக்கை ஊற வைத்துக் கொடுத்தல், மண் பானைக்குள் வைத்து உயிரோடு புதைத்தல், தலையணையை வைத்து அமுக்கிக் கொல்லுதல், மின்விசிறியை வேகமாகச் சுழலவிட்டு மூச்சுத் திணறடித்தல், கோழியைக் கொல்வது போல தண்ணீருக்குள் தலையை அமுக்கிப் பிடித்துக் கொல்லுதல் என அவரவருக்குத் தெரிந்த முறைகளில் குழந்தைகளைக் கொல்லுகின்றனர். இம்மாதிரியான பெண் சிசுக் கொலைகள் தமிழகத்தில் மதுரை மாவட்டத்தில் தேனி, உசிலம்பட்டி போன்ற பகுதிகளிலும், நாமக்கல், ராசிபுரம், தர்மபுரி, சேலம், திண்டுக்கல் ஆகிய பகுதிகளிலும் அதிகமாக உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அரளியை அரைக்கிறா
உமியை நுணுக்குறா
கண்கள மூடிக்கிட்டு
பாலாகக் கொடுக்குறா
உம்மனசும் எம்மனசும் பதறித் துடிக்கிது
பல ஊர்களில் சிசுக் கொலை
இப்படித்தான் நடக்குது.

என்ற நாட்டுப்புறப் பாடல் இத்தகைய கொடுமையை விளக்குகிறது.

3. பொருந்தா மணம்

குறைந்த வயதுள்ள பெண்ணை வயது முதிர்ந்த ஆண்களுக்கு மணம் செய்து கொடுக்கும் வழக்கம் இன்றும் நம் நாட்டில் இருந்து வருவது கொடுமையாகும். இத்தகைய கொடுமைக்குக் காரணம் வறுமை, ஏழ்மை, சொத்து, உறவுநிலை, போன்றவைகளாகும். இதன் காரணமாகப் பல பெண்களின் வாழ்க்கை கேள்விக் குறியாகப் போவதுடன் இளமையிலேயே விதவைக் கோலம் பூணும் அவலநிலைக்கும் பெண்கள் ஆளாக நேரிடுகிறது.

அழகான ஒரு இளம் பெண்ணுக்கு அவளது பெற்றோர்கள் ஒரு கிழவனைக் கட்டிவைக்கின்றனர். கட்டிய கிழவனோ மணமான மூன்றாவது நாளே நோய் வாய்ப்பட்டு இறந்து விடுகிறான். இருப்பினும் அவள் துக்கத்தில் மூழ்கி விடவில்லை. கிண்டலும் கேலியுமாக இறப்புச் சம்பவம் பாடப்படுகிறது. பொருந்தா மணம் குறித்துப் பெண்களின் கருத்தாக வெளிவரும் பாடல்

கீழாண்டத் தெருவுலடி ஏய் நான்
கிழவனுக்கே வாக்கப்பட்டேன்
கிழவனுக்கே வாக்கப்பட்டேன்
வாக்கப்பட்ட மூணாநாத்துடி ஏய் - தாத்தாவுக்கு
வவுத்துவலி வந்துடுச்சி
வவுத்துவலி வந்துடுச்சி
....
....
குழியிலதான் வையுங்கடி ஏய் - தாத்தாவுக்கு
மண்ண கொண்டு போய் தள்ளுவோம்
மண்ண கொண்டு போய் தள்ளுவோம்.

4. பலதார மணம்

ஓர் ஆண் பல பெண்களை மணந்து கொள்ளும் வழக்கம் நம்மிடையே நிலவி வருவது கொடுமையானதாகும். இத்தகைய கொடுமைக்கு எதிராக்க் குரல் கொடுத்தவர்கள் இராஜாராம் மோகன்ராய், தந்தை பெரியார் போன்றோர்களாவர். ஓர் ஆண் பல பெண்களை மணக்கலாம் என்றால் ஒரு பெண்ணும் பல ஆண்களை மணக்கலாம் அல்லவா? இந்நிலை உருவானால் சமுதாயம் தலை கீழாக மாறிவிடும். ஒரே வயிற்றில் பிறக்கும் ஆணுக்கும், பெண்ணுக்கும் சொத்து, சுகம், வாழ்வுமுறை, பண்பாடு யாவற்றிலும் சம உரிமை உண்டு. எனவே பெண்ணுக்கு ஒரு நீதியும், ஆணுக்கு ஒரு நீதியும் கூறுவது மனித குலத்திற்கு ஆகாது எனக் கூறலாம்.

1991-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி இந்துக்களிடையே 5.8 சதவிகிதமும், இஸ்லாமியரிடையே 6.7 சதவிகிதமும், தாழ்த்தப்பட்டவரிடையே 30 சதவிகிதமும் பலதார மண முறை நடை முறையில் உள்ளதாக அறியமுடிகிறது.

பெண்ணிற்கு உரிய இயல்பான, இயற்கையான உணர்வுகளைப் புறக்கணிக்கும் சமூகச் சீர்கேடு பற்றி கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை,

பாவியாம் என்னைப் பதினா றாண்டில்
ஐந்தாம் மனைவியாக மணந்தனர்
கணவர் வீட்டுக் கதையினைக் கேளும்

என்று குறிப்பிடுகிறார். இத்தகைய பலதார மணம் அஸ்ஸாம், மணிப்பூர் ஆகிய பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்களிடையேயும், தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும் அதிகமாக உள்ளது. சில இடங்களில் பல மனைவிகளை மணந்து கொள்வது பெருமைக்கு உரியதாகவும் கருதப்படுகிறது. பெண்கள் மத்தியில் கல்வியறிவு இல்லாததாலும் சட்ட விழிப்புணர்வு இல்லாததாலும் சமூகப் கட்டுப்பாடுகளாலும் பல பெண்கள் பலதார மணத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இது பெண்களின் உரிமையை மறுப்பதோடு சமூகத்தில் பல பிரச்சினைகளை உருவாக்குகின்றது.

கட்டிய மனைவியை வீட்டில் வைத்துக் கொண்டு வெளியில் பல பெண்களை வைப்பாட்டியாக வைத்துக் கொள்வது பெரிய பெரிய பண்ணையார்களுக்குப் பொழுது போக்காகும். இங்கே ஒரு பண்ணையார் தன் வைப்பாட்டிகளுக்குப் பன்றிக் கறியைப் பகிர்ந்து அனுப்பிய செய்தியை நாற்று நடும் பெண்கள் பாட்டாகப் பாடிக் கேலி செய்கிறார்கள்.

அம்மா! பண்ணியா முடி பன்னி பால மலை பன்னி
நேரம் கெட்ட நேரத்தில நெல்லுதிங்க வந்த பன்னி
நெத்தில குண்டு வச்சு சுட்டானாம் வேட பையன்
தலையும் உடலும் தஞ்சாவூரு கூத்தியாளுக்கு
உடலும் தலையும் உள்ளூரு கூத்தியாளுக்கு
தன்னை பெத்த தாயாருக்கு கறி இல்லையென்று சொல்லி
முள்ளால மூணுகறி குத்தி அனுப்புனாராம்
அந்த ஏகாந்த ராமருக்கு எடுங்கடியோ பூங்க குலகதாளம்.

5. பாலியல் வன்முறை

ஆண் முதன்மைச் சமுதாயத்தில் பெண்களின் மீது ஆண்களால் தொடுக்கப்படும் வன்முறைகளில் கொடுமையானதும்,

நாகரீகமற்றதுமான செயல் பாலியல் வன்முறை என்பதாகும். இவ்வகையில் பெண்ணைப் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கும் இத்தகைய வன்முறையில் பெண் உடல், மண வாழ்க்கைச் சிதைவுக்கு ஆளாகின்றாள். இன்றைய சமூகமும், சட்டமும், ஓர் ஆண் ஒரு பெண்ணின் விருப்பத்திற்கு மாறாகத் தன்னுடன் உடல் உறவு கொள்ள அவளைக் கட்டாயப்படுத்தினால் அது பலாத்காரமாகும் என்று பாலியல் வன்முறை குறித்து வரையறை செய்கின்றன.

கிராமப் புறங்களில் பெண்கள் கூலி வேலை செய்து பிழைக்க வேண்டிய நிலை உள்ளது. பண்ணைகளில் வேலைக்குச் செல்லும் பெண்கள் பண்ணையாரால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுவதை,

அழகிய பெண்கள் ஊரில்
அகப்பட்டால் தோட்ட வேலைக்கு
அழைத்ததுமே வரச் செய்தாங்கு
அநியாயமாய்க் கெடுப்பான்
தழுவிய அவரின் செய்கை
தாழாமல் வெளியில் சொன்னால்
அழுகிய குற்றம் ஒன்றை
அவளின் மேல் சுமத்தச் செய்து
தகுதியாய் மானத்தோடு
தரையினில் வாழச் செய்வான்
வெகுண்டெழுந்த தனையாரும்
வினவினால் நீதி கேட்டு
மிகு பணக் கொடுப்பாய்க் கையில்
மேய்ந்திடும் அடியாள் கொண்டு
வெகுமதி கொடுக்கச் செய்து
விரட்டியே அனுப்பி வைப்பான்

என்ற சின்னப்ப பாரதியின் கவிதையானது கிராமங்களில் நடக்கும் பாலியல் வன்முறையைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

தன்வீட்டு மாட்டுக் கொட்டகையில் வேலை செய்யும் ஒரு பெண்ணைச் சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருக்கும் ஒருவர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குவதை விளக்கும் ஒரு நடவுப் பாடல்.

மாட்டுக் கொட்டா சானியள்ளும் பறச்சியல்லோ – என்ன
மானபங்கம் செய்ய நீயும் நெனக்கலாமோ? எந்தன்
மேலகைய போட எண்ணம் படைக்கலாமோ?
மாட்டுக் கொட்டா வேல செய்யும் மயிலுதாண்டி – ஒம்
மணிமொகத்த பாக்க நேக்கு ஆச தாண்டி – ஒம்
மணி மொகத்த பாக்க நேக்கு ஆச தாண்டி.

6. விதவைகள்

பெண்கள் சந்திக்கும் முக்கியமான பிரச்சினைகளில் விதவைக் கோலமும் ஒன்று. கணவனை இழந்த பெண்ணையே விதவை என்கிறோம். கணவனை இழந்த கைம்பெண் மறுமணம் செய்ய சட்டம் அனுமதி அளித்தாலும் சமூகம் அதற்கான அங்கிகாரத்தை அளிக்கத் தயங்குகிறது. ஆனால் மனைவியை இழந்த ஆண் மறுமணம் செய்து கொள்வதில் தடையேதும் இல்லை. இது மனித உரிமைகள் நடைமுறையின் பாகுபாட்டைக் காட்டுகிறது. கணவனை இழந்த பெண் மறுமணம் செய்யும் போது தன் முதல் கணவனால் பெற்ற குழந்தைகளை இழக்க நேரிடுகிறது. சமூகத்தால் அருவருப்பாகப் பார்க்கப்படுகிறாள். தரக்குறைவாகப் பார்த்தல், ஒதுக்கி வைத்தல், முக்கிய பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள இயலாமை, தன்னைச் சார்ந்தவர்களாலேயே புறந்தள்ளப்படல் போன்ற எத்தனையோ பிரச்சினைகளைக் கணவனை இழந்த பெண்கள் சந்திக்கின்றனர்.

தன்கண வன்செத்து விட்டபின் மாது
தல்லயிற் கைம்மை என ஓர்-பெருந்
துன்பச் சுமைதனைத் தூக்கி வைத்தார் பின்பு
துணை தேட வேண்டாம் என்றார்

என்று விதவை மணத்தை மறுக்கும் சமூகத்தைக் கண்டிக்கும் பாரதிதாசன் கைம்மை என்பது துன்பச் சுமையாகப் பெண்களின் மீது சுமத்தப்பட்டுள்ளதையும் சுட்டிக் காட்டுகிறார்.

மண்ணால் கட்டிய மனக்கோட்டை கண் முன்னால் சிதைந்து சிதறுகிறது. கட்டிய கணவனும் போய்ச் சேர்ந்து விட்டான். இனி ஆதரிப்பார் யாருமில்லை என்ன செய்வது என ஒரு பெண் கடவுளை வேண்டுவதாக அமையும் நடவுப் பாடல்,

கட்டெறும்பா மண்ணெடுத்து
காசிராசா கோட்டகட்டி

காசிராசா கோட்டையிலே என்னம்மா – நான்
கன்னி கலங்குறனே செல்லம்மா.
ஆத்து பெருமணலாம்
ஆனகட்டும் கல்தூணாம்
ஆனமுகம் சாஞ்சொடனே என்னம்மா – என்ன
ஆதரிப்பார் ஆருமில்லை சொல்லம்மா.

முடிவுரை

இத்தகைய பெண்களுக்கு எதிரான கொடுமைகள் சமூகத்தில் தொடர்ந்து நடைபெற்று கொண்டுதான் இருக்கின்றன. இவற்றை முற்றிலும் அழிக்க வேண்டும் என்றால் சட்டம் கடுமையாக்கப்பட வேண்டும். அதைவிடப் பெண்கள் என்பவர்கள் சமுதாயத்தில் மதிக்கப்படக் கூடியவர்கள் என்ற மனநிலையை அனைவர் மத்தியிலும் உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்தாலே பெண்களுக்கு எதிராக நடக்கும் 99 சதவிகிதக் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம்.

****

இனியவை நாற்பது கூறும் வாழ்வியல் விழுமியங்கள்

பேரா.பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ்,
தமிழ்த்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

கி.பி.3-ஆம் நூற்றாண்டின் தொடக்கமான இருண்ட காலம் என்றழைக்கப்படும் சங்க மருவிய காலத்தில் புலால் மது மாது போன்று மனித சமூகத்தை மழுங்கடிக்கும் மட்டகரமான தீயஒழுக்கங்கள் அரங்கேறிக் கொண்டிருந்த காலக்கட்டத்தில் இழிவுகளை வேரறுப்பதற்காக நீதியின் நிழலில் வாழ்க்கையை வலுவாக்கத் துடித்த சான்றோர்கள் அறஒழுக்கங்களைப் போற்றி எளிய வெண்பாக்களில் சிறுசிறு நீதிநூல்களை எழுதினார்கள். அவற்றின் தொகுப்பே பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும். கீழ்க்கணக்கு நூல்களில் அக ஒழுக்கம் பற்றிய நூல்களுள் ஒன்றாக இனியவை நாற்பது இடம் பெறுகிறது.

"அடி நிமிர் பில்லா செய்யுள் தொகுதி
அறம் பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக்காம்"1
" நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணை
முப்பால் கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியொடு ஏலாதி என்பனவே
கைந்நிலை யவாங்கீழ்க் கணக்கு"2

கருத்தாவும் கருவியும்

முகவரியைத் தொலைத்துத் திரியும் முகில் கூட்டங்கள் போல மனிதத்தைத் தொலைத்து மரமாகத் திரியும் மாக்களின் மத்தியில் கிளைத்தெழுந்த ஒளிர்சுடராம், ஒளிர்மணிமுத்தாம் பூதஞ்சேந்தனார் என்பவர் மனித வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் இனிய பொருள்களை உரைக்கும் இனியவை நாற்பது என்னும் நூலை இயற்றினார். கி.பி.470-ஆம் ஆண்டில் வச்சிரநந்தி என்னும் சமண முனிவரால் தோற்றுவிக்கப்பட்ட திராவிடச் சங்கத்தின் மூலம் திரவியமாம் இந்நூற்புதையல் நமக்குக் கிடைத்தது. சமூகத்தை வழிநடத்திச்செல்ல, மனித வளத்தை மேம்படுத்திட, அறவழியின் கீழ் அதிகாரங்களை மாற்றியமைத்திட ஏற்றதோர் விழுமியக் கருத்துகளை இந்நூல் பகர்கிறது எனில் அது மிகையல்ல.

விழுமியங்கள்

சமுதாய விருட்சத்தில் அதன் வேர்களாய் இருந்து கொண்டு நன்மை மிக்கதுமான, அதிகளவில் கனி கொடுக்கச் செய்யும் உன்னதமான தூய பணியை விழுமியங்கள் செய்து வருகின்றன. ‘விழுமிய’ என்ற சொல்லிற்குச் சிறந்த, மேன்மை, சீரிய என்ற விளக்கங்களைக் கழகத் தமிழ் அகராதியும் உயர்வான, சிறந்த என்ற விளக்கங்களைக் கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதியும் கூறுகின்றன.

இனியவை நாற்பதில் விழுமியங்கள்

மனிதன் வெற்றிகரமாக இயங்குவதற்கும் செயல்படுவதற்கும் தேவையான உயர்தரக் கருத்துகளாம் விழுமியங்கள் ஒவ்வொரு செயல்பாட்டிலும் முன் நின்று வழிநடத்துகின்றன. அவ்வாறு வழிநடத்தக் கூடிய விழுமியக் கருத்துகளை இல்லறம், கல்வி பயிலுபவர்கள், தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள், பேச்சுத்திறன் மிகுதியானவர்கள் என ஒவ்வொருவரிடத்திலும் இந்நூலானது முன் வைக்கின்றது எனில் அது மிகையல்ல.

இல்லறம் செழிக்க

இல்லறமாம் நல்லறத்தில் ஈர்-உடல் ஓர் உயிராய் வாழ வேண்டிய தம்பதிகள் இருவரின் உள்ளமும் செம்புலப்பெயல் நீர் போல மாறுபாடின்றி ஒன்று சேரக் கூடுமாயின் இவ்வாழ்க்கையானது செழிப்படையும். பொருள் வருகின்ற நெறியின் அளவை அறிந்து அதற்கேற்றார் போல் செலவைக் கட்டுப்படுத்தி வாழும் முயற்சியை மேற்கொண்டு யாவரிடத்திலும் கடன் இல்லாமல் வாழும் வாழ்க்கையே சிறந்தது எனக் கூறுகிறார். அதுமட்டுமல்லாமல் இனிய பூந்தோட்டமாக இல்லறம் மாற வேண்டுமெனில் குடும்பத்தில் உள்ள குழந்தைகளை அரவணைப்பதும் பாதுகாப்பதும் மிக இன்றியமையாததாகும்.

“ஒப்ப முடிந்தான் மனைவாழ்க்கை முன்னினிது”3
“வருவா யறிந்து வழங்க லினிதே”4
“கடமுண்டு வாழாமை காண்ட லினிதே”5
“குழவி தளர்நடை காண்ட லினிதே
யவர் மழலை கேட்ட லமிழ்தி னினிதே”6
“குழவி பிணியின்றி வாழ்தல் இனிது”7

இளைஞர்கள் இமயமாக

நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னையின் வளர்ப்பினிலே என்ற காலம் அன்னையின் கண்காணிப்பில் குழந்தைகள் இருக்கும்

நேரம் குறைவாகவே காணப்படுகிறது. மாறாக ஒரு நாளில் அதிகமான நேரத்தைச் சமூகத்தில் தான் அக்குழந்தை செலவிடுகிறது. இத்தகு சூழலில் குழந்தைகள் இளைஞர்கள் நல்லவர்களாகவும் ஒளிர வேணடுமெனில் இளைஞர்களாக மாறப்போகும் குழந்தைகளும் தலைவர்களாக மாறப்போகும் இளைஞர்களும் துர்க்குணங்களோடு உலவித்திரியும் வஞ்சகர்களிடமிருந்து விலகியும் தத்தம் மனதில் மாசுகளும் கோணல்களுமின்றி வாழ வேண்டும் எனக் கூறுகிறார். இதன் மூலம் துட்டனைக் கண்டால் தூர விலகு' என்ற பழமொழியை நினைவுபடுத்துகின்றார்.

"மனமாண்பி லாதவரை யஞ்சி யகற
லெனை மாண்பு தானினிது நன்கு"8
"சலவைச் சாரா விடுத லினிதே"9

தலைவர்கள் தரணியாள

செய்யும் தொழிலே தெய்வம் என்னும் பழமொழிக்கிணங்க எப்பதவியில் எப்பொறுப்பில் இருந்தாலும் தத்தம் பணியை விருப்பத்தோடு அறவழி நீங்காமல் பாகுபாடு வேறுபாடு காட்டாமல் முறை பிறழாது பிறரது பொருளையும் உடைமையையும் அபகரியாது நடுவுநிலை தவறாமல் செங்கோல் ஆட்சி புரியும் தலைவனே மக்கள் மனம் என்ற தரணியை ஆள முடியும் என ஆசிரியர் கூறுகிறார்.

"கோல்கோடி மாராயஞ் செய்யானை முன்னினிது"10
(மாராயம்-சிறப்பு)
"முற்றான் நெரிந்து முறைசெய்தல் முன்னினிதே"11
"யுற்ற பேராசை கருதி யறனொருஉ
மொற்க மிலாக யினிது"12

நாவண்மை சிறக்க

திருக்குறளின் கருத்துக்களைக் கூறக்கூற ஐம்புலன்களுள் ஒன்றாகிய வாய் தனது பிறப்பின் முழுமையைப் பெற்று உன்னத நிலையை அடைவது போல இனியவை நாற்பதில் பயின்று வரும் கருத்துக்களைக் கூறும் போது மனிதனானவன் ஊரார் உலகார் போற்றும் விதத்தில் விளங்குவான்.

பிறரைப் பற்றி புறம்பாகப் பொய் உரையாதிருத்தல், பொறாமை எண்ணம் தரக்கூடிய சொல்லை சொல்லாதிருத்தல், வறுமையின் விளிம்பிற்கே தள்ளப்படும் சூழ்நிலை வந்தாலும் தீயன பேசா முறைமையில் மனத்தளர்ச்சியின்றி இருத்தல்,

பெரியோரின் அனுபவ மொழிகளைக் கையாளுதல் என்பன போன்ற கருத்துகளை இனியவை நாற்பதின் மூலம் பயில்வோமானால் நா மட்டுமல்ல நாமும் பெயரோடும் புகழோடும் திகழலாம்.

"............................... யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்று"13
"யாக்க மழியினும் மல்லவை கூறாத
தேர்ச்சியில் நேர்வினிய தில்"14
"புலவர் வாய்மொழி போற்ற லினிதே"15

நோய் எதிர்ப்பின்மை நோய் ஒழிய

உடம்பைக் கொண்டு உயிரை வளர்க்கும் உபாயம் அறிந்தேனே என்ற சிவவாக்கியாரின் வாக்கானது மறைந்து போய் உடம்பைக் கொன்று உயிரை வளர்க்கும் உபாயத்தை மனிதர்கள் கலையாக்கி வருகிறார்கள் எனில் நெஞ்சம் பதைக்கத்தான் செய்கிறது. தன் உடலையே ஆகாயத்தில் பறக்கத்துடிக்கும் விலைமகளிர், அடுத்தவளின் உடலை பேரம் பேசுவதன் மூலமாக அதைத்தின்று அதன் மூலம் தன்னுடைய உடலை வளர்த்துக் கொண்டிருக்கும் தரகர்கள், பதவிக்காக பணத்திற்காக பட்டத்திற்காக தன்னுடைய மனைவியையே தாரை வார்க்கும் தரங்கெட்ட கணவர்கள் என ஒவ்வொரு நிலையினரும் மனம் மாறுவது மட்டுமல்லாமல் பிறன் மனைவியை மனதளவில் நினைத்துப் பார்த்தாலே விபசாரம் செய்வதற்கு ஒப்பு என்று விவிலியம் கூறுவதை அடியொற்றி இன்னா நாற்பதும் பிறருடைய மனைவியைப் பார்க்காமல் இருப்பதே இனிது எனக் கூறுகிறது.

"யூனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே"16
" பிறன் மனை பின்னோக்காப் பீடினிது"17

நாளைய பாரதம் நலமாக

குழந்தைகள், இளைஞர்கள், தலைவர்கள், குடும்பத்தலைவர்கள் எனத் தனித்தனியே ஒவ்வொருவருக்கும் பொருந்தக் கூடிய விழுமியங்களை இனியவை நாற்பது கூறியிருப்பினும் அனைத்துத் தரப்பினருக்கும் பொதுவான விழுமியங்களையும் கூறுகிறது. ஆண் பெண் என யாராக இருந்தாலும் தம்மால் முடிந்தவரை பிறருக்குத் தருமம் செய்வதும், மானம் அழியாமலும் அவ்வாறு பெருமை கெட்டழிந்தால் உயிர் வாழ்தல் வேண்டாம் எனவும் சமூகத்தில் எந்தவொரு

பொறுப்பையும் ஏற்றெடுத்து நடத்தக் கூடியவர்கள் நடுவுநிலையோடு பாரபட்சமில்லாமல் அனைவரிடத்தும் இரக்கம் கொண்டு அன்பை வெளிப்படுத்தி வாழ்ந்து வந்தால் உறுதியாக நாளைய பாரதம் நலமாகும் எனலாம்.

"தான் அழியாமைத் தானடங்கி வாழ்வினிதே"18
" மானம் அழிந்த பின் வாழாமை முன்னினிதே"19
" பங்கமில் செய்கைய ராகிப் பரிந்தியார்க்கு
மன்புடைய ராத லினிது"20 (பரிந்து-இரக்கம்)

1. டாக்டர் ப.ஏசுதாசன், தமிழ் இலக்கிய வரலாறு, ப.38
2. தமிழாய்வுத்துறை, சமூகவியல் நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.65
3. புலவர்குழு (உரை) பூதஞ்சேந்தனார் இயற்றிய இனியவை நாற்பது,
4. மேலது, ப.18
5. மேலது, ப.9
6. மேலது, ப.12
7. மேலது, ப.11
8. மேலது, ப.12
9. மேலது, ப.17
10. மேலது, ப.
11. மேலது, ப.29
12. மேலது, ப.33
13. மேலது, ப.5
14. மேலது, ப.23
15. மேலது, ப.17
16. மேலது, ப.4
17. மேலது, ப.13
18. மேலது, ப.12
19. மேலது, ப.12
20. மேலது, ப.9

****

சுற்றுச் சூழலும் காடுகளும்

பேரா.து.இருதயராஜ்
தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

தமிழ் இலக்கியத்தில் கடந்த காலத்தில் மன்னர்கள் காடு திருத்தி நாடாக்கி வந்தது பற்றி படித்திருக்கின்றோம். அதே சமயம் மாதம் மும்மாரி பெய்து வந்தது பற்றியும் படித்திருக்கின்றோம். இன்றைய காலகட்டத்தில் காடுகள் மிகவும் குறைவு. மாதம் மும்மாரியும் ஏட்டளவில் தான் இருக்கின்றதே தவிர மாதக்கணக்கில் மழையே இல்லாமல் வறட்சியான சூழ்நிலை தான் தமிழகத்தில் நிலவுகிறது. அந்தக்காலத்தில் காடுகள் நிறைய இருந்தன. அதன் காரணமாக மழையும் நன்கு பெய்து வந்தது.

சுற்றுச் சூழல் என்பது நம்மைச் சுற்றி உள்ள நிலம், நீர், காற்று மண்டலம், காடுகள் விலங்கினங்கள், மனித சமுதாயம் அச்சமுதாயத்தின் வாழ்க்கை முறைகள்-அதன் விளைவுகள் அனைத்தையும் குறிப்பதாகும்.

இயற்கையில் ஒரு சமநிலை அமைந்துள்ளது. நிலத்தின் தன்மையையும், உலகின் குறிப்பிட்ட பகுதிகளில் நிலவும் தட்பவெப்ப நிலையையும் பெய்கின்ற மழையின் அளவைப் பொறுத்து அங்கு பலவிதத் தாவரங்களும், உயிரினங்களும் வாழ்கின்றன. இவை ஒன்றை ஒன்று சார்ந்து உள்ளன. உதாரணமாக இலைகளை உண்டு வாழும் பூச்சிகள், மலர்களின் மகரந்தம் மற்றும் தேனை நம்பி வாழும் பூச்சியினங்கள், பொதுவாகப் புல் மற்றும் செடிகளையும், இலைகளையும் உண்டு வாழும் ஆடு, மாடு, மான், முயல் போன்ற உயிரினங்கள் பிற பூச்சிகளை உண்டு வாழும் பல்லி இனங்கள், ஆடு, மாடு போன்ற பிராணிகளை உணவாகக் கொண்டு வாழும் சிங்கம், புலி, ஓநாய் போன்ற மிருகங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். தாவரங்களை உண்டு வாழும் மிருகங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்தச் சமநிலையின் ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால் எந்தப் பிராணியும் தனது தேவைக்கு வேண்டிய உணவை மட்டுமே எடுத்துக் கொள்ளும்.

மனிதன் ஆரம்ப காலத்தில் அதாவது 10,000 ஆண்டுகளுக்கு முன்பு மற்றப் பிராணிகளில் ஒன்றைப் போலவே வாழ்ந்து வந்தான்.

அவன் அப்போது சுற்றுச் சூழலின் சமநிலையை அனுசரித்து வந்தான் என்றே கொள்ள வேண்டும். ஆனால் வேளாண்மை வளர ஆரம்பித்தபோது அவன் காடுகளை அழிக்கத் தொடங்கி விட்டான். அப்போதே மனிதன் சுற்றுச் சூழலின் சமநிலையைத் தாக்க தொடங்கி விட்டான். இன்றைக்கு 6,000 அல்லது 7,000 ஆண்டுகளுக்கு முன்பு உலகில் பல்வேறு நாகரிகங்கள் தோன்றின. சிந்துவெளி நாகரிகம், சீன நாகரிகம், எகிப்திய நாகரிகம் என உலகின் பல பகுதிகளில் பெரு நகரங்களும், பெரிய ராஜ்ஜியங்களும் தோன்றின. கூடவே வளர்ந்தது மனிதனின் ஆணவம், காடுகளை அழிப்பது அங்குள்ள மிருகங்களைப் பொழுதுபோக்கிற்காக வேட்டையாடுவது போன்ற செயல்கள் இந்த நாகரிகங்களின் அம்சம் ஆகிவிட்டன.

18,19ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய தொழில் புரட்சிக்குப் பிறகு தான் காடுகள் பெரும் அளவில் அழியத் தொடங்கியது. ஐரோப்பிய நாடுகளில் தொழில் புரட்சியைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கில் தொழிற்சாலைகள் தோன்றின. அவற்றைக் கட்டுவதற்கு லட்சக்கணக்கில் மரங்கள் தேவைப்பட்டன. தொழிற்சாலைகளுக்கு எரிபொருளாக ஆரம்பக் காலத்தில் விறகு அல்லது மரங்களில் இருந்து தயாரிக்கப்பட்ட கரி பயன்படுத்தப்பட்டது. லண்டன், பாரிஸ் போன்ற நகரங்கள் இந்தக் காலகட்டத்தில் தான் மாபெரும் நகரங்களாக மாற ஆரம்பித்தன. கட்டடங்களுக்கும், வீடுகளுக்கும், மேஜை, நாற்காலி, அலமாரி போன்ற பொருட்களைத் தயாரிப்பதற்கும் காடுகள் பெரும் அளவில் அழிக்கப்பட்டன.

வியாபாரத்தை மேன்மேலும் பெருக்கும் நோக்கத்துடன் இங்கிலாந்து பிரான்ஸ், போர்த்துகல் போன்ற நாடுகள் ஆசிய, ஆப்பிரிக்க தென் அமெரிக்கக் கண்டங்களைச் சேர்ந்த நாடுகளில் தமது ஆட்சியை அமைத்தன. ஆளும் நாடு ஏகாதிபத்திய நாடு என்றும், ஆளப்படும் நாடு காலனி நாடு என்றும் சரித்திரத்தில் அழைக்கப்படுகின்றன. ஐரோப்பிய நாடுகளின் காடுகளை அழித்ததோடு அல்லாமல் இந்த ஏகாதிபத்திய நாடுகள் காலனி நாட்டுக் காடுகளையும் அழிக்கத் தொடங்கின. 19ஆம் நூற்றாண்டில் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் காப்பி, தேயிலை, கோக்கோ போன்ற தோட்டப்பயிர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இன்றைய நிலையில் காலனி ஆட்சி முறை உலகில் கிட்டதட்ட எங்குமே இல்லை. இருந்த போதிலும் அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, பிரான்சு போன்ற முன்னேறிய நாடுகள்

ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்காவைச் சேர்ந்த வளரும் நாடுகளின் மீது பொருளாதார ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. எடுத்துக்காட்டாக பிரேசில், இந்தோனேசியா போன்ற நாடுகளின் வெப்ப நிலைக் காடுகள் பெரும் அளவிற்கு ஜப்பான், அமெரிக்க நாடுகளைச் சார்ந்த பன்னாட்டு நிறுவனங்களால் அழிக்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலும் ஆலைகள், அலுவலகங்கள், வீடுகள் கட்டுவதற்கும், வீட்டு பொருட்கள், காகிதம், பிளைவுட் போன்ற பொருட்களைத் தயாரிப்பதற்கும் முன்னேறிய நாடுகள் வளரும் நாடுகளின் காடுகளையே அழித்து வருகின்றன.

இது போதாதென்று பிரேசில், இந்தோனேஷியா, இந்தியா போன்ற நாடுகள் தமது தேவைக்காகத் தன் பங்கிற்காக தனது காடுகளைத் தாமே அழித்து வருகின்றன. இந்தியாவில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் 1,50,000 எக்டேர் காடுகள் அழிக்கப்படுவதாக ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. காடுகளில் அளவுக்கு அதிகமாகக் கால்நடைகள் மேய்க்கப்படுவதால் புல், மற்றும் சிறிய தாவரங்கள் வளர்வதே இல்லை. விறகிற்காகவும் வீடுகள், ஆலைகள் கட்டுவதற்காகவும் மரங்கள் நமக்குத் தேவைப்படுகின்றன.

இமாச்சல பிரதேசம், காஷ்மீர், உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் சமீப காலத்தில் பெருமளவிற்கு ஆப்பிள் தோட்டங்கள் தோன்றியுள்ளன. அங்குள்ள காடுகளில் இயற்கையாக வளர்ந்த ஓக், சினார் போன்ற மரங்கள் அழிக்கப்பட்டு ஆப்பிள் பயிரிடப்பட்டது. இயற்கை நிலைக்கு உகந்ததல்ல. அதைவிட மோசம் என்னவென்றால் ஆப்பிள் பழங்களைப் பேக்கிங் செய்வதற்காக இலட்சக்கணக்கில் பைன் மரங்கள் அழிக்கப்பட்டுப் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

மனிதன் சுற்றுச்சூழலின் சமநிலையை குலைக்காத வரை பிரச்சனை எதுவுமில்லை. பரிணாம ஏணியின் உச்சியில் இருப்பதாகக் கூறிக் கொள்ளும் மனிதன் தன்னை விடக் கீழ் மட்டத்தில் இருக்கும் விலங்குகளிடமும் தாவரங்களிடமும் அன்புடனும் ஆதரவடனும் அல்லவா நடந்து கொள்ள வேண்டும்.

காடுகளால் ஏற்படும் பயன்கள்

ஒவ்வொரு பசுமையான தாவரமும் ஒளிச் சேர்க்கையின் போது காற்றிலிருக்கும் கரியமில வாயுவை உட்கொண்டு பிராண வாயுவை வெளியிடுகிறது என்பதை நாம் அறிவோம். பூமியின் பரப்பில் குறைந்த பட்சம் நாற்பது சதவீதமாவது மரங்கள் அடர்ந்த காடுகள் இருப்பது அவசியம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

கோடிக்கணக்கான மரங்கள் காற்று மண்டலத்தில் உள்ள கரியமில வாயுவை அகற்றிப் பிராண வாயுவை வெளியிட்டுக் காற்று மண்டலத்தைச் சுத்தம் செய்கின்றன.

பூமியில் இருந்த நீரை உறிஞ்சி அதை இலைகளில் தேக்கி வைத்து அந்த நீரைச் சிறிது சிறிதாகக் குளிர்ந்த ஆவியாக வெளியேற்றி சுற்றுச் சூழலை மரங்கள் குளுமையாக்குகின்றன. ஒவ்வொரு மரமும் ஒரு உயிருள்ள ஏர் கண்டிஷனராகச் செயல்படுகிறது.

காடுகளை அழிப்பதால் காற்று மண்டலத்தில் ஆக்ஸிஜன் அளவு குறைந்து காற்று மண்டலம் மாசுபடுவதுடன் உலகில் வெப்பமும் அதிகரிக்கின்றன.

மரங்களிலிருந்து உதிரும் இலைகளும், பூக்களும் நிலத்திற்கு நைட்ரஜன், பாஸ்பரஸ் போன்ற சத்துக்களை அளித்து நிலத்தை வளப்படுகின்றன.

காடுகளிலிருந்து விலங்குகளுக்கு வசிப்பிடம், உணவு, மனிதர்களுக்கு உபயோகமான விறகு, வீடு கட்டுமானப் பொருட்கள், மருந்துகள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள், டர்பன்டைன் பல தரப்பட்ட ரெஸின்கள் இன்னும் எவ்வளவோ பொருட்கள் கிடைக்கின்றன.

காடுகள் மட்டுமே மண் அரிப்பைத் தடுக்கின்றன. இந்தியாவில் வடபகுதிகளில் குறிப்பாக அஸ்ஸாம் மாநிலத்தில் பல இடங்களில் காடுகள் பெரும் அளவில் அழிக்கப்பட்டதால் ஏறப்பட்ட மண் அரிப்பு காரணமாகப் பிரம்மபுத்ரா நதி தடம் புரண்டு ஓடி ஒவ்வொரு ஆண்டும் பெரும் வெள்ளச் சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. சமவெளிப் பிரதேசங்களில் காடுகள் அழிக்கப்பட்டு அதன் காரணமாக மண் அரிப்பு ஏற்பட்டுள்ள இடங்களில் நீர் தங்குவதால் அந்த நிலம் உயிர்ச்சத்துக்களை இழந்து உவர் நிலமாக மாறிவிடுகிறது.

உலகின் பல பகுதிகளில் பல காடுகளில் உள்ள தாவர இனங்களும், விலங்கினங்களும் அவற்றின் பெயர், தன்மை, பயன் நமக்குத் தெரியாத நிலையில் அழிக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாகச் சர்ப்மகரந்தச் செடியிலிருந்து ரத்த அழுத்தத்திற்கான மருந்து கிடைக்கிறது. நித்திய கல்யாணிச் செடியிலிருந்து கேன்சர் நோய்க்கான மருந்து கிடைக்கிறது. ஈ, கொசு, சிலவகைப்புழுக்கள் பற்றிய நமது அறிவு ஆராய்ச்சிகளின் பயனாக அவை பரப்பும் நோய்களை அறிய முடிந்தது. ஆனால்

பலன் தெரியாத நிலையில் பிராணிகளும் தாவரங்களும் காடுகளுடன் சேர்த்து அழிக்கப்பட்டு வருவது இன்றைய பரிதாப நிலையாகும்.

ஒவ்வொரு நிமிடமும் உலகில் 20 முதல் 30 எக்டேர் பரப்பிலான காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இப்படி காடுகள் அழிக்கப்பட்டு சுற்றுச்சூழல் சீர்குலையும் நிலை உடனடியாகத் தடுக்கப்பட்ட வேண்டும்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நம் நாட்டின் ராஜஸ்தான் பகுதியில் அரசரின் ஆணையுடன் மரங்கள் வெட்டப்படுவதிலிருந்து காப்பதற்காக நூற்றுக்கணக்கான பிஷ்னோய் இன மக்கள் தங்கள் உயிரையே பணயம் வைத்தனர். சமீப காலத்தில் இமாச்சல பிரதேசத்தில் பெண்கள் நடத்திய சிப்கோ போராட்டம் பற்றி நாம் அறிவோம். அங்கு மரங்களை வெட்டுவதற்காக குத்தகைக்காரர்கள் கோடரிகளுடன் வந்த போது கிராமப் பெண்கள் மரங்களை கட்டிபிடித்துக் கொண்டு வெட்ட விடாமல் தடுத்தார்கள்.

கர்நாடக மாநிலத்திலும் சில பகுதிகளில் “அப்பிக்கோ” இயக்கம் உருவாகி ஆயிரக்கணக்கான மரங்களைக் காப்பாற்றினார்கள். மக்களிடையே காடுகளின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு, அப்போது தான் நம் காடுகள் காப்பாற்றப்படும்.

உலக அளவில் பார்க்கும் போது முன்னேறிய நாடுகள் முன்னேறும் நாடுகளின் காடுகளை அழிக்கும் வழக்கம் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இந்த நாடுகளில் காடுகளை நம்பி வாழும் ஆதிவாசிகள் உள்ளனர். இந்த நாட்டு மக்கள் பெரும்பாலும் விறகையே எரிபொருளாகப் பயன்படுத்துகின்றனர். எனவே இதைக் கருத்தில் கொண்டு நாம் ஒரு திட்டம் வகுத்து கோடிக்கணக்கில் மரங்களை வளர்க்க வேண்டும். ஒரு சில பகுதிகளில் நமக்குத் தேவையான மரங்களை வெட்டிக் கொண்டு நாம் வெட்டியதைப் போல இரண்டு பங்கு மரங்களைப் பயிரிட வேண்டும். ஆதிவாசிகளின் மேய்ச்சலுக்கும், எரிபொருளுக்கும் காடுகளின் சில பகுதிகள் ஒதுக்கப்பட வேண்டும்.

இந்தியாவில் தற்சமயம் கிட்டத்தட்ட 11 சதவீதம் பரப்பில் தான் காடுகள் உள்ளன. இதை 40 சதவீதமாக உயர்த்த மத்திய மாநில அரசுகளும், அரசு சார்பற்ற நிறுவனங்களும் போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமூகக் காடுகள்

வேளாண்மைக்கான தேசியக்கமிஷன் 1979ஆம் ஆண்டு சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அவை என்னவெனில் காடுகளை மேம்படுத்துவதற்கான ஒரு காடு வளர்ப்பு உத்தி எனலாம். சமுதாய மேம்பாட்டிற்காக தோற்றுவிக்கப்பட்ட திட்டமே சமூகக்காடுகள் வளர்ப்புத் திட்டம் இத்திட்டத்தின் மூலம் எரிபொருள், இலை-தழை எருக்கள், வேலியமைத்தல், மேய்ச்சல் நிலம், சிறுமர உபயோகம் போன்ற தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதுடன் தட்ப வெப்பம், சுற்றுச் சூழல் மண், நிலத்தடி நீர்வளம் ஆகியவற்றை பேணிக்காப்பதற்கும் இச்சமுதாய காடுகள் சாத்தியம்.

சமூகக் காடுகள் ஏழை-எளிய சமூகத்தினர்களுக்குப் பயனளிப்பதாக உள்ளதால் சமூகக்காடுகள் என அழைக்கப்படுகின்றன. காடுகளின் உருவாக்கத்திற்கு நமது அரசு பல திட்டங்களை தீட்டி முடிந்த வரை முயன்று வருகின்றது என்றே சொல்ல வேண்டும்.

காடுகள் செழித்தால் தான் சுற்றுச் சூழல் மேம்படும். சுற்றுச் சூழல் மேம்பட்டால் தான் நாம் நல்ல முறையில் வாழ முடியும் என்பதை நாம் உணர்வது அவசியம்.

சான்றாதார நூல்கள்

1. “இந்தியாவின் சுற்றுச்சூழல்” க்ரியா வெளியீடு
2. “சுற்றுச்சூழல் அறிவியல்” ப. சந்திரசேகரன்
3. “நம்மைச் சுற்றி” கிராம சுகாதார சமூகக் கல்வி நிலையம், திருப்பத்தூர் வெளியீடு.

நவீனதொழில் நுட்பமும் - சுற்றுச்சூழல் சீர்கேடும்

பேரா. நல்லமுத்து,
தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

"அறிஞர் தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப்பெண்ணே உன்
நலம் காணார் ஞாலம் காணார்" (பாரதிதாசன்)

பன்னெடுங்காலத்துக்குப் பின்னால் மனிதன் மொழியைப் படைத்துப் பேசத்தொடங்கினான். அம்மொழி வளர்ச்சியின் அடுத்த கட்டமாய்த் திகழ்வது செய்தித் தொடர்பாகும்.

தொடக்கம்

1831ஆம் ஆண்டு முதல் தற்போது வரை இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இதழ்கள் வெளிவந்துள்ளன என்றாலும் நடப்பில் முந்நூறு இதழ்களே வெளிவந்த வண்ணமுள்ளன. ஒன்று உருவானால் ஒன்று நின்று விடும் என்னும் நிலைப்பாட்டிலேயே இன்றைய சிற்றிதழ் உலகம் இயங்கி வருகிறது. அவ்வாறு வெளிவரும் இதழ்கள் நாளிதழ்களாகவும், வார இதழ்களாகவும், மாதம் இருமுறை இதழ்களாகவும், மாத இதழ்களாகவும் இன்று கல்வி, அறிவு, பண்பாடு இவற்றைப் பரிமாற்றம் செய்து ஒரு பல்பொருள் அங்காடிபோல் விளங்குகிறது. எல்லா வகைச் செய்திகளையும், எச்சமூகத்தினரும் அறியும் வண்ணம் ஓர் அரிய நிலையமாக இதழியல் வாங்குகிறது.

செய்திகளின் பார்வை முழுமையும் சமுதாய முன்னேற்ற நோக்கை மையமிடும் வகையில் சிற்றிதழ்கள் செயல்படுகின்றன. இன்றையத் தமிழகச் சூழலில் சிற்றிதழ்கள் பல வெளிவந்துகொண்டிருக்கின்றன. அவ்வாறு வெளிவரும் இதழ்கள் அரசியல், சமூகம், பெண்ணியம், தலித்தியம், பெரியாரியம், அறிவியல், இயற்கைப் போன்ற கருத்தாக்கங்களை மையமாகக் கொண்டு கலை, இலக்கியங்களின் வாயிலாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

சிற்றிதழ்களின் போக்கு

இலக்கியம், மொழி, இலக்கணம், சமயம், சமூகம், அறிவியல் போன்ற துறைகளில் சிற்றிதழ்கள் தடம் பதித்துள்ளன. சிற்றிதழ்களின் வரலாறு தமிழ்-தமிழர்–தமிழக வரலாறாகவும் திகழும் என்ற தி.மா. சரவணன் கூற்று உண்மையாகிறது. தமிழில் வெளிவந்த முதல் சிற்றிதழ் மணிக்கொடி (1933). ஆனால் தன்னைச் சிற்றிதழ் என அறிவித்துக் கொண்டு வெளிவந்தது எழுத்து (1956) இதழாகும். இவ்வாறு சிற்றிதழ்கள் பல பரிணாமங்களுடன் உலவிக் கொண்டிருந்தாலும் அவற்றில் இயற்கைப் பற்றிய போதிய விழிப்புணர்வை மக்களிடம் எடுத்துச் செல்கின்றன.

இயற்கை – ஒரு விளக்கம்

பிறிதொன்றின் ஆக்கப்படாமல் இயல்பாகத் தோன்றுவதே இயற்கை. 'கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பு' என்கிறார் நக்கீரர். நிலம், தீ, நீர், வளி, வானம் எனும் தன்னியல்பில் திரியாது இருக்கும் ஐம்பூதங்களும் இயற்கைக்கு உட்பட்டதே தொல்காப்பியரும்,

"நிலம் தீ நீர்வளி விசும்போடைந்தும்
கலந்த மயக்கம் உலகம்"

என இயற்கைப் பொருளை ஐந்தாகக் கூறுகிறார்.

'புலன்களால் அறியக்கூடியதும் காட்சி அறிவிற்குத் தென்பருவம் இயற்கை, அஃது மனிதன் படைப்பன்று' என இயற்கைக்கு விளக்கம் தரப்படுகின்றது. இயற்கை மனிதனுள்ளிட்ட உயிர்களைத் தோற்றுவிக்கின்றது; வளர்க்கின்றது; உள்ளத்தைச் செப்பனிடுகின்றது. இதனால் முன்னோர்கள் இயற்கையை வல்லமை வாய்ந்த கடவுளாகக் கருதி வழிபட்டனர். கிரேக்கர்களும், இந்தியர்களும் இயற்கையின் ஒவ்வொரு கூற்றையும் கடவுளாகக் கருதிப் போற்றினர். இயற்கையை இறைவனின் கலையாகக் கருதினர்.

சிற்றிதழ்களில் இயற்கை

நகரமயமாக்கலால் இன்று இயற்கை அடியோடு அழிந்து வருவதைக் காணமுடிகின்றது. கிராமப்புறத்தில் வாழ்ந்த மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தான்; துன்பத்துடனும், அதே வேளையில் ஆரோக்கியத்துடனும் வாழ்ந்தான். அறிவியலும் தொழில்நுட்பமும் வெவ்வேறானவை. அறிவியல் நிலையானது, இயற்கையோடு இணைந்தது. இயற்கையே அறிவியலாக

இருக்கிறது. ஆனால் தொழில் நுட்பமோ அதனை உருவாக்குகின்ற முதலாளிக்கு இலாபம் தருவதாக உள்ளது. மண்ணை உழவேண்டும் என்பது அறிவியல். மண்புழு மண்ணை உழுகிறது. விவசாயி மண்ணை உழுகின்றான்; ட்ராக்டரும் உழுகிறது. இவற்றில் மண்புழுவும், விவசாயியும் உழுவது அறிவியல். ட்ராக்டர் உழுவது தொழில்நுட்பம். மாடு நடக்கும்போது குழம்பு தேய்கிறது. மாட்டின் காலில் இருந்து மண்ணுக்கு கால்சியம் கிடைக்கின்றது இது அறிவியல். இயற்கையோடு இணைந்த அறிவியல். ஆனால் ட்ராக்டர் நிலத்தை அழுந்துகிறது. இது இயற்கைக்கு முதலான தொழில்நுட்பம். இவ்வாறு நவீன தொழில்நுட்பம் பற்றியச் சிந்தனையை 'மனிதம்' என்ற சிற்றிதழ் பதிவுச் செய்கின்றது.

மழைப்பொழிவு குறைந்து வருவதைப் பற்றி மனிதம் சிற்றிதழ் மூலமாக நம்மாழ்வார் குறிப்பிடுகின்றச் செய்தி வியப்பில் ஆழ்த்துகின்றது. 'சாதாரணமாக ஆறுகள் மலை உச்சியில் தொடங்குகின்றன. மலையில் குவிந்து கிடக்கின்ற இலைகள் நீரை உறிஞ்சி வைத்துக் கொள்கின்றன. பின்னர் படிப்படியாக நீரை வெளியிடுகின்றன. இதனால் வருடம் முழுவதும் ஆற்றில் நீர் வந்து கொண்டிருக்கிறது. காடுகள் அழிக்கப்பட்டுவிட்டதால் ஆற்றுநீரை தேக்கி வைத்துக் கொள்ள வழியில்லாமல் போய்விட்டது. விலங்குகளின் நடமாட்டமும் குறைந்துவிட்டது. இயற்கை பற்றிய சிந்தனைகளைச் சிற்றிதழ்கள் எடுத்தியம்புவதை அறியமுடிகின்றது.

பேரழிவை நோக்கிய வளர்ச்சி

உற்பத்தியில் முதலிடம், முன்னேற்றம், நவீனமயமாக்குதல், வளர்ச்சி வீதம், வெளிநாட்டுக் கடன், மானியம், தள்ளுபடி, பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு அனுமதி - இது குறித்தான சொல்லாடல்களின் வீரியம் அரசியல் மேடைகளிலும், ஊடகங்களிலும் குறைந்து, பயங்கரவாதத்தை முன்னிறுத்துவது உள்ளிட்ட இந்துத்துவ அடிப்படைவாத சொல்லாடல்கள் தீவிரமாயிருக்கின்றன.

பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு நோக்கமே 'லாபம்' மட்டுமே. தொழிற்பெருக்கம், தொழிற்மயம் குறித்த போதையில் தள்ளாடுபவர்களுக்கு, இந்தத் தேசத்தின் மண் - நீர் – ஆகாயம் - காற்று – நெருப்பு - இவைகள் மாசுபடுவது பற்றியோ, பேரழிவை ஏற்படுத்தக் கூடியதாக மாறிவருவது பற்றியோ கவலைகள் இருப்பதில்லை. மூளை உழைப்பிற்கு முன்னுரிமை தரும்

பன்னாட்டுக் கம்பெனிகளும், பார்ப்பணியரும் உடல் உழைப்பிற்குத் தருவதில்லை. இந்த மண்ணை, நீரை நம்பித்தான் எண்ணற்ற அடித்தள மக்கள் தங்களுடைய உயிர்வாழ் ஆதாரங்களைத் தேட வேண்டியிருக்கிறது. ஐம்பூதங்களான ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகியவைகள் ஒன்றிலிருந்து மற்றொன்றாக வளர்ந்தும் ஒன்றோடு ஒன்று கூடி பிரிதொன்றாய் பெருகியும் இருக்கிறது. இந்நிலையில் சுற்றுச் சூழல் பேரழிவு குறித்த அறிதல் "ஒருங்கிணைந்த செயலாகவே" அறியப்பட வேண்டும்.

- சமீப காலங்களில், வெகுஜன பத்திரிக்கைகளில் வெளிவந்த சில செய்திகளை ஆய்வுக்குட்படுத்தினால்,
- பெப்சி – கோகோ உள்ளிட்ட 12 வகையான குளிர்பானங்களில் கடுமையான பூச்சிக்கொல்லிப் படிவுகள்.
- உணவுப்பொருட்களிலும், மாவு – நெய் - வெண்ணெய் மற்றும் பல பொருட்களில் கடுமையான பூச்சிக்கொல்லிப் படிவுகள்.
- பழங்கள் - காய்கறிகள் - தானிய வகைகளிலும் விஷத்தன்மையிருக்கிறது.
- கணிப்பொறிகளில் பணிபுரிகின்ற இளைஞர் – யுவதிகளுக்கு மலட்டுத் தன்மை.
- சுத்திகரிக்கப்பட்ட குடிநீரில் கடுமையான நச்சுப்படிவுகள்.
- பிளாஸ்டிக்கைத் தயாரிப்பதனாலும், எரிப்பதனாலும், அதனிலிருந்து வெளிப்படும் நச்சு வேதிப்பொருட்கள் காற்றில் - உடம்பில் கலந்து விடுவதால் நோய் உண்டாக்குகிறது.
- சர்க்லேட்டில் புழு.

இவ்வாறாக, பன்னாட்டுக் கம்பெனிகளின் உபயத்தால் உண்ணும் உணவு, சுவாசிக்கும் காற்று, குடிக்கும் தண்ணீர், பணிபுரியும் கணிப்பொறி ஆகியவை மூலம் தலைமுறை தலைமுறைக்கு உடலளவில் மோசமான பாதிப்புகளைச் செலுத்த வல்லதுமான நோய்களான புற்றுநோய், மலட்டுத்தன்மை, எலும்புத்தாதின் அடர்த்தியான தன்மையைக் குறைத்தல், நோய் எதிர்ப்புத்தன்மையைக் குறைத்தல் மற்றும் நரம்பியல் கோளாறுகள், பாலிய பருவ வளர்ச்சியைப் பாதிக்கக்கூடிய டி.என்.ஏ. (DNA)வினை சிதைக்கும் இரத்தத்தையும் சிறுநீரகத்தையும் பாதிக்கும் நோய்கள் உருவாகின்றன. நுகரும் உணவு பொருட்களின் தன்மை சைவம் - அசைவம் என்பன குறியிட்டுக் காட்டுவதில் அக்கறை கொள்ளும் அரசு உயிருடன் மனித

இனத்தை மெல்ல, மெல்ல சிதைக்கும் உணவுப் பொருட்களினைக் கண்டறிந்து அதைத் தடுப்பதற்கான முறைகள் குறித்து ஆய்வு செய்கிறதா எனத் தெரியவில்லை.

பெப்சி கோக்குகளில் நச்சுப் படிவுகள் இருப்பதினால் அது குறித்து அறிய நாடாளுமன்ற குழு அமைக்கப்பட்டிருக்கிறது. சுத்திகரிக்கப்பட்ட குடிநீரில் பூச்சிக்கொல்லிப் படிவுகள் இருந்ததினால் ஐ.எஸ்.ஓ. (ISO) தரச்சான்று அவசியமாகி இருக்கிறது. ஆனால் இவைகளுக்குப் பின்னே மூலகாரணமாய் பசுமைப் புரட்சியின் சின்னமாய் இருக்கிற நச்சு உரங்களையும் - பூச்சிக்கொல்லிகள் பற்றியும் ஒதுக்கி வைத்தே பேசுகிறார்கள்.

பொருளாதார நடவடிக்கைகளானது நிலம் - நீர் – காற்று – ஆகாயம் - நெருப்பு ஆகியவற்றுடன் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக ஒருங்கிணைந்து தொலைநோக்குடனும் - சமூக அக்கறையுடனும் அணுக வேண்டியிருக்கிறது.

ஐம்பெரும் பூதங்களில் இந்த மண்ணே உயிர் வாழ்வாதாரங்களுக்கு அடிப்படையாய் இருக்கிறது. இறால் வளர்ப்பிலும், தோல் பொருள் தயாரிப்பிலும், சாயப்பட்டறைகளாலும், காடு மரங்களை அழிப்பதாலும் இந்த மண்ணே பாதிப்புக்குள்ளாகிறது. உணவு தானிய உற்பத்தியை பெருக்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுவதன் விளைவால் நச்சு உரங்களும், பூச்சிக் கொல்லிகளும், பூமிக்குள் ஊடுருவி குடிநீரில் கலப்பது பற்றிய குரல்கள் நலிந்த வண்ணம் இருக்கின்றன. ஆனால் நம் நாட்டில் இன்னமும் 50 இலட்சம் குடும்பங்கள் குடிநீருக்காக குளங்கள், ஏரிகள், ஆறுகள், ஊற்றுகள் போன்றவற்றைச் சார்ந்திருக்கும் நிலையிலேயே இருக்கின்றன.

பசுமைப்புரட்சியின் விளைவுகள்

கடந்த சில ஆண்டுகளில் பசுமைப்புரட்சியின் விளைவாக, 30,000 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும், 10,000 பேருக்கு மேலாக பசி பட்டினியால் இறந்து இருக்கிறார்கள். (ஜுனியர் விகடன் 14.09.2008)

சுற்றுலாத் தலங்களைச் சுற்றியும், வழிபாட்டுத் தலங்கள் - ஆறுகள் - கடல்கள் - சாக்கடை கால்வாய்கள் - குப்பை மேடுகள் - சாலையோரங்களிலும் பிளாஸ்டிக் குப்பைக் கழிவுகள் இப்பூமியின் மீது அடுக்கடுக்காக பரப்பி வைத்தாற்போன்று படர்ந்து கிடக்கின்றன. இதனால் மண் - நீர் – நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் சுவாசிக்கும் காற்று ஆகியவை மாசுபடுகின்றன. இப்படியான கழிவுகள் மழைநீரில் கலந்து நிலத்திற்கடியில்

புகுவதாலும், அருகிலுள்ள ஏரிகளிலோ, ஓடைகளிலோ, ஆறுகளிலோ வடிவதாலும் குடிநீரை நஞ்சாக்குகின்றன. கழிவுகளை எரிப்பதால் அவை நீரில் படிந்து உணவிலும் - பானங்களிலும் கலந்து விடுகின்றன. நதிக்கரை நாகரீகங்களைப் போற்றிப் புகழும் இந்நாட்டில் நதிக்கரைகள் நச்சுக் கழிவுகளாலும் சுற்றுச் சூழல் சீர்கேட்டால் ஆறுகள் மாயமாய் மறைவதும் வரலாற்றில் கரைபடிந்த உண்மைகள். சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியோ வெறும் 1025 கோடி மட்டுமே.

குறைவற்ற செல்வம் இருந்தால்தான் நோயற்ற வாழ்வு வாழ முடியும் என்கிற நிலையில் இந்தியா முழுமைக்குமான தொழிற்சாலை, போக்குவரத்து, தோல் பதனிடல், இறால் வளர்ப்பு, பூச்சிக்கொல்லி மற்றும் நச்சு உரங்கள், பிளாஸ்டிக் கழிவுகள் மூலம் ஏற்படும் நோயிலிருந்து அடித்தள மக்களின் உயிர்களைக் காப்பாற்ற அடிப்படை மருத்துவக் கட்டமைப்புகள் இந்த அரசினால் செய்யப்பட்டிருக்கின்றனவா என ஆராய்ந்தால், 1991-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தேவையான மருத்துவ வசதிகள் செய்துதரப்படாத நிலை.

தற்போதுள்ள மக்கள் தொகைக்கு (2005 - 2008) ஏற்றப்படி 1,55,455 – நாடு முழுமைக்குமான துணை சுகாதார மையங்கள் இருக்க வேண்டும். ஆனால் இருப்பதோ 23,190 துணை சுகாதார மையங்கள் மட்டுமே உள்ளன. 2001 ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தும்போது செய்யப்பட்ட சர்வேயின்படி இந்திய மக்கள் தொகையில் 56 சதவீத மக்களுக்கு மட்டுமே மின்சார வசதியிருக்கிறது. 38 சதவீத மக்களுக்கு மட்டுமே தண்ணீர் வசதி இருக்கிறது. 192 மில்லியன் குடும்பங்களுக்கு 178 மில்லியன் வீடுகள்தான் இருக்கின்றன.

அடித்தள மக்களுக்கான கல்வி, வேலைவாய்ப்பு, தண்ணீர், உணவு போன்ற அடிப்படைத் தேவைகளைப் புறக்கணித்து உற்பத்திப் பெருக்கத்தையே நோக்கமாகக் கொள்ளும் உலகமயச் சூழலில் சிக்கி, அடித்தள மக்களும் சுழல வேண்டியிருக்கிறது. இப்படியான புள்ளிவிவரங்களைத் தன்னுடைய பணியாக எடுத்துக்கொண்டு வெளிவரும் சிற்றிதழ்களில் புதிய கோடாங்கி சிறப்பான பங்களிப்பைக் கொடுத்து வருகிறது எனலாம்.

இறுதியாகத் தொகுப்புரை

'இயற்கை வெளிப்பாடு' பற்றிப் பாடாத கவிஞன் இல்லை.

இயற்கையை அணுகுகின்ற முறையிலும், அதனைப் பாடுபொருளாக்குகின்ற முறையிலும் தான் கவிஞரிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. இயற்கையைப் பாடுவதில் பாரதிதாசனுக்கு நிகரில்லை எனும் அளவிற்கு 'அழகின் சிரிப்பு', 'புரட்சிக் கவி' இரண்டு நூல்களிலும் இயற்கை வருணனையும் அழகு ஈடுபாடும் மிகத்தெளிவாக அமைந்துள்ளதைப் பார்க்க முடிகின்றது.

"நீரோடை நிலங்கிழிக்க நெடுமரங்கள்
நிறைந்துபெருங் காடாகப் பெரு காடாகப் பெருவிலங்கு"

என்ற பாடலில் குறிஞ்சி இயற்கை வருணனையும்,

"......... பாழ்நிலத்தை அந்த நாளில்
புதுக்கியவர் யார், அழகு நகருண்டாக்கி?"

எனும் வரிகளில் மருத நிலத்துக்குரிய இயற்கைச் சார்ந்த மக்களையும் குறிப்பிடுகின்ற பாரதிதாசன், பெரும்பாலான பாடல்களில் இயற்கையோடு இயைந்த மக்கள் ஓட்டத்தை தம் மனக்கண்ணில் நிலைநிறுத்தியதை அறியமுடிகிறது. ஆதி காலத்தில் இயற்கையோடு வாழ்ந்த மனிதன் நவீன காலத்தில் இயற்கையை அழித்து வாழ்ந்தான் அழிவை எதிர்கொண்டான்.

நவீனத் தொழில்நுட்ப வளர்ச்சி, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக உலகம் குறுகியும், பன்னாட்டுக் கம்பெனிகள் மேன்மேலும் பெருகி ஒருமைப்படுத்திக் கொள்வதும், உலக அளவில் விரிந்து – பரவி தன்னாட்சி செலுத்த வல்லதாக ஆகியிருக்கிறது.

வெகுஜன ஊடகங்களும், பன்னாட்டு கம்பெனிகளும், நிதி நிறுவனங்களும், அரசுகளின் செயல்பாடுகளும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வுக்கோ அடித்தள மக்களின் வாழ்க்கையோ வழிகோலவில்லை. அடித்தள மக்கள் வாழ்வதெல்லாம் காத்திருக்கவும், பணிசெய்யவும், பணிந்து நடக்கவும், பணிய அல்லது பணிந்து மடிவதற்கே உள்ளன. சுற்றுச்சூழல் சீர்கேடானது, உடல் உழைப்பில் ஈடுபடும் அடித்தள மக்களின் வாழ்வினை சீர்குலைக்கக் கூடியதால் சாதி, தீண்டாமை, கல்வி, மருத்துவம், நிலச்சீர்திருத்தம், பொருளாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு இவைகளுடன் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வையும் மக்களிடையே ஏற்படுத்துதல் அவசியம்.

பார்வை நூல்கள்

1. மாமனிதம் - 3டி, மூன்றாவது குறுக்கு,
திருவள்ளுவர் நகர்,
பழங்காநத்தம், மதுரை – 625 003.

2. சமூக மாற்றத்தில் தமிழ் இதழ்கள் -
'தமிழ்த்திணை',
92, வெள்ளாளத் தெரு,
மயிலாடுதுறை – 609 001.

3. பன்முகப் பார்வையில் பாவேந்தர் -
16/43, திருநகர்,
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி.

4. புதிய கோடாங்கி - 101ஆவது தெரு,
கே.கே. நகர்,
சென்னை – 600 078.

5. ஜுனியர் விகடன் - விகடன் மீடியா சர்வீசஸ்,
25/12-பி, முதல்தளம்,
அபிராமபுரம்,
ஆழ்வார்பேட்டை,
சென்னை – 600 018.

****

சுற்றுச் சூழல்

பேரா.த.டான்ஸ்டோனி
தமிழ்த்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

சமூக மற்றும் பண்பாட்டு உலகுடன் இணைந்த இயற்கை உலகை உள்ளடக்கியது நமது சுற்றுச் சூழல். நமது சுற்றுப்புறத்தையும் நாம் வாழும் இடத்தையும் முறைப்படுத்தி படிப்பதே சுற்றுச்சூழல் கல்வி ஆகும். இது பௌதிகம். வேதியியல்,உயிரியல், புள்ளியல், கணிதம், சமூகவியல், பொறியியல், மதம்,சட்டம் மற்றும் பண்பாட்டை ஒருங்கிணைக்கிறது. இவையனைத்தும் ஒருங்கிணைந்த முறைக்கு சுற்றுச்சூழல் அறிவியல் என்பது பெயர்.

உலகின் பல்வேறு சுற்றுச் சூழல் பகுதிகளில் வாழும் உயிரினங்களைக் குறிப்பிட சுற்றுச்சூழல் என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது.இச்சொற்றொடரை ஜேக்கப் வெர்குல் (Jaccb Verkul) என்பவர் அறிமுகப்படுத்தினார். சுற்றுச்சூழலைக் குறிக்கும் Environment என்ற சொல் "Environer" என்ற பிரெஞ்சு சொல்லிருந்து தோன்றியது. இதற்கு சூழ்ந்து காணப்படுதல் என்பது பொருளாகும். " ஓர் உயிரினத்தையோ அல்லது உயிரினக் கூட்டத்தையோ சுற்றியுள்ள நிலைமைகள் என்றும் ,சமுதாயத்தை அல்லது தனித்த உயிரியைப் பாதிக்கும் சமூக மற்றும் பண்பாட்டு நிலைமைகள்" என்றும் பொருள் கொள்ளப்படுகிறது.

மேலும் சுற்றுச்சூழல் என்பது "முழுப்பரிணாமத்தில் பண்பால் இடத்தால் உயிரிய மற்றும் உயிரற்ற காரணிகள் நடத்தையால் பிரிவுபட்ட சமூக-பொருளாதார அமைப்பு, இடம் மற்றும் அலகு போன்ற பரிமாணங்களைக் கொண்ட குறிப்பிட்ட நேரத்தில் இயங்கும் உலகு" எனவும் வரையறுக்கப்படுகிறது.

இயற்கையான உலகை மனிதன் வாழிடமாகக் கொள்வது முதல் தொழில்நுட்ப சமூக பண்பாட்டு உலகை மனிதன் உருவாக்குவது வரை அனைத்துப் பகுதிகளையும் கொண்டது தான் நமது சுற்றுப்புறம் ஆகும்.

மனிதனைப் பேணிக்காத்து வளர்த்து வரும் காரணிகளான விவசாயம், நீர்வாழ் உயிரின வளர்ப்பு, மண்புழு வளர்ப்பு, திசு வளர்ப்பு,நன்னீரியல்,கடலியல் நிலம் மற்றும் காட்டுச் சூழலியல்,

ஈரக்களச் சூழலியல், மீனின அறிவியல், பொதுச்சுகாதாரம், நச்சுவியல், மாசுக்கட்டுப்பாடு, வன உயிர் உயிரியல், சுற்றுச்சூழல் கல்வி மற்றும் புதுப்பிக்க இயலாத ஆற்றல்கள் இவையனைத்தையும் சுற்றுப்புறச் சூழல் அறிவியலே நமக்கு அளிக்கிறது.

நுண்ணியிரிலிருந்து மனிதன் வரை இயற்கைச் சமூகத்தின் அடிப்படை உறவுகளைப் புரிந்து கொள்ளத் தேவையான அடித்தளத்தையும் இந்தச் சுற்றுபுற அறிவியல் கல்வியே நமக்குக் கொடுக்கிறது என்றால் அது மிகையாகாது.

உயிரி அறிவியல், புவி அறிவியல் சமூக அறிவியல் ஆகிய மூன்றும் இணைந்த அறிவியலே சுற்றுச்சூழல் அறிவியல் என்று அழைக்கப்படுகிறது.

சுற்றுச்சூழலின் பல்வேறு கூறுகளாக வரையறுப்பது மூன்று காரணிகள் ஆகும்.

1. இயற்கைச் சுற்றுச்சூழல்
2. உயிரியச்சுற்றுச்சூழல்
3. பண்பாட்டுச்சுற்றுச்சூழல் என்பவனவாகும்.

இம்மூன்றினைச் சுற்றியே சுற்றுச் சூழல் இயங்குகிறது எனலாம். இம்மூன்றின் உட்பிரிவுகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

இயற்கைச் சுற்றுச்சூழல்	உயிரியச் சுற்றுச்சூழல்	பண்பாட்டுச் சுற்றுச்சூழல்
நிலச் சுற்றுச்சூழல் நீர்ச் சுற்றுச்சூழல் வாயுமண்டலச்சுற்றுச்சூழல்	தாவரச் சுற்றுச்சூழல் விலங்குச் சுற்றுச்சூழல் நுண்ணுயிர்ச் சுற்றுச் சூழல்	சமூகச் சுற்றுச்சூழல் பொருளாதாரச் சுற்றுச்சூழல் அரசியல் சுற்றுச்சூழல்

மேற்கூறிய இம்மூன்றின் நிலைகளையும் சுற்றியே சுற்றுச்சூழல் கல்வி நடைபெறுகிறது.

இயற்கை வளங்கள்

இயற்கையால் மனிதகுலத்திற்குக் கொடையாக வழங்கப்பட்டதுதான் இயற்கைவளங்கள். பழங்காலத்திலிருந்து இன்று வரை மனிதன் இயற்கை வளங்களைச் சார்ந்திருக்கிறான். பூமியின் இயற்கை வளங்களான நீர், மண், வனம், புல்வெளிகள், தாதுக்கள் மற்றும் பிற மனித வாழ்வின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அவற்றை அழியாமல் நிலைப்படுத்தவும் இயற்கை வளங்கள் உதவுகின்றன.

1. வன வளம்
2. நிலவளம்
3. நீர் வளம்
4. தாது வளம்
5. உணவு வளம்
6. ஆற்றல் வளம்

என இயற்கை வளங்களை ஆறுவகையாகப் பிரிக்கலாம்.

வன வளம்

" உலகின் நிலப்பரப்பில் 30 சதவீதத்தை வனங்கள் ஆக்கிரமித்துள்ளன. இவை அளவில் வட மற்றும் தென் அமெரிக்காவிற்கு இணையான 3000 மில்லியன் ஹெக்டேர் பரபபைக் கொண்டிருக்கின்றன. நாட்டின் 16 வகை வன வகைகளில் முக்கியமானவை வெப்பமண்டல இலையுதிர் வனங்கள் (38.7%)ஆகும். அடுத்தாக உலர்ந்த இலையுதிர் வனங்கள் இந்தியாவின் மொத்த வனப்பகுதியில் (69.6%) ஆக்கிரமித்துள்ளன" என வனங்களின் புள்ளிவிவரம் எடுத்துக் கூறுகிறது.

மேலும் "மொத்தக் கட்டுப் பரப்பில் 96 சதவீதம் (71.63% மில்லியன் ஹெக்டர்) அரசுக்குச் சொந்தமானது என்றும்,2.6 சதவீதம் (1.2% மில்லியன் ஹெக்டேர்) தனியாருக்குச் சொந்தமானது" என்றும் புள்ளிவிவரங்கள் கூறுகிறது.

வனஅழிவு

மனித இடையூறுகளால் வனங்கள் அழிக்கப்படுவதற்கு வன அழிவு என்று பெயர். 1900 ஆம் ஆண்டுகளில் உலகிலுள்ள மொத்த காடுகள் 7000 மில்லியன் ஹெக்டர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 1975 இல் 2980 மில்லியன் ஹெக்டர்களாகக் குறைந்தது. ஒவ்வொரு வருடத்திற்கும் இந்தியாவில் வன இழப்பு 1.5 மில்லியன் ஹெக்டர்களாகும். இந்தியாவில் 19% நிலம் காடுகளாக உள்ளது'' என கணக்கிடப்பட்டுள்ளது.

வன அழிவிற்கான காரணங்கள்

1. வனங்களை விவசாய நிலங்களாக மாற்றுதல்
2. சாலைகள் அமைத்தல்,
3. அணைகள் கட்டுதல்
4. எரிபொருள்களுக்காகவும்,மரப் பொருள்களுக்காகவும் அதிக அளவில் மரங்களை வெட்டுதல்

5. கால்நடைகளால் அளவுக்கதிகமான மேய்ச்சல்
6. தொழில்மயமாதல் மற்றும் நகர்மயமாதல்.

வன அழிவின் விளைவுகள்

1. உலகளாவிய வெப்பம் உயருகிறது.
2. வன உயிரிகளின் வாழிடங்கள் அழிக்கப்படுதால் உயிர்ப் பெருக்கமும் அழிகிறது
3. வன அழிவு,மண் அரிப்பு மற்றும் மலைப்பகுதிகளில் நிலச்சரிவுக்கு வழி வகுக்கிறது.
4. வனம் அழிவதால் பாலைவனம் ஏற்பட வழி வகுக்கும்

நில வளம்

நிலம் மற்றும் அதன் மண் முக்கியமான பூமியின் வளமாகக் கருதப்பட்டு வருகிறது. இது விவசாயம், தாவரங்கள், காடுகள் போன்றவைகளின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் முக்கிய மூலமாகவும் உள்ளது. நமக்குத் தேவைப்படும் அனைத்துப் பொருட்களையும் தாவரங்கள் மற்றும் விலங்கு மூலமும் மண் நமக்கு அளித்து வருகிறது. நமது மேம்பாடும் நல்ல நிலையும் வளமான நிலம் மற்றும் உற்பத்தித் திறன் கொண்ட மண்ணைப் பொறுத்தேயுள்ளது. நிலங்கள் புவியில் பல நிலைகளாக உள்ளது. அவைகள் மலை, சமவெளி, பள்ளத்தாக்கு, பாலைவனம் எனப் பல்வேறு பகுதிகளாகப் பிரிந்துள்ளது.

வெவ்வேறு கண்டங்களில் தனி நபருக்கான நில இருப்பு உலகளவில் தரப்பட்டுள்ளது.

வஎண்	கண்டங்கள்	நிலப்பரப்பு இருப்புத்தன்மை	பயிர்விக்கப்படும்நிலப் பரப்பு திறன் சதவீதம்
1	வடஅமெரிக்கா	1.84	43
2	தென்அமெரிக்கா	2.81	12
3	ஆப்பிரிக்கா	1.85	22
4	ஐரோப்பா	0.60	54
5	ஆசியா	0.39	77
6	உலகம்	0.88	42

நீர் வளம்

நீா உலகின் முக்கிய ஆதாரமாகும். இது அனைத்து உயிர்களுக்கும் அடிப்படையானது. நீரின் முக்கியத்துவத்தை உணந்து 2003 ஆம் ஆண்டை சர்வதேச நன்னீர் வருடமாகப் பரிந்துரைக்கப்பட்டது.

வருடாந்திர மழைப்பொழிவு மற்றும் மொத்த நீர் ஆதாரத்தைப் பொறுத்த வரையில் இந்தியா வளமிக்கதாகும். ஆனாலும் மண்டல ரீதியில் மற்றும் காலத்தைப் பொறுத்த வரையில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படுகிறது. "4000 பில்லியன் கன மீட்டருக்குச் சமமான இந்தியாவின் சராசரி மழையளவு இடத்தை மற்றும் காலத்தைப் பொறுத்து ஒழுங்கற்று பரவியிருக்கிறது. இதில் 75% மழையளவு நான்கு பருவகால மாதங்களில் கிடைக்கிறது. மீதி 1000 பில்லியன் கன மீட்டர் நீர் எஞ்சிய எட்டு மாதங்களில் கிடைக்கிறது. ஜூன் மற்றும் நவம்பர் மாதங்களுக்கிடையே 90% நீர் நம் ஆறுகளில் எடுத்துச் செல்லப்படுகிறது. எனவே மற்ற ஆறு மாதங்களில் 10% நீர் மட்டும்தான் நன்னீராகக் கிடைக்கிறது. கடல் நீரளவான 97% குடிப்பதற்கும் மற்றும் விவசாய தொழில் சம்பந்தமான வேலைகளும் பயன்படுத்த முடியாத அளவில் உப்பாக உள்ளது. மீதி 3% நன்னீரில் 2.997% ஐஸ்கட்டிகளிலும் பனிக்குவியலிலும் தங்கி ஆழமாகப் புதைந்து காணப்படுகிறது. பூமியில் கிடைக்கும் நீரில் 0.0035% நமக்கு மண் ஈரப்பதமாகவும் நிலத்தடி நீராகவும் நீராவியாகவும் மற்றும் குளங்களாகவும் நீரோடைகளாகவும் கிடைக்கிறது".

உலகில் அதிக மக்கள் தொகை உயர்வு காரணமாக நன்னீருக்கானத் தேவை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. இந்தியாவில் மக்கள் தொகை வளர்ச்சி 110 கோடிக்கும் அதிகமாவதால் தொழிற்சாலைகள், விவசாய வீட்டுத் தேவைகள் ஆகியன அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

பூமியின் பரப்பை மேம்படுத்துதல் தட்பவெப்பம் மற்றும் மாசுவைக் குறைப்பதில் நீர் முக்கியப் பங்காற்றுகிறது. தாவரங்களின் ஆற்றல் உற்பத்திக்கு இது முக்கிய மூலப்பொருளாகப் பயன்படுகிறது எனலாம்.

தாது வளம்

பொதுவாக நாட்டின் பொருளாதரம் அதன் தாதுவளத்தைப் பொருத்தே அமைகிறது. அதிவேகத் தொழிற்சாலைகள் வளர்ச்சியும் மக்கள் வளர்ச்சியும் அதிக மற்றும் மிக அதிக அளவில் தாதுக்களை உபயோகிப்பதை அவசியமாகிறது.

சிறிய தாதுக்கள் அனுசக்தி தாதுக்கள் புதைபடிவ எரிப்பொருட்கள் என 56 தாதுக்கள் இந்தியாவில் எடுக்கப்படுகின்றன. நிலக்கரி, பாக்சைட்,இரும்பு மற்றும் மாங்கனீஸ் போன்ற 30 தாதுக்களில் இந்தியா தன்னிறைவு பெற்றதாக உள்ளது. தற்சமயம் கடல் படுகை மற்றும் கடற்கரைகளில் கால்சியம், பெர்னிஸ் கடல் மணல், லிம்னைட்,ருடைல்,தகரம்

வைரம்,சல்பர்,நிலக்கரி,பெட்ரோல்'' போன்றவையும் கலந்து காணப்படுகிறது.

தாதுவளப் பயன்பாடுகள்

தனிநபர் பயன்பாடு மற்றும் பெருக்கமும் உலக தாதுப்பொருட்களின் தேவையை அதிகரிக்கிறது. இந்தியாவின் பல்வேறு தாது வளங்களில் முக்கியமாக பயன்படுத்தப்படுபவை உலோகத்தாதுகளும் தாதுஎரிபொருட்களும் தான். இந்தியாவின் பொது தாது ஆதாரம் நிலக்கரி ஆகும். இந்தியா உலக நிலக்கரி உற்பத்தியில் ஐந்தாவது இடத்தைப் பிடிக்கிறது.

உணவு வளம்

இந்தியாவில் வேளாண்மை முக்கியமான தொழிலாகும். நமக்குத் தேவையான உணவுப் பொருட்களை விவசாயத்திலிந்தே பெறுகிறோம். எனவே இந்தியாவின் வேளாண்மை முதலிடம் வகிப்பதுடன் உலகளவிலும் வளர்ந்து வருகிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய விவசாயப் பொருட்களின் உற்பத்தியை தேசிய அளவில் அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளது. விவசாயம் உலகளாவிய செயலாக இருப்பதால் மேன்மையான முன்னேற்றங்கள் மூலம் பயிர்களின் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் விவசாயத்தை இயந்திரமயமாக்கி தேசிய உணவுத் தேவை பூர்த்திச் செய்யப்பட்டு வருகிறது.

ஆற்றல் வளம்

ஆற்றல் என்பது வளர்ச்சிக்கு முக்கியமான ஒன்றாகும். இதன் நோக்கம் மனிதர்களின் நலன்களான குடியிருப்பு, விவசாயம், போக்குவரத்து மற்றும் தொழிற்சாலை வளாகங்களை உள்ளடக்கியதாகும். மற்ற இயற்கை வளங்கள் போன்று ஆற்றல் வளங்கள் புதுப்பிக்கக் கூடியதாகவும் அதே போல் புதுப்பிக்க முடியாதனவாகவும் உள்ளன. சூரிய சக்தி,கடல்அலைச்சக்தி போன்றவற்றைப் புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் வளமாகவும், நிலக்கரி,எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக்களைப் புதுப்பிக்கக் முடியாத ஆற்றல் வளமாகவும் கருதப்படுகிறது.

முடிவுரை

பூமி நமக்குக் கொடுத்த அரிய கொடைகளான இயற்கை வளங்களை நாம் பாதுகாப்பதோடு நம் சுற்றுப்புறச்சூழலையும் சுற்றுப்புற அறிவியலையும் பேணிக் காத்தலே மனித சமூகத்திற்கு நாம் ஆற்றும் தொண்டாகும்.

*****

வீரத்தின் விளைநிலம் புறநானூறு

திரு.ஆ.மரியதனபால்,
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

தமிழ்ச் சமுதாயம் காதலையும்,வீரத்தையும் இரு கண்களெனப் போற்றும். வீரமுடைய ஆண்மகன் எல்லோராலும் விரும்பும் நபராகக் கருதப்படுவர். சங்ககாலத்தில் வேந்தரின் வீரத்தையும், அதன் காரணமாக விளையும் போர் வெற்றியையும் சிறக்கப் பாடிய பழந்தமிழ்ப் புலவர்கள் போரைத் தடுத்து அமைதி ஏற்படுத்தி உள்ளனர். அதே வேளையில் அறத்தின் அடிப்படையில் விளங்கும் மறப் பண்பையும் விளக்கிப் போரைத் தடுத்துள்ளனர். எனினும் போர் வாயிலாக வெற்றி கொண்டவரையும், தோற்றவரையும் அவரவர் வீரத்தின் தன்மையைக் கருதிப் புகழ்ந்து பாடிய புலவர்களின் செயல் ஈங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும். அதன் காரணமாகவே சங்ககாலம் முதல் இக்காலம் வரை வீரத்திற்குச் சிறப்பிடம் கொடுக்கும் நிலை உருவாகியுள்ளது. அப்படிச் சிறப்பிடம் கொடுக்கப் பெற்ற சங்க இலக்கியத்தினுள் புறநானூறு முதலிடம் பெறும் எனலாம். இவ்வகையில் வீரத்தின் சிறப்பை எடுத்தியம்பிய பாடல்களை இக்கட்டுரையில் காணலாம்.

வீரத்தின் சிறப்பும் விளக்கமும்

மனித உள்ளத்தின் வலிமையும் உடல் வலிமையும் வீரம் என்று அழைக்கப்பட்டு இலக்கியங்களில் பாராட்டப் பெறுகின்றது. நாம் வாழும் காலத்தை அறிவியல் யுகம், கணினி யுகம் என்பது போல பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்ககாலத்தைப் போர் யுகம் என்று கூறும் அளவிற்குப் போர் போற்றி வளர்க்கப்பட்ட வீரத்தின் விளைச்சலாக இருந்துள்ளது. சங்ககாலத்தில் ‘சால்பு’ என்றால் ஊக்கம்,வீரம் என்பது பொருளாகும். எனவே ‘சான்றோன்’ என்றால் ஊக்கமுடையவன் என்றே பொருளாகும். பிறப்பு முதல் இறப்பு வரை ஒருவனின் செயல்பாடுகளில் பெரிதும் போற்றப்படுவதாகக் கருதப்பெற்றது வீரமேயாகும். தன் வலிமையைப் பறைசாற்றி நிறுவுவதற்காகவும், தன்னாடு காக்கும் பொறுப்புணர்வாகவும், தன்மானத்தைச் சீண்டுகிறபோது தரும் பதிலடியாகவும், தன்னுடைய ஆசை நிராசையாகிறபோது மூளும்

வீரத்தின் காரணமாகவும் சங்ககால மக்கள் போர் செய்துள்ளனர்.

சமுதாயத்தில் ஒவ்வொருவரின் கடமை

சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் உள்ள கடமைகளும், உரிமைகளும் மறுக்க முடியாதவையாகும். கடமையை எண்ணிக் காலத்தைக் கழிப்பவரே வாழ்வில் வெற்றியடைய முடியும். அதன் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் உள்ள கடமைகளைப் பட்டியலிடுவது போல் புறநானூற்றுப் பாடல் அமைந்துள்ளது.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

(புறம்: 312)

என்று பொன்முடியார் அனைவரின் கடமைகளையும் எடுத்தியம்பியுள்ளார். இந்தப் பாடல்களைக் கூர்ந்து நோக்கினால் அவரவர் 'கடன்' என்று சொல்லப்படுவனயாவும் போரைப் பற்றியதாகவே இருத்தல் காணலாம். 'ஈன்று புறந்தருதல்' என்றால் போர் செய்வதற்கு ஆண்மகனைப் பெற்றுத்தருதல் என்றே பொருளாகும். அந்த ஆண்மகன் போர்க்களத்தில் ஒளிறும் தன் வாளைச் சுழற்றி வெல்லுதற்கு அரிய யானைப் படையினை எதிர்த்துத் தோற்றோடும் படிப்போரில் வீரத்துடன் முன் நிற்றல் அவனின் கடமையாகும். அதுமட்டுமின்றி அக்காலமன்னர்களின் படைக்கு வீரம் பொருந்திய ஆண்கள் வேண்டும். அதற்குத் தாய்க்குலங்கள் தடையாக இருக்கக் கூடாதென வலியுறுத்தியதையும் காணமுடிகிறது.

சங்ககால மகளிர் வீரம் :

போரில் பெண்களுக்கு நேரடியாகத் தொடர்பில்லை எனினும் ஜான்சிராணி, இராணி மங்கம்மாள், சம்யுக்தா போன்றோர் கையில் வாளேந்திப் போர்க்களம் சென்ற வரலாறு உண்டு. ஆனால் போர்க்களம் செல்லும் வீரரைப் பெற்றெடுத்த பெருமை வீரமகளிரைத் தான் சேரும். தன் கணவனும் மகனும் நாடு போற்றும் வல்லவராகத் திகழ வேண்டுமென்ற எண்ணம் எல்லா மகளிரிடமும் தென்பட்டது.

" சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்

யாண்டு உளனோ என வினவுதி? என் மகன்
யாண்டும் உளனாயினும் அறியேன்! ஓரும்
புலி சேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே!"

என காவற்பெண்டு என்னும் பெண்பாற்புலவர் பாடியதை அறிய முடிகிறது. உன் மகன் எங்கே? என்று கேட்கிறாயே! என் மகன் எங்கே போயிருக்கிறான்? எனக்கே தெரியாது. நான் அறியேன்! ஆனால் ஒன்று நிச்சயம் நீ தெரிந்து கொள்ள வேண்டும். புலி இருந்த குகை அவனைப் பெற்ற என் வயிறு! எனவே அவன் புகழ் சிறக்க போர்க் களத்துக்குத் தான் போயிருப்பான் என்பதைப் புரிந்து கொள் என விளம்புவதிலிருந்து வீரம் பொருந்தியவனைப் பெற்றெடுப்பது பெருமையாகக் கருதப் பெற்றது.

தன்மானம் போற்றும் நிலை

பகைவென்று நாடும் மக்களும் மகிழ நல்லிசைப் புலவர்கள் வாழ்ந்த வாழும் இன்ப வாழ்வுடையோரே வாழ்ந்தோர் என்னும் பெருமைக்குரியவர். மற்றவர் உயிர்வாழினும் வாழாதவரே என்று வீரத்தின் சிறப்பு பெரிதும் மதிக்கப்பெற்றது. அப்படிப்பட்ட வீரம் போரின் முடிவில் கிடைக்கும் வெற்றி தோல்வியில் இல்லை. மாறாக தோல்வி அடைந்தவனின் மனதில் உள்ளது. இக்கருத்தினை

"சென்றமர்க் கடந்த நின் ஆற்றல் தோன்ற
வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே!" (புறம் : 66)

என வெண்ணிக் குயத்தியார் பாடியப் பாடல் வாயிலாக அறிய முடிகின்றது. வெண்ணி என்னும் ஊர்ப்புறத்தே நிகழ்ந்த போரில் புறப்புண் பட்டதற்காக நாணி, வடக்கிருந்து உயிர் விட்டுப்பெரும் புகழ் பெற்றான் சேரலாதன். அதற்குக் காரணம் பழி அஞ்சிய தன்மான உணர்வதாகும். இந்த தன்மான வீர உணர்வுக்குச் சேரலாதனை வெற்றி கொண்ட கரிகால் பெருவளத்தானின் வெற்றி பெரிதல்ல என்பது விளக்கப் பெற்றுள்ளது.

பிள்ளையைக் காண்பதில் வீரம் விளைவித்தல்

சங்ககாலத்தில் பிறந்த பிள்ளை சிறந்த வீரனாக வளர வேண்டித் தந்தை போர்க்கோலத்தோடு சென்று பிள்ளையைக்

காண்பது மரபாகக் போற்றப்பெற்றது.

"வெட்சி மாமலர் வேங்கையோடு விரைஇச்
சுரிஇரும் பித்தை பொலியச் சூடி
வரிவயம் பொருத வயக்களிறு போல
இன்னம் மாறாது சினானே அன்னோ
உய்ந்தன ரல்லர் இவன் உடற்றியோரே
செறுவர் நோக்கிய கண்தன்
சிறுவனை நோக்கியும் சிவப்பு ஆனாவே" (புறம்: 100)

என ஔவையார் பாடியுள்ளார். மகன் பொகுட்டெழினியைக் காணச் சென்ற அதியமான் நெடுமான் அஞ்சியின் வீரப்பொலிவினை வரிப்புலியோடு போரிட்ட வலிமைமிக்க யானை போல இருந்ததாகவும், பகைவரைத் தீயெழப் பார்த்த கண்களின் செந்நிறமும் மகனைப் பார்த்த பின்பும் கூட மாறாத நிலையில் இருந்ததாகவும் இப்பாடல் எடுத்துக்காட்டுகிறது. ஒவ்வொரு பெற்றோரும் தனக்குப் பிறக்கும் குழந்தை வீரனாக வளருவதைப் பெரிதும் விரும்பினர் என்பது புலனாகிறது.

பிறப்பின் சிறப்பு

ஆண்மகனுக்கு அணிகலன் வீரமென்று போற்றப்பெற்றது. வீரத்தின் அடையாளமாக மார்பில் விழுப்புண் பெறுவதைப் பெருமையாகக் கருதிய நிலையை

"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள்அன்று என்று வாளின் தப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேளல் கேளிர் வேளான் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றித் தீத்தணியத்
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ இவ்வுலகத் தானே!" (புறம்:74)

என் சேரமான் கணைக்கால் இரும்பொறையின் பாடல் வாயிலாகப் பிறப்பின் சிறப்பைக் காண முடிகிறது. திருப்போர்ப்புறத்தில் நடந்த போரில் சோழன் செங்கணான் வெற்றி பெற்றான். தோற்றவனோ சேரமான்கணைக்கால் இரும்பொறை இருவரும் பேரரசர்கள். தோற்ற சேரனைக் குடவாயில் கோட்டத்தில் சோழன் சிறையில் அடைக்கிறான். அப்பொழுது தாகமாயிருந்த சேரன் தண்ணீர் கேட்டபோது சிறைக்காவலன் காலம் தாழ்த்தி தண்ணீர் கொண்டு வந்து தருகிறான். அவமானத்தைப் பொறுக்கமாட்டாத சேரன்

தண்ணீரைக் குடிக்காமல் உயிர் விடுகிறான். உயிர் விடுவதற்கு முன்பு சேரக்குடியின் பிறப்பைப் பற்றிச் சோழன் தெரிந்து கொள்ள வேண்டுமென நினைத்து இப்பாடலை எழுதினான். அதில் ஆண் பிள்ளை இறந்து பிறந்தாலும், அல்லது குறைமாதத்தில் பிறக்கும் இரத்த சதை பிண்டமாக இருந்தாலும், அவற்றைப் பிள்ளையெனக் கருதாமல் அலட்சியப்படுத்த மாட்டார்கள். விழுப்புண் பெற்று இறப்பதுதான் பிறப்பின் சிறப்பென வாளால் மார்பில் கீறிய பிறகு தான் இறுதிச் சடங்கு செய்வார் என அறிவுறித்திய விதம் சிறப்புடையதாகும்.

இறப்பின் சிறப்பு

பிறக்கும் உயிர் இறக்கும் என்பது இயற்கையின் நியதியாகும். பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட வாழ்க்கையில் செய்த நற்செயல்களால்தான் இறப்பில் சிறப்பு கிடைக்குமென்பது மானிடச்சமுதாயத்தில் மறுக்கமுடியாத உண்மையாகும்.

"நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படைஅழிந்து மாறினன் என்று பலர் கூற
மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்ட என்
முலை அறுத்திடுவன் யான்எனச் சினைஇக்
கொண்டு வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந் தனளே!" (புறம்:278)

என்ற காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் பாடலில் வயது முதிர்ந்த தாயின் மகன் பகைவர் படையைக் கண்டு பயந்து திரும்பிக் புறமுதுகிட்டோடி போர்க்களத்தில் இறந்தானென்று பலரும் வந்து கூறக்கேட்ட அந்தத் தாய் போரிட பயந்து புறமுதுகிட்டு என் மகன் போர்க்களத்தில் இறந்தான் என்பது உண்மையாக இருக்குமானால், அப்படிப்பட்ட கோழைமகன் வாய்வைத்துக் குடித்த மார்பை அறுத்தெறிவேன் என்று போர்க்களம் சென்றாள். இறந்து கிடக்கின்ற வீரர்களின் உடலையெல்லாம் புரட்டிப் பார்த்துக் கொண்டே வந்தவள் ஓரிடத்தில் தன் மகன் மார்பில் விழுப்புண் ஏற்று உடல் சிதைந்து சிதறிக் கிடப்பதைக் கண்டாள். அப்பொழுது அவனைப் பெற்றெடுத்த நாளில் அடைந்த மகிழ்ச்சியை விட விழுப்புண்பட்டு இறந்து கிடக்கும் மகனைப்

பார்த்துப் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தாள் என்பதை அறியமுடிகிறது.

> "விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
> வைக்கும்தன் நாளை எடுத்து"

என்னும் குறளில் வீரன் என்பவன் கழிந்த தன் நாட்களைக் கணக்கிட்டு அவற்றுள் விழுப்புண்படாத நாட்களையெல்லாம் பயன்படாமல் தவறிய நாட்களுள் சேர்ப்பான் என்று வீரத்தின் சிறப்பினை வள்ளுவர் எடுத்துரைத்துள்ளார். இதன் காரணமாகவே இன்றளவிலும் கூட நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்யும் எண்ணற்ற தியாகிகளின் இறப்பிலும் பெருமையடைகிறோம் என்றால் வீரமே தவிர வேறொன்றுமில்லை.

துணை நின்ற நூல்கள்

1. ஞா.மாணிக்கவாசகன், புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம்,சென்னை.
2. டாக்டர்.மு.வரதராசனார்,திருக்குறள் தெளிவுரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை
3. சங்கஇலக்கியம், தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம்,சென்னை.

****

ஆன்மீக நெறிகளில் உலகாயதத்தின் ஒருமை பன்மைத் தன்மைகள்

திரு.லா.சார்லஸ்,
தமிழாய்வுத்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

மனித வாழ்க்கையின் அடிப்படை நெறியாக அமைவது உலகாயதம் ஆகும். பஞ்ச பூதங்களோடு ஒன்றியுள்ள பொருள்களின் அடிப்படையில் உலகப் பொருள்கள் அனைத்தும் உண்டாகி நிலைபெற்று இருக்கின்றன. அதனடிப்படையில் இந்த விண்வெளியானது பரந்து, விரிந்த நிலையில் எண்ணற்ற மண்டலங்களையும், கோள்கள் கொண்ட குடும்பங்களையும் கொண்டு இயங்குகின்றது. இந்த விண்வெளியின் பல்வேறு கோள்களில் ஒன்று பூமி ஆகும். இதில் சூரிய மண்டல வளர்ச்சியின் விளைவாகப் பல்வேறு உயிர்கள் உற்பத்தியாகிப் பெருகின. அப்பல்வேறு உயிர்களில் மனித உயிரும் ஒன்று ஆகும். இம் மனித குலம் தொடக்கம் முதல் இன்று வரை தன்னைச் சுற்றியுள்ள இயற்கையை மாற்றுவதன் மூலம் தன்னையும் மாற்றிக் கொள்ள முனைந்து வருகிறது. மண்ணின் பொறுமை, ஆகாயத்தின் அகலம், காற்றின் வலிமை, தீயின் அழித்தல் பண்பு, நீரின் ஆற்றல் வளமை ஆகியன மனித உள்ளத்தின் பண்புகளோடு ஒன்றி பஞ்ச பூதங்களால் மனித உடல் அமைந்துள்ளது என புறநானூறு சுட்டிக்காட்டுகிறது. அத்தகைய உடலின் செயல்பாடுகளோடும், உணர்வுகளோடும், மாற்றங்களோடும் சேர்ந்தபடி உலகாயதமும் தனது வாழ்வை ஏற்படுத்திக் கொண்டே வந்தது. இவ்வுலகாயதத்தில் தமிழரின் ஆன்மீகநெறிக் கொள்கைகள் உயிர்த் தோற்றக் கொள்கைகள் ஒருமை பன்மைத் தன்மைகள் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் மையமாக அமைகின்றன.

உலகாயதத்தின் தொடக்கம்

உலக வாழ்க்கையில் ஒழுக்க நெறிகள் அனைத்தும் மனித வாழ்க்கை முறைகளைக் குறித்ததாக அமைகின்றன. தமிழ்நாட்டில் இடம் பெற்றுள்ள சமண, பௌத்த, வைதீக சமயங்கள் வளர்ச்சிக்கான போட்டிகளில் பெரிய நிறுவனங்களாயின.. அப்போது

கிரேக்கர் யவனர்களின் தொடர்புகளால் புதுக் கருத்தியல்கள் தோன்றின. சமயப்பொருள் பற்றிய உறவுகள் மாறிப் புதியதாக ஏற்பட்ட சமூக உறவுகளால் பிராமணர், வேளாளர் என்னும் சாதிய அமைப்புக்கள் தோன்றி நிலைபெற்றன. இந்தப் பின்புலத்தில் தான் இதனை ஒழிக்கவேண்டி தமிழ் இலக்கியங்கள் அறக்கருத்துக்களையும் நீதிநெறிக் கொள்கைகளையும் வலியுறுத்தி திருக்குறள், கணியன் பூங்குன்றனார் பாடல்கள் போன்றவை மக்களின் எண்ணங்களில் புகுத்தப்பட்டன.

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் சிறந்த நாகரிகத்தைப் படைத்துக் கொண்டவர்கள். அவர்களின் நாகரிகம் சிந்துச் சமவெளி நாகரிகத்தின் தொடர்ச்சியாக அமைகின்றது. இவர்களின் வாழ்க்கை அறிவியலின் வளர்ச்சியின்றி தங்களுக்குள் நாகரிகத்தையும் பண்பாட்டையும் உருவாக்கிக் கொண்டு, தன்னை அச்சுறுத்தும் இடி, மின்னல் போன்றவற்றையெல்லாம் தெய்வம் என்று வணங்கி, இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தனர். இந்நிலையில் உலகாயதம் 'நாற்பூதங்களை அடிப்படையாகக் கொண்டு உயிர்கள் உண்டாகின்றன' என்ற கொள்கையைக் கொண்டிருந்தது.

பண்டைய தமிழ் இலக்கியங்கள் அகம், புறம் எனப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. அதனை ஆழ்ந்து பயில்வார்க்கு ஓருண்மை புலனாகும். அதாவது திணைப் பாகுபாடும், அதனை ஒட்டிய ஒழுக்கங்களும் அக்காலத் தமிழர் வாழ்வின் அடிப்படை என்பதாகும். முதன் முதலில் தோன்றிய இலக்கண நூலான தொல்காப்பியம் தமிழரின் வாழ்வியல் நூலாகும். மனித சமுதாயம் தொடங்கிய காலம் முதல் பண்பாடு, நாகரிகம், தனிச்சொத்து குடும்பம் அரசு படைத்துக் கொள்ளும் நிலைகளை எடுத்து விளக்குவதாக் தொல்காப்பியம் அமைகின்றது. என்வே இதனை உலகில் வேறு எந்த மொழியிலும் காணப்படாத மிக உயரிய சமூகவியல் பற்றிய முதல் நூல் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

தமிழ் இலக்கியங்கள் போற்றி மேற்கொள்ளும் அகம்-புறம் மரபும், பகுப்பும் தொன்மையானது எனினும் இந்த இலக்கண நூல் சார்ந்தே திணையியல் மரபுகளை ஆராயவேண்டியுள்ளது. மேலும் இந்தத் திணையியல் மரபு நோக்கி சமஸ்கிருத வேதங்களையும், செமித்திய வேதங்களையும் பரிசீலிக்க வாய்ப்பு அமைகின்றது. இந்தப் பகுப்பானது தமிழ்மொழிக்கே உரியது என்றாலும், உலகளாவியதாகவும் அமைகின்றது. மேலும் சங்க காலத்தில் சமண, பௌத்த, வைதீகக் கருத்துக்கள் தமிழகத்தில்

ஊடுருவியதனால் மறுபிறவி, ஆன்மா, வானுலகு, வீடுபேறு, வடக்கிருத்தல் போன்ற நம்பிக்கைகளும் உலகாயதத்தில் பிறந்தன.

உயிர் தோற்றக் கொள்கை

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்களின் சிந்தனையில் உள்ள உலகாயதத்தின் பன்மைத் தன்மையானது பரிசீலிக்கப்பட்டது. உயிர், ஆன்மா, பிரம்மம், சிவம், கடவுள் பற்றிய விளக்கக் கொள்கைள் தமிழர்களிடையே வலுப்பெற்றிருந்தன. இலக்கியங்கள் வழியாகக் காணும் போது, மணிமேகலை தாய்தந்தையரை அனுமானத்தாலேயே அறிய இயலும் என்பதை எளிய முறையில் மறுக்க முயன்றாள். ஆனால் பிற்காலத்தில் வாழ்ந்த வேதாந்த தேசிகர் உலகாயதம் அனுமானத்தை ஏற்றிருந்ததாகக் கூறி, நேரில் கண்ட ஒரு பொருளைக் கொண்டு இன்னொரு பொருளைச் சாதிப்பது என்ற செயல் சார்ந்த அனுமானங்களை உலகாயதம் கொண்டிருந்ததாகத் தமது தேசிகப் பிரபந்தத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் எவரொருவரும் நேரில் காணாத ஒன்றை அனுமானத்தால் நினைத்துக் கொண்டு உண்மை என்று கூறுவதை உலகாயதத்தார் நிராகரித்தனர். மேலும் கடவுள் மற்றும் ஆன்மாவை அவர்கள் ஏற்கவில்லை. பூதப் பொருள்களின் சேர்க்கையால் உயிர், உணர்வு, அறிவு என்பன தோன்றுகின்றன என்பது அவர்களுடைய முதன்மையான கடைபிடி ஆகும். பூதப் பொருள் வேறு. உயிர், உணர்வு, அறிவு வேறு என்று கூறுவோரை மறுத்தனர். நீலகேசி என்ற காப்பியம் ஆன்மா தனியாக உடலில் உண்டு. அது உணர்வு சுவை உண்டாக்குகிறது என உலகாயதத்தாரிடம் வலியுறுத்தியது. ஆனால் உலகாயத்தர் ஐம்பூதங்கள் சேர்வதால் அறிவு, இன்பம் ஆகியன தாமே தோன்றுகின்றன எனக் கூறினர்.

உலகாயதம் பற்றிப் பேசும் தத்துவ நூல்கள்

பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவச் சான்றோரான அருள்நந்தி சிவாச்சாரியார் தமது சிவஞானசித்தியார் நூலிலும், பதினான்காம் நூற்றாண்டில் வேதாந்த அறிஞரான மாதவாச்சாரியார் தமது சர்வ தர்சின சங்கிரகம் என்ற நூலிலும், நாத முனிகள் முதல் மணவாள மாமுனிகள் முடிய அனைத்து வைணவ ஆச்சாரியார் நூல்களிலும், பிரபந்தப் பேருரைகளிலும் உலகாயதத்தைத் ‘தேகாத்மவாதம்’ எனச் சுட்டிப் பேசினர்..

பதினாறாம் நூற்றாண்டில் சைவ வழி நின்று பரமாத்துவித வேதாந்தம் கண்ட தத்துவராயர் பெருந்திரட்டு என்ற நூலிலும், பதினெட்டாம் நூற்றாண்டில் சைவ வழி நின்று சித்தாந்தம் உரைத்த சிவஞான முனிவர் தமது மாபாடியத்துள்ளும் நூலிலும், உலகாயதம் தன் கொள்கையாக வாழ்வியல், ஒழுக்கவியல், அறிதலியல், முறையியல், தத்துவயியல் போன்ற விளக்கங்களை ஒன்றுபடவே கொண்டிருந்தன என உரைத்துள்ளனர்.

ஆன்மீகம் சார்ந்த பரிகார முறைகளில் உலகாயதக் கொள்கை

பதினேழாம் நூற்றாண்டில் தத்துவ போதகரான இராபர்ட் டி நொபிலி கிறித்தவப் பணி செய்தபடியே இந்த உலகத்து மக்களை நோக்கிய தமது கருத்துக்களைத் தெரிவிக்கத் தொடங்கினார். இங்கிருந்த சமயக் கொள்கைகளைக் கற்று தமது வழியில் அவற்றைப் பரிசீலனை செய்து உலகாயதத்தை முதல் முறையாக மதிப்பீடு செய்தார். கோயில் கட்டுவது, கிணறு, குளம் தோண்டி நீரப்பந்தல் அமைப்பது, சத்திரம் சாவடி ஏற்படுத்தி உணவு இடுவது, பொன் நிலம், அன்னதானங்கள் எல்லாம் பயணிகளுக்காகவும், வறுமையில் உள்ளோருக்காகவும் செய்யப்படுவதாக உலகாயதம் குறிப்பிடுகின்றது. அவ்வாறு செய்வதன் மூலம் புண்ணியம் சேர்ந்து பாவம் விலகும் என்ற கர்மவினை மற்றும் பிறவிக் கொள்கைகளை உலகாயத்தார் நிராகரித்தனர். ஆனால் இராபட் டி நொபிலி அவை எல்லாம் அவரவர் தமது புகழுக்காகவும், சுய நலனுக்காகவுமே செய்யப்படுகின்றன என்றார். மேலும் இந்த உலகில் படைக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் மனிதனின் பயன்பாட்டின் பொருட்டே உள்ளன. அதே சமயத்தில் மனிதன் தன் சுதந்திரத்தால் கடவுளை விட்டுவிட்டு உண்டாக்கப்பட்ட பொருள்களைக் கடவுளாக எண்ணி வணங்குவது அவரால் எதிர்க்கப்பட்டது.

எந்த ஒரு பொருளிலும் முதலும் முடிவும் காண்பது உலகாயதம் ஆகும். ஆனால் பயனையோ, பயன் கருதிய விளக்கத்தையோ அது தந்ததில்லை. இதனை வலியுறுத்தும் வகையில் இராபட் டி நொபிலி உண்டாக்கப்பட்ட பொருள்களிடத்தில் தனது இறைபக்தியைக் காட்டுவது தனக்குத்தானே கேடு விளைவித்துக் கொள்வதாகும் என மதிப்பிட்டுரைத்தார். உலகாயதத்தைப் பற்றிய இது போன்ற மதிப்பீடு தமிழக அறிஞர்களின் தத்துவ மரபில் இடம்பெறவில்லை.

ஆத்திகமும் நாத்திகமும்

1875-இல் ஆங்கிலேயர் ஆட்சியின் போது தனிமனித நலனை மையப்படுத்தியும், தன் ஆட்சி அமைப்பை வலியுறுத்தியும் தனது கருத்துக்களைக் கூறும் விதமாய் பகுத்தறிவைப் போற்றியது. அப்போது தமிழகம், ஒரு பக்கம் ஆத்திகத்தையும், இன்னொரு பக்கம் நாத்திகத்தையும் கொண்டிருந்தது. சுதந்திர சிந்தனையாளரான சார்லஸ் பிராட்லாவின் நாத்திகத்தைப் போற்றுவோர் குறைந்த அளவினர் இருந்தனர். இவருடைய நாத்திகத்தைச் சமூக விரோதமான ஒழுக்கக் கேடான, தவறான தத்துவச் சிந்தனையாகச் சமயப் போதகர்கள் கூறி வந்தனர். இருப்பினும் புதிய அறிவியல் பௌதிகவாதத்தால் உலகாயதம் வளர்ச்சி பெற்று ஆன்மீக நெறிகளைத் தன்வயப்படுத்திக் கொண்டது. இது மரபாகவும், இயல்பாகவும் நாத்திகக் கொள்கையைக் கொண்டிருந்தது. இதனை எதிர்த்து ஆங்கிலேய நேர்க்காட்சி வாதம் உலகாயதத்தை நசுக்கி அழிக்கவே செயல்பட்டது. ஆங்கிலேய நேர்க்காட்சி வாதம் என்பது சமய, தத்துவ சாஸ்திர, கலை இலக்கியங்கள் உண்மையான தன்மை கொண்டு இருக்கவில்லை என வெறுத்துப் பேசும் ஓர் இயக்கம் ஆகும். இம்முயற்சி இரண்டாம் உலகப்போர் சார்ந்த அதனுடைய கொள்கையோடும் இணைந்தது ஆகும்.

உலகாயதக் கொள்கையின் வளர்ச்சி நிலை

தாய்வழிச் சமூகம், தந்தை வழிச் சமூகம், தனிச் சொத்து அரசு தோன்றிய வரலாறு மற்றும் புராதன இனக்குழு பொதுவுடைமை, கால்நடை மேய்ப்பு, வேளாண்மை நிலவுடைமைச் சமூகங்கள், பொதுவுடைமைச் சமூகங்கள் பற்றிய வரலாற்றுப் பொருள் முதல்வாதம் இங்கு உலகாயதத்தில் உட்பொலிந்தது. இந்நிலையில் உலகாயதம் தனக்கென வெளிப்படையான ஒரு கட்சியையும், பத்திரிகையையும் அடையப் பெற்றது. தொழிலாளிகள், விவசாயிகள், உழைக்கும் மக்கள் என பௌதிகவாதிகளுக்கு மக்களின் செல்வாக்கும் உயிர்ப்புள்ள தத்துவமும் கிடைக்கப் பெற்றன.

உலகு, உடல், உயிர்த்தோற்றவியல் போன்ற துறைகளில் நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை உலகாயதம் ஏற்றுக் கொண்டது. உயிரானது, உடலின் பண்பையும், பொருளின் இயக்க வளர்ச்சியில் தோன்றும் உயர்நிலையான பண்பையும், மனிதமூளை மிக உயர்நிலையான வளர்ச்சி நிலையைப் பெற்றது என்ற கருத்துக்களையும் உலகாயதம் பெற்று விளங்குகிறது. இவை

மட்டுமல்லாமல் இன்று உலகத்தில் இயற்கையாகக் கிடைக்கும் பொருள்கள், விளைபொருள்கள், செயற்கையான உற்பத்திப் பொருள்கள் என அனைத்தும் ஒற்றைச் சந்தைக்கு உட்படுத்தப்பட்டு உலகமயமாகி வருகின்றன.

ஆன்மீக நெறியில் ஒருமை பன்மைத் தன்மைகள்

சைவமும் வைணவமும் உலக வாழ்வில் பன்மைத் தன்மையை ஏற்கின்றன. வைணவ சமயம் மனிதர், புறநிலைப் பொருள்கள், இயற்கை இயக்கங்கள் என்ற ஒவ்வொன்றும் தனித்தனியான உண்மைகளை விளக்குகிறது என்கிறது உலகாயதம். ஆயினும் அனைத்துள்ளும் ஒரே ஒருமைத் தன்மை உள்ளது. அந்த ஒருமைத்தன்மையின் பிரிக்க முடியாத வடிவங்களாகப் பலருபமாக மனிதர், விலங்குகள், தாவரங்கள், இயற்கை இயக்கங்கள் நிலவுகின்றன. ஒருமைத் தன்மை என்பது உணர்வுகளால் உண்டாக்கப்பட்டது. தமிழகத்துச் சித்தாந்தமான சைவம் பன்மைத் தன்மையை ஏற்கும் போது, இங்குள்ள உயிர்கள், பொருள்கள் ஒவ்வொன்றும் தனித்தனியான உண்மைகள். ஒன்றன் இன்ப துன்பங்களை இன்னொன்று அறியாது என்கிற அளவில் இவை தனித்தனியான பன்மைகள் ஆகும். சைவசித்தாந்தத்தின்படி பன்மையாக உலக, இயற்கைப் பொருள்கள் இருப்பதினாலேயே நிலையாமையும், பிறப்பும், மறைவும் ஏற்படுகின்றன.

இந்த நெறிகளில் அறிஞர்களது கருத்துப்படி இந்தப் பன்மைத் தன்மையில் பொருட்கள், உயிர்கள் சுதந்திரம் அற்றவை. அவை பன்மையாக இருந்தாலும் கடவுள் என்ற ஒன்றிற்கு அடிமையானவை. அதாவது அப்பாலான ஒன்றுக்கு அடிமையானவை. கடவுள் என்ற மேலான ஒன்று கீழான இந்தப் பன்மைப் பொருள்களுக்குள் ஊடுருவி நிற்கிறது என அறிஞர்கள் கருத்துரைப்பதன் மூலம் உலகாயதக் கொள்கையோடு தமிழ்க ஆன்மீக நெறிகளின் ஒருமை பன்மைத் தன்மைகள் பற்றி அறிய முடிகின்றது.

தொகுப்பாக

உலகாயதம் பன்னெடுங் காலமாகவே பன்மைத் தன்மை பற்றிப் பேசி வருகின்றது. நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகிய பொருள்களைக் கொண்டு ஆன்மீக நெறிகளை உணர்த்துகிறது. அதாவது இந்த உலகம் பஞ்சபூதப் பொருட்களால் ஆனது. முற்றிலும் சுயமாய் உருவானது. என்றும் அழியாது உள்ளது.

இந்த முறையில் இவை பன்மையாக இருப்பவை ஆகும். அதே சமயத்தில் அவை ஒன்றுடன் ஒன்று கூடும் தன்மையும் உடையது. அதனால் ஒரேவிதமான, வேறு வேறான, முரண்பகையான பலவகைப்பட்ட பண்புள்ள உயிர்கள், பலவகைப்பட்ட பொருள்கள் எல்லாம் உருவாகும். அவற்றில் ஒன்று மனித உயிரும் ஆகும். இவைகளிலிருந்து ஒன்றுபட்டதாய் அமைந்த உலகம் என்றும் அழியாததாய் உள்ளது என்கிறது.

தமிழக வேதாந்தம் இந்த உலகம் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டு அவரால் படைக்கப்பட்ட ஒரு பொருள் ஆகும். விதிகளுக்கும் நியதிகளுக்கும் உட்பட்டு அழியும் என உலகாயதக் கொள்கைக்கு மாறுபட்டுக் கூறுகின்றது. தமிழக வேதாந்தமானது இன்று மனித சமூகத்தின் பொருளாதாரமாகவும், ஆன்மிக வளர்ச்சியிலும், மானுடத்தின் முதன்மையாகவும் மற்றும் இவற்றின் வழியாகச் சமத்துவம், சுதந்திரம் ஆகியவற்றைப் போற்றி நிற்கின்றது. இயற்கை, மனிதன் ஆகியவற்றிற்கிடையே படைப்பாக்கம் மிக்க ஒருமையை உணர்த்தி இந்த நூற்றாண்டை நோக்குகின்றது.

ஒருமைக்கு அடிப்படையே பன்மைதான். ஒன்றுடன் ஒன்று தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதிலேயே அவைகளின் தனித்தன்மைகள் வெளிப்படுகின்றன என்று உலகாயதம் எடுத்துரைக்கின்றது. மேலும் இயற்கை-மனித சமூகம் இரண்டின் உறவில் மனித வாழ்வின் மையமும், முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டு, வரலாற்று வழிப்பட்ட சமூகமயமான மனிதநேயம் காப்பது, ஒருமை பன்மைத் தன்மைகளின் ஒருங்கிணைப்பு ஆகியனவற்றை வாழ்வியல் நெறியாக உலகாயதம் வலியுறுத்துவதை அறியமுடிகின்றது.

துணைநூற்பட்டியல்

1. டாக்டர் கி.முப்பால்மணி, தமிழகத் தத்துவச் சிந்தனை மரபுகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2008.
2. டாக்டர் கி.முப்பால்மணி, தமிழகத்தில் உலகாயதம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 1999.

****

நவீனத்துவத்தில் புதுக்கவிதையும், ஹைகூவும்

ஜோ. அன்பு
தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

இலக்கியமும் அறிவியலும் நெருங்கிய தொடர்புடையன. பழந்தமிழ் இலக்கியங்களோடு உயிர், உறவாய் இருந்து வருவது அறிவியல். சங்க இலக்கியங்கள் தொடங்கி இந்நாள் இலக்கியங்கள் வரையிலும் அறிவியல் கருத்துக்கள் உள்ளடங்கிய பல்வேறு படைப்புகள் வந்திருக்கின்றன. பூமியின் சுழற்சி, வானம், சூரியன், சந்திரன் என இயற்கையின் பல்வேறு அம்சங்களையும் கொண்ட அறிவியல் சிந்தனையோடு உருவாக்கப்பட்டுள்ளதை நாமறிவோம்.

"ஞாயிறு போற்றுதும்
திங்களைப் போற்றுதும்
மாமழை போற்றுதும்"1

என சிலப்பதிகார வரிகளின் மூலம் அறியலாம்.

அறிவியலென்பது அறிவுப்பூர்வமான சிந்தனையை எழுப்பக்கூடிய ஒன்று. கவிதை என்பதோ உணர்வுப் பூர்வமானதையும், நுட்பமானதையும் மக்களுக்கு அறிவுறுத்தும் பாணியில் ஈர்க்கக்கூடிய சக்தி கொண்டதாக விளங்குகின்றது.

அறிவியல் உண்மை சார்ந்தது. கவிதையே மொழி சார்ந்தது. கவிதை எவ்வாறு உருவாகிறது? இலக்கிய விமர்சகர் தி.சு. நடராசன் தனது கவிதையெனும் மொழி நூலில் அழகாக எடுத்துரைக்கிறார்.

"கவிதை மொழியிலே விழி கொள்கிறது, மொழியின் விடியலிலே பள்ளியெழுகிறது, மொழியின் வீச்சிலே தடம் பயில்கிறது. கலையும் ஆற்றலும் மொழியின் தளமும் ஒருசேரக் கூடிப்பிறந்த கவிதை மானிட சமூகத்தின் உணர்வுக்கும், உயிர்ப்புக்கும் ஒரு வெளியையும் ஒரு காலத்தையும் சமைத்துத் தருகின்றது. தெளிவற்ற நிலையிலிருந்து கவிதை நம்மை உயர்த்துகிறது".2

புதுக்கவிதையில் நவீனத்துவம்

இலக்கியம் சமுதாய வாழ்வில் ஆக்கத்தினைதான் செய்ய முடியும். ஆனால், அறிவியல் ஆக்கவும் முடியும், அழிக்கவும்

முடியும். இந்த உண்மையின் பாடுபொருளைக் கொண்டு மனித வாழ்வின் போக்கினையும் இயற்கை சீற்றங்களையும் தமிழ்ப் புதுக்கவிதைகள் வெளிப்படுத்துகிறது.

“இண்டர்நெட் ... கம்பியூட்டர்
அணுகுண்டு ... குளோனிங்
இலக்கியங்கள்
தாய்த் தமிழையும் நெருங்கவிடாத
வேற்றுமொழி
மாற்றாந் தாய்கள்”3 (முதல் மனுசி – ப.58)

இன்றைய மனித சமுதாயம் போதையின் பாதையில் ஓடுகின்ற அவலத்தை முருகுசுந்தரம் ‘சோமபானம்’ என்னும் கவிதையில்,

“பிறக்கும்
போதே
எங்கள் -
இரத்த நாளங்களில்
நீ ஓடுகிறாய்!
உன்னை
அவ்வளவு எளிதில்
டயாலிசிஸ்
செய்ய முடியாது”4 (தமிழ்ப்புதுக்கவிதைகளின் நோக்கும் போக்கும் - ப.100)

என்று மதுவினை அமிர்தம் போன்று அதனைப் பருகி இன்று அதன் பிடியிலிருந்து சிக்கிக் கொண்டு தவிக்கின்றது இன்றைய சமூகம். இந்தச் சீர்கேட்டை ‘டயாலிசிஸ்’ என்னும் அறிவியல் செய்கை மூலம் உணர்த்துகிறார்.

இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகளால் இயற்கை சீற்றங்களும், பேரழிவுகளும் ஏற்படுகின்றன என்பதை ‘முதல் மனுசி’ என்னும் கவிதையில்,

“ஓசோன் படலம் கிழிந்து
குருதி அமிலம் கசிய
இயற்கையின்
கருப்பைக்குள் கை நுழைத்தது
ஆலைகள்”5 (முதல் மனுசி – ப.59)

இயற்கையின் பேரழிவுகள் பல்வேறு வகையான வளர்ச்சிகளால் ஏற்படுகின்றன. அவை தொழிற்சாலைகள் மூலம் வாகனங்களால் ஏற்படும் புகை இது போன்று பல்வேறு வகையான

தீமைகளால் இயற்கை பேரழிவுகள் ஏற்படுகின்றது.

இயற்கையின் சீற்றத்தால் அது நடத்தும் பேரழிவுகள் பூகம்பம். அத்தகைய நிலநடுக்கத்தால் உலகம் சந்தித்தது பல்வேறு அதிர்ச்சிகள், அழுகைகள், சோகங்கள் நிறைந்தது.

அத்தகைய நிலநடுக்கத்தைப் பற்றி, 'நடுங்கும் நிலம்' என்னும் கவிதையில்,

"இயற்கையே அம்மா!
நிலநடுக்கம், விளையப் போகும்
விபரீதங்களுக்கு முதல் தாம்பூலமா?
இல்லை
வெறும் விளையாட்டுத் தனமா?"6

(தமிழ்ப் புதுக்கவிதையின் நோக்கும், போக்கும் - ப.162)

இயற்கையின் சீற்றமான நிலநடுக்கம் மேற்குத்தொடர்ச்சி மலையில் ஏற்பட்ட போது பெரிய பேரழிவிற்கு முன்னறிவிப்பு என விஞ்ஞானிகள் அறிவித்ததைக் கேட்ட சிற்பி மேற்கு தொடர்ச்சி மலை சந்திக்கப் போகின்ற பேரழிவு குறித்து அச்சப்படுகின்றார்.

இன்றைய உலகம் இயற்கையின் பேரழிவுகளால் வளங்கள் சிதைந்து வருகின்றதை கவிக்கோ நாட்டு மிராண்டிகள் எனச் சாடுகின்றார்.

"நீ இயற்கை தாயின் மார்பகங்களில்
குழந்தை போல்
பால் குடித்தாய்
நாமோ அவள் மார்பகங்களைக்
கடித்துக் குதறித்
துப்பிக் கொண்டிருக்கிறோம்"7 (ஆலாபனை – ப.151)

என்று பழங்குடி மக்களால் பாதுகாத்து வரபட்ட இயற்கையானது இன்று நாகரீக மனிதர்களால் அழிவுக்குக் கொண்டு செல்வதை விமர்சனம் செய்கின்றார்.

இவ்வாறு அறிவியல் பயன்பாட்டு முறைகள், இயற்கையின் பேரழிவுகள் என புதுக்கவிதை உணர்த்துகின்றது. அடுத்து ஹைகூ உணர்ந்து அறிவியல் பார்வையைக் காண்போம்.

ஹைகூ காட்டும் நவீனத்துவம்

ஹைகூ கவிதை இயற்கை நேசிப்பையும், அழகுணர்ச்சியையும், மானுட நேயத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் ஹைகூ சிந்தனைத் தரக்கூடிக் கருத்துமிக்க ஒன்று.

"ஹைகூ மொழியை உடைத்துக் கொண்டு வந்த ஒரு

மொழி.தமிழுக்கு வந்த போது அது தமிழில் புதுசு. அலங்காரமில்லாத நேரடியான எளிமையான இயற்கையான ஒரு பேச்சு அது. விசாலமான இயற்கை மனித இயல்போடு தொடர்பு கொள்ளுகின்ற ஒரு கவிதை வடிவம்"8 என்று நடராசன் கூறுகின்றார்.

மனித சமுதாயத்தின் முன்னேற்றம் காலத்தின் மாற்றங்களால் நடக்கின்றது. முதலில் சந்திரனில் காலடி வைத்த மனிதன் செவ்வாயிலும் காலடி வைக்கத் துடிக்கின்றது என்ற அறிவியல் உண்மைகளோடு,

"விஞ்ஞான வளர்ச்சி
அடுத்த குறி செவ்வாய்
தழும்புகளோடு நிலா"9 (தமிழின் திசைகள் - 68)

உணர்த்துகிறது.

இன்றைய அரசியல் சமூக உண்மைகளோடு விஞ்ஞான வளர்ச்சியை இணைப்பதாகக் காட்டுகின்றது.

"வானத்திலும் அரசியல்
எரிகற்கள் வானவனின் சிறு துளியே"10

மனித வாழ்க்கையான இன்று பல்வேறு விதத்தில் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. உலகத்தையே விரல் நுனியில் காண முடியும் என்பதை,

"விரல் நுனியில்
விரிந்தது உலகம்
இணையம்"11 (தமிழின் திசைகள் - ப.69)

ஹைகூவின் மூலம் அறிய முடிகிறது.

விஞ்ஞான வளர்ச்சி எந்தெந்த வகையில் உதவுகின்றது என்பதை கவிஞர் அமுத பாரதிக்கு காட்டும். கவிதை,

"நோய்க்கு நன்றி
எக்ஸ்ரேயில் காண முடிகிறது.
எனது எலும்புகளை"12 (புதிய கோடாங்கி – 34)

நோயின் மூலம் நாம் நம் நரம்புகளை எக்ஸ்ரே என்னும் அறிவியல் கண்டுபிடிப்பால் காண முடிகின்றது என்பதை உணர்த்துகின்றது.

மனிதனின் படைப்பு ஒரு புனிதமானப் படைப்பு. ஆனால், அதனை தாய்மார்கள் சுமையில்லாமல் படைக்கலாம் என்பதை அறிவியல் காட்டும்,

"சுமையில்லை இனி
தாய்மார்களுக்கு

சோதனைக் குழாய் குழந்தை"13
(புதிய கோடாங்கி – ப.34)

இவை அறிவியல் உண்மை அறிவியல் நன்மை இரண்டையும் காட்டுகின்றது.

அறிவியலால் - பெருகும் ஆபத்து

அறிவியலின் கண்டுபிடிப்பு மனித சமுதாயத்திற்கு நன்மைகள் தந்தாலும், அவற்றை மனித குலம் சமுதாயத்திற்கு எதிராக பயன்படுத்தவும் சிலர் தயங்குவதில்லை.

அறிவியலால் பெருகி வரும் ஆபத்துக்களை தமிழ் படைப்பாளிகள் சொல்லியே வந்திருக்கின்றனர். இன்றைய மனித குலம் அறிவியலின் வளர்ச்சியால் பண்பாட்டையே மறப்பதாக,

"வந்தாரை வரவேற்கும்
பண்பாட்டைத் தின்றது
தொலைக்காட்சி"14 (புதிய கோடாங்கி – ப.35)

காட்டுகின்றது.

கழிவு நீர்களால் ஏற்படும் அழிவுகளையும், சூழலியல் குறித்த சிந்தனையில்,

"கழிவு தின்னும்
மீன்கள் செத்து மிதந்தன
கடலில் கழிவு நீர்"15 (புதிய கோடாங்கி – ப.35)

கழிவுநீர்கள் அதிகரித்து வருகின்றது. அதனால் பல்வேறு அழிவுகள் ஏற்படுகின்றன.

காற்றின் மூலம் பரவும் நோய்கள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றது. இன்றைய நகரத்தின் மாசுக்களால் மனிதனைப் பயமுறுத்துவதாக,

"அச்சுறுத்துகின்றது
நகரத்தின் வாழ்க்கை
மாசுபடிந்த காற்று"16

"பறக்கும் வண்ணத்துப்பூச்சி
அழுக்குச் சிறகோடு
மாசடைந்த காற்று"17 (புதிய கோடாங்கி – ப.36)

வண்ணத்துப்பூச்சிகள் கூட மாசுக்காற்றால் பாதிப்பு அடைந்துள்ளன.

மனிதனின் கவசம் பாலிதீன் பைகளாக இருக்கின்றது. ஆனால், மண்ணில் புதைந்து பூமித் துவாரங்களில் நீரையும், காற்றையும் அனுமதிக்காத தொப்பியாக இருக்கின்றதே

மண்ணுக்குத் தேவையா தொப்பி ! என வினவுகின்றார்.

"தலைக்குச் சரி
மண்ணுக்குத் தேவையா
பாலிதீன் தொப்பிகள்"18 (புதிய கோடாங்கி – ப.35)

தொழிற்சாலைகளின் வளர்ச்சியானது நன்மைகளையும், தீமைகளையும் ஒரே வேளையில் செய்கின்றது.

"எட்டுரு காலியாச்சு
எண்பது பேருக்கு வேலையாச்சு
சிமெண்ட் ஆலை"19 (தமிழின் திசைகள் - ப.68)

மனித சமுதாயத்தில் அறிவியல் கண்டுபிடிப்புகள் பல்வேறு நன்மைகள் நிறைந்ததாக இருந்தாலும் தீமைகள்தான் அதிகம் நிறைந்து காணப்படுகின்றதை காணலாம்.

முடிவுரை

இயற்கையின் அழிவு உலகத்துக்கே பேரழிவைத் தரக்கூடிய ஒன்று அதை புரிந்து கொள்ளாத மனித சமுதாயம் பல்வேறு சூழலில் மாசுபடுத்துகின்றது.

அறிவியல் சிந்தனைகள் எதுவானாலும், அறிவியல் கண்டுபிடிப்புகள் எவையாயினும் அவை மனிதனுக்கும், மனித சமுதாயத்திற்கும் நன்மை தருவதாகவும், தீமை தராததாகவும் இருந்தால்தான் அதன் வளர்ச்சி உயிர் பெற்று எழும். இந்த உண்மையை உணராத அறிவியல் அல்லது கலைப்படைப்பு எதுவானாலும் அது பயனற்ற பொருளாக மாறிவிடும். எனவே, மனிதம் மலர,

"பூக்களை உமிழும்
துப்பாக்கி கண்டறி
மலரட்டும் மனிதம்" (புதிய கோடாங்கி – ப.35)

பார்வை நூல்கள்

1. தி.சு. நடராசன் - 'கவிதையெனும் மொழி', சித்திரை நிலவு வெளியீடு, மதுரை, பதிப்பு – 2002.
2. தமிழ்நாடன் - 'தமிழ்நாடன் கவிதைகள்', காவ்யா பதிப்பகம், சென்னை, பதிப்பு – 2002.

3. மு. அருணாச்சலம் - 'தமிழ்ப் புதுக்கவிதைகளின் நோக்கமும், போக்கும்'',
அருண் பதிப்பகம்,
திண்டுக்கல், பதிப்பு – 2005.

4. அப்துல் ரகுமான் - 'ஆலாபனை'
கவிக்கோ பதிப்பகம்,
சென்னை, பதிப்பு – 1998.

5. அப்துல் ரகுமான் - 'நேயர் விருப்பம்'
கவிக்கோ பதிப்பகம்,
சென்னை.

6. அன்பாதவன் - 'தமிழின் திசைகள்'
வள்ளி சுந்தர் பதிப்பகம்,
இராயப்பேட்டை,
சென்னை.

7. இளம்பிறை - 'முதல் மனுசி'

8. மாத இதழ் - 'புதிய கோடாங்கி',
மே – 2005.
705, 101வது தெரு,
15வது செக்டர், மு.மு. நகர்,
சென்னை.

****

கிறித்தவ நாட்டுப்புற நாடகங்கள்

முனைவர் ஜெ.ஜோஸி எலிசபெத் ராணி,
தமிழ்த்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

முன்னுரை

இயல், இசை, நாடகம் என்னும் முப்பகுதிகளைக் கொண்டது தமிழ். இதில் நாடகம் ஒரு சிறப்பு மிக்க பயன்கலையாகும். பல நூல்களில் விளக்கிச் சொல்ல வேண்டிய ஒரு செய்தியை, ஓரிரு மணி நேரத்திற்குள் மக்களுக்குப் புரிய வைத்திருக்கும் மிகக் சிறந்த மக்கள் தொடர்புச் சாதனங்களுள் ஒன்றாக நாடகம் திகழ்கிறது. மேலும் செய்திகள் எளிதாக விரைவாக மக்களைச் சென்றடைய நாடகம் ஓர் ஊடகமாகவும் செயல்படுகிறது.

பழம் பெருமை வாய்ந்த பாரதநாடு சமய உணர்வில் சீர்மை உடையது. நாட்டுப்புற மக்கள் பழமைப்பிடிப்பும், சமய நம்பிக்கையும் மிக்கவர்கள் கிராமப்புறங்களில் வாழும் கிறித்தவ மக்கள் சமயச் சான்றோர்களை, மறைசாட்சியாளர்களை, புனிதர்களாக உயர்த்தி, அவர்கள் வாழ்க்கை வரலாற்றைச் சிறப்பாக போற்றி, ஆண்டு தோறும் அவர்கள் நினைவாக விழா எடுக்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். அவர்கள் வாழ்வை வரலாற்றை நாடகமாக நடித்துக்காட்டி, மக்களிடயே அவர்கள் வாழ்வை முன்மாதிரியாக வைத்து வாழவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி நாட்டுப்புறங்களில் தொன்று தொட்டுச் சமயம் சார்ந்த நாடகங்கள் நடத்தப்படுகின்றன.

புனிதர்கள்

கிறித்துவைப் பற்றுதலுடன் பின்பற்றியவர்களே புனிதர்கள். இத்தகைய புனிதர்கள் வரவிருக்கும் பேரின்ப வாழ்வை, அனைத்து மக்களும் அடைவதற்கு புதுத்தெம்பும் தெளிவும் தரும் நண்பர்களாகக் கருதப்படுகிறது. இவர்கள் காண்பிக்கும் புனிதப்பாதை, பாதுகாப்பானதாக நன்மை தருவதாக அமையும் என்றும் நம்பப்படுகிறது. இவ்வழியே சென்றால் விண்ணக வாழ்வை அடையலாம். இவர்கள் வழியாகவும் இறைவன் நம்முடன் பேசுகிறார் என்றும் இப்புனிதர்கள் நமக்காகப் பரிந்து பேசுகிறார்கள் என்றும் கத்தோலிக்கக் கிறித்தவ மக்கள் நம்புகின்றனர்.

இத்தகைய புனிதர்களுள் புனித செபஸ்தியார், பார்ப்பரம்மாள் தேவசகாயம் பிள்ளை கித்தேரியம்மாள், ஸ்தனிஸ்லாஸ் மரிக்கிறித்தம்மாள் போன்றோரின் வாழ்க்கை வரலாற்று நாடங்கள் நாட்டுப்புறங்களில் மேடை நாடகங்களாக நடிக்கப்பட்டு, அவர்களின் வாழ்வின் வழிக் கிறித்துவையும், கிறித்துவ மதக் கொள்கைகளையும் மக்களுக்கு எடுத்துக் கூறி மதம் பரப்பும் நோக்கம் மட்டுமன்றி, நல்லதொரு கிறுத்துவ வாழ்வு வாழ நன்மனிதர்களாய், மனித நேயத்தோடு வாழ மக்களுக்கு வலியுறுத்துப்படுகிறது. ஆதலால் இந்நாடங்கள் வழியாக அக்கால மக்களின் வாழ்க்கைமுறையினையும், கிறித்தவ மதத்தின்பால் இப்புனிதர்கள் கொண்ட உறுதிப்பாட்டினையும், அதற்காகத் தம் இன்னுயிரையும் அர்ப்பணித்த அவர்களின் தியாக வாழ்வையும் அத்தியாகத்தின் விளைவாய் உலக மக்களுக்கெல்லாம் புனிதராக பாதுகாவலராக விளங்கும் பேறுபெற்றமை பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது.

கிறித்தவ நாட்டுப்புற நாடங்கள் மனித வாழ்க்கையின் நோக்கத்தை உணர்த்துவனவாகும் நல்வாழ்க்கை, இறைவனின் தரிசனம், பேரின்ப வாழ்வு, கடவுளிடம் தஞ்சமடைவது போன்ற கருத்துக்களை ஆழமாக மனத்தினில் பதிய வைப்பன. இன்றைய கணினி உலகில், அழிந்து வரும் நாட்டுப்புற நாடகங்களின் சிறப்புக்களையும் அதன் தேவைகளையும் வலியுறுத்துவது மிக இன்றியமையாததாகும்.

தமிழகத்தில் கிறித்தவ நாட்டுப்புற நாடங்கள்

கிறித்தவ நாடகங்கள் இவை நாடகங்களாகவே எழுதப்பட்டன தமிழகத்தில் 16-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே கிறித்தவம் பரவ ஆரம்பித்தது. மேல்நாட்டிலிருந்து வந்த சமயத்தொண்டர்கள், கிறித்தவ சமயத்தைப் பரப்பினர். சமயம் பரப்பும் நோக்கத்திற்காக அவர்கள் தமிழ்மொழியைக் கற்றதின் விளைவாய், எண்ணற்ற இலக்கியங்களைப் படைத்து தமிழுக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளனர். பள்ளு நாடகங்கள் வாசகப்பா நாடகங்கள் என்று கிறித்தவ நாடகங்கள் வளர்ச்சி பெற்றன. கிறித்தவ சமயம் பலவகையான எதிரப்புகளுக்கிடையேயும், அச்சமயம் சார்ந்த தன்னலமற்ற தொண்டர்களின் உழைப்பினால் வளர்ந்த ஒன்றென்றால் அது மிகையில்லை.

கிறித்தவ நாட்டுப்புற நாடகங்கள்

பன்னெடுங்காலமாகத் திருமறையில் போற்றப் பெற்று வந்த

புனிதர்கள் மட்டுமன்றி, நம் நாட்டைச் சேர்ந்த நல்லவர்கள் சமயத்திற்காக உயிர்துறந்த மறைசாட்சியாளர்கள் வரலாற்றையும், நாடகங்களாக இயற்றி, நாட்டுப்புற மக்கள் நடித்து மறையைப் பரப்பியுள்ளனர்.

இயேசுநாதர், அன்னை மரியாள், அந்தோணியார் போன்ற புனிதர்கள், ஸ்நாபக அருளப்பர் போன்ற துறவிகள் தேவசகாயம் பிள்ளை போன்ற மறைச் சான்றாளர்கள் ஆகியோரின் வரலாறுகள் நாடகங்களாக ஆக்கப்பெற்றுள்ளன. மேலும் விவிலிய நூலில் அமைந்துள்ள ஈசாக்கு, தாவீது, ரூத் முதலிய சான்றோர்களின் வரலாறுகளும், கிறித்தவ நாட்டுப்புற நாடகங்களின் கருப்பொருட்களாயின. கிறித்தவ சமயம் தொடர்பான மேலை நாட்டு இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள வரலாறுகளும், புனை கதைகளும், நாட்டுப்புற நாடகங்களாகியுள்ளன. மேலும் திருத்தலங்களின் வரலாறுகளும், தலபுராணங்களைப் போல நாட்டுப்புற நாடகங்களாக வடிவம் பெற்றுள்ளன.

சான்றுகள்

1. ஓரியூர் அருளானந்தர் நாடகம் - திருத்தல வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது.
2. தேவசகாயம்பிள்ளை - உண்மை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது.
3. ஊதாரி மைந்தன் நாடகம் - விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டது.
4. வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை நாடகம் - மரியன்னையின் புதுமைகளை அடிப்படையாகக் கொண்டது.
5. புனித செபஸ்தியார் நாடகம் -புனிதர் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது.
6. பூங்காவனப் பிரளயம் - புனை கதைகள் மூலம் சமூகநெறி பரப்பும் நாடகம்.
7. மரிக்கிறித்தம்மாள் நாடகம்- சமூகக் கதைகள் மூலம் நல்லொழுக்கங்களைப் போதிக்கும் நாடகம்.

இலக்கிய நயம் நிறைந்த நாட்டுப்புற நாடகங்கள்

இலக்கிய நயம் வாய்ந்த நாட்டுப்புற நாடகங்களை இயற்றியோரின் பெயர்களை அறிய இயலாது. இவற்றை இயற்றியோர் ஒருவராகவோ, பலராகவோ கூட இருக்கலாம். ஆயினும் இவை மக்களின் கருத்தைக் கவர்ந்து, அவர்களின் மனத்தில் பதிந்து, நெடுங்காலம் வாய்மொழியாக வழங்கி வந்து,

பின்னர் ஓலைச் சுவடிகளிலும், அச்சு நூல்களிலும் ஏறியவை. இன்றும் பெரும்பாலான நாட்டுப்புற நாடகங்கள் கையெழுத்துப் படிகளாக மட்டுமே உள்ளன. இவற்றை இயற்றியோர் இலக்கியம் படைக்கும் நோக்குடன் இவற்றை இயற்றவில்லை. காலமே இவற்றை இலக்கியங்களாக ஏற்றுக்கொண்டது. அதிகமான கல்வியறிவில்லாத நாட்டுப்புற மக்களுக்காகவே இவை தோன்றின. எனவே தான், இவை காலம் கடந்து இறவாப் புகழோடு நிலை பேறு கொண்டு விளங்குகின்றன.

கிறித்தவ நாட்டுப்புற நாடகங்கள் தோன்றக் காரணங்கள்

1. கிறித்தவக் கொள்கைகளில் மிகுந்த பற்றுக் கொண்டு அதற்காகத் தம் இன்னுயிரை அர்ப்பணித்த புனிதர்களின் வாழ்வைப் பின்பற்றி புதிய கிறித்தவர்கள் வாழ வழிகாட்டியாகப் பல நாடகங்கள் இயற்றப்பட்டன. எ.கா. தேவசகாயம்பிள்ளை நாடகம்.

2. கடவுள் மீது பற்று கொண்டு, துறவு மேற்கொள்வதன் சிறப்பை உணர்த்தச் சில துறவிகளின் வரலாறுகள் நாடகங்களாக ஆக்கப்பெற்றன. எ.கா. புனித இஞ்ஞாசியார்.

3. சமய நெறிகளை அடிப்படையாக வைத்து, நன்னெறிகளைக் கற்பிக்கச் சில நாடகங்கள் ஆக்கப்பெற்றன. எ.கா. சத்திய புத்திரன் நாடகம்.

4. மக்களுக்கு நோய்களாலும், தீய சக்திகளாலும், இயற்கைச் சீற்றங்களாலும் ஏற்படும் இடர்ப்பாடுகளிலிருந்து அவர்களைக் காக்க, அவற்றின் மீது, ஆற்றல் கொண்ட புனிதர்களின் வரலாறுகள் நாடகங்களாயின.

எ.கா.

மரிக்கிறித்தம்மாள் நாடகம் - தீய சக்திகளிடமிருந்து விடுபட
புனித செபஸ்தியார் நாடகம் - அம்மை தொற்று நோயிலிருந்து விடுபட
பார்ப்பரம்மாள் நாடகம் - இடி மின்னல்களிலிருந்து காப்பாற்றுதல்.
பதுவை அந்தோணியார் நாடகம் - காணாமற்போன பொருட்கள் கிடைக்க.

கிறித்தவ நாட்டுப்புற நாடகங்கள் பயன்பட்ட வகை

1. கிறித்தவ நாட்டுப்புற நாடகங்கள் ஓய்வு நேரப் பொழுதுபோக்குக் கருவிகளாகப் பயன்பட்டன.

2. கிறித்தவ மதக் கொள்கைகளைப் பிறருக்கு எடுத்துரைக்கவும் இந்நாடகங்கள் பயன்பட்டன.

3. புனிதர்களின் வரலாறுகளை அறிய இந்நாடகங்கள் உதவுகின்றன.
4. நல்ல கிறித்தவ வாழ்வு வாழ வழிகாட்டும் கருவிகளாகப் பயன்பட்டன.
5. நோய்கள், தீய சக்திகளால் மக்கள் துன்புறும் வேளையில் அதற்குப் பாதுகாவலராக இருக்கும் புனிதர்களின் நாடகங்களை நடத்தி அப்புனிதர்களிடம் வேண்டுதல் செய்தனர்.
6. தவக்காலத்தில் இயேசு கிறித்துவின் சிலுவைப்பாடுகளை நினைத்துப் "பாஸ்கா" என்ற பெயரில் இயேசுவின் வாழ்க்கை வரலாறு நாட்டுப்புற மக்களால் நாடகமாக நடித்துக் காட்டப் பெறுகிறது.

கிறித்தவ நாட்டுப்புற நாடகங்களின் இன்றைய நிலை

1. 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், கிறித்தவ நாட்டுப்புற நாடகங்கள் போற்றுவாரற்றுப் போயின. இருப்பினும் நாட்டுப்புற நாடகங்கள், நாட்டுப்புற மக்களிடையே இன்றும் ஓரளவிற்குச் செல்வாக்குப் பெற்று நிலைத்து நிற்பது போற்றுதற்குரியது.

2. இத்தகைய நாட்டுப்புற நாடகங்களைத் தேடி அலைய வேண்டிய நிலையே காணப்படுகிறது ஆண்டிற்கு ஒரு முறையோ, மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையோ நாட்டுப்புறங்களில், இத்தகைய நாடகங்கள் நடத்தப் பெறுகின்றன.

3. நாட்டுப்புற நாடகங்கள் அச்சில் ஏறாமல், இன்றும் கையெழுத்துப் பிரதிகளாக மட்டுமே உள்ளது வருத்தத்திற்குரியது. நாட்டுப்புற மக்கள் இத்தகைய கையெழுத்துப் பிரதிகளைத் தங்களது மிக முக்கிய உடமையாகவே கருதி, பரம்பரை பரம்பரையாகப் பாதுகாத்து வருகின்றனர்.

4. நல்ல இலக்கிய நயம் வாய்ந்த இத்தகைய நாட்டுப்புற நாடகங்கள் நகர்ப்புறங்களில் செல்வாக்கின்றிக் காணப்படுகின்றன. மேலும் கிறித்தவ நாட்டுப்புற நாடகங்கள், கிறித்தவ மதம் பரப்பும் கருவிகளாகவும் இத்தகைய நாடகங்களில் வரும் கதைமாந்தர் போன்று நாமும் நல்ல கிறித்தவர்களாக வாழவேண்டும் என்ற கருத்தைப் போதிப்பதற்காகவும், நோய்கள் நீங்கவும், ஊருக்கு எத்தீங்கும் ஏற்படாதிருக்கவும், நல்லமழை பொழிய வேண்டியும், பஞ்சமின்றி வாழவும், புனிதர்கள் நாடகங்களை நடத்த வேண்டும் என்ற நம்பிக்கையின் காரணமாகவும், இத்தகைய நாட்டுப்புற நாடகங்கள், நாட்டுப்புறங்களில் இன்றும் மிகுந்த செல்வாக்கைப் பெற்றுள்ளன.

5. பாஸ்கா தவிர, சத்தியபுத்திரன், பார்ப்பரம்மாள் போன்ற பல நாடகங்கள் நடிப்பதற்கு ஆள் இன்மையாலும், இரண்டு, மூன்று இரவுகள் தொடர்ந்து நடிக்கும் நாடகங்களாக இருப்பதாலும் அதற்கான வசதி வாய்ப்புகள் குறைவாய் உள்ளதாலும் இத்தகைய நாடகங்கள் அழிந்து போகும் நிலையில் இருப்பது வருத்தத்திற்குரியது.

கிறித்தவ நாட்டுப்புற நாடக வளர்ச்சிக்கான காரணங்கள்

மூன்று இரவு நடக்கும் நாடகங்களை ஓர் இரவிற்குள் நடத்தி முடிக்கும் வகையில், கருத்து மாறாமல் சுருக்கி, காட்சிக்குக் காட்சி காலம் தாழ்த்தாமல் தொடர்ந்து நடக்கும் வண்ணம் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

நாட்டுப்புற இலக்கியங்களாகிய இந்நாடகங்களுக்கு, இலக்கிய அரங்கிலும், மக்கள் மன்றத்திலும் செல்வாக்கினை ஏற்படுத்த வேண்டும்.

இத்தகைய கிறித்தவ நாட்டுப்புற நாடகங்களை, சமய நூல்கள் என்று ஒதுக்காமல், தமிழ் இலக்கியங்கள் என்ற முறையில் போற்றிப் பாதுகாக்க எல்லோரும் முன்வர வேண்டும்.

எல்லோரும் கல்வி கற்கும் வாய்ப்புகள் பெருகிவிட்ட இக்காலத்தில், கையெழுத்துப் படிகளாக உள்ள நாட்டுப்புற நாடகங்கள் அனைத்தையும், அச்சிலேற்ற முயற்சி மேற்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நாட்டுப்புற மக்கள் மட்டுமே கண்டு இன்புறும் இத்தகைய நாடகங்களை நகர்ப்புற மக்களும் படித்துப் பயன்பெற முடியும். எதிர்காலச் சந்ததியர்களுக்கும் பயன்படும் விதத்தில், இத்தகைய நாட்டுப்புற நாடகங்களைத் தேடித் தொகுப்பதும், பாதுகாப்பதும் இவற்றைப் பற்றிய ஆழ்ந்த ஆய்வுகள் நிகழ்த்துவதும் நமது கடமையும் சிறந்த தமிழ்த் தொண்டுமாகும்.

****

குலோத்துங்கன் கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்

ஆ. இராஜாத்தி,
தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

'பெண் இல்லாத வானிலோ அல்லது பூமியிலோ சொர்க்கம் இல்லை. பெண் இல்லாமல் சூரியனில்லை, சந்திரனில்லை, விவசாயமில்லை, நெருப்புமில்லை'' என்பது ஓர் அராபியப் பழமொழி ஆகும். அனைத்துமானவள் பெண் என்று புரிந்துக் கொள்ள முடிகிறது.

உயிரியல் அடிப்படையிலேயே பெண் படைப்பு, சக்தி மிக்கதாக அமைந்துள்ளது. தன் உதிரத்தைத் தனக்குள்ளேயே பாய்ச்சி, 'குழந்தை' என்கிற புதிய உயிரை வடிவமைத்துப் பெற்றெடுத்து; பாலூட்டி வளர்த்து விடுவதன் மூலம் இந்த மண்ணுக்குள் ஆழமாக வேர் பரப்பி நிற்கிறது பெண் உடம்பு. ஆனால் ஆண் உடம்பு இத்தகைய பிடிமானம் ஏதுமின்றி தனக்குப் பிறந்தது எது? என்று அடையாளம் காண வழியின்றி, அந்தரத்தில் பாதுகாப்பற்ற ஒரு தளத்தில் தொங்குகிறது. இந்நிலையில் உளவியல் தேவைக்காகப் பாதுகாப்பைத் தேடியும், சொத்துடைமைச் சமூகம் உருவான பிறகு தனது சொத்தைத் தனக்குப் பிறகு, தனக்குப் பிறந்த வாரிசுதான் உரிமை கொள்ளவேண்டும் என்ற உணர்வு உருவான பிறகு தனக்குத்தான் இந்தக் குழந்தை பிறந்தது என்பதை உறுதி செய்து கொள்ளும் நோக்கிலும், "ஒருத்திக்கு ஒருவன்" என்ற ஆணாதிக்கக் கண்டுபிடிப்பு நிகழ்கிறது. இந்த ஆதிக்கக் கண்டுபிடிப்பை மனத்தளவில் கொண்டு போய் நிலை நிறுத்தும் முயற்சிக்குக் கருவியாகத்தான் குடும்பம், காதல், கற்பு, தெய்வீகம் என்ற புனிதக் கோட்பாடுகள் பிறக்கின்றன என்று க. பஞ்சாங்கம் கூறுகிறார்.

பெண்ணின் பெருமை

பெண்களுக்கு உரிமை வழங்குதல் கூடாது என்று சிலர் நினைத்தனர் உரிமை வழங்கினால் அவர்கள் ஆண்களுக்கு இடர் விளைவிப்பர், வாழ்வைக் குலைப்பர். அதனால் பெண்களை அடக்கி வைக்கும் கட்டுப்பாடுகளைப் போற்றற்குரியன என்று

பத்தாம் பசலித்தனமாக நினைத்தனர். அவர்களை நோக்கித் திரு.வி.க. "இ∴து அறியாமை, பெண், ஆணை அடக்கப் புகுவதும் தவறு; ஆண் பெண்ணை அடக்கி ஆள்வதும் தவறு. இருவரும் ஒத்து நடத்தலே இன்பம்" என்றும், "உயர்வு தாழ்வுப் போராட்டம் முதலிய எண்ணங்களன்றி, ஒருயிர் ஈருடல் எனப் பெண், ஆணுடன் ஒன்றி, வாழ்வு நடத்தி உலகை வளர்ப்பாளாக. இதுதான் பெண்ணின் பெருமையாகும் என்று திரு.வி.க. கூறுகின்றார். அறிஞர்களின் கருத்து இவ்வாறாக இருக்கின்றது. தற்காலத்தில் பெண்ணியச் சிந்தனைகள் பேரியக்கமாக வளர்ந்து வருகிறது. அவற்றில் மிதவாதப் பெண்ணியம், தீவிரவாதப் பெண்ணியம் என்றெல்லாம் சொல்லப்பட்டும், நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றது.

இங்கு குலோத்துங்கன் என்கின்ற வா.செ. குழந்தைசாமி அவரது கவிதைகளில் பெண்ணியக் கருத்துக்களை எவ்வாறு பதிவு செய்துள்ளார். அக்கருத்துக்கள் எவ்வழியில் நோக்கப்பட்டுள்ளது என்பது பற்றி ஈங்கு அறிய உள்ளோம்.

பெண்மை

அனைத்தும் பெண்மை ஆகும். பெண்மை தொன்று தொட்டுத் தேடும் ஒரு புதையல்.

"புத்துணர்வின் மணற்கேணி; அழகு கோடி
பூக்கின்ற மலர்க்காடு; கண்ஒவ் வொன்றும்
முத்துடைய மாதுளைபோல் அங்கம் தோறும்
முடிவில்லாச் சுவையமைந்த முழுமை பெண்மை"
(கு.கவி. – பக் 436)

என்று வருணிக்கின்றார். பெண்மைக்கு மாதுளையை உவமையாகக் கையாண்டும் உள்ளார்.

பாடுபொருள்

"காலமெலாம் பாடியதும், காவியங்கள்
கருப்பொருளாய்க் கொண்டதுவும், கலைகட்கெல்லாம்
மூலமென நின்றதுவும், உயிர்தொட் டீர்க்கும்
மூரல் மலர் பெண்மையடா" (கு.கவி. - பக்.436)

காலமெல்லாம் படைப்பாளனுக்குப் பாடுபொருளாக விளங்கியவள் பெண் என்ற சாரத்தைக் காட்டுகின்றார் கவிஞர்.

பெண்ணோடு வாழ்வு

"உலர்ந்த சருகென உதிர்ந்த நெஞ்சம்
மலர்ந்த துன்னால் வாழி நீ!"

பெண்ணோடு சேர்ந்த வாழ்வே சிறப்பான வாழ்வு ஆகும். உன்னோடு கலந்து விடுவதில் கனவையும் மிஞ்சியவனாகிறேன் என்று கவிஞர் கூறுவதிலிருந்து ஆணும் பெண்ணும் கலந்ததே வாழ்க்கை என்று உணர்ந்து கொள்ள முடிகிறது.

திருமணத்தில் விலை பேசப்படுகிறாள்

“திருமணத்தில் விலைபேசும் சிறுமை கூடத்
தீர்ந்ததில்லை; சீதனத்தின் கொடுமையின் கீழ்
பொருமுவதும், பொங்குவதும், தீவாய்ப் பட்டுப்
பொசுங்குவதும் தொடர்கதையாய்ப் போனதம்மா!”

(கு.கவி. – பக் 436)

வரதட்சணை என்னும் கொடுக்கல் இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது என்று கூறுகிறார். இந்தக் கொடுமையினால் பெண்களைத் தீயிட்டுக் கொளுத்துவது, இன்றளவும் நடக்கின்ற செய்தியே. அவற்றையும் நாம் மறுக்க இயலாததாகும்.

பெண் வணிகம்

பொருளாதாரத் தேவைக்காகப் பெண்கள் தங்களையே விலைபேசி விற்பதும். அவற்றைத் தங்களது வியாபாரத்திற்குச் சாதகமாகப் பயன்படுத்தி பணம் சம்பாதிக்கும் வணிகர் கூட்டங்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

“.......... மங்கையர் மென்தசைத்
தோற்றம் ஒன்றையே துணிந்து விற்றிடும்
வணிகர் எண்ணிலர்” (கு.கவி. – பக் 468)

செய்தித்தாளில் பெண் படம்

“......... மக்கள் மத்தியில்
செல்லும் பல்வகைச் செய்தித் தாள்களின்
அட்டையில் கோலம் ஆயிரம் பூண்டு
பெட்டை நிர்வாணம் பேசும் ஓவியம்” (கு.கவி. – பக் 469)

இந்நிலையையும் நாம் அன்றாடம் காண்கின்றோம். இவற்றிலிருந்து மாற்றத்தைக் காணவேண்டும். அதுவே உண்மையான பெண்ணியம் ஆகும்.

பண்பாட்டைத் துளைத்தனர்

“புகை பிடித்தல் கற்றார்கள்;
புருடருக்கு நேராகச்
சிகை முடித்துக் கொண்டார்கள்

தெருவில் உலவுகையில்
மங்கையெனத் தோன்றுதற்கு
மனமிலராய், ஆடவர்போல்
அங்கிகளும், கால் நுழையும்
ஆடைகளும் பூண்டார்கள்'' (கு.கவி. – பக்.460)

புகை பிடித்தல் என்பது யாவருக்கும் கேடு நல்குவதாகும். இவற்றில் ஆண், பெண் என்ற பாகுபாடு வேண்டியதில்லை. ஆனால் அதே நேரத்தில் பெண்கள் ஆடவர்களைப் போல் ஆடைகள் அணிந்து கொள்வது பெரும்பான்மையாக உயர் வர்க்கப் பெண்களிடம் நிகழும் நிகழ்வதாகும். ஆடைகள் அணிந்து கொள்வதால் பண்பாடு, பெருமையெல்லாம் சிதைந்து விடும் என்று கவிஞர் கூறும் கூற்று ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று கூற விழைகின்றேன்.

உரிமையைக் கேட்டுப் பெற முடியாது என்று கவிஞர் கூறுகிறார். உரிமையை யாரும் பெண்களுக்குக் கொடுக்க மாட்டார்கள். ஆகவே கெஞ்சுவதால் வருவதில்லை. கேட்டும் பெற்றெதும் இல்லை. கிளர்ந்து எழ வேண்டும் பெண்களே! என்றும் அறைகூவல் விடுக்கின்றார்.

முடிவுரையாக, கவிஞரது கவிதைகளில், இன்றைய சமூகத்தில் பெண்களுக்கானச் சிக்கல்களை, அவலங்களை எடுத்தியம்பியுள்ளார். மிகுதியாகப் பெண்கள் வணிகமாக்கப்படுகின்ற நிலை, கலாச்சாரத்தில் மகளிரின் மாற்றம் போன்றனவற்றை இங்குத் தெளிவுபடுத்தியுள்ளார். ஆணும், பெண்ணும் சமநிலை பெற வேண்டும். அன்பில், அறிவில், பண்பில் சமநிலை காணவேண்டும்.

துணைநின்ற நூல்கள்

1. குலோத்துங்கன் கவிதைகள்.
2. க. பஞ்சாங்கம், தலித்துகள் - பெண்கள் - தமிழர்கள்.
3. டாக்டர் சரளா ர்ரசகோபாலன், 'தமிழ்த்தென்றலும் பெண்மையும்'.

****

இலியட் காப்பியத்தில் நம்பிக்கைகள்

செல்வி. சி.பாக்கிய செல்வ ரதி
தமிழ்த்துறை,
தூய வளனார் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

உலக இலக்கிய வரலாற்றில் காப்பியங்கள் கி.மு.7ஆம் நூற்றாண்டில் தோன்றின. கிரேக்க மொழியில் முதல் காப்பியங்கள் 'இலியட்'காப்பியம் எழுந்தது. அதனை ஹோமர் 'லிரிக்' என்ற கவிதை வடிவில் இயற்றினார். இக்காப்பியம் 24 காண்டங்களைக் கொண்டுள்ளது. கிரேக்கர்களின் பண்பாடு, பழக்க வழக்கம் ஆகியவைகளை எடுத்துக்கூறும் வகையில் இக்காப்பியம் அமைந்துள்ளது. இதில் காணப்படும் நம்பிக்கைகளில் சிலவற்றை மட்டும் இக்கட்டுரையில் காண்போம்.

நம்பிக்கை – சொல் விளக்கம்

நம்பிக்கை என்ற சொல்லை ஆங்கிலத்தில் Belif என்று கூறுவர். தொல்காப்பியத்தில் 'நம்பு' என்ற சொல் 'விருப்பம்' என்ற பொருளில் வருகின்றது. (தொல்.சொல்.329) இச்சொல் நற்றிணையில் நம்புதல் என்ற பொருளில் வருகின்றது.(நற்றி.175:7-8) இதிலிருந்து நம்பிக்கை என்ற சொல் தொடக்கத்தில் விருப்பம் என்ற பொருளில் கையாளப்பட்டுக் காலப்போக்கில் நம்பிக்கை என்ற பொருளில் நிலைத்து விட்டது என்பதை உணர முடிகிறது.

நம்பிக்கையின் தோற்றம்

நம்பிக்கை மனிதனுடைய இன்றியமையாதப் பண்புகளுள் ஒன்றாகும். நம்பிக்கைகள் மனிதனின் அச்சத்தின் காரணமாக உருவாகி இருக்கலாம் என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். எனவே இதனை உளஉருவாக்கம் என்று கூறுகின்றனர். நம்பிக்கைகள் பெரும்பாலும் நாகரிகம் தோன்றாத காலப்பகுதியில் வாழ்ந்த மக்களிடம் தோன்றி நிலைப் பெற்றனவாகக் கருதலாம் என்பது அறிஞர்களின் கருத்தாகும். அறிவுத் திறன் மிக்க சமுதாயத்தில் நம்பிக்கைகள் குறைவாகவும் அறிவுத்திறன் குறைந்த சமுதாயத்தில் மூட நம்பிக்கைகள் மிகுதியாகவும் காணப்படுகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு இலியட் காப்பியத்தை நோக்கும்பொழுது

அறிவுக்குறைவாகவும் நம்பிக்கைகள் மிகுதி யாகவும் காணப்படுகின்றன.

நம்பிக்கையின் வகைகள்

பொதுவாக நம்பிக்கைகளை

1. நம்பிக்கை
2. மூட நம்பிக்கை

என்று இருவகைப்படுத்துவர். காரண காரியத்தைச் சார்ந்து நம்பிக்கை என்றும் கூறுவர். ஒரு சமுதாய முடியாததை மூட நம்பிக்கை என்றும் கூறுவர். ஒரு சமுதாய நம்பிக்கை மற்றொரு சமுதாயத்தில் மூட நம்பிக்கைளாகக் கருதப் படலாம். எனவே நம்பிக்கைகளை வகைப்படுத்தும் முறையால் காரணகாரியத் தொடர்போடு நிறுவப்படுவன, நிறுவப்படாதன என இருவகையாக பகுத்துக் காண்பதே சிறப்பானதாகத் தென்படுகிறது என்றக. காந்தியின் கருத்துக்கு ஏற்ப 'இலியட்' காப்பியத்தில் நம்பிக்கைகள் இடம் பெற்றுள்ளன.

காப்பியத்தில் நம்பிக்கைகள்

கிரேக்ககர்கள் தெய்வ நம்பிக்கை மிக்கவர்களாக இருப்பதை 'இலியட்' காப்பியம் எடுத்துரைக்கிறது. இதில் இடம் பெறும் நம்பிக்கைகளில் அதிகமானவை இறைவனோடு தொடர்புடையவையாகவே உள்ளன. இதில் இடம் பெறும் நிமித்தம், சாபம், நீர், கனவு, தீ குறித்த நம்பிக்கைகளைக் காண்போம்.

நிமித்தம்

நிமித்தம் என்பதை சகுனம் என்றும் கூறுவர். நிமித்தம் என்பது பின்நிகழ விருக்கும் நன்மை தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக முன்னுணர்த்துவதாகும் என்று க.காந்தி கூறுகிறார். மனிதனின் செயல்களுக்கும் இயற்கை நிகழ்வுகளுக்கும் தொடர்பு இருப்பதாக மனிதமனம் கற்பித்துக் கொண்டது. இதுவே காலப்போக்கில் நிமித்தமாக உருவானது.

கிரேக்க நாட்டினர் சகுனங்களில் நம்பிக்கை உடையவர்கள் என்று, அறிஞர் பூரி கூறுகிறார். சங்ககால மக்களின் வாழ்க்கையில் சகுனம் இடம் பெறுவதை சங்க இலக்கியம் எடுத்துரைக்கிறது. புதர் என்ற இனத்தவர் தங்கள் மரணத்தை முன் கூட்டியே அறிவிப்பது பாம்பு என்று நம்பினர் என்று பொ. அழகு கிருஷ்னன் கூறுகிறார். பொதுவாக பறவை, விலங்குகளின் செயல் பாடுகளே நிமித்தங்களாகத் திகழ்கின்றன.

நன்னிமித்தம்

நிமித்தத்தை நன்னிமித்தம் தீ நிமித்தம் என்று வகைப்படுத்துவர். இவை இரண்டும் 'இலியட்' காப்பியத்தில் இடம் பெறுகின்றன.

'இலியட்' காப்பியத்தில் நன்னிமிதத்தை அறிவிப்பனவாக நாரையும் கழுகும் செயல்படுகின்றன. இச்சகுனங்கள் தங்கள் தெய்வங்களிடமிருந்து வந்ததாக கிரேக்கர்கள் நம்பினர்.

தங்கள் பகைவராகிய ட்ரோஜர்களின் வலிமையைப் பற்றி அறிய கிரேக்க வீரர்களாகிய டயமீடிஸ், ஒடிஸியூஸ் ஆகியோர் சென்றனர். அச்சமயத்தில் ஒரு நாரை வலது பக்கமிருந்து இடதுபக்கமாக ஒலி எழுப்பிக் கொண்டே சென்றது. இந்நாரை பல்லாஸ் அதீனி என்ற தெய்வத்திடமிருந்து அனுப்பப்பட்டது. இது நல்ல சகுனம் என்று கிரேக்கர்கள் நம்பினர்.

" அவர்களுக்குச் சாதகமான ஒரு சகுன அடையாளத்தைப் பல்லாஸ் அதீனி அனுப்பினாள். அவர்கள் சென்ற வழியில் வலப்பக்கத்தில் அவர்களுக்கு அருகாக ஒரு நாரை சென்றது.... அது எழுப்பிய ஒலியை அவர்கள் கேட்டனர்.அந்த நல்ல சகுனம் கண்டு மகிழ்ந்த் ஒடிஸியஸ் அதீனிக்கு உடனே ஒரு நன்றி கூறும் பிரார்த்தனையைச் சமர்ப்பித்தான். (இலியட்.ப.342)

ஒரு நாரை வலப்பக்கமிருந்து இடப்பக்கம் செல்வது நல்ல சகுனம் என்பது இதனைத் தெய்வங்களே நிகழ்த்தின என்பதும் கிரேக்கர்கள் நம்பிக்கையாக 'இலியட்' உணர்த்துகிறது.

தீ நிமித்தம்

இலியட் காப்பியத்தில் ஓர் இடத்தில் மட்டும் தீ நிமித்தம் இடம் பெறுகின்றது. ட்ரோஜ மன்னன் ஹெக்டர் மற்றும் அவன் படைகள் இருக்கும் இடத்தில் ஜீயூஸ் தெய்வம் கெட்ட சகுனத்தைத் தெரிவிக்கின்றது. கழுகு தனது நகத்தில் ஒரு பாம்மைப் பிடித்துக் கொண்டு செல்கிறது. பாம்பு கழுகின் நெஞ்சுப் பகுதியில் கடித்துவிட கழுகு அதை விட்டு வடுகிறது. இதனை ட்ரோஜக்கள் காண்கின்றனர். இச்சகுனத்தின் மூலம் ஜுயூஸ் தெய்வம் ட்ரோஜர்கள் கிரேக்க கப்பல்களுக்கு சென்று போரிட்டால் உயிர் தப்ப முடியாது என்று தெரிவிப்பதாக பாலிடாமஸ் என்ற தீர்க்கதரிசி விளக்குகின்றார். (இலியட்.பக் 407-408)

இதன் மூலம் பறவைகள் செல்லும் திசையைக் கொண்டு கிரேக்கர்கள் நிமித்தங்களை நம்பியதை அறிய முடிகிறது.

கனவு

கனவு என்பது மனித மனத்தோடு தொடர்புடையது ஆகும். நிறைவேறாத ஆசைகளின் ஆழ்துயில் வெளிப்பாடே கனவு என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். சங்க இலக்கியங்களில் உள்ளுறையாகவும் விருப்ப வினைவாகவும், நிமித்தமாகவும் கனவுகள் வருகின்றன என்று டாக்டர்.ச.வே.சுப்பிரமணியன் கூறுகின்றார். கனவுகள் பின்னால் வருவதை முன் கூட்டியே அறிவிக்கும் ஒரு உத்தியாக இலக்கியங்களில் இடம் பெறுகின்றன.

கனவு கண்டால் அது நிச்சயம் பலிக்கும் என்பது கிரேக்கர்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளில் ஒன்றாகும். இதனைத் தருவது தெய்வங்கள் என்று நம்பினர். இலியட் காப்பியத்தில் ஒரே ஒரு கனவு இடம் பெறுகின்றது. ஜுயூஸ் தெய்வம் அகமெம்னனுக்கு ஒரு கனவை அனுப்புகின்றார்.

" இப்படியாக ஜுயூஸ் பேசினான். அவனுடைய உத்தரவுகளைக் கவனமாகக் கேட்டு கனவு அகன்றது... அகமெம்னனின் உற்ற தோழனும் நல்லுபதேசியும் நீலியூஸின் மகனுமாகிய நெஸ்டரின் உருவெடுத்து அகமெம்னனின் தலைப்பக்கம் நின்று பேசியது. (இலியட் ப. 83)

கனவு மனித உருவில் வந்து பேசியதாக இலியட் காப்பியம் கூறுகின்றது.

சாபம் பற்றிய நம்பிக்கை

சாபங்கள் பற்றி இலக்கியங்கள் புராணங்கள் கூறுகின்றன. இவை கற்பனைப் போலவும் கதை போலவும் காணப்படுகின்றன. சாபம் மனிதனின் தொடக்கக் காலத்திலிருந்து இன்று வரை நாகரிகத்தின் ஒவ்வொரு நிலையிலும் மக்களிடையே சாதாரணமாக வழங்கி வந்த வடிவமாகும். கிரேக்க ,உரோம நாடுகளில் சமாதிகளுக்குகடியில் கண்டெடுக்கப்பட்டுள்ள சிறிய உலோகத் தகடுகளும் அவ்வந் நாட்டில் சாபங்கள் நெடுங்காலமாக மக்களிடையே வழக்கத்தில் இருந்து வந்தன என்பதற்கு ஆதாராங்களாக இருக்கின்றன. உலக மக்களிடையே சாப நம்பிக்கை நிலவுகின்றது.

இலியட் காப்பியத்தில் ஒரு இடத்தில் மட்டுமே சாபம் பற்றிய செய்தி இடம் பெறுகிறது. ஃப்யூரிகள் பாதாள உலகின் கடவுள்கள் ஒருவர் சாபம் இட எண்ணினால் ஃப்யூரிகளின் பேரிலேயே சாபம் இடுவர். இப்படிச் செய்தால் சாபம் பலிக்கும்

என்று நம்பினர். இதனையே இலியட் காப்பியம் கூறுகிறது. ஃபீனிக்ஸ் என்பவன் கிரேக்க வீரன். இவனது தந்தை ஒரு பெண்ணை மணக்க தீர்மானிக்கின்றனார். இது பிடிக்காத ஃபினிக்ஸ் அப்பெண்ணை மணம் செய்து கொள்கிறான். எனவே சினமடைந்த அவனது தந்தை ஃபினிக்ஸ்க்குக் குழந்தைப் பேறு இருக்கக் கூடாது என்று ஃப்யூரிகள் மீது சாபம் இடுகின்றார். இச்சாபம் பலித்து விடுகிறது.

"ஃப்யூரிகளின் பேரில் சாபங்களிட்டார். காலப் போக்கில் கீழுலகின் கடவுளான ஜீயூஸீம் மாட்சிமை பொருந்திய பெர்சர்போனியும் அவருடைய சாபங்களை அங்கீகரித்தனர்" (இலியட் ப. 314)

ஃப்யூரிகளின் பேரில் சாபம் இட்டால் அது பலிக்கும் என்ற நம்பிக்கையை 'இலியட்' எடுத்துரைக்கிறது. தந்தையே மகனுக்கு சாபம் விடும் தன்மையையும் சுட்டுகிறது.

நீர் குறித்த நம்பிக்கை

ஆறு, கடல் போன்ற நீர்நிலைகளில் நீராடுதலைப் புண்ணியமாக மக்கள் கருதினர். அவ்வாறு நீராடினால் தங்களது பாவங்கள் நீங்கும் என எண்ணினர். எனவே புண்ணிய நீராடலை முக்கியமான ஒன்றாகக் கருதினர். இந்நம்பிக்கை உலக மக்களிடையே குறிப்பாக கிரேக்கர்களிடையே காணப்படுகிறது.

இலியட் காப்பியத்தில் இடம் பெறும் ஸ்டிக்ஸ் ஸ்கமாண்டர் ஆறுகள் புனிதத்தன்மை வாய்ந்தாகக் கூறப்பட்டுள்ளன. ஸ்டிக்ஸ் ஆற்றில் நீராடினால் சாகாவரம் பெறலாம் என்ற நம்பிக்கை கிரேக்கர்களிடம் நிலவியதை இலியட் சுட்டுகிறது. அக்கலிஸ் தாய் தீட்டிஸ் அவன் சிறுவனாக இருந்த போது ஸ்டிக்ஸ் ஆற்றில் அவனைத் தலைகீழாக முக்கி எடுக்கிறாள். எனவே அவன் சாகாவரம் பெறுகிறான். அவனது பாதத்தில் நீர்படாமல் அது பலவீனமாக மாறியது.

"ஸ்டிக்ஸ் தண்ணீருக்கு இன்னொரு சிறப்பு உண்டு. உடலில் எந்த ஒரு இடத்தில் அதன் தண்ணீர்ப்படுகிறதோ அந்தப் பகுதி சாகாவரம் பெற்று விடும். எனவே குழந்தை அக்கலிஸின் குதிகால்களைப் பிடித்துக் கொண்டு அவன் தாய் அமுக்கி முக்கி எடுக்கிறாள். குழந்தையின் உடல் முழுவதும் அந்த ஆற்று நீரால் நனைந்து விடுகிறது. எனவே அக்கலிஸீம் இறவாவரம் பெற்றவனாகிறான்" (இலியட் ப. 23)

நீருக்கு சாகாவரம் தரும் தன்மை உள்ளது என்ற கிரேக்கர்களின் நம்பிக்கையை இலியட் எடுத்துரைக்கிறன்றது.

தீ வழிபாட்டு நம்பிக்கை

கிரேக்கர்கள் தீயை வணங்கினர். எனவே அவர்கள் வீட்டில் தீ எப்போதும் எரிந்து கொண்டே இருக்கும். தீ அணைந்து விட்டால் தீய விளைவுகள் உண்டாகும் என்று நம்பினர். மேலும் தாங்கள் உண்ணும் போது அத்தீக்கு உணவைப் படைத்தும் மது அருந்தும் போது சில துளிகளையிட்டும் உண்பது இவர்களது வழக்கமாக இருந்தது. இவ்வாறு மதுவைப் படைத்து உண்டால் தீங்கு ஏற்படாது என்று நம்பினர். இதனைப் 'பானப் படையல்' என்று கூறுவர். இப்பானப் படையல் இலியட் காப்பியத்தில் பல இடங்களில் இடம் பெறுகின்றது.

பாசறையில் இருக்கும் வீரர்கள் பிரார்த்தனை செய்த பின்னர் கடவுளுக்கு பானப்படையல் செய்து அருந்தினர்.

" அவன் அப்படிச் சொன்னதும் அங்கிருந்த ஒவ்வொருவரும் இரண்டு காதுகள் கொண்ட கோப்பையை எடுத்து கடவுளுக்கு பானப்படையல் செய்தனர்." (இலியட் ப. 322)

பானப்படையல் கிரேக்கர்களுக்கு உரிய ஒன்றாகக் காணப்படுகிறன்றது.

முடிவுரை

கிரேக்கர்களின் நம்பிக்கைகளில் அதிகமானவை தெய்வங்களோடு தொடர்புடையவையாக் காணப்படுகின்றன. நாகரிகம் தோன்றாத காலக்கட்டத்திலேயே எழுந்தது இலியட் காப்பியம் ஆகும். எனவே கிரேக்கர்கள் மனிதன் வேறு தெய்வம் வேறு என்று பிரித்துப் பார்க்காமல் ஒன்றாகவே கருதினர்.தெய்வங்களே நிமித்தம்,கனவு,சாபம் போன்றவற்றை நிகழ்த்துவதற்கு அடிப்படைக் காரணம் காலவேறுபாடே எனலாம். இலியட் காப்பியத்தில் இடம் பெறும் நிமித்தம், கனவு, சாபம்,நீர் போன்ற நம்பிக்கைகள் தமிழர்களிடம் காணப்படுகிறது. இன்றையக் காலக்கட்டத்திலும் இது போன்ற நம்பிக்கைகள் பலரிடமும் காணப்படுகிறது. உலக மக்கள் அனைவரும் ஒத்த மன உணர்வு உடையவர்கள் என்ற உண்மையை இலியட் எடுத்துரைக்கிறது.

துணை நின்ற நூல்கள்

1. அய்யனார். வீ. - தமிழர்களின் சகுனங்கள் மற்றும் கனவுகள்
சாகித்திய பதிப்பகம், சென்னை.
2. அழகு கிருஷ்ண்ன் - சிலப்பதிகரம் காட்டும் பண்பாடும் வரலாறும்
ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.
3. காந்தி. க. - தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்.
உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.
4. சாமிநாத சர்மா - கிரிஸ் வாழ்ந்த வரலாறு,
சந்தியா பதிப்பகம் சென்னை.
5. நாகூர்.ரூமி (மெ.ஆ)- ஹோமரின் இலியட்,
கிழக்கு பதிப்பகம், சென்னை.

****

ஜி.யு.போப் அவர்களின் தமிழ்ப்பணி

முனைவர் இராம.குருநாதன்,
மேனாள் தமிழ்ப்பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.

தேமதுரத் தமிழோசையை உலகெங்கும் பரப்பிய சிறப்புக்குரியவர்கள் மேனாட்டுக் கிறித்துவச் சமயஞானிகள் ஆவர் தமிழகத்தில் சமயத்தைப் பரப்பியதோடு நின்றுவிடாமல் அவர்கள் தமிழ்த் தொண்டினைச் செய்து உலகளவில் அம்மொழியின் சிறப்பையும் மேன்மையையும் உணர்த்தியவர் களாவர். தமிழ் மொழி அவர்களின் வருகையால் பல மாற்றங்களையும் புதுமைகளையும் கண்டது. இலக்கிய வளத்தை விட மொழி வளத்திற்கு அவர்கள் ஆற்றிய பணி காலம் முழுதும் கல்வெட்டாக நிலைத்து நிற்கும்.

தமிழுக்குத் தொண்டு செய்த சமயப் பெரியார்கள் பலருள் குறிப்பிடத் தக்கவர்களில் ஒருவராகத் திகழ்பவர் ஜி.யூ போப் ஆவார். ரெவரெண்ட் ஜார்ஜ் உக்லோவ் போப் (1820-1908) ஏப்ரல் 24இல் பிறந்தவர். இளமையிலேயே மொழிகளைக் கற்பதில் ஆர்வம் மிகுந்தவர் ஹீப்ரு. கிரேக்க மொழிகளில் எழுதப்பட்ட விவிலிய நூலின் புதிய ஏற்பாட்டினைத் தம் இளமைக்காலத்தில் கற்றிருந்தார். விவிலியத்தை ஆழ்ந்து கற்க வேண்டும் என்ற நாட்டத்தால் அவ்விரு மொழியிலும் புலமை பெற்றார். சமயப்பணி ஆற்றுவதில் ஆர்வங்கொண்டிருந்த அவர் தென்னகத்திற்கு வர முன்வந்தார். எட்டுமாதக் கப்பற் பயணத்தில் அவர் தமிழைக் கற்றறிந்தார். நாள்தோறும் எட்டு மணிநேரம் தமிழையும், வடமொழியையும் கற்றுக் கொண்டவர் என்று அறிகிறோம். பதினான்கு வயதில் தமிழில் பயிற்சி பெறத் தொடங்கினார் என்றும் தெரிகிறது. திருவாசகத்தின் முன்னுரையில் இதனைத் தெரிவித்துள்ளார். வெஸ்வியன் சமயப்பணிக் குழு இந்தியாவுக்குப் பயணித்த சூழலில் கப்பலில் வந்த அவருடைய நண்பர்கள் அவரைப் ‘பண்டிட்’ என்றே அழைத்தனர்.

சென்னை வந்ததும் அவரை வரவேற்ற ஒரு மீனவன் பேசிய தமிழைக் கேட்டுத் தாம் மேலும் தமிழைத் தமிழர் பேசுவது போலவே பேச வேண்டும் என்று நினைத்தார். சாந்தோம்

ஆலயத்தில் தமிழிலேயே அறவுரை ஆற்றினார். அவர் தூத்துக்குடிக்குச் சென்று அங்குள்ள சாயர்புரத்தில் தங்கித் தமிழ்ப்புணியும், சமயப்பணியும் புரியலானார். அவர் தங்கியிருந்த இடம் வெப்பமிக்க பகுதியாதலால், கோடைக்காலங்களில் நீர் சூழ்ந்த குழியமைத்துக் கழுத்தளவு நீரில் அமர்ந்து படித்திருக்கிறார். நூல்களைப் படிக்கும் தணியாத தாகம் அவரிடம் இவ்வாறு இருந்துள்ளமை வியப்பளிக்கிறது.

வாழ்நாள் முழுதும் புனித மொழியான (noble language) தமிழைக் கற்பதும் அறிவதும் தமிழ்ப்பணி புரிவதும் ஒருவருக்குக் கடமையாகும் என்ற கருத்துடையவர் போப்... இக்கருத்தைத் தம் சொந்த வாழ்வில் கடைப்பிடித்தவர் ஒருபக்கம் சமயப்பணிகளைத் தவறாமல் ஆற்றிக் கொண்டும், இன்னொரு புறம் தமிழ்ப்பணி, புரிந்து கொண்டும் இறுதிவரை தம் கடமையை ஆற்றியவர். சமயப்பணிகளுடன் கல்விப் பணியிலும் மிகுந்த கவனம் செலுத்தினார். சிறந்த கல்வியாளரான அவர் ஆங்கிலம், ஹீப்ரு, இலத்தீன், வரலாறு, கணிதம், மெய்யியல் ஆகியவற்றில் புலமை பெற்றிருந்தார். இந்தியமொழிகளில் தமிழோடு வடமொழி, தெலுங்கு ஆகியவற்றிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.

கல்விப் பணியில் மாணவர்களிடமும், மற்றவர்களிடமும் போப் கடுமையாக நடந்து கொண்டவர் என்று கருதுவதுண்டு, ஒழுக்கத்தையும், நேர்மையையும் கடைப்பிடித்த தால், மற்றவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தியவர். கிராமப் பள்ளிகளில் மாணவர்களை வழிநடத்திச் செல்லும் ஆசிரியர்கள் அன்றைய நாளில் பெரும்பாலும் இளைஞராக இருந்ததையும், அவர்களுக்கு வேறு வேலையின்மை காரணமாக ஆசிரியர் தொழில் செய்ய வந்ததையும், அவர்களிடம் அதற்கான கல்வித் தகுதியோ, ஓரளவேனும் குறைந்த அளவு கற்றிருப்பினும் ஒழுக்கத்தைப் பேணுவதில் சிறிதும் அக்கறையோ கொண்டிருக்கவில்லை என்றும் குறைப்பட்டிருக்கிறார். அன்றிருந்த மாணவர்களும் அவ்வாறே இருந்ததாகவும் சுட்டியுள்ளார். ஒழுக்கம் பேணுவதை உயர்ந்த பண்பாகக் கருதியவர் எனத் தெரிகிறது.

மாணவர்களைச் செம்மைப்படுத்த அவர் மூன்று கொள்கைகளைக் கடைப்பிடித்தார். நல்லுணவு, நற்படிப்பு, நல்ல பிரம்படி இவை அவரது கல்வி பயிற்றுவித்தலின் கோட்பாடாக இருந்தன. ஒழுக்கத்தைத் தம் அளவில் கொண்டிருந்த அவர், பிறரிடமும் அதனை வலியுறுத்தியதால், சில தொல்லைகளுக்கும் ஆளானார். கால்டுவெல் இது குறித்துச் சுட்டும்போது,

போப் வெற்றியடையாமல் போனதற்கு முக்கியமான காரணமானது அவரிடம் இருந்த ஒழுக்கக் கட்டுப்பாடுதான். இதனால் சிறுசிறு எதிர்ப்புகளுக்குப் பின் அவரை மேலிடம் திரும்ப அழைத்துக் கொள்ளும்படி ஆனது என்கிறார். மேலிடம் அவருக்குச் சிறிதுகாலம் விடுப்பளிக்கவும், இங்கிலாந்தில் பல இடங்களுக்குச் சென்று மதப்பிரச்சாரம் செய்யவுமே திரும்ப அழைத்துக் கொண்டதாக அறிகிறோம்.

1851இல் மீண்டும் இந்தியா வந்திருந்து தஞ்சையில் தூய பீட்டர் பள்ளி தொடங்கிய போது தஞ்சையிலிருந்த தமிழறிஞர் வேதநாயக சாஸ்திரியார் போன்றோரின் தொடர்பு ஏற்பட்டது. பல தமிழ் நூல்களை அறிவதற்குத் துணைசெய்வதாய் இருந்தது நாயகர் நட்பு, தஞ்சையில் இருந்த சூழல் அவரைப் பல நூல்களை எழுதவைத்தது. பெரும்பாலும் இலக்கண நூல்கள், அகராதி, வரலாற்று நூல்கள், தொகை நூல்கள் முதலியவற்றைத் தஞ்சையில் இருந்தபோது வெளிக்கொணர்ந்தார். சில சமயப்பூசல் காரணமாக 1860இல் தஞ்சையை விட்டு பெங்களூர்க்கும், ஊட்டிக்குமாக இடம் பெயர்ந்து கல்விப்பணியைத் தொடர்ந்தார். ஊட்டியில் இருந்தபேது ஐரோப்பியப் பள்ளியைத் தொடங்கினார். அதன் பிறகு 1865இல் தமிழ்ப் பேராசிரியராக ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் பணி புரியலானார். அங்குத் தமிழோடு தெலுங்கையும் கற்பித்து வந்தார். 1880இல் பணி ஓய்வு பெற்ற பின்வாழ்நாள் இறுதிவரை தமிழ்ப்பணியைத் தொடர்ந்து செய்துவந்தார்.

ஓய்வுப்பணியின் போதுதான் ஆங்கில-தமிழ் அகராதியை எழுதலானார். அது முற்றுப்பெறவில்லை. சென்னைப்பல்கலைக் கழகத்திற்கு அதனை ஆக்சுபோர்டு பல்கலைக் கழகம் அனுப்பிவைத்தது. பலரும் குழுவாக இருந்து செய்யப்பட வேண்டிய அகராதிப் பணியை அவர் ஒருவரே தனிநின்று தொகுத்தது நினைத்தற்குரியது. அவரது மொழிபெயர்ப்புப் பணியில் குறிப்பிடத்தகுந்தவை திருக்குறள் (1886), நாலடியார் (1893) திருவாசகம் (1900) ஆகியவையாகும். புறநானூற்றில் சில செய்யுட்கள், புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவற்றை மொழிபெயர்த்தார். மணிமேகலைக் காப்பியத்தைச் சுருக்கமாக உரைநடையில் பெயர்த்துள்ளார். சிவஞான போதம், திருவருட்பயன் ஆகியனவும் இவற்றில் அடங்கும். பழமொழி நானூறு அவரால் மொழிபெயர்க்கப்பட்டது. சில இலக்கண நூல்களையும், யாப்பு அணி தொடர்பான நூல்களையும் தொகுத்து இலக்கணக்

கலம்பகமாகத் தந்துள்ளார். ஊட்டியில் தங்கியிருந்த போது, தொடர் மொழி குறித்த இலக்கண நூல் ஒன்றையும் உருவாக்கினார். அவர் இயற்றிய தமிழ் இலக்கண வினா-விடை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் மிக அதிகமாக விற்கப்பட்டுச் சாதனை படைத்தது ஒரு வரலாறாகும்.

இதழ்களில் தொடர்ந்து தமிழ் இலக்கியம், மொழி தொடர்பான கட்டுரைகளை எழுதிவந்தார். இலக்கணம் தொடர்பான நூல்கள் ஆங்கிலேயர் தமிழை அறிமுக அளவில் அறிந்துகொள்ள ஏதுவாயின. இலக்கண வினா-விடை நூலும், பாடப்புத்தகமாய் வெளியிடப்பட்ட நூல்களும் தமிழுக்கு இவரால் கிடைத்த முதற்கொடை எனலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் டாக்டர் போப் ஐயரின் பெருமை தமிழ்நாட்டை விதானமிட்டது. அவர்தம் இலக்கணநூல் ஒவ்வொரு மாணாக்கர் கையிலும் பொலிவுடையதாயிற்று. யான் முதன்முதல் பயின்ற இலக்கணம் டாக்டருடையதே எனத்தமிழ்த்தென்றல் திரு.வி.க. சுட்டியிருப்பது போப்பிற்குப் பெருமை சேர்ப்பதாகும்.

அவர் எழுதிய கிறித்துவச் சமயம் தொடர்பான நூல்கள் சிலவே. தமிழில் கிறிஸ்துவத் தத்துவத் தீபிகை (1848) வெளியிடப்பட்டது.

1850இல் சென்னைப் பல்கலைக் கழகம் அவரின் பணிகளைப் பாராட்டிப் (fellowship) பெருமைப்படுத்தியது. 1864இல் "காண்டர்பரி ஆர்சிபிஷப்" தெய்விக டாக்டர் பட்டம் (doctor of divinity) வழங்கினார். 1870இல் "லெப்ஷீக் ஓரியண்டல்" கழக உறுப்பினராக இருந்தார். இரண்டாண்டிற்குப் பின்னர் "ராயல் ஏசியாடிக்" கழக உறுப்பினராக ஆனார். 1906இல் விக்டோரியா பேரரசி பவள விழாவை முன்னிட்டு அவருக்குப் பொற்பதக்கம் அளிக்கப்பட்டது.

20 அக்டோபர் 1900இல் சித்தாந்த தீபிகை ஆசிரியர் ஜே.எம். நல்ல சாமி பிள்ளைக்கு எழுதிய மடலில் தம் இறப்பிற்குப் பின்னர் கல்லறையில் தாம் ஒரு தமிழ் மாணவன் என்று பொறிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாக அறியப்படுகிறது.

11 பிப்ரவரி 1908இல் போப் இறைவனடி சேர்ந்தார். பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய செல்வகேசவராய முதலியார், போப்பின் கல்லறை வாசகத்தில் தமிழ்மாணவன் என்று பொறிக்கப்படவேண்டும் என்பதறிந்து நிதி ஒன்றைத் திரட்டி அதனை இலண்டனுக்கு அனுப்பி வைத்தார்.

ஆக்சுபோர்டில் உள்ள வால்ட்டன் என்ற இடத்திலமைந்த புனித ஷெபல்கெர் இடுகாட்டில் உள்ள கல்லறையில் அவர் உடல் அடக்கம் செய்யப்பட்டது. இலக்கியத் தாகம் கொண்ட ஒருவர் வாழ்நாள் முழுதும் தம் சொந்த மொழியில் ஈடுபாடு கொள்வது இயல்பு. ஆயின் இவரைப் பொறுத்தவரை, சமயப்பணியை ஆற்றியதோடு, முற்றிலும் மாறுபட்ட சூழலில் வேற்றுமொழி ஒன்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டு அதன் இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றிற்காக வாழ்நாள் முழுவதையும் செலவிட்டது என்பது நினைத்துப் பார்க்க இயலாத அரிய பணியாகும்.

திருக்குறள்

திருக்குறள் பெருமையை நம் நாட்டவரைக் காட்டிலும் அதனைப் பிறநாட்டினருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற கட்டுப்பாட்டில் மேலைநாட்டுக் கிறித்தவச் சமய ஞானிகள் மிகுந்த அக்கறை காட்டினார். திருக்குறளின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட அவர்களின் மொழிபெயர்ப்புப்பணி அளவிடற்கரியது. திருக்குறளை முதன்முதலாக அறிந்து அதனை இலத்தின் மொழியில் பெயர்த்த வீரமா முனிவர் ‘இருளிலே ஒளிவீசும் விண்மீன்; பாலைவனத்தில் பூத்த அழகுமலர்; அறியாமையை அகற்றும் ஒளிச்சுடர்; உலகிற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம்’ என்ற போற்றப்பட்டார். திருக்குறளைக் கவிதையாக மொழிபெயர்ப்பது மிகவும் கடினம். கவிதையை மொழிபெயர்க்கவியலாது என்பது பொதுவான கருத்து. திருக்குறளைக் கவிதையாகவும், உரைநடையாகவும் மொழிபெயர்த்துள்ளார். திருக்குறள் மொழிபெயர்ப்புக் குறித்து டாக்டர் கிரௌஸ், No translation can convey an idea of its charming effect என்று கூறியிருப்பது உண்மைதான்.

ஆயின் இஃது எல்லாவற்றிற்கும் பொருந்திவரக்கூடிய ஒன்றாகும். திருக்குறளை மேலை நாட்டினர் தமக்கு வேண்டியவாறு வேண்டியவகையில் மொழி பெயர்த்துள்ளமை எண்ணிப்பார்க்கத்தக்கது. 1794இல் கிண்டர்ஸ்லி அதன் சில பகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். 1812இல் எல்லீசும், 1840இல் ட்ருவும், 1872இல் கோவரும், 1878இல் இராபின்சன் உரைநடையிலும், இரு அதிகாரங்களைச் செய்யுள் வடிவிலும் மொழிபெயர்த்தனர். இலாசரசு 1885இல் மொழி பெயர்த்துள்ளார். இவர்களைத் தொடர்ந்து 1885இல் போப் நூல் முழுமையும் மொழி பெயர்த்தார். தமிழக அறிஞர்கள் சிலரும் மொழிபெயர்த்துள்ளனர். தமிழில் வெளிவந்த மொழிபெயர்ப்பு நூல்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தது போப்பின்

மொழிபெயர்ப்பாகும். போப் மிகுந்த ஈடுபாட்டுணர்வோடு இதனை மொழிபெயர்த்துள்ளார். அவர் திருக்குறள் மீது கொண்ட மிகுந்த ஈர்ப்புக் கொண்டிருந்தவர்.

நீண்ட முன்னுரையும், நூலிறுதியில் வீரமா முனிவரின் இலத்தீன் மொழி பெயர்ப்பையும், எல்லீசு மொழி பெயர்ப்பினையும், தமது விளக்கங்களோடு தந்துள்ளார். ஆங்காங்கே ஒப்புமை காட்டிச் சென்றிருப்பதும், சொற்பொருள் அகராதியை இணைத்திருப்பதும் அவருக்குத் திருக்குறள் மீதிருந்த பற்றுக் காரணம் எனலாம். அவரது பன்முக ஆற்றலை அறிதற்கு அவை ஏதுவாக உள்ளன. பரிமேலழகர் கருத்தைத் தழுவிச் சரவணப்பெருமாள் வெளியிட்ட நூலை அடிப்படையாகக் கொண்டு மொழிபெயர்த்துள்ளார் என்று தெரிகிறது. தமது முன்னுரையில் இது பற்றித் தெரிவித்துள்ளார். திருக்குறள் கருத்திற்கு கிறித்துவச் சிந்தனைகள் உறுதுணையாக இருந்தன என்று கருதும் போப். தம் அறிமுக உரையில்,

"கிறித்துவ ஆசிரியர்களையும், அலெக்ஸாண்ட்ரிடியச் சிந்தனைத் தொடர்பான கிறித்தவக் கருத்துக்களையும் தம் குறிக்கோளுடன் ஒப்பிட்டுப் பார்த்துத் திருவள்ளுவர் தனியே கடற்கரையில் தனியே நடந்து சென்றதை நாம் மனக்கண்ணில் எண்ணிப்பார்க்கலாம்". என்கிறார் திருக்குறளில் மலைச்சொற்பொழிவின் எதிரொலியைக் காணலாம் என்றும் சுட்டியுள்ளார். கிறித்துவ வேத நூல்கள் கருத்துகளால் திருவள்ளுவர் உந்தப் பெற்றிருக்க வேண்டும் என்பதில் அழுத்தமான கருத்திருத்தியுள்ளார். போப்பின் கருத்தினை ஆய்கின்ற போது திருவள்ளுவர் பல சமயங்களிலிலிருந்தும் உயர்ந்த சிந்தனைகளைத் தெரிவு செய்து தம் நூலில் படைத்தளித்துள்ளார் என்ற கருத்திற்கு வர முடிகிறது. அகச் சான்றாகத் திருக்குறளில் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை என்று குறிக்கப்பட்டிருப்பதனை இது தொடர்பாகச் சிந்தித்துப்பார்க்கலாம்.

எல்லாச் சமயத்தவரும் சொந்தம் கொண்டாடுவதற்கு உரிய நூலாக இருப்பதுதான் திருக்குறளின் பெருமையும் சிறப்புமாகும். திருக்குறளின் மேன்மை பற்றிச் சுட்டும்போது போப், தமிழ் இலக்கியம் முழுவதையும் குறள் விஞ்சி நிற்கிறது, மக்களின் உயிரில் கலந்த நூல்களில் அது ஒன்றாக ஒளிர்கிறது, அதற்கு அழிவில்லை என்று சுட்டியுள்ளார். போப் தம் குறள் மொழிபெயர்ப்பில் சில வரன் முறைகளைக் கையாள்கிறார். இஃது அவரது உரைத்திறன் பற்றிய கோட்பாட்டிற்கு வழி

வகுத்திருப்பதோடு பின வந்தோர்க்கும் வழிகாட்டியாய் விளங்கியது. திருக்குறளின் இலக்கணப்பகுதியை விளக்குதல், அதன் யாப்பு வகைப்பாடும் ஓசையும் பற்றி ஆய்தல் ஆகிய இரு நிலைகளில் தொடக்கத்தில் உணர்த்துகிறார். குறட்பாக்களைத் தாம் விரும்பிய வண்ணம் எதுகைக்காக முதலடியின் நான்காம் சீரினை ஈற்றடியின் முதற்சீரில் அமைத்துள்ளமை இலக்கணத்திற்கு உட்படாது. எனினும் அதனை அவரது தனித்தன்மையாகக் கருதவேண்டியுள்ளது. குறள் வெண்பாவை அவ்வகையில் சிதைப்பது கூடாது.

நெடுங்கடல் தன்னீர்மை குன்றும்
தடிந்தெழிலி தானல்கா தாகி விடின்
ஒழுக்கத்து நீத்தார் பெருமை
விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு
அகனமர்ந் தீதலி னன்றே
முகனமர்ந் தின்சொல னாகப் பெறின்.

வெண்பாக்களில் விரவும் ஓசையைப்பற்றி எடுத்துரைத்து அது நீதியுணர்த்தும் செய்யுட்களுக்கு உரிய செப்பலோசைகளை இயற்சீராய் வருவதனைத் தூங்கிசைச் செப்பல் (balanced or didactic recitative) என்றும், வெண்சீர்விரவி வருவதனை ஏந்திசைச் செப்பல் (grave recitative) என்றும், இயற்சீரும் வெண்சீரும் விரவி வருவதனை ஒழுகிசைச் செப்பல் (mixed recitative) என்றும் சுட்டியிருப்பது நோக்குதற்குரியது.

இருமை வகைதெரிந்தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

என்பதனைத் தூங்கிசைக்கு எடுத்துக்காட்டியுள்ளார். இதுபோல் வருவனவற்றிற்கு மிகுதியாகச் சான்று காட்டுகிறார்.
எந்திசைச் செப்பலுக்கு ஒரே சான்றாக உள்ள

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு

என்ற செய்யுளையும், ஒழுகிசைச் செப்பலுக்கு,

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

என்ற குறட்பாவையும் சான்று காட்டுகிறார். மேலும் மூன்று குறட்பாக்களை எடுத்துக்காட்டுகிறார். வெண்சீர் ஒரே ஒரு பாடலில் மட்டும் வருவதனை முதற்குறள் கொண்டு சுட்டுகிறார்.

திருக்குறளில் மீதூர்ந்த ஆர்வமும் பொறுப்புணர்ச்சியும் கொண்டு மொழிபெயர்த்திருப்பதனைப் பாராட்டும் நாம். அவரது முயற்சியைக் குறைகூற முடியாதெனினும், அவர் குறட்பாக்கருத்தினைத் தெளிவுபடப் பெயர்க்கவில்லை என்பதனை அறிஞர் சிலர் சுட்டிக்காட்டுவர். எதுகையிலும் சந்த நயத்திலும் ஆட்பட்டு அவர் ஆங்கில யாப்புப்படி ஈற்றடிகளை எதுகை நயம் தோன்றப் பெயர்த்திருப்பதனைக் காணலாம். அடி இறுதி எதுகை கொண்ட ஈரடிக் கவிதைகளை heroic couplet மிகுதியும் கையாண்ட டிரைடன், அலெக்ஸாண்டர் போப் ஜான்சன் போன்றோரின் கவிதைகளின் ஈடுபாட்டால் இவ்வாறு குறளடியை எதுகை நயத்தில் பெயர்த்திருக்கிறார் என்ற கருத்தினை ப. மருதநாயகம் தெரிவிப்பர். (தமிழின் செவ்வியல் தகுதி பக்.51)

The settled rule of every code requires, as hights good,
their greatness who, renouncing all, their rule have stood
I look on her, her eyes are on the ground the while:
I look away: she looks on me with timid smile.

இவ்வாறு ஆங்கில யாப்பமைதியைப் பெயர்ப்பில் தருவதில் பெரிதும் விருப்புடையவராக இருந்தமைக்குக் காரணம் ஆங்கிலச் செய்யுள் மரபை வடிவத்தில் கையாள நினைத்தமையே.

ஆங்கிலத்தில் பெயர்க்கும்போது பிற நாட்டவர் கருத்தினை விளக்கமாய் அறிதல் வேண்டும் என்று எண்ணியோ என்னவோ சில குறட்பாக்களை நான்கடிப்பாடலாக ஆக்கியிருந்தார். 'நவில்தொறும் நூல்நயம்' என்ற குறளினை,

Learned scroll the more you ponder
sweet grows the mental food:
so he heart by use grows fonder,
bound in friendship with the good

இவ்வாறு விரித்துரைப்பதால் இன்றியமையாத மையக்கருத்திலிருந்து விலக நேர்ந்துவிடும். தேவையற்ற சில செய்திகளும் புகுந்துவிடும்.

தகையணங்குறுத்தல் என்ற அதிகாரம் முழுமையும் நான்கடிச் செய்யுளாகவே இருத்தல் காணலாம். அவ்வதிகாரத்தின் முதற்குரலில் அணங்கு என்பதனை Goddess என்றும், ஆய்மயில் என்பதனை peafowl rare? என்றும் பெயர்த்திருப்பது மூலத்தில் உள்ள இயல்பினைப் புலப்படுத்தவில்லை.

போப் சில சொற்களின் பொருளைப் புதிய நோக்கில் தருகிறார். அறவாழி அந்தணன் என்பதன் பொருளை விரித்து. the fair and bountiful men என்று விரித்துப்பொருள் காண்பர். அந்தணர் என்போர் அறவோர் என்பதற்கு அப்படியே anthanar என்று பெயர்த்துள்ள போப் அந்தணர் நூற்கு மறத்திற்கும் ஆதியாய் என்று வருமிடத்தே sages என்ற சொல்லைக் கையாள்கிறார்.

மடுத்த வாயெல்லாம் பகடன்னா னுற்ற
இடுக்க ணிடர்ப்பா டுடைத்து.

என்ற குறளில் வரும் பகடு என்பதற்கு bull-buffalo என வ.வே.சு. ஐயர் மொழி பெயர்க்க ட்ரு. இராபின்சன் ஆகியோர் buffalo என்று பெயர்த்துள்ளனர். எருமைகளை வண்டியில் பூட்டும் வழக்கம் அன்றிருந்ததில்லை. ஆயின், போப் bullock என்று தந்துள்ளமை சிறப்பு.

மூலத்தில் உள்ள செய்திகள் பெயர்ப்பில் சிந்தி விடுவதும், சில விடுபட்டுப் போவதும், தேவையற்றறவை புதிதாய் நுழைவதும், மற்றொன்று விரிதலுமாக இடம் பெறுவது மொழிபெயர்ப்பில் அமைதல் உண்டு. ஆயின் மூலத்திலிருந்து முற்றும் விலகியிருப்பின் அது மொழபெயர்ப்புக்கலைக்கு ஊறு செய்வதாகும். போப் கூடியவரை திருவள்ளுவரின் கருத்தினை உள்வாங்கிக் கொண்டு பெயர்த் திருப்பினும் ஆங்காங்கே சில பகுதிகள் திருக்குறள் கருத்திலிருந்து மாறுபடப் பொருள் தருவனவாய் அமைந்துள்ளன.

நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. என்ற குறளை,

Existing yesterday, today to nothing hurled!
Such greatness owns this transitory world

என்று பெயர்த்துள்ளமை பொருள் மயக்கத்தைத் தருகிறது. நேற்று இருந்த உலகம் இன்று அழிந்துவிட்டது என்று சொல்லக்கூடிய பெருமை இந்நிலையில்லாத உலகிற்கு உண்டு என்பது போலப் பொருள் தருகிறது.

எளிமையான சில சொற்களால் புரிய வைக்கும் பெயர்ப்புகள் பல உள்ளன. சான்றாக

செற்பால தோரு மறனேயொருவற்கு
உயற்பால தோரும் பழி என்பதனை,

Virtue sums the things that should be done
Vice sums the things that man should shun

எனப் பெயர்த்துள்ளமை காண்க. சில சொற்களுக்கு நேரிய பொருளைக் கருதாது மூலக்கருத்துக்கு மாறான வகையில் அமைந்திருப்பதையும் உணரலாம். நிற மொழி மாந்தர் என்பதற்கு might of men என்றும், மறைமொழி என்பதற்கு secret word என்றும் பெயர்த்திருப்பது நோக்குதற்குரியது.

பிறநாட்டவர் பொருளை அறிதற்கு ஏதுவாகும் என்று கருதித்திருக்குறளை விரித்தும் விளக்கமாயும் பெயர்த்திருப்பதனைக் காணலாம்.

எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

என்ற குறட்பாவை

Through all seven worlds in seven-fold birth
Remains in mem'ry of the wise,
Friendship of those who wiped on earth,
The tears of sorrow from their eyes

எனப் பெயர்த்திருப்பது இவ்வகையில் எடுத்துக் காட்டத்தக்கது. தேவையில்லாத சில விளக்கங்களும் சிலவிடத்து விரித்துரைக்கப் பட்டிருப்பதையும் எண்ணலாம்.

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை

என்பதற்கு,

Do deeds of virtue now. Say not To-morrow we will be wise:
Thus, when thou diest, shalt thou find a help that never dies.

எனப் பெயர்த்திருப்பதனை இவ்வகையில் அணுகலாம். விளக்கம் சற்றுச் சுற்றி வளைத்துச் சொல்லப்பட்டிருப்பதைக் காட்டுகிறது. அதே போல, கூடுதலாகச் சில செய்தி நுழைந்துவிடுவதனை மொழிபெயர்ப்பில் காணலாம். சமன் செய்து சீர்தூக்கும் என்ற குறளுக்குத் தந்துள்ள மொழிபெயர்ப்பில் with calm unbiassed equity of soul, is sages praise என்று வருவதனைச் சான்று காட்டலாம்.

அதிகாரத் தலைப்புகள் சில நேரடியான விளக்கத்தைப் பெறும் வகையில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. அறன்வலியுறுத்தல் வாழ்க்கைத் துணைநலம் செய்ந் நன்றியறிதல், ஒப்புரவறிதல், தெரிந்து செயல்வகை, மன்னைச் சேர்ந்தொழுகல் முதலியன இவ்வகையின, பொருந்தாத தலைப்புகளாக அமைவனவும் நம் கவனத்திற்கு உரியன. வலியறிதல், இடமறிதல் இன்னாசெய்யாமை,

பகைத்திறம் தெரிதல், சூது, உறுப்புநலன் அழிதல், ஊடலுவகை முதலியவற்றின் அதிகாரத் தலைப்பு அவ்வளவாகப் பொருந்துமாறில்லை. போப் ஆங்காங்கே விளக்கவுரையில் தம் சொந்த அனுபவங்களைச் சுட்டியிருப்பதனைக் காணலாம். 'வான்சிறப்பு' என்ற அதிகாரத்தில் வரும் விண்ணின்று பொய்ப்பின் என்ற குறளை விளக்கும்போது, மைசூர் பகுதியில் 1880இல் ஏற்பட்ட கடும்வெள்ளத்தையும், கடல் நோக்கிச் சென்ற மேலைக் கடுங்காற்று மக்களை அல்லல் படுத்தி அலைக்கழித்ததையும் விளக்கிச் செல்கிறார்.

மூலத்தில் இல்லாததைப் பெறுமொழியில் சேர்க்கையாக்கி விரித்தல் உண்டு.

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு

என்ற குறட்பாவில் இல்லாத ஒன்றை such is the golden maid's embrace இங்கு golden maid என்ற தொடர் தேவையில்லை. அதே போல,

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு

என்ற குறட்பா,

As tender shoot her frame: teeth, pearls: around her odours blend
Darts are the eyes of her whose shoulders like the bambu bend

இவ்வாறு இயைபுத் தொடை பெற்றுள்ளது. எதுகைக்காக bend என வந்துள்ளது. எனினும் இது செய்யுளுக்கு இன்பம் தரவல்லது. போப்பின் மொழிபெயர்ப்பு நூல் வெளிவந்து முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு வ.வே.சு. ஐயரின் திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல் வெளியாயிற்று. அதில் ஐயர் போப் செய்திருக்கும் தவறுகளைச் சுட்டிக்காட்டியிருந்தாலும், போப்பின் அரிய உழைப்பும், திருக்குறளின் மேன்மையை உலகறியச் செய்யும் நாட்டமும் அக்குறைகளைப் பெரிதுபடுத்தாதவாறு சிறப்புற்று இலங்குகின்றன. பின்னர் வெளிவந்த திருக்குறள் பெயர்ப்பு நூல்களுக்கு முன்னோடியாக இருந்ததோடு, வழிகாட்டி யாயும் அமைந்திருந்தது போப்பின் பணி என்பதனை மறுக்கவியலாது. அவர் திருக்குறள் மொழிபெயர்ப்புக் குறித்துக் கூறியிருப்பதனை நினைவு கொள்வது நன்று திருக்குறள் மொழிபெயர்ப்பில் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டிருந்த அவர் அதனை மறுபரிசீலனை செய்யவும் இருந்தார் என்பதனை அறிகிறோம்.

உலக இலக்கியமாகத் திருக்குறளைக் கருதவதற்கு இடம் தந்துள்ளது. மேலும் ஒப்புமைக் கண்ணோட்டத்தோடு ஆங்காங்கே சுட்டியிருப்பது போப்பின் அகன்ற புலமைக்கு அடையாளமாகும். முன்னோர் மொழிபோற்றல் என்ற மரபில் தமக்கு முன் மொழிபெயர்த்துள்ள வீரமா முனிவர். கிரால், எல்லீசு, ட்ரு முதலியோர் விளக்கங்களைச் சுட்டிக்காட்டிக் குறிப்புரையாகவும் விளக்கவுரையாகவும் எழுதியிருப்பது திருக்குறள்பால் அவர் கொண்டிருந்த மிகுந்த ஆர்வத்தைத் தெளிவாக உணர்த்துகிறது.

மணிமேகலை

தமிழ்க்காப்பியங்களில் சிலம்பையும் மணிமேகலையையும் நன்கு கற்றவர். அவற்றை மேனாட்டருக்கு அறிவுறுத்த வேண்டும் என்ற வேட்கை பூண்டிருந்தவர். அவை குறித்த ஆய்வுக் கட்டுரைகள் சிலவற்றை எழுதியவர் அவற்றைப் பற்றிய மதிப்புரையும் வழங்கியவர். சிலம்பினை மதிப்புரை செய்தளித்த அவர், அது குறித்துத் தம் சொந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். காப்பியப் பெருமை கூறும் அளவிற்குச் சிலப்பதிகாரம் உயர்ந்தது அன்று என்று கருத்துத் தெரிவித்திருப்பது வியப்பாக உள்ளது.

மணிமேக்லை தமிழ் மக்களிடையே பரவலாக அவ்வவளவாக அறியப்படவில்லை என்ற கருத்தை முன்வைக்கிறார். மணிமேகலையை ஆங்கில மாணவர்களும், பொது வாசகர்களும் அறிந்து கொள்ளவேண்டியும், தென்னகத்தில் புத்த மதம் பற்றிய செய்தியை உணர்நது கொள்ளவேண்டியும் இக்காப்பியச் சுருக்கத்தினை நூலாக்கித் தந்துள்ளதாகச் சுட்டியுள்ளார். சூளாமணி பற்றிய குறிப்பில் அது தமிழ்மக்களிடையே ஆதரவு பெறாமல் தோல்வியுற்றதாகக் கருதியுள்ளார். எனினும், தமிழ்க் காப்பியங்களை அறிமுக அளவில் உலகறியச் செய்த பெருமை போப்பைச் சாரும்.

மணிமேகலையின் முப்பது காதைகளை (இதனை poem of thirty books என்றே குறிப்பிடுகிறார்) சுருக்கமாகவும், எளிமையாகவும் ஆங்கிலத்திலும் தந்துள்ளார். ஆங்காங்கே சில பாடல்களையும் மொழிபெயர்த்துள்ளார். ஒரு சில இடங்களில் ஒப்புமையும் காட்டிச் செல்கிறார். விழாவறைக் காதையில் முரசறைவோன் பற்றிக் குறிப்பிட்டு அது தொடர்பாக ஐரோப்பிய நாட்டில், நிலவியிருந்த பறையறிவிக்கும் செய்தியோடு தொடர்புபடுத்துகிறார். மணிமேகலையின் பாடலடிகளை அழகுற மொழிபெயர்த்திருப்பது எண்ணத்தக்கது.

பிறந்தோர் உறுவது பெருகிய இன்பம்
பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது அறிகென் றருளி

இதனை

those born on earth share instant woe
those freed from birth high rapture know
clinging desire is cause of human pain
quench that desire and bliss you gain

என மொழிபெயர்த்துள்ளார். புத்த வணக்கத்தைக் கூறும் அடிகளாவன,

எங்கோன் இயல்குணன் ஏதமில் குணப்பொருள்
உலக நோன்பிற் பலகதி உணர்ந்து
தனக்கென வாழாப் பிறர்க்குறி யாளன்
இன்பச் செவ்வி மன்பதை எய்த
அருளறம் பூண்ட ஒரு பெரும் பூட்கையின்
அறக்கதி ராழி திறப்பட உருட்டிக்
காமற் கடந்த வாமன் பாதம் தகைபா ராட்டுதல்...

இதனை,

Our Lord whose nature is all good,
The essence of all that is good in the world,
who had made experience of all embodiments
who lived not himself but all others,
who was adorned with all grace that all men need at every time,
who wheels the wheel of every virtue,
Vaman, the conqueror of the demon of lust.

எனப் பெயர்த்துள்ளமை எண்ணுதற்குரியது. ஆதிரை பிச்சையிடுதலைப் பற்றிக் சாத்தனார்.

தொழுது வலங்கொண்டு துயரறு கிளவியோடு
அமுத சுரபியின் அகன்சுரை நிறைதரப்
பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுகென

என்று கூறுவதனை போப் தம் மொழிபெயர்ப்பில்

Worshipping, reverently pacing round, with words
That banish grief, she filled the magic cup with luscious food
And then 'Through all the world banish hunger and disease

என்று பெயர்த்திருக்கிறார்.

அமுதசுரபியை magic cup என்று வழங்குவது காண்க. பசிப்பிணியை ஒரு சொல்லாகக் கொள்ளாது. இரு சொற்களாகப் பிரித்துப் பெயர்த்திருக்கிறார்.

நாலடியார்

திருக்குறளை மொழிபெயர்த்த பின்னர் போப் தமிழில் புலமை பெறுதற்காக நாலடியாரைப் பெயர்த்துள்ளார் என்று அவரது முன்னுரையிலிருந்து தெரிகிறது. தமிழருக்குக் கிடைத்த இன்னொரு சிறப்பான அறநூல் என்றே சுட்டுகிறார். கா. மீனாட்சி சுந்தரம் இந்த நூல் எந்த நோக்கத்திற்காக எழுதப்பட்டது என்ற கருத்து *"இந்த நூலை மொழிபெயர்க்க எடுத்துக் கொண்டதன் நோக்கம். தமிழர்களை, மரபு வழிப்பட்ட விளக்கங்களை தரும் சோர்வினின்றும் மாற்றவும், ஒரு சில ஐரோப்பிய அறிஞர்களைத் தமிழறிஞர்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்யவும், இளைய தமிழ்ப்புலவர்களை உயர்ந்த இலக்கியத்தை ஆயும்போது ஐரோப்பிய முறைகளைப் பின்பற்றச் செய்யவுமே என்பது தெரியவருகிறது."* (ஐரோப்பிய தமிழ்ப்பணி பக்.150) என்றுரைத்திருப்பது உண்மையே எனலாம்.

நாலடியாரின் யாப்பு முறையைச் சிறப்பாக ஆராய்ந்து இலக்கணப்பகுதியில் தந்திருக்கும் போப். எதுகைக்கு ஆட்பட்டிருப்பதனையும் அதனால் சில பாடல்கள் சிதைவுக்கு உள்ளானதையும் காணலாம். பாடலின் பொதுவான கருத்தை முதலில் உணர்த்திப்பின்னர், பாடற் பெயர்ப்பைத் தருகிறார். இலக்கணப் பார்வையை ஆங்காங்கே விதைத்துச் சென்றுள்ள போப். பாடலின்கண் அமைந்துள்ள எழுவாய், பயனிலைகளைச் சுட்டிக்காட்டுகிறார். பாடல் முறைவைப்புப் பற்றியும் சிந்தித்துள்ளார். சில தவறான வைப்பு முறையினை விளக்கியுரைக்கிறார். திருக்குறள் விளக்கத்திற்கு நாலடியார் பாடல்களை ஆங்காங்கே ஒப்புமைப்படுத்தியது போன்று, நாலடியாரிலும் ஆங்காங்கே திருக்குறளை ஒப்புமை காட்டுகிறார். சொற்பொருள் விளக்கத்தினை எடுத்துக்காட்டித் தெளிவுபடுத்தியுள்ளார். நாலடியாரும் திருக்குறளைப் போல அறநூலானமையின் அதிலும் தம் கருத்திருத்தி மொழிபெயர்த்திருப்பது பாராட்டுக்குரியது.

புறநானூறு

போப் நானூற்றில் சில பாடல்களை மொழி பெயர்த்திருப்பதோடு அந்நூல் பற்றிக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். சங்க கால மன்னர்கள், புலவர்கள் பற்றிய

மதிப்பீடு செய்து தம் கருத்தினை முன்வைத்துள்ளார். பாரி முல்லைக்குத் தேர் ஈந்த நிகழ்வைத் தம் கண்ணோட்டத்தில் கூறியிருப்பது புதுமையாக உள்ளது. சங்ககாலக் கபிலர் பதினோராம் திருமுறையில் இடம்பெற்ற கபிலரினும் வேறானவர் என்று தெளிவுபடுத்துகிறார். கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பினை மேனாட்டுக் கதை ஒன்றில் வரும் இருநண்பர்களின் கதையோடு ஒப்புமைப்படுத்தியுள்ளார்.

புறநானூற்று மொழிபெயர்ப்பில் சில பாடல்கள் அழகியதாய்ப் பெயர்க்கப்பட்டுள்ளன. அதே சமயம் மொழிபெயர்ப்பில், சில பாடலடிகளின் பொருள், மயக்கந்தருவன வாயும், சில அடிகள் விடுபட்டும், அடைமொழிச் சொற்கள் மொழிபெயர்க்கப்படாமல் கருத்துக்கு முக்கியத்துவம் தந்தும் பெயர்க்கப்பட்டுள்ளன.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பாடலை சனவரி 1906இல் புத்தாண்டு வாழ்த்தாக இந்திய நண்பர்கள் எல்லோருக்கும் மொழிபெயர்த்து அனுப்பியிருக்கிறார் அப்பாடலில் இடம்பெறும்.

மின்னொடு வானம் கண்டுளி தலைஇ யானாது
நீர்வழிப் படும் புனைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம்

என்ற அடிகள் போப்பின் பெயர்ப்பில் சற்றே பொருள் மயக்கம் தருவனவாய்மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

this much-praised life of ours a fragile raft
Borne down the waters of some mountain stream
that o'ver huge boulders roaring seeks the plain.
Tho' storms with lighting flash from darken'd skies
Descend, the raft goes on as fates ordain.

இதில் நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர் முறைவழிப் படூஉம் என்ற உவமையை ஊழ் வழியே புனைசெல்லும் என்று மாற்றிக் கூறியுள்ளார். மூலநூலின் கருத்து சிதைந்துள்ளது.

மொழிபெயர்ப்பில் விடுபாடு (missing) என்பது தவிர்க்க இயலாதது. ஆயின் ஒரேயடியாய்த் தவிர்த்தல் கூடாது. 'ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும்' என்ற ஆலத்தூர் கிழார் பாடலில் இடம் பெறும். 'புறவுக் கரு அன்ன புன்புல வரகின்' என்ற உவமையை விட்டுவிட்டு அடுத்த கருத்துக்குச் செல்கிறார். இதுபோன்ற விடுபாடுகள் மொழிபெயர்ப்பில் இயல்பே இந்த உவமையை விட்டுவிடுவதால் செய்யுளின் அழகும் அமைப்பும் சிதையவே செய்யும். ஆயின் கருத்துக்கு முதன்மை தந்து அவர்

பெயர்த்திருப்பதனை எண்ணவேண்டும். வேறோர் இடத்தே வரும்.

அந்தண் காவிரி வந்து கவர்பு ஊட்ட
தோடுகொள் வேலின் தோற்றம் போல,
ஆடுகண் கரும்பின் வெண்பூ நுடங்கும்

என வரும் உவமையை அழகுற

Kaveri flows with bright refreshing stream,
Along whose banks the sweet cane's white flowers wave
Like pennon'd spears uprising from the plain.

என மொழிபெயர்த்திருக்கிறார். அதுபோல், ஆவூர் மூலங்கிழார் பாடலில் வரும்.

நீநயந்து நோக்கும் வாய்பொன் பூப்ப
செஞ்ஞா யிற்று நிலவு வேண்டினும்,
வெண்திங் களுள் வெயில் வேண்டினும்
வேண்டியது விளைக்கும் ஆற்றலை...

என்பதனை

Fire devastes the place on which thou frown'st!
Where thy favouring glance alights gold gleams!
Wer't thou to wish for moon-beams from the sun,
Or sunny radiance from the pallid moon,
Power hast thou to perform thy will

எனப் பெயர்த்திருப்பதும் போற்றத்தக்கது. ஆங்கிலேயர் எளிதாய்ப் புரிந்து கொள்ள வேண்டும் என்பது கருதி சில பாடல்களுக்குக் கூடுதல் விளக்கம் தந்து மொழி பெயர்த்திருப்பதைக் காணமுடிகிறது. செய்யுளின் கருத்தைத் தேவைக் கேற்பச் சுருங்க உரைத்தலும் உண்டு. அதனைச் செய்யுள் நடையில் தந்திருப்பதனைக் குமணனைக் கண்டு பெருஞ்சித்திரனார் பாடிய செய்யுளின் மொழிபெயர்ப்பு காட்டுகிறது. அதே போல், இருபத்தெட்டு அடிகளில் பெருஞ் சித்திரனார் வறுமை பற்றிப் புனைந்த பாடலைப் பதினைந்து அடிகளில் பெயர்த் ததனால் முக்கியமான சில கருத்துகள் விடுபட்டுள்ளன. முன்றில் போகா முதிர்வினள் என வருமிடதது. முற்றத்திற்கும் செல்ல இயலா நிலையில் இருக்கும் நரைமுதிர்ந்த முதுமையாளைச் சுட்டுமிடத்து. she in the courtyard sleeps எனப் பெயர்த்திருப்பது பொருந்துவதாக இல்லை. அதே போல்,

பசந்த மேனியொடு படர் அடவருந்தி,
மருங்கில் கொண்ட பல்குறு மாக்கள்

பிசைந்து தின, வாடிய முலையள், பெரிது அழிந்து
குப்பைக் கீரை கொய்கண் அகைத்த
முற்றா இளந்தளிர் கொய்துகொண்டு உப்பின்று
நீர்உலை யாக ஏற்றி மோரின்று
அவிழ்பதம் மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த உடுக்கையள்

என்ற வறுமைக் காட்சி பெறுமொழியில் விடுபட்டிருப்பதோடு ஒரேயடியாகச் சுருக்கப்பட்டு,

my tenderly beloved wife is wan and worn
Her starving infants cling around her empty breasts and wail
our food is better herbs,

என இடம் பெற்றிருப்பது மூலச் செய்யுளழகின் சிறப்பைக் குறைவுடையதாக்குகிறது. புறம் பாடல் 397 சிறப்பாக மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. மூலமொழியைக் காட்டிலும் மிகுதியான அடிகளில் பெயர்ப்பு மொழி அமைந்துள்ளது. இப்பாடலை விளக்கமுறப் பெயர்த்திருக்கிறார். முதல் பத்தடிகளில் மூலச்சுவையோடு மிக நெருங்கியிருக்கும் பெயர்ப்பின் அழகு சிறப்புறக் காணப்படுகிறது. இப்பாடல் மாணிக்கவாசகரின் பள்ளியெழுச்சியை நினைவுபடுத்துகிறது என்ற குறிப்பையும் கோடுகாட்டிச் செல்கிறார்.

புறப்பொருள் வெண்பா மாலை

புறப்பொருள் வெண்பா மாலையை மேனாட்டார்க்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற ஆர்வத்தை அந்த நூலை மொழிபெயர்த்தன் மூலம் அறிகிறோம். அக இலக்கியத்தின் மீது சமயஞானிகள் ஆர்வம் செலுத்தியதைவிடப் புற இலக்கியத்திலும், இலக்கணத்திலும் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளனர். தொல்காப்பியத்தை அறிந்திருக்க அவருக்கு ஓரளவே வாய்ப்பிருந்திருந்தது. முழுதுமாக அறிந்திருக்க மாட்டார் என்றே தோன்றுகிறது. அவர் பெயர்த்திருக்கும் புறப்பொருள் வெண்பா மாலை நூற்பாக்களையும், கருத்துகளையும் அறியும் போது அந்த ஐயமே நமக்கு எழுகிறது. இந்த நூலை இவருக்கு முன்பு சர் வால்ட்டர் எலியட் சில பகுதிகளை மொழிபெயர்த்துள்ளார் என்று தெரிகிறது. இதனை போப் சுட்டிக்காட்டியுள்ளார். இது ஆர். ஷீவல் என்பவரால் பதிப்பிக்கப்பெற்று என்றும், அவற்றில் சில ஏசியாட்டில் குவாட்டேர்லி' அச்சானதையும் முன்னுரையில் தருகிறார்.

புறப்பொருள் வெண்பா மாலை திருக்குறளை விடப்பழமையானது என்று போப் கருதியிருப்பது வியப்பளிக்கிறது. ஆயின் அவர் புறநானூற்றை இந்நூலோடு சார்த்திப் பார்த்திருப்பது பொருந்துவதாக உள்ளது. தமிழரின் நாகரிகத்தையும், பண்பாட்டுச் செய்திகளையும் இந்த நூல் வழி உலகோர்க்கு அறிமுகப்படுத்தியருப்பதற்குப் பாராட்ட வேண்டும். தமிழர் வீரம் பற்றிய தகவல்கள் அவரால் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இந்த நூலுக்கான முன்னுரையில் நடுவண் அரசும், நம் பல்கலைக்கழகமும் தமிழ் இலக்கியம் பற்றிய மேன்மையை அங்கீகரிக்கவில்லை என்று கருத்துத் தெரிவிக்கிறார். வாழ்நாள் முழுதும் செவ்வியல் தமிழுக்குத் தொண்டாற்றி வரும் அறிஞர்களின் பணி கடலில் மூழ்கி முத்தெடுப்பதை ஒத்தது என்கிறார். அவ்வாறு அமைந்த புலவர்க்கு வறுமையே வாயிலாக உள்ளது.எனச் சுட்டியுள்ளது கவனத்திற்கு உரியது.

புறப்பொருள் வெண்பா மாலையைச் செய்யுளாகவும் உரைநடையாகவும் பெயர்த்துள்ளார். சங்க கால வாழ்க்கை பூவால் சிறப்புற்றிருந்ததை விளக்கமாக விரித்துரைக்கிறது.

புறத்திணைக்கு உரிய செய்திகளை விளக்கியிருப்பதோடு பூக்களின் தாவரப் பெயர்களைத் தந்திருப்பதும் முருகு என்ற சொல்லைப் பற்றிய விளக்கமும், வாகைத் திணையில் வீரத் தாய்மார்களின் கூற்றைப் புறநானூற்றின் வழி காட்டியுள்ளதும் எண்ணற்குரியன. சில புறப்பாடலின் மொழிபெயர்ப்புகள் நன்குஅமைந்துள்ளன.

முதன்முதலாகத் திருவாசகத்தை மொழிபெயர்த்த பெருமைக்கு உரியவர் போப். திருவாசக மொழிபெயர்ப்புப் பணியைத் திருக்குறள் போலவே ஒரு தொடர்பணியாகச் செய்து வந்துள்ளதைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் அறியலாம். போப் இந்த நூலைத் தம் இறுதிக்காலத்தில் செய்த பெரும்பணி எனலாம். The Thiruvasagam or Sacred Utterances of the Tamil Poet, Saint Sage Manikka-vacagar என்றே தம் மொழிபெயர்ப்பு நூலுக்குப் பெயரிட்டுள்ளார். இம்மொழிபெயர்ப்புக் குறித்து நூலின் முன்னுரையில் ஒரு கருத்தினைப்பதிவு செய்கிறார்.

பாலியோல் கல்லூரி முதல்வரோடு ஒரு மாலை உலாவின் போது உரையாடினேன். தமிழ்க்காப்பியக்கள், செய்யுட்கள் தத்துவம் பற்றியதாக எங்கள் உரையாடல் இருந்தது முதல்வர் கூறினார். “திருவாசகத்தை நூலாகக் கொண்டுவரவேண்டும்” என்றார். நான் கூறினேன். செய்வதற்குக் காலம் இடங்கொடுக்குமா? அதனைச்

செய்வதற்கு நிரம்ப காலம் ஆகும் என்றேன். முதல்வர் மறுபடி கூறினார். அரிய செயலில் இறங்க முயற்சி செய்வது என்பது ஆயுளை நீட்டிப்பதற்கான வழிமுறையாகும். அதுவரை நீ உயிரோடு இருப்பாய் என்றார். இச்செய்தி போப் உள்ளத்தில் உறைந்திருந்தது. திருவாசகத்தின் சில பாடல்களை 1897இல் அவர் மொழிபெயர்த்திருப்பினும் முழுமையாக 1900இல் தான் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

போப் தம் திருவாசக முன்னுரையில், தமது ஆசிரியருக்கு வாழ்த்துச் சொல்லியிருப்பதோடு, தமது மொழிபெயர்ப்பு முழுமையாக நிறைவடையாத ஒன்று (the very imperfect one) என்று கூறியுள்ளார். போப் திருவாசகத்தை மொழிபெயர்க்கும்போது அந்த நூலுக்கான உரைகள் எவையும் வரவில்லை. தமிழறிஞர் யாரோ ஒருவர் முதல் நான்கு பாடல்களுக்கு உரை எழுதியிருப்பதையும் அந்த உரையைத் தம் பெயர்ப்பில் மாற்றம் செய்திருப்பதையும் நினைவு கூர்ந்துள்ளார். எனினும், உரை நூல்கள் இல்லாத சூழ்நிலையில் வெளிநாட்டார் ஒருவர் மிகவும் முயன்று கடின உழைப்போடும், உண்மையான உணர்வோடும் பெயர்த்துள்ளமை பாராட்டுக்குரியது. அவரது மொழிபெயர்ப்பில் குறைகள் இருக்கலாம். இன்னும் சிலகாலம் இருந்திருப்பாராயின் அதனைச் செப்பம் செய்ய நினைத்திருக்கக்கூடும். இந்த நூலை மொழிபெயர்த்ததன் மூலம் தமிழரின் பக்திநெறியை உலகறியச் செய்தவர் என்பதனை எவரும் மறுப்பதற்கில்லை. போப்பைப் பின்பற்றியே அவருக்குப் பின்வந்த திருவாசக மொழிபெயர்ப்புகளைப் பார்க்கிறோம்.

திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததற்கான காரணத்தையும், நோக்கத்தையும் பற்றி போப் தம் முன்னுரையில் கூறுகிறார்.

“திருவாசகம் போன்ற நூல்களை மறுபதிப்புச் செய்வதிலோ, மொழிபெயர்ப்புச் செய்வதிலோ. பதிப்பதிலோ என்ன பயன் இருந்துவிடமுடியும்? அது போன்ற நூல்களை யாருக்கு அணுக்கமாக்கிவிட இயலும்? இப்படித் திரும்பத் திரும்பக் கேட்கப்பட்டது. அதன் காரணமாகவே திருவாசகத்தைத் தாம் வெளிக்கொணர்வதில் காலத்தாழ்ச்சியானது-ஆங்கிலேயர்-தமிழர் ஆகியோரின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் புரிந்துகொண்டு உயர்ந்த சிந்தனைகளைப் பாராட்டுவதோடு வாழ்வியல் நெறிகளில் உள்ளொளி பெறமுடியும்” என்ற கருத்தை அவர்

முன்வைக்கும்போது போப்பினுடைய உயர்ந்த உள்ளத்தைப் பாராட்டாமல் இருக்கவியலாது. திருவாசக மொழிபெயர்ப்பை அமைத்துக் கொண்ட முறையைக் கூறும்போது மூலநூலின் அடிகளுக்கு நிகராகவும் உள்ளதாக போப் தம் முன்னுரையில் சுட்டியுள்ளார். திருவாசக மொழிபெயர்ப்பில் சில ஒழுங்குமுறையைக் கடைப்பிடித்துள்ள போப் தமது உண்மையான ஈடுபாட்டை அதில் காட்டமுயன்று வெற்றிபெற்றிருப்பதாகக் கொள்ளலாம். யாப்பு வடிவ ஒழுங்கிலும் கூட அவர் கவனம் செலுத்தியுள்ளதைக் காணமுடிகிறது. திருபொற்சுண்ணப் பகுதியைப் பெயர்க்கும்போது அறுசீரடியாக அமைந்த அந்தப் பாட்டின் யாப்பமைதியைப் பெருமுயற்சியோடு கடைப்பிடித்ததாக அவர் கூறியிருக்கிறார்.

தமிழரல்லாதார் ஒருவர் அதுவும் மொழி, இனம், பண்பாடு, மதம் இவற்றால் முற்றிலும் வேறுபட்ட நாட்டிலிருந்து இங்குப் போந்து தமிழ்மொழியைக் கற்றும், மத தத்துவங்களை உணர்ந்தும் தமது மொழியில் பெயர்த்தமையைப் பாராட்ட வேண்டும். மாணிக்கவாசகரை உலகறியச் செய்தமை ஒன்றே போதும். அவர் சமயங்கடந்த பணியை மேற்கொண்டமைக்குத் தமிழரின் கைம்மாறு என்னவாக இருக்கமுடியும்?

திருவாசகத்தை முழுதுமாக மொழிபெயர்த்த தமிழறிஞர்கள் திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியம். ஜீவன்மீகநாதன், ஸ்ரீனிவாசன். சுவாமிஜி இறையன்பன், இரத்ன நவரத்தினம். டி.என். இராமச்சந்திரன் முதலியோர் ஆவர். இவர்கள் தவிர சிலது சிறுசிறு பகுதிகளாகப் பெயர்த்துள்ளார்.

திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியம் போப்பின் மொழிபெயர்ப்பில் சில குறைகளைக் கண்டதால் தாம் திருவாசகத்தை (1958) முழுதுமாகப் பெயர்க்க வேண்டியதாயிற்று என்பர். ரோமன் கத்தோலிக்கர் ஒருவர் தம்மை ஆங்கிலத்தில் திருவாசகத்தை (1971) மொழிபெயர்க்க சொல்லவே அப்பணியை மேற்கொண்டதாகச் சுட்டுவர். ஸ்ரீனிவாசன் தம் மொழிபெயர்ப்புக் குறித்துக் (1991) கருத்துத் தெரிவிக்கையில் முன்னர் வெளிவந்த மூவரின் பெயர்ப்புகள் நன்றாக இருப்பினும் அவற்றின் கருத்து விளக்கம் தம் தாகத்தைத் தீர்ப்பதாய் இல்லை என்று தெரிவித்துத் தாம் மொழிபெயர்த்ததற்குக் காரணம் கூறியுள்ளார். சுவாமி இறையன்பர் (1999) முன்னர் செய்த புண்ணியமோ அல்லது முன்வினையோ இந்தப் புனித நூலைப் பெயர்க்கும்படி ஆனது என்கிறார். இறுதியாகத் திருவாசகர் (2001) மொழிபெயர்ப்பை

வெளியிட்ட டி.என். இராமச்சந்திரன் தமது முன்னுரையில் தமது பெயர்ப்பு படிக்கத் தகுந்ததாகவும், நம்பகத்தன்மை உடையதாகவும் இருப்பதனைச் சுட்டிக்காட்டுவர். போப்பின் திருவாசக மொழிபெயர்ப்பைப் பற்றி இவர் தம் கருத்தை முன்வைக்கும்போது,

"போப் தமிழையும் தமிழ் சைவத்தையும் ஆழமாகக் கற்றவர் எனது கருத்தடிப்படையில் போப்பின் மொழிபெயர்ப்பு தெய்வீக ஒழுங்குடையது இப்படிச் சொல்வதனால் அவரது பெயர்ப்பு பிழையற்றது என்று பொருளில்லை. எல்லாவற்றையும் அப்படிச் சொல்லிவிடவும் முடியாது. இருப்பினும் திருவாசகத்தைப் பரப்புவதற்கு உரிய காரணிகளில் முக்கிய பங்கு வகிப்பதில் முன்னோடியாக விளங்குகிறது." என்று தம் கருத்தைப் புலப்படுத்துவர்.

போப்பின் திருவாசகம் மொழிபெயர்ப்பில் அவரது விளக்கமான முன்னுரையும் மாணிக்கவாசகர் பற்றியும் செய்திகளும் ஆழமான நோக்கில் வெளிப்பட்டுள்ளன. சமயக் குரவர்களில் மாணிக்கவாசகரை உயர்த்திப் பிடிக்கிறார்.

"உலக வரலாற்றிலேயே மேதையான இவரைவிடப் (மாணிக்கவாசகரை) புலமை உழைப்பு, துன்பத்தைப் பொறுத்தல், இடையறா நிலையான பக்தி ஆகியவற்றுடன் நம் மனத்தைக் கவர்கின்றவர் யாரும் இல்லை" என்று போற்றிப் புகழுவதனைக் காணலாம். மாணிக்கவாசகர் புனித பால் அஸ்ஸிஸ்ஸியின் புனித பிரான்சிஸ் ஆகியோர் கலந்த வியக்கும் வடிவம் என்றும், புத்த சமயத்திற்குச் சரியான சம்மட்டி என்றும் உணர்த்துகிறார். மேலும், அவரது பாடல்களைத் தென்னிந்திய வேதங்கள் என்றே சுட்டுகிறார். போப் கருத்துப்படி மாணிக்கவாசகரின் பாடல்கள் தமிழ்த்தோத்திரப் பாடல்களாகும் (Psalms of the Tamil) ஆயிரக்கணக்கான தேவாரப்பாடல்களை விட, இப்பாடல்கள் அளவு கடந்த சிறப்புமிக்கவை எனப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

உலப்பிலா ஆனந்தத் தேன் என்பதனை அழகுற honied sweetness, Thou bestowed through my every part infusing joy என போப்பும் thou pourest out in me, A ceaseless stream of rapturous honey என கே.எம்.பியும், squirted the never drying up honey என வன்மீகநாதனும் oozing honey of great bliss என டி.என். ஆரும் மொழிபெயர்ப்புச் செய்துள்ளனர். அவரவர் தத்தம் நோக்கில் இருந்து பெயர்ப்பினும் உலப்பிலா என்ற சொல்லின் அழுத்தத்தை

வன்மீக நாதனில் காணமுடிகிறது. கே.எம்.பி. சற்றே வார்த்தைகளை மாற்றி அமைத்துள்ளார். தெவிட்டாத என்ற பொருள்படும்படி மூலத்தை அறிந்துள்ளார் டி.என்.ஆர் இவற்றில் மூலநூல் கருத்தை அழகுறக் கல்வி இன்பம் கனிய அமைத்துள்ளார் போப்.

பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் பெய்கழல் வெல்க என்பதனை போப் victory to the jewelled feet of Pinnagam, who severs continuity of birth என போப்பும், Hail pigngaka's feet, fastened with gem unlaid anklets which do away என டி.என்.ஆரும் பெயர்த்துள்ளமை காண்க பின்னது. சற்றே பொருளை நீட்டித்துக் கருத்தை வெளிப்படுத்த முன்னது. எளிமையும் இனிமையும் நிறைந்ததாயக் காணப்படுகிறது.

திருவாசகத்தின் சில பகுதிகளை ஆயப்புகும்போது அதனைத் திறனாய்வுக்கு உட்படுத்துவதும் உரையெழுதுவதும் பாவம் எனத் தமிழறிஞர்களால் பெரிதும் எண்ணப்பட்டது. இதனை மீறிச் சில பாடல்களைத் திறனாய்வு செய்துள்ளார் போப். அவற்றை அறிவியல் முறையில் அவ்வாறு ஆய்வது அவசியம் என்றுணர்த்தினார்.

ஆரியர்களின் வேதத்தைத் தமிழரின் பக்தி மார்க்கத்தையும் ஒப்பிட்டு,தனி உருக்கமான ஈடுபாட்டுப் பக்தி சைவத்தில் உள்ளது போல் வேதங்களில் இல்லை என்றும், சக்தி-சிவன் அடிப்படை ஆற்றல் பற்றிய கருத்து பகவத் கீதையில் காணப்படவில்லை என்றும் கருத்துரைப்பர். ஒப்பீட்டு முறையில் கிறித்தவச் சமயத்தையும், தமிழ்ச்சமயத்தையும் ஆங்காங்கே ஒப்புமையாக உரைத்திருப்பதும் எண்ணத்தக்கது.

சில இடங்களில் வழக்கினை ஒட்டிப் பெயர்ப்பு அமையாமல் போய்விடுவதனை உணரமுடிகிறது.

கடலினுள் நாய் நக்கி ஆங்குன் கருணைக்கடலின் உள்ளம் விடல் அரியேனை விடுதி கண்டாய் என்பதனை,

As dogs laps wate from the lake my soul, Thy mercy's see quit's not எனப் பெயர்த்துள்ளார். கடல் என்பது பெயர்ப்பில் lake ஆகிவிடுகிறது.

அதுபோல இருண்மை தோன்றுமாறு அமைந்த சில பாடல்கள் நோக்குதற்குரியன. இருதலைக்கொள்ளியினுள் எறும்பொத்து என்ற தொடரை like ant on fibrebrand lit at diverse ends எனப்பெயர்த்திருப்பது இதற்குச் சான்று முத்தன்ன,

வெண்ணகையாய் என்பதனை smile as pearl is bright என நுணுக்கமாய்ச் சொல்லியது கவி நுட்பமாக உள்ளது. இதனை டி.என்.ஆர். teeth are white as pearls என உரைத்திருப்பது மரபு வழிபட்டதாகும். செழுகின்ற புக்கு விட்டிலின் சின்மொழியார்

பல்நாள் விழுகின்ற என்னை விடுதி கண்டாய்

என்ற பாடலடியில் வரும் செழுகின்ற தீப்புக்கு விட்டில் என்பதற்கு போப், like moth in glistening flame, என்று குறிப்பினால் பொருளைப் புலப்படுத்த முனைகிறார். இதனை நேரிய பொருளில் like moth that falls into the blazing fire என டி.என்.ஆர். பெயர்த்திருப்பதை நோக்குக. திருவாசக மொழிபெயர்ப்பின் வழியே ஒவ்வொருவரின் மொழிபெயர்ப்புத்திறன் நன்கு வெளிப்படுமாறு அமைந்துள்ளது. மூலநூலாசிரியர் வழித்தடத்தினின்றுதான் மொழிபெயர்ப்பாளர்கள் பயணித்திருக்கிறார்கள். மூலத்திலிருந்து விலகி முற்றிலுமான பெயர்ப்பை ஒருவர் தருதல் எப்படி இயலாதோ, அதே போன்று போப்பினின்றும் முற்றிலுமாகப் பெயர்த்தல் என்பது அரிது என்பதனை மொழிபெயர்ப்புத் திறனாய்வாளர்கள் ஆய்ந்து காணலாம். கடல் உள்ளளவும், காலம் உள்ளளவும் மாணிக்கவாசகரை உலகறியச் செய்தமையை எண்ணித் தமிழர் பெருமைப்பட வேண்டும்.போப் என்ற பெருந்தகையின் உணர்வுகள் நம்மை வியப்பில் ஆழ்த்தவல்லன தமிழ்மொழி மீது காதல் கொண்டு அளப்பரியத் தொண்டினைத் தம் இறுதிநாள் வரை அயராது ஆற்றிய அவரை எண்ணிப் பெருமிதம் கொள்வோமாக.

****

தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வுகள்

பேரா.இரா.மோகன்,
ஒப்பிலக்கியத் துறைத் தலைவர்,
தமிழியற்புலம் ஆட்சிக்குழு உறுப்பினர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை – 625021.

"அறிவூட்டலும் முருகியல் இன்பம் தரலும் ஓர் இலக்கியத்தின் இருபெரும் பயன்கள் என்று கூறுவர். ஒப்பிலக்கியத்தில் இவை இரு மடங்காகக் கிடைப்பதற்கு வாய்ப்புண்டு." – ப.மருதநாயகம். (தமிழின் செவ்வியல் தகுதி, ப.1.

"திராவிட இலக்கியங்களையும், இந்திய இலக்கியங்களையும் ஒப்புநோக்கிக் கற்றவனுடைய கல்வியறிவு மிகவும் பரந்துள்ளதாயும் செழிப்புள்ளதாயும் இருத்தல் ஒருதலை. இவ் ஒப்புநோக்குக் கல்வி நமது அறிஞர்களுடைய குறுகிய மனப்பான்மையாகிய திண்ணிய சுவரை இடித்துத் தகர்த்து விடும்... இவ்வகைக் கல்வியின் மேல் எழுந்த ஆராய்ச்சிக்கு ஒரு புதிய பொருண்மையும், புதிய பெருமையும் ஏற்படும்" (வையாபுரிப் பிள்ளை நூற்களஞ்சியம், மூன்றாம் தொகுதி, ப.300) என்பர் 'ஒப்பிலக்கிய முன்னோடி' பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை.

எது ஒப்பியல் ஆய்வு?

ஒப்பியல் ஆய்வு என்பது ஒப்புக்காக மேற்கொள்ளப்படுவதன்று. கேவலம் பொழுதுபோக்கான ஆய்வு முறையுமன்று. ஒப்பியல் ஆய்வின் மூலமாகவே ஒரு பொருளின் தனிப்பண்புகளைத் திட்டவட்டமாகக் கூற முடியும். ஒற்றுமைகளுக்கு இடையேயும் நுண்ணிய வேறுபாடுகள் காணப்படுவதை அடையாளம் காட்ட இயலும். அவற்றின் அடிப்படையிலேயே ஒரு பொருளின் தனிச்சிறப்புகளைத் துல்லியமாக அறிதல் கூடும். பேராசிரியர் க.கைலாசபதி கூறுவது போல். "இன்று தமிழிலக்கிய ஆராய்ச்சியானது பெருமளவிற்குக் கூறியது கூறலாகவே அமைந்து காணப்படுவதற்கும், பழம்பெருமைச் சிறைக்குள் அடைபட்டுக் கிடப்பதற்கும் ஒப்பியல் மனோபாவம் தக்க முறையில் வளராமையே என்று துணிந்து கூறலாம்.

ஒப்பியல் இலக்கிய ஆய்வுகள் எமது இலக்கியச் செல்வங்களை உலகறியச் செய்வதுடன், எமது இலக்கியங்களின் சிறப்புப் பண்புகள் யாவை, பொதுப் பண்புகள் யாவை என்பனவற்றை உணர வழிகாட்டுவதுடன், வரலாற்றடிப்படையான இலக்கிய ஆராய்ச்சிக்கும் ஏதுவாக அமையும்" (ஒப்பியல் இலக்கியம். பக்.47-48:50).

ஒப்பிலக்கியத்துறை வளர்ச்சி பெற...

உயர்ந்த இலக்கியங்களைக் கொண்ட பல மொழிகள் பேசப்பட்டு வரும் இந்தியத் துணைக் கண்டத்தில் ஒப்பிலக்கியம் பெருவளர்ச்சி பெறாதது வியப்பிற்கு உரியதாகும். ஒரு சில மாநிலங்களிலேயே செல்வாக்குப் பெற்றுள்ள இத்துறை மற்ற இடங்களில் எல்லாம் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. இன்னும் கூர்மைப்படுத்திச் சொல்ல வேண்டும் என்றால், விரிந்தகன்ற பரப்பினைக் கொண்ட ஒப்பிலக்கியம் தமிழகத்தில் இன்னும் பிள்ளைப் பருவத்திலேயே இருந்து வருகின்றது. இதற்கான காரணங்களைப் பேராசிரியர் ப.மருதநாயகம் சுட்டிக்காட்டுவன வருமாறு:

“ஒப்பிலக்கியத்தின் நோக்கங்கள் சரியாகப் புரிந்து கொள்ளப் படாமையும் அத்துறையிலுள்ளார் சிலர் அதனைத் தவறாகப் பயன்படுத்தி வருவதும் இருமொழி இலக்கிய அறிவு அருகிலேயே காணப்படுவதும் இதற்குக் காரணங்களாகும்." (கிழக்கும் மேற்கும்,ப.1)

எதிர்காலத்தில் ஒப்பிலக்கியத்துறை வளர்ச்சி பெறுவதற்கான வழிவகையினையும் பேராசிரியர் மருதநாயகம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

“வங்கம், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் ஆங்கில துறையைச் சார்ந்தவர்கள் எல்லாம் மாநில மொழித் துறையினரோடு இணைந்து இரு மொழி இலக்கியங்களிலும் ஆழ்ந்த புலமை பெற்று இலக்கியப் பணி செய்து வருகின்றனர். தமிழகத்திலும் தமிழ், ஆங்கிலத்துறைச் சார்ந்தவர்களின் கூட்டு முயற்சிகளே பெரும் பலன் விளைவிக்குமென்பது உறுதி." (கிழக்கும் மேற்கும்,ப.13).

பன்மையில் ஒருமை

‘உலகம் ஒன்று, உலகத்தவர் உள்ளம் ஒன்று. எனவே, உலகத்தவர் உள்ளத்தில் இருந்து ஊறும் கலையும் கவிதையும்

ஒன்று' என்பது தான் ஒப்பிலக்கியத்தின் அடிப்படைக் கொள்கை. உலகின் பல்வேறு இலக்கியங்கள் மொழி கடந்த ஒரு மூலத்தின் வெளிப்பாடாக முகிழ்த்து, இன மொழிச் சுவர்களைத் தாண்டி எல்லையற்ற நெஞ்சத்து மொழியாலே பேசாமல் பேசி உறவாடி, ஒன்றுக்கொன்று விளக்கம் தருவது இலக்கியப் பன்மையிலே ஒளிந்து கிடக்கும் ஒருமையின் வெளிப்பாடே.

ஒப்பிலக்கியம், இலக்கியங்களின் ஊடே இழையோடும் சிந்தனைகளையும், இலக்கிய வடிவங்களின் ஒற்றுமை வேற்றுமைகளையும், ஒப்பிட்டு, மற்றும் இலக்கியத்துக்கும், ஏனைய சமுதாய மன இயல்களுக்கும், மற்ற நுண்கலைகளுக்கும் உள்ள ஆழ்நிலை இணைப்புகளை அகழ்ந்து அதன் வழி ஒவ்வொரு இலக்கியத்தின் பருமையினையும் நுண்மையினையும் அதன் பொதுமையினையும் தனித்தன்மையினையும் உணர்த்த வழிகோலும்.

பேராசிரியர் கா.செல்லப்பன் 'ஒப்பியல் தமிழ்' என்னும் நூலில் வெளிப்பட்டிருக்கும் கருத்து இங்கே மனங்கொளத்தக்கது: "ஒப்பாய்வின் நோக்கம், ஒரு இலக்கியம், ஒரு மனிதம், அதாவது, பலவாய் மிளிரும் ஒரு இலக்கியம், பலராய்ச் செழிக்கும் ஒரு மனிதம்"(ஒப்பியல் தமிழ்,ப.105)

அனைத்துக்கும் ஊடு செல்லும் இயல்

கதே, பதினெட்டாம் நூற்றாண்டில் உலக இலக்கியம் (World Literature) என்ற ஒருமையைக் கனவாகக் கண்டார். தேசிய இலக்கியம் (National Litrature) சுவர்களுக்குள் நிலவும் இலக்கியம் (Study of Literature within walls) என்றால், ஒப்பிலக்கியத்தைச் (Comparative literature) சுவர்களுக்கு ஊடு நிலவும் இலக்கியம் (Study of Literature across walls) என்றும், பொது இலக்கியத்தைச் (General literature) சுவர்களைக் கடந்த இலக்கியம் (Study of literature above walls) என்றும் கூறுவர். தேசிய இலக்கியம், உலக இலக்கியம், பொது இலக்கியம் ஆகிய அனைத்துக்கும் ஊடு செல்லும் இயலாக ஒப்பிலக்கியத்தைக் கருதுவது தான் பலரும் ஒப்பிய கொள்கை.

ஒப்பிலக்கிய ஆய்வுகள் - இன்றும் இனியும்

ஒப்பிலக்கியத்தின் அடிப்படைகளையும் நோக்கங்களையும் நெறிமுறைகளையும் கொள்கைகளையும் நன்கு விளங்கிக்கொண்டு நடைபயின்றால், எதிர்காலத்தில் தமிழாய்வுக்குப் புதிய பொருண்மையும் பெருமையும் ஏற்படுவதற்கு மிகுந்த வாய்ப்புகள்

உள்ளன. தமிழ் இலக்கியங்களைப் பற்றியும் தமிழ்ப் படைப்பாளிகளைப் பற்றியும் புத்தொளிகளும் புதிய பரிமாணங்களும் கிடைப்பதற்கு நிறைய இடங்கள் உள்ளன. இவ்வகையில் மேற்கொள்ளத்தக்க சில ஆய்வு முயற்சிகள் வருமாறு:

1. தக்க ஆய்வும் (Influence study) இணைவரை ஆய்வும் (Parallel study): ஓர் இலக்கியத்தின் தாக்கம் இன்னொன்றில் - ஒரு எழுத்தாளரின் தாக்கம் இன்னோர் எழுத்தாளரிடம் - இருப்பது ஐயத்திற்கு இடமின்றி வெளிப்படுத்தப்படுமானால், அது தாக்க ஆய்வாகும். இது மிகவும் கவனமாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். காட்டாக 'மு.வ.வும் காண்டேகரும்' என்னும் இவ்வகையில் எண்ணிப் பார்க்கலாம்.

ஒருவரை ஒருவர் அறியாத இரண்டு நூலாசிரியர்களையோ, ஒன்றோடு ஒன்று தொடர்பற்ற இரண்டு இலக்கியங்களையோ ஒப்பிடுதல் இணைவரை ஆய்வாகும். இதனால் எந்த இரண்டு ஆசிரியர்களையேனும் அல்லது நூல்களையேனும் ஒப்பாய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம் என்பது கருத்தன்று: ஒப்பிட நாம் எடுத்துக்கொள்ளும் ஆசிரியர்கள் அல்லது இலக்கியங்கள் இடையே ஏதேனும் ஓர் அடிப்படை ஒற்றுமை இருக்க வேண்டும். இருவேறு காலத்தே இருவேறுநாடுகளில் எழுதப்பட்டு, இருவேறு பண்பாட்டுப் பின்னணி கொண்டவையாயினும் அவ்விலக்கியங்களை ஒப்பீடு செய்வதன் மூலம் அவற்றுள் ஒன்றைப் பற்றியேனும் புத்தொளியும் புதிய பரிமாணமும் கிடைக்குமானால் அவ் இணைவரை ஆய்வு ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும். சான்றாக, 'கம்பனும் மில்டனும்' என்னும் ஆய்வு இவ்வகையில் கருத்தக்கதாகும்.

2. ஓர் இலக்கியத்தை இன்னோர் இலக்கியத்தோடு மட்டுமன்றி இலக்கியத்தை மற்ற அறிவுத் துறைகளோடு ஒப்பிடுவதும் ஒப்பிலக்கியத்தில் அடங்கும். இவ்வகையில் இலக்கியத்திற்கும் இசை, ஆடல், ஓவியம், சிற்பம் ஆகிய கலைகள், தத்துவம், வரலாறு, சமயம், சமூகவியல்கள், அறிவியல்கள் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கும் உள்ள தொடர்பை ஆராய்வது சுவையான ஆய்வு முயற்சியாக அமையும். காட்டாக, சங்க இலக்கியங்களில் வரலாறு, திருக்குறளில் தத்துவம், சிலப்பதிகாரத்தில் இசை, மணிமேகலையில் பௌத்தம், பாரதிதாசனின் கவிதைகளில் திராவிடக் கோட்பாடு, தி.ஜானகிராமன் நாவல்களில் உளவியல்,

ஜெயகாந்தன் புனைகதைகளில் மார்க்சியம், புதுமைப்பித்தன் கதைகளில் தொன்மம், புதுக்கவிதையில் அறிவியலின் தாக்கம், ஐக்கூ கவிதைகளில் படிமம் என்பன போன்ற தலைப்புகளில் எல்லாம் ஒப்பிலக்கிய ஆய்வுகள் மேற்கொள்ள வழியுண்டு.

3. அடிக்கருத்தியல் (Thematology) என்பது ஒப்பிலக்கியப் பெருந்துறைகளுள் ஒன்றாகும். ஹரி லெவின் போன்ற ஒப்பிலக்கிய அறிஞர்கள் பலர் இதன் இன்றியமையாமையைச் சுட்டிக்காட்டியுள்ளனர். அடிக்கருத்து அலகுகள் (Thernatic units) என்ற நோக்கில் சங்க இலக்கியத்தின் அக, புறத் துறைகளை அணுகினால் நுட்பமான செய்திகள் கிடைக்கும். சான்றாக, அறத்தொடு நிற்றல் என்ற துறை ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை, குறிஞ்சிப்பாட்டு ஆகியவற்றில் பாடப் பெற்றிருக்கும் முறையை ஆராய்ந்து, அதன் கருத்துக்களைப் பட்டியல் இடலாம். தகவல் தொடர்பியல் (Communivation) மற்றும் (Psychology) நோக்கிலும் அறத்தோடு நிற்றல் துறையை அணுகலாம்.

அடிக்கருத்து (Theme), குறிப்பொருள் (Motif) இரண்டிற்கும் இடையே வேறுபாடு உண்டு. அடிக்கருத்து, ஓர் இலக்கியத்தில் இடம்பெறும் பாத்திரத்தோடு (Character) தொடர்புடையது. குறிப்பொருள் இலக்கியத்தில் இடம்பெறும் சூழ்நிலையோடு (Situtaioon) தொடர்புடையது. பேராசிரியர் ச.இரத்தினத்தின் 'இவர்கள் பார்வையில் அகல்யை' என்னும் ஆய்வு முன்னதற்குச் சான்று. 'பாரதியார் கவிதைகளில் கிருதயுகம்' என்பது பின்னைய ஆய்வுப் பார்வைக்குச் சான்று.

4."இலக்கிய வகை ஒவ்வொன்றும் முளைவிட்டு வளர்ந்து, பூத்துக்குலுங்கி, ஒடுங்குகிற ஓர் 'முறைவழிப் படூஉம்' இயல்புடையன" என்பது அறிஞர் ஜான் அடிங்டன் சைமாண்சின் கருத்து. ("Each genre runs a fateful course of germination, expansion, efflorescence and decay") இக்கருத்தின் ஒளியில் இலக்கிய வகைகளின் தோற்றம், வளர்ச்சி, மறைவு ஆகியவை ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் எவ்வாறு அமைகிறது என்பதைக் கண்டறியலாம். இத்தகு இலக்கிய வகை ஆய்வும் ஒப்பிலக்கியத்தின் முக்கியமான கூறுகளில் ஒன்று. தமிழிலும் வடமொழியிலும் பெருங்காப்பியம், வடமொழியிலும் தென்னக மொழிகளிலும் தூது இலக்கியம், தமிழ், மலையாள, கன்னட மொழிகளில் இரங்கற்பா; தமிழ், தெலுங்கு மொழிகளில் சதக

இலக்கியம் என்பன போன்ற தலைப்புகளில் ஒப்பிலக்கிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படலாம்.

5. இலக்கிய வரலாற்றின் ஒரு பகுதியாகவே தோற்றம் பெற்ற ஒப்பிலக்கியம், இலக்கிய வரலாறுகள் செம்மையாக எழுதப்படுவதற்குத் துணை செய்ய முடியும். மேலை நாட்டு ஒப்பிலக்கிய அறிஞர்கள், இலக்கிய வரலாற்றில் மிகுதியும் பயன்படுத்தப்படும் Epoch, Era, Age, Period, Generation, Movement என்பன போன்ற கலைச்சொற்களின் பொருள்களைத் தெளிவுபடுத்தி உள்ளனர். மேலை இலக்கியங்களின் வரலாறுகள் தனித்தனியாகவும் ஒன்றுக்கு மேற்பட்டனவற்றை இணைத்தும் எழுதப்பட்டு வருகின்றன.

ரிமாக் என்ற ஒப்பியல் அறிஞர் புனைவியல் இயக்கத்தின் (Romantic Movement) தோற்றம், வளர்ச்சி, சரிவு ஆகியவை ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன், ஸ்பானிஷ் ஆகிய ஐந்து இலக்கியங்களில் எவ்வாறு அமைந்தது என்பதை நீண்ட கட்டுரை ஒன்றில் ஆராய்ந்துள்ளார். தமிழ், தெலுங்கு, கன்னட மொழிகளில் பக்தி இயக்கத்தின் தாக்கம் பற்றி ஆராய்ந்து தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரை இங்கே நினைவு கூரத்தக்கது. இதுபோல் தென்மொழி இலக்கியங்களை மட்டுமேனும் ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டு இலக்கிய வரலாறு எழுதப்படுமானால், இத்துறையில் இன்னும் தெளிவு பிறக்க வழியுண்டு. பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை 'தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்' என்ற தலைப்பில் தமிழ் இலக்கிய வரலாற்றைத் தமிழ்ச் சிந்தனையின் வரலாறாக எழுதியிருப்பதும் இங்கே மனங்கொள்ளத்தக்கது.

6. 'மொழிபெயர்ப்பு அவசரமாகச் செய்ய வேண்டிய பணிகளில் ஒன்றாகும். தகுதியுள்ள மொழிபெயர்ப்புக் கழகமொன்று நிறுவப் பெற வெண்டுவது அவசியம். மொழி பெயர்ப்புக் கழகம் நிறுவுவதில் நாம் காலம் தாழ்த்துதல் கூடாது... இப்பணியை நமது கல்வியாளர்கள் மிகுதியாகக் கவனித்துத் தக்கபடி போற்றவில்லை' என மொழிபெயர்ப்புப் பணியின் இன்றியமையாமையைப் புலப்படுத்துவார் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை (வையாபுரிப்பிள்ளை நூற்களஞ்சியம், மூன்றாம் தொகுதி, ப.301).

மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபடுவதைப் போன்று, ஒப்பிலக்கிய நோக்கில் மொழிபெயர்ப்பு ஆய்வில் ஈடுபட

வேண்டியதும் இன்றைய சூழலில் மிகவும் முக்கியமானதாகும். மொழிபெயர்ப்பு (Translation), மொழியாக்கம் (Transcreation), தழுவல் (Adptation) என்றாற்போல் பல்வேறு நிலைகளில் ஆய்வை மேற்கொள்வதற்கு வாய்ப்புகள் உள்ளன, 'தமிழில் ஷேக்ஸ்பியர் மொழிபெயர்ப்புகள்', தமிழில் உமர்கயாம் மொழி பெயர்ப்புகள்', 'தமிழில் கலீல் ஜிப்ரான் மொழிபெயர்ப்புகள்' என்றாற்போல் பல்வேறு தலைப்புகளில் ஆய்வுகள் மேற்கொள்ள வழியுண்டு. வாய்ப்பும் உண்டு.

முத்தாய்ப்பாக, தனிநாயக அடிகள் ஓர் இடத்தில் குறிப்பிட்டிருப்பது போல், "இத்துறையில் (ஒப்பிலக்கியத் துறையில்) உழைப்பவர்க்குச் செயற்பரப்பு அகன்றது. வாய்ப்புக்கள் அனந்தம்".

****

தமிழ் ஆராய்ச்சியில் இன்றைய நிலை

பேரா.கு.வெ.பாலசுப்பிரமணியன்,
முன்னைப் பதிவாளர்,
இலக்கியத்துறைத் தலைவர்,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தமிழ் ஆராய்ச்சி என்பது என்ன? தமிழின் கண் அமைந்த பலதுறைகளைக் குறித்தும் எழுந்த ஐயங்களையும், சிக்கல்களையும் துருவி நோக்கி உண்மை காணும் முயற்சி என்ற பொருளில் இத்தொடர் ஏழன் உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகும். தமிழாராய்ச்சி வரலாற்றை முதற்கண் வரைந்த அறிஞர் ஏ.வி.சுப்பிரமணிய ஐயர்.

"தமிழ்மொழி அதிலுள்ள இலக்கியம் இலக்கணம் பற்றிய கொள்ளைகள், தமிழ்ப்புலவரின் காலம், வாழ்க்கை, நூல்களின் தன்மை, தரம், அவை எழுதப்பெற்ற சூழ்நிலை, புலவருக்கும் அவரை ஆதரித்த அரசர், வள்ளல்கள் முதலியோருக்கும் இடையே நிகழ்ந்த உறவு, ஆகியவைகளைப் பொருளாகக் கொண்டு விருப்பும் வெறுப்பும் இன்றி, நம்பத்தகுந்த ஆதாரங்களை வைத்துத் தக்க பரிசீலனை முறைகளைக் கையாண்டு தற்காலப் பண்புடன் ஆராய்ந்து உண்மையை நாடும் முயற்சியே தமிழ் ஆராய்ச்சி ஆகும்".

என்று கூறுவது 'தமிழ் ஆராய்ச்சி' என்பதற்குப் பொருத்தமான விளக்கமாக அமையும். இத்தகைய தமிழ் ஆராய்ச்சி என்று தொடங்கி நிகழ்ந்திருக்குருக்கும்? ஏதோ ஆராய்ச்சிப் பட்டங்கள் தோன்றிய பின்புதான் தமிழில் ஆராய்ச்சியே தொடங்கிற்று என்று எண்ணுவது பெரும்பிழை. "நவில்தொறும் நூல் நயம்போல" (783) என்ற உவமத்தானும்,

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

என்ற தெரிந்து தெளிதற் குறளானும் (504) திருவள்ளுவர், வாழ்க்கையில் ஆராய்ச்சி ஓர் இன்றியமையாத் தொழிற்கூறு எனக் காட்டியுள்ளமை கருத்தாகும். 'செம்பொருள் கண்டார்' (91) நல்லவை நாடி இனிய சொலின் (96) நயன்தூக்கின் (103) அஃகி அகன்ற அறிவு (175) திறன் தெரிந்து கூறப்படும் (186) அரும்பயன் ஆயும் அறிவினார் (198) யாம் மெய்யாக் கண்டவற்றுள்

(300) மருள்நீங்கி மாசறு காட்சியவர் (352) ஐயத்தின் நீங்கித் தெளிந்தார் (300) மருள் நீங்கி மாசறு காட்சியவர் (352) ஐயத்தின் நீங்கித் தெளிந்தார் (353) மெய்ப்பொருள் காண்ப தறிவு (355) ஒர்த்துள்ளம் உள்ளதுணரின் (357) நுண்மாண் நுழைபுலம் (407) நுண்பொருள் காண்பதறிவு (424) எண்ணித் துணிக (467) சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல் (671) ஐயப்படா அது அகத்தது உணர்வானை (702) குறிப்பிற் குறிப்புணர்வாரை (703) என்ற திருக்குறள் தொடர்கள் ஆராய்ச்சி என்பது மாந்தர்தம் இயற்பண்பாக இருந்தமை காட்டும். நூலை அறிஞர் அவை முன் அரங்கேற்றுதல் அக்கால நூலாராய்ச்சி முறையாகும். பாயிரம் என்பது ஆராய்ச்சியின் மதிப்பீடாக அளிக்கப்பெறும் முத்திரையாகும். இவ்வாறு பல நூற்றாண்டுகள் தொடர்ந்த தமிழாயராய்ச்சியின் இன்றைய நிலை இங்கு இனி ஆராயப்பெறும்.

பலதுறை ஆய்வுகள்

ஒரு காலத்தில் செய்யுட்களே பெரிதும் ஆராயப்பெற்ற நிலையிலிருந்து இன்று இலக்கியத்தின் பல வகைமை ஆய்வு சிறப்புற நிகழ்கிறது. இலக்கிய ஆய்வு, சங்க இலக்கிய ஆய்வு, திருக்குறள் ஆய்வு காப்பிய ஆய்வு, பக்தி இலக்கிய ஆய்வு, சிற்றிலக்கிய ஆய்வு, உரைகளின் ஆய்வு, உரைநடை ஆய்வு, புதின ஆய்வு, சிறுகதை ஆய்வு, ஒப்பிலக்கிய ஆய்வு, தனிப் புலவர் பற்றிய ஆய்வு, இலக்கிய கொள்கை பற்றிய ஆய்வு எனப் பற்பல கிளைகளாகப் பிரிந்து நிற்கிறது. இலக்கண ஆய்வும், ஒலியியல் ஆய்வு, வரிவடிவ ஆய்வு, சொல்லாய்வு, பொருளாய்வு, தொடர்ாய்வு, ஒப்பிலக்கண ஆய்வு, யாப்பாய்வு, அணியாய்வு எனப் பல பிரிவுகளாகியுள்ளது. இலக்கிய ஆய்வில் இலக்கிய இயக்கங்களைக் குறித்த ஆய்வு சிறப்பிடம் பெற்றிருக்கின்றது. அவ்வகையில் இக்கட்டுரை பின் நவீனத்துவம் (Post modernism) என்னும் பின்னைப் புத்தியம் பற்றிச் சில கருத்துக்களை வழங்குகின்றது.

பின்நவீனத்துவம் - ஒரு விளக்கம்

ஸ்பானிய இலக்கியத் திறனாய்வாளரான பெட்ரிகோ-டி-ஓனிஸ் 1934 ஆம் ஆண்டு வெளியிட்ட கவிதைத் தொகுப்பில் Post Modernism என்ற சொல்லை அறிமுகப்படுத்தினார். ஸ்பெயின், இங்கிலாந்து, அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா எனப்பல இடங்களிலும் பரவியிருந்து நவீனத்துவம் என்பது விளக்கப் பெற்றது. டாயின்பி என்ற வரலாற்றாசிரியர் மேற்கத்திய சமூகங்கள் நவீனத்துவம்

பெற்ற காலம் நடுத்தர வர்க்கத்தினர் சமூக மேனிலை அடைந்த காலம் என்கிறார். பின்நவீனத்துவக் காலத்தில், மேற்கில் தொழிலாள வர்க்கம் எழுச்சி பெற்றது. மேற்கு நாடுகளில் அல்லாதவற்றில் கற்றறிந்தவர்களின் வர்க்கம் மேலோங்கி மேற்கை அறைகூவுவதாக அமைந்தது. இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் இந்தச் சமூக மாற்றம் நிகழ்ந்தது. பின்நவீனத்துவத்தைச் சமூக வரலாற்றியல் நோக்கோடு ஆராய்ந்தவர்கள் அதனை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிலவிய அழகியல் சார்ந்த பாடுபொருள், நடையமைப்பு ஆகியவற்றுக்கு மாறானதாகக் கண்டனர். இலக்கிய நோக்கில் பின்நவீனத்துவத்தை எண்ணியவர்கள், அது நவீனத்துவத்திற்குக் கலைத்திறனோடு கூடிய மறுவிளைவு எனக்கண்டனர். பின்நவீனத்துவத்தின் பண்புகளாகக் கீழ்க்காண்பனவற்றைக் கூறுகின்றனர்.

1. மரபு, வழியாக உயர்ந்தோர் எனப்பெறுவோரால் நிறுவப்பட்ட கோட்பாடுகள் ஆகியவற்றை மறுப்பது.
2. பண்டைய முடிவுகளை முற்றிலுமாக மறுப்பதும் அவற்றுக்கு எதிராகக் கலகம் செய்வதும் குறிக்கோலாகக் கொண்டது.
3. கலை என்பது அழகியல் சார்ந்தது என்பதை மறுப்பது. கலை என்பது ஓர் எதிர்நிலை வடிவம் (Anti form) எனக் கூறுவது.
4. பழைய நிகழ்வுகளை ஓர் எதிர்நிலை நோக்கோடு மீளப் பார்க்கத் தூண்டுவது.
5. பழைய பழக்கங்களை இலக்கியங்களை அங்கதநோக்கில் குத்திக்காட்டி அவற்றுக்கு மறுவார்ப்புச் சமைப்பது.
6. நிறுவனங்களையும் அரசியலமைப்பின் நடைமுறைகளையும் எள்ளி நகையாடுவது.
7. முன்பு எழுதப்பட்டது போலன்றி வரலாற்றை அதன் உண்மை நோக்கில், கணிப்பது.
8. இஃது ஒரு முரண்பட்ட நோக்கு எனக் கருதத் தகுவது.

1910, முதல் 1930 வரையிலான ஆங்கில எழுத்தாளர்களான எஸ்ரா பவுண்டு, பிரான்ஸ் காஃப்கா, வர்ஜினியா உல்ப், ஜேம்ஸ் ஜாய்ஸ், ஏட்ஸ், டி.எச்.லாரன்ஸ், டி.எஸ்.இலியட் போன்றோர் நவீனத்துவப் பாங்கில் எழுதினர். முதல் உலகப்போர் பண்பாட்டு நோக்கிலும் தனிமனித நோக்கிலும் இவர்களிடம் பல அதிர்வுகளையும் உலைச்சல்களையும் ஏற்படுத்தியதன் விளைவே இந்த நவீனத்துவ நோக்கமாகும். எஸ்ரா பவுண்ட் 'புதிதுசெய்'

என்று கூக்குரலிடுகிறார். பாரதி 'வேதம் புதிதுசெய்' என்கிறார். படிமங்கள் குறியீடுகள் தொன்மக் கருத்தியல் ஆகியவற்றை நாட்டுப்புற வழக்காறுகளிலிருந்தும், புராண இதிகாச மரபுகளிலிருந்தும் உருவாக்கிக் கொண்டு, மரபினை ஒரு பகுத்தறிவு நோக்கோடு பார்க்க நவீனத்துவம் வழிவகுத்தது. அரசமரபுகளைக் கீழே தள்ளி குடியரசு மரபுகளைப் போற்றியது. பெண்கள், அடிமைகள் உரிமை கொள்வதை வற்புறுத்தியது. இந்த நவீனத்துவக் கட்டுமானத்தின் மேல்நிலையாக எழுந்த பின்நவீனத்துவம், நவீனத்துவப் பாங்கை மாறுபாடுகளுக்கு உட்படுத்துகிறது. அல்லது அதனை மிகைப்படுத்திக் காட்டுகிறது.

தமிழில் பின்நவீனத்துவம்

யதார்த்தவாதம் எனப்படும் நடப்பியலைப் புறக்கணித்து எழுந்தது பின்நவீனத்துவம். மரபை உடைத்து வேறு எதையும் பின்பற்றாத முழு உரிமையோடு நடையிடும் பின்நவீனத்துவத்தைத் தமிழில் பாரதியாரே தொடங்கி வைத்தார் எனலாம்.

பாவகை, பா இனம், எதுகை மோனைத் தொடைகளையெல்லாம் புறக்கணித்து அவர் எழுதிய 'காட்சி' முதலானவற்றை பாரதியார் வசனம் என்றோ வசனகவிதை என்றோ கூறவில்லை. இவற்றையும் அவர் கவிதை என்றே கூறுகிறார். "எதுகை மோனையில்லாத கவிதைதான் உலகத்திலே பெரிய பாஷைகளில் பெரும்பகுதியாகும்" என்று அவரே கூறுகிறார்.

ஒரு வீட்டு மேடையிலே ஒரு பந்தல், ஓலைப்பந்தல்
தென்னோலை.
குறுக்கும் நெடுக்குமாக ஏழெட்டு மூங்கிற் கழிகளை
சாதாரணக் கயிற்றால் கட்டி மேலே தென்னங்
கிடுகுகளை விரித்திருக்கிறது.
ஒரு மூங்கிற் கழியிலே கொஞ்சம் மிச்சக் கயிறு
தொங்குகிறது.
ஒரு சான் கயிறு.

இப்படித் தொடங்குகிறது 'காற்று' என்னும் கவிதை. அவரே தொடர்கிறார். ஒரு கயிறா சொன்னேன்? இரண்டு கயிறுண்டு

ஒன்று ஒருசாண்,மற்றொன்று முக்கால் சாண்
ஒன்று ஆண்; மற்றொன்று பெண், கணவனும் மனைவியும்
அவை இரண்டும் ஒன்றை ஒன்று காமப் பார்வைகள்
பார்த்துக் கொண்டும் புண்சிரிப்புச் சிரித்துக்
கொண்டும் வேடிக்கைப் பேச்சுப் பேசிக்கொண்டும்
ஈஸப் போக்கிலே இருந்தன.

இரண்டு சணல் கயிற்றுத்துண்டுகளுக்கிடையில் காதல், அன்புத் தழுவல், நாணம் ஆகியன எல்லாம். அத்துண்டுகளுக்குக் கந்தன் வள்ளி என்று பெயர். வள்ளியம்மை என்ற துண்டு துயில் கொண்டு விடுகிறது. அப்போது காற்று வீசுகிறது. காற்றுத் தேவன் சொல்கிறான்.

“மகனே! ஏதடா கேட்டாய்? அந்தச் சிறிய கயிறு உறங்குகிறதோ என்று கேட்கிறாயா? இல்லை. அது செத்துப்போய் விட்டது. நான் ப்ராண சக்தி. என்னுடனே உறவு கொண்ட உடல் இயங்கும். என்று நவில்லாதது சவம். நான் ப்ராணன். என்னாலேதான் அச்சிறு கயிறு உயிர்த்திருந்து சுகம் பெற்றது. சிறிது களைப்பெய்தியவுடனே அதை உறங்க இறக்க விட்டுவிட்டேன். துயிலும் சாவுதான். சாவும் துயிலே. நான் விளங்குமிடத்தே அவ்விரண்டும் இல்லை. மாலையில் வந்து ஊதுவேன். அது மறுபடி பிழைத்துவிடும்.”

இதில் புராணம் இருக்கிறது. அகப்பொருள் இருக்கிறது. மெய்ப்பொருள் இருக்கிறது. குறியீடு இருக்கிறது. ஆனால் இவையெல்லாம் பழைய வார்ப்பில் இல்லை. அவை வெறும் கருவிகளே. அவற்றின் மீதாக வரும் ஒரு நவீனத்துவம் யாப்பினும் பாடுபொருளினும் அமையக் காணலாம். இந்த நவீனத்துவத்தில் செத்தது மறுபடி பிழைத்துவிடும்.

மேற்குறித்த பகுதியை நாம் முழுமையாக இதுவரை ஆய்வு செய்யவில்லை. இதைச் சிலர் ‘வசனக்கவிதை’ என்று கூறிவிட்டனர். சிலர் இது சக்தி வழிபாடு என்றனர். உலகத்தின் தோற்ற ஒடுக்கம், உயிரின் தோற்றம் மறைவு, இயற்கையின் மாற்றம் சீற்றம், எல்லாமே இப்பாட்டில் இருக்கின்றன. உலகச் சமயங்கள் கூறும் தத்துவமெல்லாம் இதிலே இருக்கிறது. காற்று மீண்டும் வரும்போது சணல் துண்டு பிழைத்தெழுந்து இயங்குவது போல இறந்தவரையும் காற்று உயிர்ப்பிக்கும் என்கிறது கவிதை. பிறந்தது இறந்தாக வேண்டும். இறந்தவர் பிழைப்பதில்லை என்ற மரபை உடைத்தெறிகிறது கவிதை. மேலும் மேலும் ஆராய்ச்சி இவ்வாறு செல்ல வேண்டும்.

புதுமைப்பித்தன் கதைகளில் பின்நவீனத்துவம் மிகத்தெளிவாகவும், நம்முடைய எதிர்பார்ப்பிற்கு மேலாக வெளிப்படையாகவும் அமைந்திருக்கிறது. அந்தக் கந்தசாமிப் பிள்ளையின் அறிவுக்கும், திறமைக்கும் முன் சகலகலா வல்லவனான கடவுள் என்ன செய்ய முடியும்? வளர்ந்து வரும்

மனிதனின் அறிவு அனுபவம், உலகத்தில் வாழ்க்கையைத் தொடர்வதில் உள்ள பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ளும் திறம் ஆகியன கடவுளுக்கில்லை. அவர் படைத்த மனிதனிலிருந்து இன்றைய மனிதன் மிகவும் விலகி வந்துவிட்டான். அவர் மார்க்கண்டேயனைப் போல அப்படியே இருக்க அவர் படைத்த உலகமோ அவனால் அறியப்படாத வளர்ச்சியைப் பெற்று விட்டது. ‘தொலைவிலிருந்து வேண்டுமானால் வரம் கொடுக்கலாம். இந்த மனிதர்களோடு வாழ முடியாது’ என்று கடவுள் தன் நிலைக்குத் திரும்பி விடுகிறார். கடவுட் கோட்பாட்டைக் குறித்த அங்கதம் என்பதைவிட இன்றைய மனிதனின் போலித்தனமான வாழ்வியலை இக்கதை வெளிப்படுத்துகிறது. பணம் தேடுதலில் மனிதனின் வாழ்க்கை மதிப்புகளைக் கரைத்துவிட்ட பாங்கை இக்கதை உணர்த்துகிறது.

பின்நவீனத்துவம் - ஓர் எளிய விளக்கம் நவீனத்துவம் கொண்டிருந்த கருத்தார்ந்த (Serious) ஒரு போக்கைப் பின்நவீனத்துவம் கொள்ளாமல் விளையாட்டுப் பாங்கான போக்கில் ஒன்றை அணுக வற்புறுத்தியது. எழுதியவன் கருத்து எதுவாக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். என் பார்வையில் எனக்குத் தோன்றும் பொருள் இதுதான். இதே போல உனக்குத் தோன்றும் பொருளையும் நீ கூறலாம் என்று வரையறைகளைத் தாண்டிச் செல்வது பின் நவீனத்துவம். ஆலன் ஒயில்டு கூறுவது போல ஒழுங்குகளை நிலைப்படுத்திக் காண்பதைப் புறக்கணித்து இயக்கத்தன்மைக்கு (Kinetive Sense of orderliness) இன்றியமையாமை கொடுப்பதே பின்நவீனத்துவமாகும்.

****

பரிமேலழகரின் உரைத்திறன்

முனைவர் சா. சிற்றரசு,
இணைப்பேராசிரியர்,
அரசு ஆடவர் கல்லூரி,
கும்பகோணம்.

திருக்குறள் பன்முக நோக்கில் அமைந்த பேரற நூல். அரசியல் நூல், ஞானநூல், கவிச்சுவை நிரம்பிய காவியம், காமநூல், பேரின்ப நூல், வாழ்க்கை வழிகாட்டு நூல் என அதன் பெருமை விரிந்து செல்லும். 'நவில்தொறும் நூல் நயம்' வள்ளுவப் பெருந்தகை கூறியதற்கு ஏற்ப திருக்குறளைக் கற்பிக்கக் கற்பிக்கப் புதுப்பதுப் பொருள்கள் தோன்றும் இயல்பினது. திருக்குறளுக்குப் பழைய உரைகாரர் பதின்மர் இருநததாகப் பழம்பாடல் ஒன்று கூறுகின்றது. அப்பதின்மலர் தொடங்கி இன்றுவரை நூற்றுக்கணக்கில் திருக்குறளுக்கு உரையெழுதி உள்ளனர். அவை எத்தனை இருப்பினும்,

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ-நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரிந்தவுரை யாமோ தெளி

எனப் போற்றப்படுவது பரிமேலழகர் உரையேயாகும்.
பரிமேலழகரின் உரைத்திறன்

தமிழ் இலக்கிய, இலக்கண உலகில் உரையாசிரியர்களின் பணி அளப்பரியது. அவர்கள் தாம் எடுத்துக் கொண்ட இலக்கிய, இலக்கணக் கடலில் மூழ்கி முத்தெடுத்துத் தந்தவர்கள் உரையாசிரியர்களின் துணை கொண்டு இலக்கிய, இலக்கணங்களைக கற்பது பேரன் ஒருவன் தன் தாத்தாவின் தோள்மீது அமர்ந்து திருவிழாக் காட்சியைக் காண்பது போன்றதாகும். திருவள்ளுவர் நோக்கில் கூறுவதென்றால் குன்றின் மீது ஏறிநின்று யானைப் போரைக் காண்பது போன்றதாகும். இத்தகு நோக்கில் பரிமேலழகர் உரையை அணுகும் போது அதிகாரவிளக்கம் கூறுதல், அதிகாரத் தொடர்பு கூறுதல், அடைமொழிகளுக்கு விளக்கம் கூறுதல், இலக்கணம் கூறுதல், சொற்களுக்குப். பொருள் விளக்கம் கூறுதல், நுட்பம் கூறுதல், இலக்கிய மேற்கோள் காட்டி விளக்குதல், காப்பிய நிகழ்ச்சிகளைச்

சான்று காட்டுதல், உவமை கூறி விளக்குதல், மாறுபட்ட உரை கூறுதல், மறுப்புக் கூறுதல், பிறர் உரையை மேற்கோள் காட்டல் எனப் பல்வகை. செழுமையான உரைநடை உத்தியை நாம் காணமுடிகிறது. அவற்றை இனித் தொடர்ந்து நோக்கலாம்.

அதிகார விளக்கம்

நீத்தார் பெருமை என்பது தற்காலத்தில் உயிர் நீத்தவர் எனத் தவறான பொருளில் வழங்கப்படுகிறது. பரிமேலழகர் நீத்தார் பெருமை என்பதற்கு முற்றுத் துறந்த முனிவரது பெருமை என விளக்கம் கூறுகிறார்.

உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றுமாகப் பேசுவது இன்றைய உலக வழக்கு. பரபரப்பான உலகில் கடுஞ்சொற்களே கடுகி வரும் இக்காலத்தில் இனியவை கூறலுக்குப் பரிமேலழகர் தரும் விளக்கம் கற்கண்டாய் இனிக்கக் காணலாம். இனியவை கூறல்: அஃதாவது, மனத்தின்கண் உவகையை வெளிப்படுப்பனவாகிய இனிய சொற்களைச் சொல்லுதல்: முகத்தில் தோன்றுவது சிரிப்பு, உள்ளத்தில் தோன்றுவது உவகை. இன்சொல் என்பது உள்ளத்தை வெளிப்படுத்துவது என்னும் பரிமேலழகர் விளக்கம் எண்ணி எண்ணி மகிழத்தக்கதாம்.

அதிகார வைப்பு

திருக்குறளில் உள்ள 133 அதிகாரங்களும் ஓர் ஒழுங்குமுறைப்படி வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் வைப்பு முறைக்குப் பரிமேலழகர் கூறும் காரணங்கள் அவரது நுண்மாண் நுழைபுலத்தைப் புலப்படுத்துகின்றன.

வாய்மை என்னும் அதிகாரம் கூடாவொழுக்கம் கள்ளாமை என்ற இரண்டு அதிகாரங்களுக்குப் பின்னர் வைக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையும் பொய் என்பது காமம் பற்றியும் திருட்டு என்னும் களவு பற்றியுமே தோன்றும். இந்நுட்பத்தை உணர்ந்த பரிமேலழகர், “வாய்மை. அஃதாவது மெய்யினது தன்மை பெரும்பான்மையும் காமமும் பொருளும் பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கலின் இது கூடாவொழுக்கம் கள்ளாமைகளின் பின் வைக்கப்பட்டது” என கள்ளாமை அதிகாரத்தின் பின் வாய்மை அதிகாரம் வைக்கப்பட்டதிற்கு உரிய காரணத்தைக் கூறுகிறார். அடைமொழிகளுக்கு விளக்கம் கூறுதல்

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

எல்லா நூல்களையும் கற்றவர்க்கு அக்கல்வி அறிவான் ஆய பயன் யாது? மெய்யறிவினையுடையானது நல்ல தாள்களைத் தொழாராயின். இவ்வாறு குறளுக்கு உரை காணும் பரிமேலழகர் இறைவனின் திருவடிக்கு அடைமொழியாக வரும் நல்ல என்பதற்கு விளக்கம் கூறும்போது. "பிறவிப் பிணிக்கு மருந்தாகலின் நற்றாள் என்றார்" என விளக்கம் கூறி இறைவன் திருவடியே பிறவியை அறுக்கக் கூடிய என்ற இறைக்கொள்கையை நிலைநாட்டுகிறார்.

சொல்லுக்குப் பொருள் கூறுதல்

தொல்காப்பியர், "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" எனக் கூறுகிறார். இன்றையச் சூழல் எவ்வாறு உள்ளது. தமிழன் என்று பிதற்றிக் கொள்ளும் நம்மவர்க்கு ஒரு தமிழ்ச் சொல்லுக்குக் கூடப் பொருள் சொல்லத் தெரியாத நிலை. இதனை அறிந்த பரிமேலழகர் அக்காலத்திலேயே ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் கூறும் திறம் வியப்பிற்குரியதாகும்.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

இக்குறளுக்கு. "நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது பெருமையை நிலவுலகத்தின்கண் அவராணையாகச் சொல்லிய மந்திரங்கள் கண்கூடாகக் காட்டும்" என உரைகாணும் பரிமேலழகர், நிறைமொழியென்பது அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயனைப் பயந்தே விடும் மொழி எனச் சொல்லுக்கும் விளக்கம் கூறுகிறார்.

இலக்கணம் கூறுதல்

இலக்கணத்தையும், இலக்கியத்தையும் இணைத்துப் பார்க்கும் போது ஒவ்வொன்றும் தனித்தனிச் சுவையைத் தரும். இச்சுவையைக கண்டு சுவைப்பதில் வல்லவர் பரிமேலழகர்.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

மலரின் கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார் எல்லா உலகிற்கும் மேலாய வீட்டுலகின் கண் அழிவின்றி வாழ்வார். இது குறளுக்குப் பரிமேலழகர் கூறும் உரை.

இக்குறளில் காலவழு உள்ளது. மலர்மிசை ஏகுவான் என எதிர்காலத்தில் அமையவேண்டிய சொல், ஏகினான் என இறந்த காலத்தில் அமைந்துள்ளது. இறைவன் நினைப்பவர் உள்ளத்தில் நினைத்த வடிவில், நினைத்த நேரத்தில் வந்து தங்குபவன்.

அதனால் திருவள்ளுவர் விரைவு காரணமாக காலத்தை மாற்றி அமைத்துள்ளனர். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் ஒருவன் தன் நண்பன் கூப்பிட்ட போது இதோ சாப்பிட்டு விட்டேன் வந்துவிட்டேன் என விரைவு காரணமாகக் கூறுவது போன்ற நிகழ்ச்சியாகும் இது. இஃது இலக்கணப் பிழையன்று காலவழுவமைதியாகும். இந்நுட்பத்தைக் காணும் பரிமேலழகர்.

“அன்பான் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவன் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின் ஏகினான் என இறந்த காலத்தார் கூறினார். என்னை வாராக் காலத்தும் நிகழும் காலத்தும் ஓராங்கு வருஉ வினைச்சொற் கிளவி இறந்தகாலத்துக் குறிப்பொரு கிளத்தல், விரைந்த பொருள என்மனார் புலவர்” என்ப தோத்தாகலின் எனத் தொல்காப்பிய நூற்பாவை மேற்கோள் காட்டி வழுவமைக்கும் திறம் பாராட்டத்தக்கதாகும்.

நுட்பம் கூறுதல்

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தா றோம்பல் தலை

ஒருவன் தான் தேடிய செல்வத்தைத் தென்புலத்தார் தெய்வம், விருந்தினர், சுற்றத்தார் இவர்களுக்கும் செலவு செய்ய வேண்டும். கடைசியாகத் தனக்குச் செய்து கொள்ள வேண்டும் என்கிறார் வள்ளுவர். ஆனால் அரசனுக்கு வரிகட்டுவது பற்றிக் குறிப்பிடவில்லை. இந்த நுட்பத்தை அறிந்த பரிமேலழகர் அரசனுக்கு வரிப்பொருள் கட்டாயம். அதைக் கட்டாவிட்டால் தானே வீரர்களை அனுப்பிப் பெற்றுக் கொள்வான் மற்றச் செலவுகளைச் செய்யலாம் செய்யாமல் இருக்கலாம் என்பதைக் குறிப்பாக உணர்த்த, அரசனுக்கு இறைப்பொருள் ஆறிலொன்றாயிற்று என விளக்கம் கூறுகிறார்.

இலக்கிய மேற்கோள்கள்

பரிமேலழகர் தமது உரையை வளப்படுத்த சங்க இலக்கியங்கள், நீதிநூல்கள், காப்பியங்கள், இலக்கணநூல்கள் என அனைத்து வகை நூல்களின் மேற்கோள் காட்டி விளக்கம் தருகிறார்.

இல்வாழ்க்கை இனிதே நடைபெற அன்பு வேண்டும். அந்த அன்புடைமை அதிகாரத்திற்கு விளக்கம் கூறவந்த, பரிமேலழகர், “வாழ்க்கைத் துணைமேல் அன்பில் வழி இல்லம் இனிது நடவாமை”, “அறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை” என்பதனாலும் அறிக

எனச் சிலப்பதிகாரக் கண்ணகியின் வருத்தத்தை மேற்கோளாகக் காட்டி விளக்குகிறார்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

அன்புடையார் தம் உடம்பைக் கூடப் பிறர்க்குத் தருவர் என்றும் இக்குறட்பாவின் கருத்துச் சான்றாகப் புறாவிற்காகத் தன்னையே கொடுத்த சிபிச்சக்கரவர்த்தியின் வரலாறு கூறும் "தன்னகம் புக்க குறுநடைப் புறவின், தபுதியஞ்சிச் சீரை புக்கோன்" என்ற புறநானூற்று அடிமை மேற்கோள் காட்டுகிறார்.

காப்பிய நிகழ்ச்சிகளைச் சான்று காட்டல்

பேராண்மை என்ப தறுகணொன் வற்றக்கால்
ஊராண்மை மற்றன் எஃகு

பேராண்மை என்று சொல்லக்கூடிய வாளுக்குக் கூர்மை பகைவனுக்குத் துன்பம் வந்த போது அவன்மேல் இரக்கம் கொண்டு அவனுக்கு உதவி செய்தலாகும். இப்பண்பைப் பாரதியாரும் "பகைவனுக்கு அருள்வாய் நன்நெஞ்சே பகைவனுக்கு அருள்வாய்" எனப் பாராட்டுகிறார். இச்சீரிய பண்பிற்குப் பரிமேலழகர் இராமன் இராவணனுக்குக் கொடுத்த வாய்ப்பைச் சான்றாகக் காட்டுகிறார்.

"ஊராண்மை உபகாரியாந் தன்மை. அஃதாவது இலங்கையர் வேந்தன் போரிடைத் தன்தானை முழுதும்படத் தமியனாய் அகப்பட்டானது நிலைமை நோக்கி அயோத்தியது இறை மேற்சொல்லாது" இன்று போய் நாளை நின்தானையோடு வா" என விட்டாற் போல்வது என்பது பரிமேலகரின் அவ்வுரைப் பகுதியாகும்.

எல்லா வகையிலும் ஆராய்ந்து தெளிந்து ஒருவனிடம் ஒரு வினையை ஒப்படைத்த பின்னும் அந்த வினையின் இயல்பாய் வேறுபடும் மாந்தர் உலகத்துப் பலராவர்.

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்

என்பது குறள். இங்குக் கொடுத்த பணியின் காரணமாக மனம் மாறியதற்குச் சீவக சிந்தாமணியில் வரும் கட்டியங்காரனைப் பரிமேலழகர் எடுத்துக் காட்டுகிறார்.

"கட்டியங்காரன் போல அரச இன்பத்தினை வெஃகி விகாரப் படுவதல்லது அதனைக் குற்றமென் றொழிந்து தம் இயல்பில் நிற்பார் அரியராகலின் 'வேறாகும் மாந்தர் பலரென்றார்' என்பது பரிமேலழகரின் உரைப்பகுதியாகும்.

உவமை கூறி விளக்கல்

பரிமேலழகர் குறள் கருத்தை விளக்குவதற்காக உவமையைப் பயன்படுத்தும் முறையையம் கையாள்கிறார்.

சென்ற இடத்தாற் செலவிடா தீதொரிஇ
நன்றின்பா லூய்ப்ப தறிவு

மனத்தை அது சென்ற புலத்தின்கண் செல்லவிடாது அப்புலத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து தீயதனின் நீக்கி நல்லதன்கண் செலுத்துவது அறிவு. இவ்வாறு குறளுக்கு உரைகூறும் ஆசிரியர், "குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன்போல வேறாக்கி மனத்தைப் புலமறிந்து செலுத்துவது அறிவென்றார்" என உவமை கூறி விளக்குவது அறிந்து இன்புறத்தக்கச் சான்றாகும்.

மாறுபட்ட உரை

பிற உரையாசிரியர்களினின்று மாறுபட்ட சிந்தனையிலும் பரிமேலழகர் உரை காணும் திறம் நயமாக உள்ளது.

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று

இக்குறளுக்கு உரையாசிரியர் பலரும், எத்தகையச் செயலைச் செய்து விட்டோம் என்று வருந்தும் படியான செயலைச் செய்யற்க. அப்படித்தவறி செய்துவிட்டால் மீண்டும் அதுபோன்ற செயலைச் செய்யற்க என்ற அடிப்படையில் உரைகண்டனர். ஆனால் பரிமேலழகர் தவறான செயலைச் செய்யாதே அப்படிச் செய்து விட்டால் அதையே நினைந்து வருந்தாதே என உரைகாண்கிறார்.

வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்

தலைவன் வந்தாலும் கண்கள் தூங்கவில்லை. வராவிட்டாலும் கண்கள் தூங்கவில்லை. வாராக்கால் தூங்காமைக்குக் காரணம் பிரிவுத் துன்பம். வந்த போது தூங்காமைக்குக் காரணம் தலைவி இன்பம். இது மற்ற உரையாசிரியர்கள் உரை. பரிமேலழகர் இவர்களின் மாறுபட்டு வந்தக்கால் தூங்காமைக்குக் காரணம் மீண்டும் பிரிந்து சென்று விடுவாரோ என்ற அச்சம் என உரைகாணும் திறம் சுவை உடையதாகும். பரிமேலழகர், "அறமாவது மனுமுதலான நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும்" என வடமொழிச் சார்பாகவும் உரை காண்கின்றார்.

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செருத் துண்ணாமை நன்று"

எனத் தெளிவாக வள்ளுவர் உயிர்க்கொலை கூடாது எனக் கூற பரிமேலழகர் அவிசொரிந்து என்றமையின் வேள்விக் கண் கொலையண்மை அறிக" என்று ஆசிரியர் கருத்தை மறுத்து தன் வடமொழிக் கருத்தை நிலைநாட்டுவார். இருப்பினும் இவற்றைத் தள்ளி,

குணம்நாடி குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்

என்பதற்கேற்ப நன்மை நாடி இலக்கியச் சுவை காண்பது நலம். தமியனாய் அகப்பட்டானது நிலைமை நோக்கி
அயோத்தியது இறை மேற்செல்லாது" இன்று போய் நாளை நின்தானையோடு வா" என விட்டாற் போல்வது என்பது பரிமேலழகரின் அவ்வுரைப் பகுதியாகும்.

எல்லா வகையாலும் ஆராய்ந்து தெளிந்து ஒருவனிடம் ஒரு வினையை ஒப்படைத்த பின்னும் அந்த வினையின் இயல்பாய் வேறுபடும் மாந்தர் உலகத்துப் பலராவர்.

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையாவர்
வேறாகும் மாந்தர் பலர்

என்பது குறள். இங்குக் கொடுத்த பணியின் காரணமாக மனம் மாறியதற்குச் சீவக சிந்தாமணியில் வரும் கட்டியங்காரனைப் பரிமேலழகர் எடுத்துக் காட்டுகிறார். "கட்டியங்காரன் போல அரச இன்பத்தினை வெ∴கி விகாரப் படுவதல்லது அதனைக் குற்றமென் றொழிந்து தம் இயல்பில் நிற்பார் அரியராகலின் வேறாகும் மாந்தர் பலரென்றார் என்பது பரிமேலழகரின் உரைப்பகுதியாகும்.

உவமை கூறி விளக்கம்

பரிமேலழகர் குறள் கருத்தை விளக்குவதற்காக உவமையைப் படுத்தும் முறையையும் கையாள்கிறார்.

சென்ற இடத்தை செலவிடா தீதொரிஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு

மனத்தை அது சென்ற புலத்தின்கண் செல்லவிடாது அப்புலத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து தீயதனின் நீக்கி நல்லதன்கண் செலுத்துவது அறிவு. இவ்வாறு குறளுக்கு உரைகூறும் ஆசிரியர், "குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன் போல வேறாக்கி மனத்தைப் புலமறிந்து செலுத்துவது அறிவென்றார்" என உவமை கூறி விளக்குவது அறிந்து இன்புறத் தக்கச்சான்றாகும்.

****

இக்காலத் தமிழும் இலக்கணமும்

பா.மதிவாணன்,
தமிழியல் துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி.

இக்கட்டுரையின் தலைப்பே இரண்டு கருத்துக்களைச் சுட்டி நிற்கிறது. ஒன்று முற்காலத் தமிழ் அல்லது முற்காலத்திலிருந்து இக்காலத் தமிழ் வேறுபட்டது என்பது இரண்டு. இவ்வாறு வேறுபட்டாலும் இலக்கணம் தவிர்க்க முடியாதது என்பது.

ஒரு தமிழ்க் கல்வியாளன் என்கிற நிலையில் சங்கச் செவ்வியல் இலக்கியம் முதல் வெகுசனத் திரைப்படப்பாடல் வரை ஓர் அறிமுகமாவது இருந்தாக வேண்டியது கட்டாயம். மேலும் தமிழ் உயர்கல்வித் துறையில் காலாண்டுக் காலம் பணிப் பட்டறிவு. இடையிடையே தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும், தொலைக் காட்சிகளுக்கும், இதழாளர்களுக்கும் இலக்கணம் நடத்திப் பெற்ற பட்டறிவு. இவற்றின் ஊடாக நான் எதிர்கொண்ட சிலவற்றை, அவை பற்றிய என் எண்ணச் சிதறல்களைத் தொகுத்துப் பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இன்றைய தமிழுக்குத் தொல்காப்பியரே தலைமகன் ஆவார். தொல்காப்பியர் தம் காலத்து உலக வழக்கையும் செய்யுள் வழக்கையும் அடிப்படையாகக் கொண்டு, முந்நூல் கண்டு முறைப்பட எண்ணித் தொல்காப்பியம் என்னும் உயர்ந்த இலக்கண நூலைத் தமிழ் கூறும் நல்லுலகம் போற்றிப் பாராட்டும்படியாக எழுதியுள்ளார். அத்தொல்காப்பியமே தமிழ்மொழி சிதைந்து விடாமல் இன்றளவும் காப்பாற்றி வருகிறது என்கிறார் மரபிலக்கண அறிஞர் ஒருவர். இன்றைய சிறுகதைகளும் (Short Stories) புதினங்களும் (Novels) நல்ல தமிழில் வருகின்றனவா? இல்லையே!... தமிழில் துணைப் பாடங்களாக இவை தாமே வைக்கப்படுகின்றன. பல பிழைகள் இவற்றில் மண்டிக் கிடக்கின்றன. அந்நூல்களைக் கற்கும் மாணவர்களுக்கு இப்பிழைகள் மொழியால் ஏற்கப்பட்டனவாகத் தெரியும் அல்லவா? இலக்கணம் கற்ற மாணவன் என்ன செய்வான்? பத்தாம் வகுப்புத் துணைப்பாட நூலில் பத்துச் சிறுகதைகளைப் பாடமாக வைத்துள்ளனர். அவை தமிழா? இல்லை! அச்சிறுகதைக்களில்

ஆசிரியர்கள் எடுத்துக்காட்டுவன பேச்சு வழக்கிலான பாத்திரக் கூற்றுகளாகும். மேலே காட்டிய இரு நூல்களும் இருபத்தோராம் நூற்றாண்டில் எளிமையாக இலக்கணம் கற்பிக்க எழுந்த நூல்கள். இவற்றை மரபில்க்கணவாத நூல்கள் என்று கொள்வோம். இனி, மற்றொரு தரப்பைக் காண்போம்.

படைப்பிலக்கியமான புதினம், சிறுகதை ஆகியவற்றில் வருணனை, கதைமாந்தர், உரையாடல் என்ற பகுதிகள் உண்டு. உரையாடலில் கூடியவரையில் கதைமாந்தரின் வட்டாரம், சமூகம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையால் கிளை மொழிகள் கையாளப்பட்டன. அங்கும் முழுநிலையில் கிளைமொழி கையாளப்படாததால் மொழியியல் அறிஞர்கள் இதைப் பார்வைக் கிளைமொழி (Eye dialect) என்று குறிப்பிடுகிறார்கள் என்று குறிப்பிட்டுத் தொடர்ந்து சிலவற்றை விளக்கி "இருபதாம் நூற்றாண்டில் எழுத்துத் தகுமொழி உருவாக, செம்மொழி உணர்வும் தனித்தமிழ் உணர்வும் தடையாக இருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்" என்கிறார் ஓர் அறிஞர். இதனை மொழியியல் வாதம் என்று கொள்வோம்.

மாறுதல்களை ஏற்கும் மரபிலக்கணவாதிகளும், மரபை ஏற்கும் மொழியியலாரும் இல்லாமலில்லை.

மண்+யாத்த = மண்ஞாத்த

பொன் + யாத்த = பொன்ஞாத்த

என்பன போன்ற மட்கிப் போன புணர்ச்சி விதிக் குப்பைகளை எல்லாம் கூடை கூடையாகக் கொட்டிக் கொண்டிருக்கிறோம்.

பள்ளிச் சிறுவர்களுக்குச் சார்பெழுத்துக்கள் எப்படி 369 ஆகின்றன? என்ற கணக்கு ' இன்றியமையாததா? வழக்கொழிந்துபோன உகரச் சுட்டும் "உது, உவ்வு" முதலிய சொற்களின் இலக்கணங்களும் அவர்களுக்கு ஏன்? (திருமுருகன், கணக்கும் இலக்கணமும், பக்.72) என்று அடுக்குகிறார் ஒரு மரபிலக்கண அறிஞர்.

தமிழ் இலக்கணங்களில் ஐ,ஔ ஆகியவற்றை உயிர் நெடில்களாகக் கருதுவர். இங்கு அவை அய், அவ் என்ற இரு எழுத்துக்களாகக் கருதப்படுகின்றன என்றும் இவை ஐ, ஔ என்ற எழுத்துக்களாலேயே இந்நூலில் எழுதப்படுகின்றன. (ச.அகத்தியலிங்கம், தமிழ்மொழி அமைப்பியல்,ப.30) என்கிறார். இக்காலத் தமிழுக்கு மொழியியல் நோக்கில் இலக்கணம் எழுதிய ஒரு மொழியியலறிஞர்.

இவ்வாறு இருவேறு தீவிர எல்லைகளுக்கிடையே, சமரச நிலைப்பாடுகள் வெவ்வேறு அளவில் கொல்லப்படுவதையும் பார்க்க முடிகிறது.

இவற்றுக்கிடையே எது இக்காலத் தமிழ்? என்பதைச் சற்றே காண்போம்.

1. வட்டார, சமூகப் பேச்சுவழக்கு.
2. பொதுப் பேச்சு வழக்கு.
3. இக்கால எழுத்து வழக்கு – என வகுக்கலாம்.

ஒவ்வொன்றிலும் உள் வகைப்பாடுகள் உள்ளன. மேடைப் பேச்சுப் பாணியிலும் எழுத்து நடையிலும் காணும் தனிநபர் வேறுபாடுகள் விரிப்பிற்பெருகும்.

மேலும் தமிழ் பேச்சும் எழுத்தும் பெரிதும் வேறுபடும் இருநிலை வழக்கு மொழி என்பது நிறுவப்பட்ட மெய்ம்மை.

வட்டார, சமூகப் பேச்சு வழக்கினை எழுத்திலும் கொணர வேண்டும் என்பது முதலாக செவ்வியல் எழுத்து வழக்கையே அன்றாடப் பேச்சிலும் கையாள வேண்டும் என்பது வரையிலான தீவிர எதிர் விலகளும் இடைப்பட்ட சமரசப் புள்ளிகளும் இக்காலத் தமிழில் நிலவுகின்றன.

இங்கே மொழி பற்றிய மார்க்சிய நோக்கு ஒன்றைக் காணலாம். மொழி ஒரு குறிப்பிட்ட பொருளாதார அடித்தளத்தின் - அது புதிய அடித்தளமாகவோ பழைய அடித்தளமாகவோ இருக்கலாம் - பெறு பேறு அன்று. அது அச்சமுதாயத்தின் வரலாற்றைக் காலம் முழுவதிலும் பல நூற்றாண்டுகளாக, பல்வேறு பொருளாதார அடித்தளங்களின் வரலாறு முழுவதினதும் பெறு பேறு ஆகும். அது குறிப்பிட்ட வர்க்கத்தினாலே, தோற்றுவிக்கப் பட்டதன்று. அது முழுச் சமுதாயத்தினாலும் அச்சமுதாயத்திலுள்ள சகல வர்க்கங்களினாலும் நூற்றுக்கணக்கான பரம்பரைகளின் முயற்சிகளாலும் தோற்றுவிக்கப் பட்டதாகும் என்கிறார் ஸ்டாலின் (கா.சிவத்தம்பி, இலக்கணமும் சமுக உறவுகளும், ப.19)

மார்க்சிய நோக்கில் மொழியை அடித்தளம், மேற்கட்டுமானம் எனும் அதன் கட்டமைப்பிற்குள் இரண்டினையும் ஒன்றாக அடக்க முடியவில்லை.

தமிழுக்கு ஏறத்தாழ இரண்டாயிரத்தைநூறு ஆண்டு இடையறா எழுத்து வழக்குத் தொடர்ச்சி காணப்படுவதைக் கணக்கில் கொண்டு, மேற்படி விளக்கத்தைக் கண்டால் மேலும் தெளிவு கிடைக்கலாம்.

ஒரு வசதி கருதி இக்காலத் தமிழின் புழக்கத்தை,

1. கருவி நிலை
2. பண்பாட்டு நிலை
3. படைப்பு நிலை – என மூன்று நிலைகளில் காணலாம்.

கருவிநிலை என்பது மொழியைப் பெறும் தொடர்புச் சாதனமாக மட்டுமே கொள்வதாகும். அன்றாடத் தேவைகளுக்கான பேச்சு, அறிவிப்பு, விளம்பரம் முதல் மிக ஆழநுட்பம் வளர்ந்த விடயங்கள் பற்றிய உரைப் பொழிவுகள் எழுத்தாக்கங்கள் வரை இதில் அடங்கும்.

இன்று தமிழ்ச் சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தும் பார்வை இதுதான். மொழி பெறும் கருவி. பிழைப்புக்கு அது உதவாவிட்டால், உதவும் வேறொரு மொழியைக் கருவியாகக் கொள்ளலாம். மொழி குறித்து உணர்ச்சி வயப்படுவதோ, காலாவதியானதைக் கட்டியழுவதோ தேவையில்லை. அல்லது எந்த வரம்பிற்குள் அந்தக் கருவி தேவையோ அதற்கு மேல் வேண்டாம். தமிழை உயர்கல்வி மொழியாக, ஆட்சிமொழியாகத் திணிக்கத் தேவையில்லை என்பது இதன் நிலைப்பாடு. தமிழ்த் தொலைக்காட்சி மிகப் பலவற்றின் அறிவிப்புகள், இணைப்புரைகள், உரையாடல்கள், நேர்காணல்கள் முதலியவற்றில் ஏன்? சமையல் செய்முறை நிகழ்ச்சி உட்பட ஆங்கிலத்துக்கு இடையிடையே சில மழலைத் தமிழ் தலைகாட்டுவதைப் பார்க்கலாம்.

இரண்டாவது, தமிழ் வெறும் கருவியன்று. அது நம் பண்பாட்டு அடையாளம். அதனைப் பெறுதல் வேண்டும் எனும் பார்வை. தமிழின் கருவிநிலைப் பயன்பாடு கூட கருவி எனும் வசதி கருவியன்று நம் பண்பாடு என்பது கருதியே. தமிழில் கல்வி, ஆட்சி, இசை வழிபாடு யாவும் நிகழவேண்டும் என்பது இதன் நிலை. இதன் தீவிர நிலை தனித்தமிழ் வாதமாகும். தூய தமிழ் புழங்கிய செவ்விலக்கிய மீட்சியை இக்காலத்தமிழின் செவ்விலக்கியத்தை வலியுறுத்தும் இவ்வாதம் ஓர் எதிர் வினை என்பது வரலாறு. "ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ" என்றதற்கான எதிர்வினை.

தொடர்ச்சியான பன்மொழியாதிக்கமும், ஆதிக்க மொழி சார்ந்த இளக்காரப் பார்வைக்கும் இவ்வியக்கத்தைத் தோற்றுவித்தன. மொழித் தூய்மை வாதம் தமிழுக்கு மட்டுமே உரியதன்று என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். தம்மை 'நவீன'ப்பார்வையாளராகக் காட்டிக் கொள்ளும் சிலர் செந்தமிழ் புரிவ தென்று அதனினும் புரியாதவற்றைத் திணிக்க முயலும் போக்கையும் கருத வேண்டும்.

தமிழ் மரபிலக்கணங்களில் பெரும்பாலோர் சார்ந்திருப்பது தமிழைப் பண்பாட்டுச் சின்னமாகக் கருதும் இந்த நிலை இவர்கள் தமிழுக்குள்ளாக நிகழும் அகநிலை மாறுதல்களைக் கூட ஏற்பதில்லை. எடுத்துக்காட்டாக 'அல்ல' என்பது இக்காலத் தமிழில் பரவலாக இருதிணை ஐம்பால் மூவிடங்களிலும் வழங்குகிறது. இது பிழை என்பது இவர்கள் வாதம். பலவின்பால் குறிப்பு வினை முற்றாக வரும் ஓரிடம் மட்டுமே சரி என்கின்றனர். இக்கால மரபிலக்கண நூலொன்று பிழை தவிர்க்கும் பொருட்டு, அன்று, அல்ல, அல்லன், அல்லள், அல்லர் என்கிற ஐந்து வடிவங்களைத் தந்து விளக்குகிறது. முழுமையாகப் பழமை மாறுவதாயின் தன்மை, முன்னிலைகளின் ஒருமைபன்மை வடிவங்களாக மேலும் நான்கினைத் தந்திருக்க வேண்டும். இது மரபிலக்கணியர் தடுமாற்றம்.

அறிவியல் நோக்கில் அசைக்க முடியாத ஆதாரங்களோடு மரபிலக்கணப் புலமையாலும் தம்மை நிலைநிறுத்திக் கொண்டுள்ள, தமிழை அறிவியல் நோக்கில் காணும் தீவிர எல்லையில் நிற்கும் ஓர் அறிஞர் "இன்றைய வார இதழ்கள்... ஆங்கிலத் தலைப்புகளைக் கையாண்டு வருகின்றன. அதற்கு ஒரு காரணம் இன்று தமிழகத்தில் தமிழை ஒரு பாடமாகப் படிக்காமலேயே மழலையர் பள்ளியிலிருந்து பட்டப்படிப்பு வரை படிக்க முடியும் என்ற அவலநிலையே. (செ.வை.சண்முகம், மொழி ஆய்வு, ப.22) என்கிறார். மொழி வெறும் கருவி எனும் நிலையிருப்பின் இவ்வாறு சொல்லமாட்டார். இங்கு குறைந்தபட்சம் மொழியைப் பண்பாட்டுச் சொத்தாகக் கருதும் நிலைப்பாடு காணப்படுகிறது. இதனை அவர் மொழியியல் நிலைநின்றே நியாயப்படுத்தவும் முடியும் என்பதை நான் மறுக்கவில்லை.

படைப்புநிலை

தற்காலக் கவிதை, புனைகதை, நாடகம், கட்டுரை முதலியன படைப்பாளுமைமிக்கோரால் படைக்கப்படும் போது மற்றவகை மொழி நிலைகளையும் உள்ளடக்கி அவற்றின் வேறாகவும் நிற்கும். மொழியின் கருவிநிலைச் சாத்தியப்பாட்டைக் கடந்து நிற்பதே படைப்புமொழி.

வெறும் சொற்களால் நிகழ்வுகளை மனக்கண்ணில் இயக்கமாகக் காட்டும் நடப்பியல் புனைகதை மொழி முதல் முற்றிலும் தருக்கத்தைக் கடந்து 'கவித்துவ உண்மை' காட்டும் கவிதைகள் வரை படைப்புமொழி தனித்தன்மை வாய்ந்தது.

தீ சுடும் – உரை நடை

தீ இனிது – கவிதை (பாரதி) என உறழ்ந்து காட்டுவார் வல்லிக் கண்ணன். முந்தையது மெய்ம்மை (Fact). அதில் மொழி கருவிநிலையில் இயங்குகிறது. பிந்தையது கவிதை. இங்கு மொழி படைப்புநிலையில் இயங்குகிறது.

"தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா – நினைத்

தீங்கும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா" என்கிறாரே பாரதி! நாட்டுப்புறப்பாடல்கள் வட்டார வழக்குகளைக் கொண்டே படைப்பு நிலையில் அற்புதம் நிகழ்த்துகின்றனவே!

வழக்கொழிந்தது என மொழியியலார் தள்ளும் மொழியையும் படைப்புநிலை தேவைகேற்ப ஆள்கிறது.

"இடதுதோளில் ஓரடி அகலத்தில் ஒன்றரை அடி நீளத்தில் தோள்பை ஒன்று தொங்கியது. கம்பனின் 'தான்தொடுதடக்கை' போல, இது இடைதொடு தோட்பை" (நாஞ்சில்நாடன், தீதும் நன்றும்' ஆனந்தவிகடன், 10.09.08, ப.57) நாஞ்சில்நாடன் தம் வட்டார வழக்கை வளம் குன்றாமல் எழுத்தாக்கிப் புகழ் பெற்றவர். அவ்வழக்கினுள்ளும், ஒரு சமூக வழக்கைக் கையாள்பவர் என்று ஒரு குற்றச்சாட்டுத் தொனியில் கூறப்படுவதுண்டு. நாம் அவரது நடையின் வரையறுப்பாக அதனைக் கொள்வோம்.

வட்டார வழக்கில் அல்ல அவர் ஒரு வெகுசன இதழ்க் கட்டுரையில் வாசகனுக்குப் புரியுமாறு எழுதிய பின்பும், செந்தமிழ் இலக்கிய மேற்கோள் காட்டி, ஒப்புமையாக்கமாகச் செவ்வியல் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறாரே ஏன்? செவ்வியலாக்கத்தின் செறிவே இலக்கியச் சுவை நல்குகிறது.

மரபிலக்கிய இலக்கணங்கள் கற்றவர் தாம் படைப்பில் ஈடுபட வேண்டும் என்பதன்று என்வாதம். எனவேதான் நாட்டுப்புறப் பாடலைச் சுட்டினேன். நவீன எழுத்தாளர் தாமும் மரபிலக்கண இலக்கியம் பயின்றே தீர வேண்டிய கட்டாயமில்லை. அவ்வாறு பேரளவு பயிலாதோரும் படைப்பில், குறிப்பாகப் படைப்பு மொழியால் சாதனை படைத்துள்ளனர். சான்றாக, சுந்தர ராமசாமியைச் சொல்லலாம்.

முந்தைய காலத் தமிழர்கள் இக்காலத் தமிழிலிருந்து வேறுபட்டிருத்தலையும் மறுக்க முடியாது. ஆனால் முந்தைய தமிழைத் துண்டாக்கிக் தூர எரிந்து விடமுடியாது.

"தன்னுடைய மன உத்வேகத்தைச் சொல்வதற்குத் தமிழ்மொழி போதுமானதாக இல்லை என்று மௌனி குறைபட்டுக் கொண்டார் என்று சொல்வார்கள்... நவீனத் தமிழிலக்கியத்தின்

முக்கால் நூற்றாண்டு வரலாற்றில் மௌனியின் இந்தக் கூற்றே உச்ச கட்டம் என்று சொல்ல முடியும். மொழியின் சொற்களோ சொல்லமைப்போ தொடர்புறுத்தலுக்கு ஒருபோதும் தடையாக இருப்பதில்லை என்பதற்கு வளர்ச்சியும் விரிவும் இல்லாத சிறு மொழிகளில் வந்துள்ள பெரும் படைப்புகளே சான்று. தமிழோ ஆயிரமாண்டு கால இலக்கிய மரபும் விரிந்த வரலாற்றுப் பின்புலமும் மிக நெகிழ்வான இலக்கண அமைப்பும் ஒலி நயமும் கொண்ட மொழி...

ஐநூறு வருடமானாலும் தான் உருவாக்கிய அக உணர்வுகளின் நுட்பங்களைத் தமிழ் புரிந்து கொள்ளாது என்று மௌனி சொன்னார் என்பார்கள். தமிழ் இலக்கியத்தின் பெரும்பகுதி அகத்துறையே. என் வாசிப்பில் அகச்சித்தரிப்பில் உலக இலக்கியத்தின் மிகச் சிறந்த உதாரணங்கள் தமிழிலேயே உள்ளன... புதுமைப்பித்தன் தவிர்த்த மற்ற அக்காலத் தமிழ் நவீனத்துவப் படைப்பாளிகளைப் போலவே மௌனியும் தமிழ் இலக்கிய மரபில் அறிமுகம் உள்ளவரல்ல. அவருக்கு உண்மையிலேயே தமிழின் விரிவும் மகத்துவமும் தெரியாது. கல்லூரிக் கல்வி மூலம் தான் கற்ற மேலைக் கற்பனாவாதத்தைத் தன்னுடைய அக்ரகாரப் புறங்கு மொழியில் சொல்ல முயன்றார் அவர். (ஜெயமோகன், கனவுகள் இலட்சியங்கள் - இலக்கிய முன்னோடிகள் வரிசை-2, தமிழினி, சென்னை, 2003, பக்.29-30)

படைப்பு மொழிக்குத் தான் மரபின் மகத்துவமா? அன்றாட மொழிக்கும் உண்டு. செல்லுமிடமெல்லாம் பேசிச் சலிக்காத செல்பேசி நண்பர் ஒருவர் என்னிடம் சொன்னார். "Double Two (22) Triple Nine (999) போலத் தமிழில் சொல்ல முடியவில்லையே!" என்று. "அதற்கு மேலும் தமிழில் முடியும் என்றேன் நான். "இரண்டு, நான்கு என்று சிறு இடைவெளியோடு சொன்னால் இரண்டும் நான்கும் என்று பொருள். இருநான்கு என்றால் இரண்டு நான்கும் (44) முந்நான்கு என்றால் மூன்றுநான்குகள் (444) என்றும் விளக்கினேன். தமிழில் எண் வாய்ப்பாடு படித்தவர்களுக்கு எளிதாக விளங்கும்.

இதற்கு மாறான அனுபவம் உண்டு. ஒருமுறை அஞ்சல்வழி முதுகலை வகுப்பொன்றில் சின்ன 'ர', பெரிய 'ற' என்று போகிற போக்கில் சொல்லிவிட்டேன். பிடித்துக் கொண்டார் ஒரு தொடக்கப்பள்ளி ஆசிரியை. "தமிழாசிரியர்கள் அதிலும் தமிழ்ப் பேராசிரியர் இப்படிச் சொல்லலாமா? பணியிடைப் பயிற்சிக்கு

வந்த ஓர் அறிஞர் இடையின ரகரம் வல்லின றகரம் என்றுதான் சொல்ல வேண்டும் என்று எங்களுக்குக் கற்பித்தார்" என்றார்.

நான் கேட்டேன் "வல்லின ககரம் இடையின வகரம் என்று சொல்கிறோமே? ககரம் வகரம் என்று தானே சொல்கிறோம். ரகர றகரங்களை மட்டும் ஏன் இன அடை கொடுத்துச் சொல்கிறோம்? என்று.

அம்மையார் சொன்னார். "இரண்டு ந(ற)கரத்தையும் ஒலிக்கும் போது வேறுபாடு இல்லை. அதனால் அடை கொடுத்துச் சொல்கிறோம்." என்றார்.

ஒலிப்பில் வேறுபாடில்லா விட்டால் இரண்டு எழுத்தாகுமா?" என்றேன் நான்.

"எழுத்தில் வேறுபாடிக்கிறதே!" என்றார் அவர்.

"ஆம். வல்லின றகரம் தன் ஒலியை இழந்து விட்டது. ஆனால் எழுத்து மொழிக்குத் தேவைப்படுகிறது. இலக்கண மரபறிந்தவர்கள் அதன் வரிசையை வைத்து வல்லின றகரம் என்கிறார்கள். பொதுவாக மற்றவர்கள் பெரிய ற என்கிறார்கள். எங்கள் கல்லூரியில் நான் பா.மதிவாணன், கணினியியலில் வி.மதிவாணன் இருந்தார். அஞ்சல்காரர் அஞ்சலில் மாற்றிக் கொடுப்பதுண்டு. தமிழ்த்துறையா? கணினித்துறையா? 'பா',வா? 'வி' யா? என்றெல்லாம் சூழலைப் பொறுத்து வினவுவதுண்டு. அது போல ஒரு சூழலில் இடையினம், வல்லினம், மற்றொரு சூழலில் சின்ன 'ர' பெரிய 'ற' அவ்வளவு தான்.

தமிழ் முதுகலை வகுப்பில் சின்ன 'ர', பெரிய 'ற' என்று நான் சொல்லியிருக்கக் கூடாது தான்" என்று அந்த அம்மையாரை ஆறுதல் படுத்தினேன். உண்மையில் அம்மையாரிடமும் அவரை அவ்வாறு சொல்லத் தூண்டிய அறிஞரிடமும் செயல்பட்டிருப்பது இலக்கணப் பழமை வாதம் எனலாம்.

மரபு வேறு, பழமை வேறு. இரண்டையும் நுட்பமாக வேறுபடுத்த வேண்டும். நம் பழைய இல்க்கண நூல்களைத் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயிலும் மாணவர்கள் புலமையின் பொருட்டுப் பயின்றுதான் ஆகவேண்டும். ஆனால், அன்றாட வாழ்வில் செயல் படும் 'இலக்கணம்' வேறு என்றும் தெளிவு வேண்டும்.

செய்யிய, செய்யியர் போன்ற வினையெச்ச வடிவங்கள் இன்றைய இலக்கணமில்லை. பழைய இலக்கியங்களில் இவை புழங்குவதால், அவற்றைப் படித்துணரப் பழைய இலக்கண அறிவு தேவைப்படுகிறது. மேலும் பழைய இலக்கணம் சொல்லப்பட்டுள்ள

முறைமையறிதலும் புலமையின் ஒரு பகுதி. அதே வேளையில் மூன்று நான்கு, முந்நான்கு என்பவற்றின் வேறுபாடு கூடத் தெரியாதிருப்பது இக்காலத் தமிழிலக்கண அறியாமைதான்.

மொழியை வெறும் கருவியாக மட்டும் பார்க்கும் பார்வை அறிவியல் பார்வையில்லை, பிழைப்புவாதப் பார்வை. தொல்காப்பியத்தில் இருப்பது தான் தொடர வேண்டும் மற்றவை வழு எனப் பார்ப்பது மரபு போற்றும் பார்வையில்லை, பழமை வாதப் பார்வை.

பிழைப்பு வாதம், பழமை வாதம் இரண்டுமே மரபையும் பேணுவதில்லை. புதுமையையும் போற்றுவதில்லை. மரபின் உயிர்ப்போடு புதுமையை ஏற்க வேண்டும்.

மேலை இலக்கியத் தாக்கத்தால் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தமிழுக்கு அறிமுகமான புதிய இலக்கியவகை சிறுகதை. தமிழ்ச் சிறுகதையின் தந்தை எனப் போற்றப்பெற்ற வ.வே.சு.ஐயர் புதிய வடிவத்தை அறிமுகப்படுத்தும் பொருட்டுக் கதைதோறும் 'சூசிகை' எனும் சிறு அறிமுகம் தந்தார். எனினும் கதையை நேரே தொடங்கிப் படிப்பது சுவை மிக்கது என்றார்.

இருபத்தோராம் நூற்றாண்டிலும் ஒரு பழமைவாத அறிஞர் "அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை" என்பது போன்று தொடங்குவதைக் கண்டித்தார்.

"இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலும் காலம் தோன்றின்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்" என்பது தொல்காப்பிய விதி என்றார். ஆனால் அடுத்த நூற்பா,

"முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே" என்கிறது தொல்காப்பியம். தொல்காப்பியர் நோக்கில் செய்யுள் என்பது பாவகைகளை மட்டுமன்றி உரைநடை இலக்கியங்களையும் உள்ளடக்கியது என்கிற தெளிவோடு, பிந்தைய நூற்பாவிற்குரிய கல்லாடர் உரையைப் பார்ப்போம்.

இதனால் சொல்லியது, முற்கூறலாகாது எனப்பட்ட சுட்டுப்பெயர் மொழி மாற்றியும் பொருள் கொள்ளும் நயம் செய்யுட்கள் உண்மையின் அதனகத்தாயின் அமையும் என்று நேர்ந்தவாறாயிற்று.

இதுதான் மரபின் உயிர்ப்பை உணர்தல். அதே வேளையில் அப்போதே எல்லாம் சொல்லி முடித்தாகி விட்டது என்று வலிந்து நோக்கித் 'தன்னிறை வு'றுவது வளர்ச்சிக்குத் தடை. வினைத்தொகைக்கு, ஊறுகாயை விடாமல் தொட்டுக்

கொண்டிருக்கிறோம். அப்புறம் 'ஊறியகாய்', 'ஊறுகின்ற காய்', 'ஊறும் காய்' என்கிற விளக்கம் வினைத்தொகையை மேலும் சிக்கலாக்கி விட்டது. 'ஆடரங்கு' என்பது வினைத்தொகையாகுமா? என்கிற ஐயம் ஏன்? காய் ஊறும். அரங்கு ஆடாதே! இந்தச் சிக்கலுக்குள் இப்போது புகாமல் இரண்டும் வினைத் தொகை என ஏற்றுத் தொடரலாம். இக்காலத் தமிழுக்கு, குறிப்பாகச் செறிவான கலைச் சொல்லாக்கத்திற்கு வினைத் தொகைகள் உதவி பெரிது.

Satellite – என்பதற்குச் செயற்கைக்கோள் என்பது பரவலாக வழங்கும் தமிழாக்கம். 'செய்கோள்' எனும் வினைத்தொகைத் தொடர் செறிவானது. செயற்கையாக உள்ளதே! என்கிறீர்களா? 'செய் கூலி' எனும் தொடர் அணிவகை விளம்பரங்களில் அன்றாடம் கருவிநிலையில் புழங்கி வருகிறதே!

Post Modernism என்பது 'பின்நவீனத்துவம்' எனச் சொல்லுக்குச் சொல் தமிழாகிப் புழக்கத்துக்கு வந்துவிட்டது. வரலாற்று நோக்கில் இது ஆங்கிலத் தாக்கத்தால் விளைந்த தமிழாக்கம் தான். ஆங்கிலப் பொருளை இதற்கும் தந்து விட வேண்டியது தான். தமிழ் மட்டுமே கொண்டு நோக்கக் குழப்பம் தருகிறது. 'பின்முன்னாகத் தொக்கதொகை' என்று மரபிலக்கணக் குறிப்பைச் சொல்லிவிட்டால் போதும் குழப்பம் தீரும். மரபு கருதாமல் ஆக்கிய சொல்லையும் மரபிலக்கணத்தால் குழப்பம் தீர்க்கலாம்.

மரபிலக்கண உயிர்ப்புக்குச் சில எளிய எடுத்துக்காட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இக்காலத் தமிழுக்கெனத் தனி இலக்கணம் வேண்டும். அதை உணர்ந்து செய்யப் பெற்ற முயற்சிகளும் இல்லாமல் இல்லை. பேராசிரியர் ச.அகத்தியலிங்கத்தின் 'தமிழ்மொழி அமைப்பியல்', டாக்டர் பொற்கோவின் இக்காலத்தமிழ் இலக்கணம்', எம்.ஏ.நு.்.மானின் 'அடிப்படைத் தமிழ் இலக்கணம்' முதலிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. இவையாவும் முற்றிலும் ஒத்த கருத்துடையன அல்ல. மரபிலக்கணங்களும் முற்றிலும் ஒத்தவை அல்லவே.

காலத்தாலும் இடத்தாலும் தமிழ் மாறிக் கொண்டிருக்க மரபு இளையோடி அவற்றை இணைக்கிறது என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகின்றது.

****

இத்தாலியிலிருந்து வந்த சின்ன சவேரியார் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஆற்றிய பணி
(Rev. Fr. James Thomas de Rossi, S.J.) (1701–1774)

முனைவர் ச. சாமிமுத்து.
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
தூய வளனார் த்ன்னாட்சிக் கல்லூரி,
திருச்சி – 620 002.

ஆசிரியர்

மறைதிரு ஜேம்ஸ் தாமஸ் தே ரோசி, சே.ச. என்னும் கிறித்தவத் தமிழ் உரைநடைத் தொண்டர் இத்தாலியில் நேபில்ஸ் மாநிலத்தைச் சேர்ந்த அபூலியா மாவட்டத்தில் நோலா என்னும் நகரில் 1701ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8ஆம் நாள் பிறந்தார். இவர் 1721ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் நாள் நேபில்ஸ் நகரச் சேசு சபைக் குரு மடத்தில் சேர்ந்து முறையாகச் சமயக் கல்வி கற்றுத் தேர்ந்தார். வேதபோதகப் பணியில் ஆர்வங் கொண்ட இவர் கத்தோலிக்க மறையைத் தமிழகத்தில் போதிக்க 1732ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்தார்.

கோவாவில் நான்கு ஆண்டுகள் தங்கிக் குருப்பட்டம் பெற்றபின் 1736ஆம் ஆண்டு மதுரை வேத போதகப் பணித்தளத்திற்கு (Madura Mission) வந்தார். தொடர்ந்து முப்பத்தெட்டு ஆண்டுகள் மறவநாட்டுத் (இராமநாதபுரம், சிவகங்கை, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி) தமிழ் மக்களிடையே வாழ்த்து சமயத்திற்கும், தமிழுக்கும் தொண்டாற்றினார். மறவ நாட்டு மக்கள் இவரை அன்போடு 'சின்ன சவேரியார்' என்று அழைத்தனர். தமிழகக் கடற்கரை மக்களாகிய பரதவர்களிடையே 16ஆம் நூற்றாண்டில் தொண்டாற்றிய தூய சவேரியாரைப் (St. Francis Xavier) போல் இவரும் மக்கள் மனத்தில் என்றும் நின்று வாழ்வதற்குரிய நற்றொண்டு ஆற்றினார். இவர் ஆற்றிய தொண்டுகளில் இன்றும் நம்மை வியப்பில் ஆழ்த்தும் தொண்டாக விளங்குவது இவர் ஆற்றிய தமிழ்த் தொண்டே. இவர் ஆக்கி அருளிய தமிழ் உரைநடை நூல்கள் இவர் ஆற்றிய தமிழ்த் தொண்டிற்குத் தக்க சான்றுகளாய் நின்று வாழ்ந்துகொண்டிருக்கின்றன.

நூல்கள்

மறவ நாட்டில் கத்தோலிக்க சமயப் பணியில் ஈடுபட்டு உழைத்த சின்ன சவேரியார் அன்றையச் சூழலில் தம் பணிக்கு

மக்கள் பேசிய தமிழ் மொழியினைக் கற்றுத் திறம் பெறுவது இன்றியமையாத் தேவை என்பதை உணர்ந்தார். தம் முன்னோர்களாகிய இராபர்ட் டி நோபிலி, (17ஆம் நூற்றாண்டு) வீரமாமுனிவர் (18ஆம் நூற்றாண்டின் முற்பகுதி) ஆகியோரைப் போன்று தமிழ் மொழியினை விரும்பிக் கற்றார். மக்களோடு தமிழ் மொழியில் உரையாடவும். விவாதம் புரியவும் கத்தோலிக்க மறை உண்மைகளை, இனிய, எளிய, தூய தமிழில் எடுத்துச் சொல்லவும் மொழியாற்றல் பெற்றார். அக்காலத்தில் வேத போதகப் பணிக்குரிய சமயத் தொண்டர்கள் (சுவாமிமார்கள், உபதேசிமார்கள்) சிலரே இருந்த காரணத்தினால் சமயப் போதனைகளை மக்களுக்குத் தெளிவிக்கும் தமிழ் உரைநடை நூல்களை மக்கள் மொழியில் எழுதித் தந்தார். தமிழ்மொழியில் குறிப்பிடத்தக்க அளவில் உரைநடை நூல்கள் தோன்றாத 18ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் சின்ன சவேரியார் ஆக்கியருளிய தமிழ் உரைநடை நூல்கள் தமிழ்மொழி உரைநடை வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன. கீழே காண்பன அவருடைய நூல்களாகும்.

1) வருஷத்தின் பிரதி தின சுகிர்த பிரசங்கங்கள், மூன்று காண்டங்கள் (375 சொற்பொழிவுகள்)
2) தினசரி புதுமைகள் - ஏழு பாகங்கள்
   (அ) திங்கட்கிழமைப் புதுமை (52 சொற்பொழிவுகள்)
   (ஆ) செவ்வாய்க்கிழமைப் புதுமை (52 சொற்பொழிவுகள்)
   (இ) புதன்கிழமைப் புதுமை (52 சொற்பொழிவுகள்)
   (ஈ) வியாழக்கிழமைப் புதுமை (52 சொற்பொழிவுகள்)
   (உ) வெள்ளிக்கிழமைப் புதுமை (52 சொற்பொழிவுகள்)
   (ஊ) சனிக்கிழமைப் புதுமை (52 சொற்பொழிவுகள்)
   (எ) ஞாயிற்றுக்கிழமைப் புதுமை (52 சொற்பொழிவுகள்)

சின்ன சவேரியாரின் நூல்களைப் பற்றித் தவத்திரு. முனைவர் ச. இராசமாணிக்கம், சே.ச., "இராபர்ட் டி நோபிலி தமிழ் உரைநடையின் தந்தை" என்னும் தம் ஆங்கில ஆய்வு நூலில் "கிராமப்புறங்களில் வாழ்ந்து வந்த கிறித்தவ உபதேசிமார்கள், ரோசியின் கிழமைப் புத்தகங்களையும், தினசரி பிரசங்கங்கள் என்னும் புனிதர்களின் வரலாற்று நூல்களையும் நாள்தோறும் பயன்படுத்தி வந்தார்கள். அதனால் ரோசி மக்கள் மத்தியில் புகழ்வாய்ந்த நூலாசிரியராக விளங்கினார்1 என்று எழுதியுள்ளார். சின்ன சவேரியாரின் நூல்களில் காணும் மொழிநடையைப் பற்றியும் மக்கள் அவருடைய நூல்களை விரும்பிக் கற்றார்கள் என்பதைப்

பற்றியும் பேராசிரியர் இரம்போலா மாஸ்கரேனஸ் தாம் எழுதிய 'கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்கள்' என்னும் நூலில், "இவருடைய (சின்ன சவேரியார்) எழுத்து நடை தாம் வாழ்ந்த காலத்திற்கிசைந்த எளிய தெளிந்த சித்திர நடை என்பவர் இவர்தம் நூலில் ஈடுபாடுடையோர். இவர் காலத்தில் குருக்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவாக இருந்தனர். எனவே, இவர் காலத்தில் இந்நூல்கள் பொதுமக்கள் விருப்பத்திற்கு உகந்தனவாய்ப் பெரும்பயன் விளைவித்திருக்கின்றன" என்று குறித்துள்ளார்.2

புதுமைகள்

புதுமைகள் என்பவை உலகிலுள்ள அனைத்துச் சமயங்களும் ஏற்றுக் கொண்டுள்ள இறையருளின் அருங்குறிகளாகும். இறைவன், மனிதர்களோடு கொள்ளுகின்ற தொடர்புகளின் வெளிப்பாடுகளே புதுமைகள். மனித வாழ்க்கையில் இயல்பாக நிகழும் நிகழ்ச்சிகள் அல்லாத இறையருள் நிகழ்ச்சிகளைத் தாம் புதுமைகள் என்று சமயச் சார்பாளர் கொள்ளுகின்றனர். புதுமை என்னும் சொல்லுக்கு நூதனம் என்பது பொருள் என்று சூடாமணி நிகண்டு விளக்குகின்றது. இறைவன் புதுமைக்கும் புதுமையாகின்றவன். "புதிது", என்பது இறைவன் ஆற்றலாலேயே தோன்றவல்லது. அவன்தன் படைப்பாற்றலின் பயனது. இறைவனுடைய பெருமையை, ஆற்றலை நாம் சிறிதளவே அறிந்திருக்கின்றோம். அவரைப் பற்றி மேலும் அறியவும், அறிந்து வணங்கி வாழ்த்தவும் அவராற்றலால் அவர் வழியாகவும் அவர்தம் அடியார்கள் வழியாகவும் புதுமைகள் இவ்வுலகில் நாளும் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. "சர்வேசுரன் மெய்யான கடவுளாயிருக்கிறாரென்றும், ஒரே சர்வேசுரனாயிருக்கிறாரென்றும், அவருக்கு அளவில்லாத நீதியும், தயையும், அளவிடப்படாத ஞானமும், பலனும் இருக்கின்றனவென்றும் இவை முதலான நன்மைகளை மனுஷருக்குக் காண்பிக்க எண்ணப்படாத புதுமைகளைப் பண்ணினார்" என்று மறைதிரு சின்ன சவேரியார் தம் ஞாயிற்றுக் கிழமைப் புதுமை நூலின் விவேகத்தில் புதுமையைக் குறித்துக் கூறியுள்ளார்.3

கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவினை அவ்வச் சமயப் புதுமைகள் உணர்த்தி நிற்கின்றன. இவற்றை நாம் இயற்கை இகந்தனவாகக் கூறுகின்றோம். சமயங்கள் அனைத்துமே இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் மூலமே தோன்றி, காலூன்றி வளர்ந்து, பரவி, நிலைத்து விளங்குகின்றன. அவ்வச் சமயச்

சார்பாளர்கள் அவ்வச் சமய இயற்கை இகந்த நிகழ்ச்சிகளை ஏற்றுக் கொண்டுள்ள காரணத்தால்தான் அவரவர் அவ்வச் சமயங்களில் நிலைத்து நிற்கின்றார்கள். சைவரும், வைணவரும், பௌத்தரும், இசுலாமியரும், கிறித்தவரும் அவரவர் சமயப் புதுமைகளை நம்புகின்றனர். அவற்றிற்குத் தக்க மதிப்பும் மரியாதையும் கொடுத்து நினைவிற் கொண்டு வாழ்கின்றனர். சைவப் பெரும் புலவராகிய சேக்கிழார் சிவபெருமானின் அருள்திறங்களை அவர்தம் தொண்டர்களின் வாழ்க்கை வரலாறுகளின் மூலம் பெரிய புராணமாய் விரித்தளித்திருக்கின்றாரன்றோ! காளத்தி மலையிலே திருக்காளத்தியப்பரின் கண்ணிலே வழிந்த செந்நீரைக் கண்டு நெஞ்சம் பதைத்து நின்ற திண்ணனின் செயல்களும் குடுமித் தேவரின் அருட்செயல்களும் பக்தி மணம் கமழும் செயல்களன்றோ! சிவகோசரியார்க்குத் திண்ணனாரின் பேரன்பினைக் காட்ட சிவபெருமான் தம் திருக்கண் ஒன்றினின்று செந்நீர் பாயச் செய்தார் என்பதனை,

அண்ணலார் திருக்கா ளத்தி
யடிகளார் முனிவ னார்க்குத்
திண்ணனார் பரிவு காட்டத்
திருநய னத்தி லொன்று
துண்ணென வுதிரம் பாய
விருந்தனர் தூரத் தேயவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு
வல்விரைந் தோடி வந்தார்

என்று பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டச் சேக்கிழார் பாடியுள்ளது இவண் ஓர்ந்து பார்த்தற்கு உரியதாகும். இறைவனின் திருக்கண்ணிலிருந்து வழிந்த செந்நீரைத் தடுக்க இரண்டாம் முறை திண்ணனார் தம் இடக்கண்ணையும் தோண்டியெடுத்து அப்ப முயலுங்கால் இறைவனார் திண்ணனாரின் கரத்தையே பிடித்துத் தடுத்தவரன்றோ! “கண்ணப்பநிற்க”வென்று அவர்தம் திருவாக்கு மும்முறை ஒலித்தன்றோ!

சேக்கிழார், இறைவன் செய்த புதுமையை எண்ணி வியந்து, “திருக்காளத்தியற்புதர்” என்னும் தொடரால், அவரைக் குறிக்கின்றார். அற்புதர் என்பதால் அற்புதம் (புதுமை) நிகழ்த்துபவர் என்பதும் போதருகின்ற பொருளன்றோ!

கிறித்தவ சமயத்திலும் இறைவன் நேரடியாகவும், தம் அடியார்கள் மூலமாகவும் நிகழ்த்திய பல புதுமைகள் உள்ளன.

இவை கிறித்தவ வேதாகம நூல்களாகிய பழைய, புதிய ஏற்பாடுகளிலும் மற்றைக் கிறித்தவ சமய நூல்களிலும் இடம் பெற்றுள்ளன. கிறித்து பெருமான் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் செய்த பல புதுமைகளும் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளன. கானாவூர் திருமண விருந்தில் கிறித்துநாதர் தண்ணீரை ஆசீர்வதித்துத் திராட்சை இரசமாக மாற்றினார். இதுதான் அவர் செய்த முதல் புதுமை. அதைத் தொடர்ந்து அவர் பல புதுமைகளைச் செய்துள்ளார்.

சனிக்கிழமைப் புதுமை

இயேசு பெருமானை ஈன்றெடுத்த கன்னிமரியன்னை தம் திருமகனின் அருட்டுணையால் இவ்வுலகில் பல புதுமைகளைச் செய்து வருகின்றார்கள். அப்புதுமைகளில் கத்தோலிக்கக் கிறித்தவர்களுக்கு ஆழ்ந்த ஈடுபாடு உண்டாகையால் அவை மீண்டும் மீண்டும் நினைத்துத் தியானிக்கப்படுகின்றன. மறைதிரு சின்ன சவேரியார் தம் சனிக்கிழமைப் புதுமை என்னும் நூலில் மரியன்னை நிகழ்த்திய பல புதுமைகளில் ஐம்பத்திரண்டினைத் தேர்ந்தெடுத்து முதன்முறையாகத் தமிழ் மொழியில் எளிய உரைநடையில் தந்துள்ளார்.

கன்னிமரியன்னை பிறந்த நாள் சனிக்கிழமையாகையால் அந்நாள் மரியன்னைக்குரிய பக்திநாளாகக் கத்தோலிக்கக் கிறித்தவர்கள் உலகெங்கும் கடைப்பிடித்து வருகின்றார்கள். "... தேவமாதா சனிக்கிழமை பிறந்ததினாலே அவளுடைய உதவியைக் கொண்டு சனிக்கிழமை தோறும் தேவமாதாவைக் குறித்து ஒவ்வொரு புதுமையை நாம் சொல்லிக் காண்பிப்போம். வருஷத்திலே ஐம்பத்திரண்டு சனிக்கிழமை இருக்கிறதினாலே தேவமாதாவின் எண்ணப்படாத புதுமைகளுக்குள்ளே ஐம்பத்திரண்டு புதுமைகளை மாத்திரம் வெளிப்படுத்துவோம்" என்று மறைதிரு சின்ன சவேரியார் தம் நூலின் முன்னுரையில் (விவேகம்) குறித்துள்ளார்.4

மனிதன் இவ்வுலகத்தில் சொல்லொண்ணாத் துன்பத்திற்கு ஆளாகின்றான். அவன் அத்துன்பங்களிலிருந்து விடுபட வேண்டுமாயின் இறைவனுடைய அருள் அவனுக்கு வாய்க்க வேண்டும். வள்ளுவரும்,

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

என்று கூறியுள்ளார். "சர்வேசுரன் இந்தப் பூலோகத்திலே வியாதிக்காரர் முகாந்திரமாக அநேக மருந்துகளைக் கட்டளை

இட்டாப்போலே கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆதரவாகத் தேவமாதாவைக் கட்டளை இட்டார். வியாதிக்காரருக்கான மருந்தினாலே வியாதி நீங்கி ஆறுதல் வருமே. இவ்வுலகத்தில் எண்ணப்படாத கஸ்திகள் இருந்தாலும் தேவமாதா வல்லபமுடையவளாகவும்,தயையுள்ளவளாகவும் இருக்கிறதினாலே அவளுடைய உதவி உண்டானால் கஸ்தியெல்லாம் நீங்கிப்போகும் ... இந்தப் புதுமைகளை நீங்கள் பக்தியோடு கேட்டு மன்றாடினால் தேவமாதா உங்களுக்கு வருகிற இன்மைகளிலே நின்று இரட்சித்து அநேக நன்மைகளைக் கட்டளையிட்டுக் கடைசியிலே மோட்சபாக்கியம் உங்களுக்கு வரச் செய்வாளென்று அறியக்கடவீர்களாக" என்று தம் நூலின் முன்னுரையில் (விவேகம்) சின்ன சவேரியார் குறித்துள்ளார்.5

'உலகில் பிணியாளர்களுக்கு இறைவன் பல மருந்துகளைப் படைத்திருப்பதைப் போன்று துன்பப்படுகின்றவர்களுக்குத் துணையாக மாதாவை நமக்குத் தந்தருளியுள்ளார்' என்கின்றார் சனிக்கிழமைப் புதுமை நூலாசிரியர். மருந்தால் பிணி நீங்குவதைப் போல் மாதாவால் துன்பம் நீங்குகின்றது. மாதா,

1) வல்லபம் உள்ளவர்கள்
2) தயை உள்ளவர்கள்

ஆசிரியர் தம் முன்னுரையில் குறித்துள்ள சமய உண்மைகள் இந்நூலில் சொல்லப்பட்டுள்ள ஐம்பத்திரண்டு புதுமைகளினால் தெளிவாகின்றன. இப்புதுமைகளை, மக்கள் பக்தியோடு, கேட்க வேண்டுமென்றும் கேட்டுத் தேவமாதாவைத் தக்க பக்தியோடு மன்றாட வேண்டுமென்றும் ஆசிரியர் இந்நூலினைப் பயன்படுத்த வேண்டிய முறையினைத் தெளிவாகக் குறித்துள்ளார்.

இப்புதுமைகளைக் கேட்பதனால் மாதா நம்மைத் தீமைகளினின்றும் விடுவிப்பார் என்றும் நமக்குப் பல நன்மைகளைச் செய்வார் என்றும் இறுதியில் முத்திப் பேரின்பம் வாய்க்கத் துணை நிற்பார் என்றும் விவேகத்தில் இந்நூலின் பயனை மிகத் தெளிவாகக் குறித்துள்ளார். ஐம்பத்திரண்டு புதுமைகளும், செபமாலை பக்தி, செபத்தின் பலன், தேவமாதாவின் சபை ஒழுங்குகளை அனுசரிக்கும் பக்தி, சனிக்கிழமை ஒருசந்தியாகிய பக்தி முயற்சியால் நேர்ந்த புதுமைகள், மாதாவின் திருவுருவை நேரில் காண வேண்டும் என்னும் பக்தி முயற்சியால் விளைந்த புதுமைகள், தேவமாதாவுக்கு ஊழியம் செய்ததால் வந்த நல்ல மரணம், மாதா பக்தியால் புனிதரானது, தேவ

மாதாவின் உருவப் படத்தால் அரசர் முதலியோர் மனம் திரும்பியது. கணவன் மனைவி உறவு சீரானது, மாதாவின் திருப்பெயரை உச்சரித்ததால் வந்த பயன், கற்பு காப்பாற்றப்பட்டது, பசாசின் பிடியினின்றும் விடுபட்டது. மாதாவின் மன்றாட்டால் இயேசுவின் திருக்காட்சி கிடைத்தது, வாலிப வயதினர் மோக பாவத்திலிருந்து மாதாவின் கருணையால் மீட்கப்பட்டது, அவநம்பிக்கையிலிருந்து விடுபட்டது முதலிய செய்திகளைத் தெரிவிக்கின்றன.

சின்ன சவேரியாரின் சனிக்கிழமைப் புதுமை நூலில் காணும் ஐம்பத்திரண்டு புதுமைகளிலும் கத்தோலிக்க சமயக் கருத்துக்கள் எளிய நாட்டுப்புற மக்களும் புரிந்துகொள்ளும் வண்ணம் கதை உருவத்தில் புதுமை நிகழ்ச்சிகளைக் கூறியும் அறிவுரை என்னும் பகுதியில் ஏற்ற விளக்கங்கள் பல எடுத்துக்காட்டுகளின் மூலம் தந்தும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. சமயம் தனி மனித வாழ்வையும் சமுதாய வாழ்வையும் மேம்படுத்த வேண்டும். அங்கமும் ஆன்மாவும் கொண்ட மனிதன் இரண்டையும் நெறியில் நிறுத்தி வளர்ந்து வாழ்ந்து இம்மைப் பயனையும் மறுமைப் பேற்றையும் பெறுதற்குச் சமயம் உறுதுணை புரியவேண்டும். சின்ன சவேரியாரின் சனிக்கிழமைப் புதுமைகள் மனிதன் பாவங்களிலிருந்து விடுபடவும், புண்ணியங்களைக் கடைப்பிடிக்கவும் அவனும் அவன் குடும்பமும் அவன் வாழும் சமுதாயமும் மனித உறவாலும், இறையுறவாலும் உண்மை வழி கண்டு உயர்வடைந்து வாழவும் நல்வழி காட்டும் ஒளிவிளக்குகளாய் விளங்குகின்றன.

மொழி என்பது ஓர் இனத்தின் - சமுதாயத்தின் அழியாப் பொதுச் சொத்து. இச்சொத்து புலவர்களுக்கும் படித்தறிந்த மேதைகளுக்கும் மட்டும் உரித்தானதாய் இல்லாமல் பாமர மக்களுக்கும் உரித்தானதாய், அம் மொழியின் மூலம் அவர்களும் அறிவுபெற இடம் கொடுக்கக்கூடியதாய் இருக்க வேண்டும். 18ஆம் நூற்றாண்டில் சமயத் தளத்தில் தமிழ் உரைநடையைப் பாமர கிராம மக்களுக்கும் உரியதாய் ஆக்கிய பெருமை இத்தாலி ஈன்றெடுத்த சின்ன சவேரியாருக்கு உண்டு. அவருடைய அனைத்து நூல்களும் இன்றும் பதினைந்து பதிப்புகளுக்கு மேலாக வெளிவந்து மக்களிடையே அறிவுத் தொண்டு புரிந்துகொண்டு இருக்கின்றன. ஓலைச் சுவடிகளாக, கல்லச்சு நூல்களாக, அச்சுப் பொறி நூல்களாக் காலத்தையும், இடத்தையும் அவர் தம் தமிழ் உன்ரநடை நூல்கள் வென்று விள்ங்குகின்றன.

இவ்வரும் நூல்கள் தந்து தமிழ் உரைநடைக்கு ஆக்கம் தந்த சின்ன சவேரியாரை 'மக்கள் தமிழ் உரைநடை வளர்த்த தமிழ்த் தொண்டர்' என்று நன்றியுணர்ச்சியோடு நினைத்துப் போற்றுவோம்.

இத்தாலி நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்த சின்ன சவேரியார் (Rev. Fr. James Thomas de Rossi, S.J. – Society of Jesus - இயேசு சபை) தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு (18ஆம் நூற்றாண்டில்) குறிப்பாகப் பேச்சுத் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஆற்றிய பணி தமிழ் உரைநடை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று. இன்றையத் தமிழ்மொழி ஆய்வாளர்கள் அவருடைய நூல்கள் அனைத்தையும் தனித்தனி ஆய்வுக்கு உட்படுத்தி ஒவ்வொரு நூலிலும் காணும் பன்முகச் சிறப்புக்களை உலகறிய உணர்த்தி, செவ்வியல் தமிழ்ச்சீர்த்தி பெருக மேலைநாட்டுத் தமிழ் அறிஞர்கள் வரிசையில் அவர்தம் பெயரும் பெருமையும் இடம் பெறுமாறு செய்ய வேண்டும் அதுவே அவர்தம் தமிழ்ப்பணிக்கு நாம் ஆற்றும் நன்றிக் கடனாகும்.

குறிப்புகள்

1. "Rossi was the most popular writer as his Seven Volumes of Pudumai for every day of the week and his Daily Sermons which are known today as "Lives of Saints" were used everyday by the Catechists living in villages", Rev. Dr. S. Rajamanickam, S.J. The Oriental Scholar (Robert de Nobili, the Father of Tamil Prose), P.77.
2. இரம்போலா மாஸ்கரேனஸ், கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்கள், ப.119.
3. சேசு சபைக் குருவாகிய ரோஸியென்னும் சின்ன சவேரியார் சுவாமி, ஞாயிற்றுக் கிழமைப் புதுமை, 1910, மூன்றாம் பதிப்பு, ப.12.
4. மறைதிரு. சின்ன சவேரியார், சனிக்கிழமைப் புதுமை, விவேகம், 1929, (8ஆம் பதிப்பு, ப.5).
5. மறைதிரு சின்ன சவேரியார், சனிக்கிழமைப் புதுமை, விவேகம், ப.56.

****

முனைவர் ச. சாமிமுத்துவின் ஆதியாகம காவியத்தில் இறையனுபவம் - இலக்கியப்படைப்பு நுட்பநோக்கு

முனைவர் அ.அந்தோனி குருசு,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சி – 620 002.

"ஒரு கலையின் மதிப்பீடு அது உருவாக்கும் மகிழ்ச்சி மற்றும் தெய்வீக ஒருமைப்பாடு போன்ற உணர்வுகளில் அடங்கியுள்ளது" என்கிறார் லியோடால்ஸ்டாய் - 'யாதுமாகி' அழகியலின் பன்முகப் பார்வைகள், ஆ.இ. கிறிஸ்டி (தொ.ஆ.), ப.13.

உலக இலக்கியங்களில் காலமும் இடமும் கடந்து வாழவல்ல உயர்ந்த இலக்கியம் எது? என்று வலைத்தளத்தில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. தி இலியட், தி ஓடிசி என்னும் கிரேக்க மாகாவியங்களை எழுதிய (கி.மு.9) ஹோமர் முதல், பைரன், கீட்ஸ், ஷெல்லி, இராபர்ட் பிராஸ்ட் முதலிய பலரது பெயர்களைத் தங்கள் பதிலுரையில் பலரும் குறிப்பிட்டனர். அவர்களைத் தொடர்ந்து இராபர்ட் சீகினீன் என்பவர்,

திருவிவிலியத்தைக் கவிதைகளாக வடிக்கிறவர்கள் படைப்புத்தான் காலங்கடந்து வாழும்; ஏனென்றால் உலகிலுள்ள எல்லோரையும் திருவிவிலியம் கவர்ந்து ஈர்த்துள்ளதுபோல வேறெந்த நூலும் வசப்படுத்தவில்லை! என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜான் மில்டனது வசனகவிதை நடையில் சுவர்க்க நீக்கம் (1667) நூலைக் குறித்தே அவர் கருத்து வெளியிட்டார் என்றாலும் ஆதியாகம காவியமும் அதே கருப்பொருளை எடுத்துரைக்கும் கிறித்தவக் காப்பியமே! அதுபோன்ற சிறப்புக்குரிய படைப்பிலக்கியமே! தமிழல்லாத பிற இந்திய மொழிகளில் புதிய ஏற்பாடு காப்பியமாக்கப்பட்ட அளவுக்குப் பழைய ஏற்பாடு ஆக்கம் பெறவில்லலை!

1. நாராயண் வாமன் திலக், மராத்தியில் எழுதிய குரு-மெள்லி (கிறிஸ்து தாய்-குரு) (1919)
2. கவிகாந்த், குஜராத்தியில் எழுதிய கலபி (எல்லையற்ற அன்பு) (1923)
3. கோவிந்தபை எழுதிய கன்னடமொழிக் காவியம் கொல்கத்தா (1931)

4. தாமஸ் ஸ்டீபனின் மராத்திய மொழிக் காவியம் கிறிஸ்து புராணம் (1619) [ஜாக்கோப் பரப்பள்ளி (பதிப்பாசிரியர்) ஜீவதாரா (2008)]

திருவிவிலயத்திலுள்ள பழைய ஏற்பாடு இசுரயேல் மக்களான யூதர்களது வரலாறு நூல். அதிலுள்ள முதல் நூல் தொடக்க நூல். மோசே எழுதிய ஐந்நூல்களுள் முதல் நூலே ஆதியாகம ஆக்கம் பெற்றுள்ளது. இப்பிரபஞ்சத்திற்கும் பூவுலகப்படைப்பிற்கும் மையம் இறைவனே! காவிய நூல்களையும் ஆழ்ந்து பயின்று, புரிந்து, தெளிந்து எழுதியுள்ளமைக்குச் சான்று பகருகிறது. தொடக்கநூல் அளவில் சிறிதும் பெரிதுமான 50 அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

இசுரயேல் மக்கள், இறைவனது இவ்வுலகப் படைப்பு, மனிதப் படைப்பு ஆகியவற்றை உலகின் மனிதன் தோன்றிய வரலாற்றுடன் இணைந்து நோக்கிய சிந்தனைப் போக்கை ஆதியாகம காவியம் அழகியல் சிறப்புகள் பொலிவுறும் இலக்கியமாக ஆக்கியுள்ளார் அதன் படைப்பாசிரியர்.

ஆதியாகம காவியம் வாக்குறுதி நூல், உடன்படிக்கை பிரகடன நூல் என்று கூறலாம். மனிதன் இறை கட்டளையை மீறி, அன்புறவை முறித்துக்கொள்கிறான். ஆயினும் இறைவனது தனிப்பெருங் கருணை தொடருகிறது.

அனைத்து மானிடரையும் மீட்குமாறு, கடவுள் ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்து அவர் வழிமரபினர் வரலாற்றில் தாமே செயல்பட்டு, மீட்புப்பணியைத் தொடர்ந்தாற்றுகிறார்.(தொடக்கநூல், முன்னுரை, திருவிவிலியம், பொது மொழிபெயர்ப்பு)

திருவிவிலியத்தைக் காவியமாக்கிய முந்து நூல்களாகச் சுடர்மணி, இயேசு காவியம், இயேசு மாகாவியம், புதிய சாசனம், அருளவதாரம், பவுலடியார் பாவியம், புதுக்கவிதைக் காவியம், இயேசுவின் கதை என அடுத்தடுத்த பனுவல்கள் எத்தனையோ வெளிவந்திருந்தாலும், ஆதியாகம காவியம் தனித்துவப் பண்புநலன்கள் கொண்ட மரபுக்கவிதைக் காவியமாக ஆசிரியப்பா, ஆசிரியவிருத்தங்களால் பாடப்பெற்றுள்ளது.

I. உரைநடை இலக்கியம்

திருவிவிலியம் ஓர் உரைநடை இலக்கியம் ஆகும். விவிலியத்தை வாசிப்பவர்கள் நோக்கில் மூன்று வெவ்வேறு அடிப்படை அணுகுமுறைகள் உண்டு.

1. அடிப்படை அணுகுமுறை (Fundamentalist Approach): திருவிவிலியம் கடவுள் தந்ததே! அது புனிதமானது அதில் எழுதியுள்ளவை அனைத்தும் எழுதியவாறு நிகழ்ந்தவையே! அது ஒரு புனித நூல் (Holy scripture) என்னும் நம்பிக்கையுடன் வாசிப்போர் அணுகுமுறை.
2. நவீனத்துவ அணுகுமுறை (Modernist Approach) திருவிவிலியம் யூத இன வரலாற்று நூல் இறை ஏவுதலால், கடவுளுடன் நெருக்கமான உறவுகொண்டிருந்த மனிதர்கள் அவரவர் காலத்தில் எழுதிய நூல் திருவிவிலியம் புனிதமானதுதான், ஆயினும் அதில் இடம்பெறும் சூழல், உருவகம் ஆகியன மனிதவரம்புகளுக்கு உட்பட்டவையே! என்னும் முடிவுடன் வாசிப்பவர் அணுகுமுறை.
3. சமயச் சார்பற்ற அணுகுமுறை (Secular Approach) திருவிவிலியம் முழுக்க மனித முயற்சியின் விளைவே! அது ஓர் இலக்கிய மரபின் மானிடப்படைப்பு. மனித இயல்பு, வரலாறு, தொன்மைக்கால மத்தியகிழக்கு நாடுகளது பண்பாடு ஆகியவற்றை எடுத்துரைக்கும் பனுவல். கடவுளே அனைத்துக்கும் ஆதிமூல மையம் என்பதை இவ்வணுகுமுறை வாசகர் ஏற்பதில்லை! இவ்வாறான கண்ணோட்டத்தில் விவிலியம் வாசிப்பவர் அணுகுமுறை மூன்றாவது அணுகுமுறையாகும்.

ஆதியாகம காவியம் பாடியுள்ள பாவலர் எவ்வாறான அணுகுமுறை நிலைப்பாட்டினர்? இரண்டாவது குறிப்பிட்ட நவீனத்துவ நிலைப்பாட்டு அணுகுமுறையில் ஆழமான நம்பிக்கை உள்ளவர். "ஆதியாகமத்தை முழுமையாகப் பாடவேண்டும் என்னும் இறை ஏவுதலால் உந்தப்பெற்ற நான்" (ஆசிரியர் உரை) என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார். கடவுள் படைப்பு மனிதப் படைப்பு இருவரும் இணைந்த கூட்டுப்படைப்பே திருவிவிலியம் என்கிற கண்ணோட்டம் கவிஞர் ஐயாவுக்கு உண்டு.

பத்திச் சுவையே இதன் இதயத் துடிப்பாகும். இறைப்பற்றும் மனிதநேயமும் இதன் உயிரோட்டமாகும்.

என்று காவியப்புத்தணியாகிய இல்க்கியப் புதுவரவு பற்றித் தெளிவுபடுத்தியுள்ளார். இதன்படி நவீனத்துவ அணுகுமுறையைக் கடைப்பிடித்துள்ளார் (ஆசிரியர் உரை, ப.xiv).

திருவிவிலியத்தைப் புனித நூலாக நம்பி, மெதுவாக வாசிப்பது, ஆழ்ந்து தியானிப்பது, இறைவேண்டல் செய்யுமுன் இறைபுகழ் போற்றுவது, இறையனுபவத்தில் திளைப்பது என்பவாகிய ஞானத் தேடலின் பயனாகக் கனிந்ததே ஆதியாகம

காவியம்! 1444 பாடல்கள் 33 படலங்களாக அமைந்தன. 32வது படலநிறைவில் கடவுள் தம்மை ஆட்கொண்ட அனுபவத்தைப் பதிவுசெய்கிறார்.

ஆதி யாகம செய்திகள் எல்லாம்
அகமதில் வாங்கிப் பாடி டத்தான்
ஆதி பகவான் அடிமைக் கருள,
அடிபணிந் தேத்தி சித்தம் தோய்ந்து,
மோதி சோதனை எல்லாம், வல்லோன்
முறித்துத் தேற்ற, நானும் இந்த
ஆண்டவன் திருவடி தொழுதனன் சூடியே (32:54)

காப்பியம் பாடியிருப்பது ஆண்டவன் திருவடியைத் தொழுதலாகிய செயலின் பயனே!

இறைவனைப் பற்றிய யூதமக்கள் தங்களது வரலாறு அனுபவத்தை யாவே மரபு. எலோகிம் மரபு என இருவேறு இறைப்பெயர்களது நம்பிக்கைப் பாரம்பரியங்களாக தோல் சுருள்களில் தோராவின் வரலாற்றை எழுத்தாணிகொண்டு செதுக்கி வைத்தனர். இவற்றுடன் இணைச்சட்ட நூல் மரபு, குருக்கள் மரபு என நான்கு மரபுகளின் பின்னணியும் அதற்கு உண்டு! கவிஞர் ஆதியாகம காவியம் முழுவதும் யாவே மரபைப் பின்பற்றுகிறார். வரலாற்றின் மையமான இறைவனையே காப்பிய நாயகனாகப் படைத்துள்ளார். ஆதாம்-ஏவாள் முதல் யாக்கோபு-யோசேப்பு சகோதரர் வாழ்க்கைக் கதை வரையிலான மனிதர்கள் கிளைக்கதைகளின் நாயக நாயகியராகவே திகழ்கின்றனர்.

இறைவனை அறிதல், புரிதல், மனம் மாறுதல், மனத்தை மாற்றுதல், எதையும் எந்த வேளையிலும் செய்ய வலிமையும், துணிவும் பெறுதல் ஆகியன விவிலிய மாந்தர்களான ஆதாம்-ஏவாள், காயின்-ஆபேல், ஆபிரகாம்-ஈசாக்கு, ஆபிரகாம்-சாரா, ஈசாக்கு-இரபேக்கா, ஏசா-யாக்கோபு, யாக்கோபு-யோசேப்பு என ஈரிணைக் கதை மாந்தர்கள் வாழ்க்கைப் போராட்டங்களில் இறையனுபவச் செயல்பாடும் வெளிப்பாடும் எவ்வாறு காணக்கிடைக்கின்றன என்று காட்டுகிறார். ஈரிணை எடுத்துரை அமைப்பு நாட்டுப்புற வாய்மொழிக் கதை மரபின் தாக்கத்தைப் புலப்படுத்துகிறது. வாய்மொழிக் கதைகளாக வழங்கியவை எழுத்தாகப் பதிவாயின!

திருவிவிலியம் கடவுள் மூச்சு கலந்து வெளிப்படும் பதிவேடு. இதயத்துள் உறைந்து தங்கும் படிவம். ஆன்மாவின் கண்ணாடி: கடவுள் நமது வாழ்வில் எவ்வாறு செயல்படுகிறார் என்று கூறுகிற

மானிட வாழ்வின் கதையே! என்று யூஜின் பெட்டர்சன் கூறியவாறு காப்பியப் போக்கு சிறக்கிறது. காப்பியக் கலைஞரது ஆன்மீக வாழ்வின் ஆழ்நிலைக் கவன வாசிப்புப் படைப்பே ஆதியாகம காவியம். மையக்கதைப் போக்கிற்கே முதன்மைதரும் காப்பிய கவிஞர்,

வரலாற்றுக்கு முதன்மைகொடுத்து விலகிச் செல்லும் பகுதிகளை-கதைத் தொடர்ச்சி அறுபடும் இடங்களை – நுனித்தறிந்து மையக் கதையோட்ட விறுவிறுப்பு குன்றாதவாறு கதைத் தெரிவுசெய்துள்ளார். இதனால் 50 அதிகாரங்கள் கொண்ட தொடக்கநூலில் அதிகாரங்கள் 5, 9 (பாதி), 11,20,36 ஆகியன காப்பியக் கருத்தோட்டத்தில் இடம்பெறவில்லை! ஆறு பாகங்களில், 33 படலங்களில் எஞ்சிய கதைப்பகுதிகளின் தொடர்ச்சி தொய்வின்றித் தொடர்ந்து முடிகின்றன. வழிமரபினர் அட்டவணை வரலாறுகள் கதையோட்டத்தில் தொய்வு ஏற்படுத்தும் என்பதால் விட்டுவிடுகிறார்.

- ஆதாமின் வழிமரபினர் அட்டவணை (அதி.5)
- நோவாவும் புதல்வர்களும் (குடித்துக்கிடந்த அவலக்கோலம்) (அதி.9:18-27)
- நோவாவின் வழிமரபினர் (அதி.10:1-32)
- சேமின் வழிமரபினர் தலைமுறை வரலாறு (நோவாவின் மகன் சேம்) (அதி.11)
- ஆபிரகாமும் அபிலெக்கு மன்னனும் (ஒரே பாடலில் சொல்லிச் செல்கிறார் (அதி.12:5)
- சாராவைச் சகோதரி என்றதால் உரிமையாக்கும் முனைப்பு (சாரா சந்தித்த சோகச் சூழல்) (அதி.20:1-9)
- ஈசாக்கு மகன் ஏசாவின் வழிமரபினர் வரலாற்று அட்டவணை (அதி.36)

உலகத் தோற்றத்தின் காலத்து வாழ்ந்த முதல் மனிதர்களது பரம்பரை யூத இனமாகிய இசுராயலர்களே! இறைகட்டளை மீறல், சாபம், தண்டனை, அச்சம், போராட்டம், வாக்குறுதி, நம்பிக்கை, மனித பலவீனங்கள், இயலாமைகள், தவறுகள், குற்றங்கள், மீட்சிக்கான உடன்படிக்கைகள், மீட்பு முன்னுணர்த்தல்கள் என்பனபோன்ற மானுட வாழ்க்கையின் எதிர்கோடல்களே காப்பியநயம் மிளிரப் பாவியமாகியுள்ளன. குலமுதுவர் ஆபிரகாம் திராட்சை மது அருந்தித் தன்னை இழந்து கிடக்கும் நிலையை அடுத்த தலைமுறைக்கு இடறலாகும் என்று கருதி விட்டுவிடுகிறார்.

இருக்கின்றவராக இருக்கின்றவர் என்னும் யாவே இறைவன் மீது கவிஞர் கொள்ளும் பக்திப் பற்றுதல் எவ்வாறு வெளிப்படுகிறது? தமிழ் இலக்கியப் பண்பாட்டுப் பக்தி இலக்கிய மரபில் ஊறி, ஊன்றித் திளைத்த கவிஞர் படலந்தோறும் கடவுளுக்குச் சூட்டிக் குறிப்பிடும் பெயர்கள் பல! தமது மனத்தால் வண்ணனைவழி அறிவு, அனுபவவழி அறிவு, தேடல்வழி கண்டுணர்ந்த உய்த்துணரும் அறிவு ஆகிய அறிவுபற்றிய அறிவினாலும், உணர்ச்சி அறிவாற்றலினாலும் கடவுள் பற்றி காவிய வடிவத்தில் எடுத்துரைக்கிறார். எபிரேய மொழித் திருவிவிலியத்தில் யாவேயின் பெயர் 7000 தடவைக்குமேல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று விவிலிய ஆய்வாளர்கள் ஆராய்ந்து கூறியுள்ளனர்.

காப்பியக் கடவுள் பெயர்கள்

வல்லான், மூலவன், வழியொளி ஆனவன், சாத்திரப்பொருள், ஈந்தருள் காப்பவன், இரண்டறக் கலந்தவன், புரந்தே மகிழ்பவன், நல்லான், நற்றாய் ஆனவன், அப்பன், மாண்புரு வானவன், இறைவன், அனைத்துயிர்த் தலைவன், ஏகன், முத்தொழில் தத்துவமூர்த்தி, ஆதியும் அந்தமும் இல்லான், ஒரு பெரும்பொருள் ஒப்பிலாமணி, அண்ணல், ஆதியன், காரணன், தந்தை, தனயன், மெய்யருள் ஆவி, கடவுள், ஆண்டவன், அத்தன், ஒப்பிலா மூர்த்தி, பாப்பொருள், மூவொருக் கடவுள், மாபரன், மூலப்பரம் பொருள், தந்தை யாவே, நித்தியவார்த்தை, காணருள் இயேசு, இன்தமிழ் ஆனவன், முப்பொருள், இறை, படைப்பாளன், அணைத்தாண்டவன், அழகாண்டார், தத்துவன், தூயன், எண்குணத்தான், விண்ணரசன், தாய்தந்தையானான், இறை முதல்வன், அருளாளர், தூண்டிடர்நல் மணிவிளக்கு, நேமியினைப் படைத்தவன், அருளபழுத்தோன், வல்லபுகழ்ஆளன், பேராளன், பரமபிதா, மூலனார், செங்கழுநீர்ப்பதத்தார், சுடரோன், வாலறிவன், இருள்சேர் இருவினை சேரா மேலவன், அப்பன்-அம்மை, வித்தகன், புண்ணியன், திருத்துவன், நாதன், தூயோன், விண்வேந்தன், அருளோன், அருளாளன், முப்பொழுதும் அப்பழுக்கு இல்லான், எம்பெருமான், வல்லோன், தந்தை இறை, மூவாமுதல்வன், தேவன், வானாள் வள்ளல், நித்திய சத்திய தத்துவ மூர்த்தி, அலகிலா விளையாட்டுடையான், அன்பர்கன்பன், அருள் வடிவானவன், அருள்புரிதேவன், பற்றற்ற பரம்பொருள், திருவருள் மூவன்-70க்கு மேற்பட்ட சொற்கள் கடவுள் பற்றிய சொல்லாட்சிகள் அடையடுத்த பெயர்ச்சொற்களின் அழகியல் பண்பில் சிறப்பன! யாவே

பெயருக்கு நிகரன்களாக எடுத்தாளப்பட்டுள்ளன. இறைவனது பண்புநலன்களது பன்முகப் பெயர்கள், இறைவன் தன்மை உணர்த்தும் பெயர்கள், மனிதருடன் உறவு பாராட்டும் நெருக்கத்தை உணர்த்தும் உறவுப்பெயர்கள், இறைவனது ஆற்றல்களை அடையாளப்படுத்தும் பெயர்கள், அன்பு, அருள், காப்பு, புரத்தல், செயல்கள் எனப் பலவகைப் பரிணாமங்களை உட்பொருளாய் உணர்த்தும் காரணப்பெயர்கள் எல்லாம் கவிஞர் கடவுளை எத்தனை பண்புநலன்களது வார்ப்புகளாய்த் தரிசித்து நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து இறைமைய மெய்ஞ்ஞானத்தில் மூழ்கித்திளைத்துள்ளார் என்று காட்டுகின்றன. தமிழ்ப்பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப்பாடும் கவிவலவராகக் காப்பிய கவிஞர் சிறக்கின்றார். தமிழ் இலக்கிய நோக்கில் பரம்பொருளின் அடையாளப் பெயர்களை எபிரேய-யூத மரபுக்கு முரண்படாமல் எழுதியுள்ளார்.

தமிழ்ச் செய்யுள் இலக்கியம் என்னும் பரந்துபட்ட ஆழமான தளத்திலிருந்து, தொகுத்துக் கொண்ட, வகுத்துக்கொண்ட, தம்முள் செறித்துக்கொண்ட மொழிக்கருவிகளைக் கொண்டே தமிழறிஞரான கவிஞர் காப்பியம் ஆக்கியுள்ளார்!

III. ஆதியாகம காவியம் ஓர் இலக்கியத்தின் இலக்கியமாகிறது

ஏன்? எப்படி? என்பது சுவையான தேடல். 21-ஆம் நூற்றாண்டில் விவிலியம் என்னும் தொகுப்புக் கட்டுரை நூலில். அதன் தொகுப்பாசிரியருள் ஒருவரான அ.பீட்டர் அபீர்.

விவிலியம் ஒரு களஞ்சியம்: வரலாறு, பாடல்கள், கவிதைகள், உவமைகள், புதுமைகள், செபங்கள் போன்ற இலக்கிய வகைகளை அதுகொண்டிருப்பதால் மட்டுமல்ல: கடவுள் அருளும் விடுதலையின் நற்செய்தி என்ற ஒரே அடிப்படை உண்மையினைப் பல காலக்கட்டங்களில், பலவித சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு, பல ஆசிரியர்களால் எழுதப்பட்டு, தொகுக்கப்பட்டு சுமார் 1800 ஆண்டுகளாக உருவாக்கப்பட்டது. என்கிறார். வாசித்துப் புரிந்துகொண்டு, காப்பிய மொழிநடையில் எழுதி, ஆக்க இலக்கியம் படைப்பதன் அரிய முயற்சியை ஒருவர் புரிந்து கொள்ளலாம்.

விவிலியம் ஒரு புனித நூலோடு கூடிய ஓர் அரும்பெரும் காப்பியம் என்கிறார் ஜான் பாப்டிஸ்ட் (யாதுமாகி, ப.191)

படைத்தவெலாம் புதுப்புதிதாய்த் திகழக்கண்ட படைப்பாளர் எனச்சுட்டுகிறார். இறைவனை! கடவுள் தம் உருவிலும், சாயலிலும் மானிடமுதல் ஆதாம் ஏவாள் ஆகியோரைப் படைத்தார். தொடக்கநூலில், "இதனால் கணவன் தன் தாய் தந்தையைவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான்" (2:24) என இரண்டாம் அதிகாரம் முடிகிறது. ஆனால் ஏதென் தோட்டத்தில், இருவரும் எவ்வாறு ஒருடலாய் ஒன்றித்திருந்தனர்? என்று தொடக்க நூலாசிரியர் கற்பனையாகவோ, இலக்கியப் புனைவாகவோ எழுதவில்லை.

ஆதியாகமக் கவிஞரது கற்பனைப் புனைதிறன் எழிலுறு காவியப் படைப்பில் ஓர் அழகான காட்சியைச் சொற்சித்திரமாக்குகிறது. முத்தியில் முதல் திருமணம் முடிந்தபின் ஆதாமும் ஏவாளும் அணைந்திருவர் ஒருடலாய் ஒளிர்வார் அம்மா!" என்னும் வியப்புக்காட்சியில்,

உடம்பொடு உயிரிடை யென்ன மற்றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு (குறள் 1122)

என்று வள்ளுவரது குறளுக்கு இணையான, நிபந்தனையற்ற அன்புறவின் நட்டு சிறப்பதை எழுதுகிறார். ஏதேனின் நறுமண மலர்கள் மணம்வீசி அவர்களை மயக்குகிறது: பஞ்சவர்ணக்கிளிகள் அவர்கள் செல்லும் திசையென்றும் கொஞ்சுமொழி பேசுகின்றனவாம்! சூழ்ந்து இடைமறிக்கின்றனவாம்! எள்ளி நகையாடி மகிழ்விக்கின்றனவாம்! கூர்ந்து பார்த்து மகிழ்கின்றனவாம். இறைச்சாயல் பெற்ற படைப்பின் சிகரங்களாக அவர் திகழ்ந்தாலும், உயிரினத் தோழமை செழித்திருந்தது. மனித நல்லுறவுப் பண்புநலன்களைப் பறவை மீது கவிஞர் ஏற்றிப்பாடவில்லை. அவ்வாறான உன்னத உறவுநிலை இருந்ததுண்டு என்கிறார்.

கொங்வையுணும் பஞ்சவணக் கிளிகள் எல்லாம்
கூடியவர் குலவுமொழி கொஞ்சிப்பேசி
எவ்வழியில் ஏகிடினும் அவரைச் சூழ்ந்ததே
இடைமறித்து எள்ளிநகை யாடக் காண்மின் (2:29)

மனித உறவில் மகிழ்ச்சியும் மலர்ச்சியும் நிலவினால்தான் உடன்வாழும் உயிர்களிலும் மகிழ்ச்சி பொங்கும். ஏதேன், ஆதி முதல் மனிதர்கள், மணக்கும் மலர்கள், பேசும் கிளிகள் என வெவ்வேறு பொருட்கள், உயிர்கள் அனைத்தையும் ஓரிடத்தில் கொண்டுவந்து நிறுத்திப் படைக்கும். படைப்புக் கற்பனை (Creative imagination) என்னும் தலைசிறந்த கற்பனையை இங்கே காணலாம்.

அன்னம் அசைந்தாடி நடக்கின்ற அழகு கண்டு ஆர்வத்துடன் ஆதாமின் கரம்பற்றினான். பொன்மலரை அவன் பறித்து அன்புறவின் புலப்பாட்டை வெளிப்படுத்துகிறான். அவள் நாணத்துடன் மலரை மென்மை பறிபோகாமல் எறிகின்றாள். அவளைக் கண்டு அசைந்துலவும் அன்னம் கோணி நாணியது என்பது அழகான இயைபுக் கற்பனைக் காட்சி, மனித-உயிரின இணக்க உறவின் உன்னத உறவுநிலை இது!

ஆற்றோரப் படுகைகளில் ஓடி ஆதாம்
ஆங்கெழுந்த கோங்கருகே மறைந்தே நின்றான்!
சேற்றோரம் தேடிவந்த ஆர ணங்கோ
செண்பகத்தின் அன்பணைப்பில் தேங்கி நின்றாள்! (2:32)

ஆற்றோரப் படுகைவழி ஓடிக் கோங்குமர மறைவில் ஆதாம் மறைந்து நிற்பதும், அவனைத் தேடிச்சென்ற ஆரணங்கு ஏவாள், செண்பகத்தின் அன்பு அணைப்பில் தேங்கி நிற்பதும், ஊற்றுப் புனல் பெருக்கின்வழி இறங்கி நடப்பவளைக் கண்டு அசைந்தாட்டும் அலைகளுக்குள் துள்ளிவந்த வாளை மீன்கள் வியந்து நோக்குவதும், ஏதேன் தோட்டத்துக் கண்கொள்ளாக் காட்சிகளாக வருணனைகள் நெஞ்சையள்ளுகின்றன. வாழ்க்கை என்பது அழகிய கொண்டாட்டம்! எதுவரை? கவலைகளால், குற்ற மனநிலைகளால் வாழ்க்கை கொல்லப்படாதவரை! இவ்வாறான காட்சிகளது சிகரமான சித்திரிப்பொன்று வருகிறது.

ஆதாமும் ஏவாளும் குளத்தில் நீந்தி விளையாடும் காட்சி அது. தாமரைகள் பூத்த தடாகத்தில், அலையேறி வருமாறு வாய்திறந்து அழைக்கின்றனவாம். தன் தலைவன் குளத்தில் அயர்ச்சி தீரக் குளித்தபின் கரையேறிப் புல்தரைமீது வந்து களைப்புத் தீர்க்க வழிசெய்யவேண்டுமே என்று நினைக்கிறாள் தலைவி ஏவாள். குவளை மலர்களைக் கொய்து வருகிறாள். புல்தரையில் குவளைமலர்ப்படுக்கை ஏற்பாடு செய்கிறாள். கூவி அழைத்து அருகே அமரச் செய்கிறாள். தேன்சிந்தும் பண்ணிசைக்கிறாள். தன் புலன்கள் பூரிக்க அவன் புன்னகைக்கிறான் என்பதே அந்தக் கற்பனைப் புனைவு. சொல்லோவியச் சித்திரச் சித்திரிப்பு. இந்தப் பகுதிப் பாடல்கள் அனைத்துமே படைப்புக் கற்பனையின் சிறப்பையும் இயற்கையுடன் இயைந்து இம்மண்ணிலே சுவர்க்க வாழ்க்கை வாழ்ந்த உயிரியல் பன்மிய இயைபையும் காட்டுகின்றன. இறைமையின் மறைபொருளை இயற்கை இயைபின் கலத்தலிலே கண்டுணர்ந்தனர் ஆதிப்பெற்றோர்.

வாவியலர் தாமரைகள் வாய்தி றந்தே
வார்குழலாள் அலையேறி வருக வென்க,
தாவிமகள் சென்றெய்தி குவளை கொய்து
தன்தலைவன் வந்தோய்வு கொள்வ தற்கே
ஓவியநல் புற்றரையில் பரப்பி வைத்தே
ஒலித்தவனை அழைத்தாங்கே அமரக் கொஞ்சித்
தேவியவள் தேன்சிந்தும் பண்ணி சைத்தாள்
சிந்தைமகிழ் வெய்தியவன் புன்ன கைத்தான் (2:34)

"மண் மீதே விண்ணகத்தைக் கட்டியெழுப்புவோம்" என்று காரல்மார்க்ஸ் 19-ஆம் நூற்றாண்டில் முழங்கினார். ஆனால் உலகத் தோற்றமே கடவுள் படைத்த சுவர்க்கமாகத்தான் இப்பூமி இருந்தது என்கிறது பழைய ஏற்பாட்டுத் தொடக்கநூல்! காப்பியத் தலைவனாம் கடவுளோடு இந்த "முத்தி திகழ் பெருவாழ்வில் திளைத்திருந்த" (2:37) அனுபவத்தை எவ்வாறு இணைக்கின்றார்?

நாளெல்லாம் நிறைவாழ்வில் நிலைத்தி ருந்தார்!
உயர்நிலையில் அவர்தமக்கே கடவுள்தந்த
ஒப்பில்லாப் பேரின்ப வாழ்வே வாழ்ந்தார் (2:37)

நிலைவாழ்வு, நிறைவாழ்வு, பேரின்ப வாழ்வு ஏதேன் தோட்ட வாழ்வு என்று திருவிவிலிய வருணனைச் சூழல்கொண்டு கடவுளுடன் கலந்துவாழும் வாழ்வையே காப்பிய ஆசிரியர் சுட்டுகிறார்.

ஆதிப்பெற்றோர் ஏதேன் அழகுக் காட்டில் இருந்தபோது மனித, விலங்கு, பறவை உறவு எப்படி இருந்தது? "ஓநாய் செம்மறியாட்டுக் குட்டியோடு தங்கியிருக்கும் ஆட்டுக்குட்டியோடு சிறுத்தைப்புலி படுத்துக்கொள்ளும்" (11:6) என்று ஏசாயா இறைவாக்கினர் எழுதியவற்றுக்குக் கவிஞர் உயிரோவியம் தீட்டுகிறார்.

தூண்டிடா நல்மணிவிளக்கே எம்மைத் தூக்கிச்
சுவர்க்கத்தில் வைத்தழகு பார்க்கின் றாயே! (2:39)

என்று இறைபுகழ் போற்றி இன்புற்று வாழ்ந்த இப்பூவுலக சுவர்க்கமாம் ஏதேன் தோட்டத்தின் இறைவனுடன் நல்லிணக்க வாழ்வு வாழ்ந்ததைப் பாடியுள்ளார். "பூமியில் உள்ள வளங்கள் அனைத்தும் மானிட சமுதாயம் முழுவதற்கும் சொந்தமானவை. இதைப் பயன்படுத்தி நிறைவாழ்வு வாழ உரிமையையும் சுதந்திரத்தையும் மனித சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் இறைவன் கொடுத்துள்ளார்" என்பதே தொடக்கநூல் காட்டும் உன்னத மனிதநிலை (21-ஆம் நூற்றாண்டின் விவிலியம்,

ஆ.அலோசியஸ் சேவியர் (தொ.ஆ), அ. பீட்டர் அபீர், ப.114). மனித-இயற்கை இறை உறவு வண்ணனைகள் திருவிவிலியத் தொடக்க நூலில் இல்லை! இவை காப்பிய ஆசிரியரது கற்பனைச் சித்திரவார்ப்புகளே! இவ்வாறான இலக்கிய ஓவியங்கள்தாம் படைப்பிற்கு அமரத்துவ ஆற்றலால் தன்னை நிரப்பிக் கொள்ளும் உள்ளியக்கத்தைத் தந்துள்ளன.

II. புலமைத் திறன்

காப்பியக் கவிஞர் முனைவர் சாமிமுத்து, இயல், இசை, நாடகம், மேடைத் தமிழ் என நாற்றமிழிலும் படைப்பாற்றல்மிக்க பனுவல்கள் 23 ஏற்கனவே படைத்துள்ள பல்துறை வித்தகர். “இலக்கியத்தின் பிறவெளிப்பாடுகளுடன் ஒப்பிடுகையில் கவிதையில்தான் மொழியின் காவியமயமான செயல்பாடு உயரிய தளத்தில் காணக்கிடக்கிறது” என்கிறார் அமைப்பு மையவாதம், பின் அமைப்பியல் மற்றும் கீழைக்காவிய இயல் ஆசிரியர் கோபிசந்த் நாரங்க் (த.மொ.பொ.-எச். பாலசுப்பிரமணியம், சாகித்ய அகாதெமி, ப.125).

இசுரயேலரது கடவுள் உறவுடனான வரலாற்றுப் பதிவேட்டுக் கருத்துக்களை தமிழ் இலக்கியக் கடலில் மூழ்கி எடுத்த முத்துக்களின் ஒளியில் வைத்துப் பார்த்து எழுதியுள்ளார். அவரது காப்பிய அடிகளில் எண்ணற்ற இலக்கியவரிகளின் சொல்லடுக்குகளும், தொடர்நிலைகளும், சந்தநயம் பொலிவுறும் எதுகைமோனைத் தொடைகளும் சரளநடை ஓட்டத்திற்குக் காரணமாகின்றன. எங்கிருக்கின்றான் இறைவன்? இடமும் காலமும் கடந்திருப்பவர் கடவுள்: என்றெல்லாம் உள்ளும் அகமும் கலந்திருப்பவர் அவர்!

எள்ளுக்குள் எண்ணெய்போல எங்கும் நிறைந்திருக்கிறான் ஈசன் என்பது பழமொழி (Herman Jenson, A Classified collection of Tamil Proverbs, p.2) எள்ளினில் எண்ணெய் இரண்டறக் கலந்தவன்” என்னும் பாயிர வரிகளில், எவ்வாறு எங்கும் நிறைந்துள்ளான்? என்பதற்கு இரண்டறக் கலந்துளன் என்ற கூர்மையாக்கப்பெற்ற கருத்து வெளியிடப்பட்டுள்ளது. சாத்தான் ஏவாளைக் கெடுக்க முனைந்தபோது பாரதியின் பாஞ்சாலி சபத வரிகளான தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும் என எடுத்தாளுகிறார்.

ஆதரவற்று ஆண்டவனிடமிருந்து அந்நியமாகி நின்ற ஆதிப்பெற்றோரைத் தேற்ற அதிதூதர் மிக்கேலின் வருகை

ஐந்தாம்படலக் காட்சியாகிறது. கத்தோலிக்கக் கோட்பாடாகிய வானதூதர்கள் பற்றிய காப்பிய ஆசிரியரது ஆழ்நிலை வாசிப்புக்குச் சான்று பகருகிறது. ஆதாமையும் ஏவாளையும் ஏய்த்த பேய்க்கூட்டம் திக்குத்திசையெங்கும் ஓடி ஒளிந்து ஒழியுமாறு ஒன்பது பிரிவினர் சிதறடிக்கின்றனர். ஆதாம் இதனை உணர்ந்து இறைபுகழ் போற்றுகிறான்.

இருள்சேர் இருவினைசேரா மேலனன்
மருள்நீக்கி எமைமுற் றாட்கொள அழைத்தனம்!
பிறவியின் பெருங்கடல் நீந்திட வென்றே
அறக்கடல் அந்தணன் அருட்கடல் மூழ்கினோம்! (5:13)

என்னும் புகழ்மொழிகளில்,

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு (குறள் 5)
பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடி சேராதார் (குறள் 10)

ஆகிய குறள்களின் கடவுள் வாழ்த்தையும்,

அறக்கடல்நீயே! அருட்கடல் நீயே!

என்று பாடிய வீரமாமுனிவரது தேம்பாவணியையும் கண்டுணர்ந்து மகிழ்கிறோம்.

பால்நினைந் தூட்டும் தாயினும் மேலாய்ச்
சால்புறு அன்னாய்! தாங்கியே காத்தாய் (5:16)

என்னும் தொடர்களில்,

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளிபெருக்கி (544, 1:61)

என்று பாடிய மாணிக்கவாசகரது திருவாசகத்தையே காண்கிறோம்.

தொன்னூறு அகவையில், சாரா மகப்பேறு வாய்க்கப்பெறுவாள் என்றதை இறைவன் யாவே அருளால் நிகழ்ந்ததை உணர்ந்த ஆபிரகாமின் மகிழ்ச்சியை அடுக்கு உவமையாக வருணிக்கின்றார்:

அந்தியில் முளைத்தெழு முழுநி லவாக
அருமலை விடரக நெல்லிக் கனியாகப்
பந்தியில் இனிக்கும் பாகாய், பழமாய்
பார்புகழ் மகவாய் வாய்த்தவன் (12:8)

என்னும் அடிகளில் ஔவைக்கு அதிகன் அரிதாக்கிடைத்த கருநெல்லிக்கனி பற்றிய புறநானூற்றுப் பாடல் 91-ன் 8-9 அடிகளின் செறிவாக அமைந்துவிடுகிறது.

பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி

என ஏழு சீர்களது கருத்து நான்கு சீர்களில் உவமையாக்கப்பட்டுள்ளது.

ஆதியாகம காவியம் முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோல் போற்றும் உயரிய பான்மையைமட்டுமன்றி, பேராசிரியரது தமிழ் இலக்கியப் புலமை ஒளியில் தொடக்க நூலை உயரியதாக ஆக்கம் செய்துள்ள நுட்பம் புலப்படுகிறது. காப்பியக் கடலில் மூழ்கி முக்குளிப்பவர் எண்ணற்ற இலக்கிய முத்துக்களால் வளம்பெறுவர்.

V. காவிய மொழிப்பயன்

உள் அந்தரங்கத்தின் விழிப்பும், தன்னுணர்வும் மிகுந்த காவியமொழியின் முக்கியமான பணி எது? என்று அமைப்பியல்வாத அறிஞர் உரோமான் யாகப்சன் எடுத்துரைப்பதற்கேற்ற ஆதியாகம காவியக்கட்டுமான அமைப்பு சிறப்புறுகிறது.

தன்னுடைய இயல்பை உணர்த்தி வாசகனைத் தன்பால் ஈர்ப்பதும், ஒலிநயம், மற்றும் சந்தநயம் மிகுந்த தேர்ந்தெடுத்த சொற்களின் மீட்டுரையாலும் அணிநடைகளாலும், அவனைக் கவர்தலும், தனக்குப் புறம்பாக உள்ள ஒருபுறவய யதார்த்தத்தை அனுபவப்பூர்வமாக உணரச்செய்தலும்தான் மற்றெல்லாச் செயல்பாடுகளைக் காட்டிலும் காவியமொழியின் முக்கியப் பணியாகும் என்று கோபிசந்த் நாரங் கருத்துக்கேற்ப காவியப்பயன் அமைகிறது.

திருவிவிலியத் தொடக்க நூலைக் காவியமாக வடிவமாற்றம் செய்யும்பொழுது அதன் உள்ளடக்கம், படைப்பாசிரியரது அழகியல் உணர்ச்சிக்கு உருக்கொடுக்கும் கவிதையாகப் பரிணமிக்கிறதா? முழுமையாகத் தன்னைச் சார்ந்த விழிப்புடன் உருவாக்கப்பட்ட காப்பியக் கலைத் திறன்களைப் புலப்படுத்துவதாக உள்ளதா? என்னும் வினாக்களுக்கு விடை தருவதாகப் படைக்கப்பாக்கம் சிறத்தல் வேண்டும்.

காலம்போன கடைசியில் அருமருந்தன்ன மகவாக ஆபிரகாமுக்கும் சாராவுக்கும் மகனாகப் பிறந்தவன் ஈசாக்கு. யாவே ஆபிரகாமின் வாழ்வில் ஒரு சோதனை நாடகத்தை, அலகிலா விளையாட்டாக அரங்கேற்ற விழைகிறார். யூத இனத்தவருக்கே மூத்த பிதாப்பிதா யாவேமீது கொண்டிருந்த பக்திப்பற்று எத்தகையது என்பதே அந்தச் சோதனை! முதுபெரும் தந்தை ஆபிரகாம் மனத்தில் முதன்மை அன்பு அவரது

உள்ளத்தின் அடிமன ஆழத்தில் உறைந்துகிடந்தது யாவே இறைவனா? தவம் செய்துபெற்ற பிள்ளை ஈசாக்கா? என்பனவாகிய சிக்கலான முதன்மைசார்ந்த முரண்பாடுதான் அந்தச் சோதனை!

பன்னிரண்டாம் படலம் அவலச்சுவை ததும்பும் அற்புதக் காப்பியக்காட்சி நாடகமாகப் புத்துருக்கொள்கிறது. மோரியப் பரப்பிற்குச் சென்று எதிரில் தோன்றும் மலைமீது பால்விழி முகத்துப் பாலகனை (12:5) எரி பலியிடு! என்று ஆண்டவன் ஆணையிடுகிறார்! இதை எழுதும் கவிஞரது மனம் குமுறுகிறது! குலைகிறது! நலிகிறது!

தந்தையே மகனைத் தம்முடைய கைகளால்
தறித்திடத் துணிந்தது தரணியில் நடந்தது!

என்றதும் வாசகர் மனத்தில் இது கொலைப்பலியா? பலிக்கொலையா? என்ற கேள்விகள் எழுகின்றன. உயிரியப்பன்மியச் சூழலில் சிறுவன் ஈசாக்கிற்கு உற்ற துன்பம் உயிரினங்களுக்கும் பரவித் தாக்குகிறது.

ஓர் இலக்கியமாவது அறியச் செய்வதில் அல்ல! உணரச்செய்வதில்தான் உள்ளது. ஓர் கலையின் முழுமை, கலையாகும் நிறைவில், நிறைவின் நீடிப்பில் உள்ளது என்கிறார். கலை ஓர் உத்தி நூலில் ஷக்லோவ்ஸ்கி (கோபிநாத் நூரங், ப.59)

தொடக்கநூலின் 22-ஆம் அதிகாரத்தில் 14 திருவசனங்களில் விறுவிறுவென்று நிகழ்ச்சிகள் அரங்கேறி முடிந்துவிடுகின்றன. அதே காட்சி ஆதியாகம காவியத்தில் 51 பாடல்களாக விரிவாக்கம் பெற்றுள்ளன. அப்பா! பலிப்பொருள் எங்கே? என்று கேட்கும் சிறுவனது நிலை எப்படி இருந்தது? மனித உயிருக்கு ஊறு நேரும்போது சூழ்ந்திருக்கும் உயிரினச் சமநிலை குலைவுறுகிறது என்பது சூழலியல் தத்துவம்.

கயிறு களாலே கட்டிட மகனைக்
　　கண்ட காடைகள் கறாகறா வென்றே
வயிறு வலிக்க கதறின புதர்களில்!
　　வன்னிலம்பிளந்து பெருமூச் செறிந்தது!
எயிறு கழன்ற கிழட்டுக் குரங்குகள்
　　ஏங்கின், ஈசாக் கிறுதியைக் கண்டு!
முயிறு இளைத்தது மூத்தவர் செயலெணி
　　முகஞ்சிவந் தவரைச் சினந்தே பார்த்தது! (1323)

நான் வேண்டுமா? உன் மகன் வேண்டுமா? என்கிற உளப்போராட்டம் உயிரை வதைக்கும் அகவிய உளைச்சலாய்

ஆபிரகாமை நலித்திருக்கும் என்பதில் ஐயமில்லை! அவல உணர்ச்சியை மேலும் மேலும் அதிகரிக்கச்செய்யும் காட்சிகள். அடுத்தடுத்து முன்னரே விரிந்தன. மயில்கள், குயில்கள், கலைமான் கணங்கள் "இனம்புரியாத கவலையில் வீழ்ந்தே கண்கள் கலங்கின!" (13:7)

மெய்யன்பு கேட்டதைத் தரமுடிகிறதா என்பதில் நிருபணமாகிறது! இப்போது அடுத்தடுத்த காட்சிவரிகளைக் காப்பிய ஆசிரியர் எழுதவில்லை! துயரப்பீடிப்பில் அவர் மனம் எழுதுவதை நிறுத்திவிடுகிறது. தவிக்கிறது! துடிக்கிறது, மெய்சிலிர்க்கிறது! காப்பியக்கதைதான் அவரை எழுதுச் செய்கிறது தொடர்ந்து! "எப்படிச் சொல்ல... ஆருயிர் மகனிடம் அழமுடியாத அரும்பெறல் தந்தை நிலை!" (13:38)

இரத்த பாசம் மானிடன் உணர்வில்
நழுவிடா தென்றும் தொற்றிக்கொள்வதே!
நரனாய்ப் பிறந்த எவனறி யான்கொல்!
நானே மறுப்பினும் சதைதனி ஆடுமே!
வரத்தால் பெற்ற மகன்பாற் கொண்ட
வாய்மை யன்பை விடவும் இறைபால்
சுரக்கும் பக்திப்பண்பில் தோய்ந்தவர்
தூயோன் கட்டளை முடித்திடத் துணிந்தார்! (13:37)

கவிஞனது மனம்தான் பதறுகிறது. வெந்து விதிர்த்திடும் இயற்கையே யன்றி விழிநீர்வார்க்க வேறு" எவரும் அங்கில்லை! அவரைத் தடுப்பதற்கு யாவேவைத் தவிர எவருமில்லை! என்றாலும் நேர்மையாக ஆண்டவன் சொல்லை நிறைவேற்ற முனைகிறார் வானதூதரால் தடுக்கப்படுகிறார்.

பாவத்தால் பாழ்பட்ட மனித குலத்தை மீட்க அடிமைபோல் மனித உடலெடுத்து சிலுவையில் சித்திரவதைப்பட்டுக் கடைசித் துளிக் குருதியையும் சிந்திய மகனைப் பரமதந்தை கொலைப்பட விட்டபோதும் உள்ளத்துள் குருதி கொட்டியிருப்பாரன்றோ?

இன்று, இவ்வுலகில் பலருக்கு முன்னால் ஒன்றும், பின்னால் வேறொன்றும் - உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் மனிதர்கள், வாக்குறுதி அளித்துவிட்டு மாறுபடும் மனிதர்கள், இவர்களிடையே பிளவுபடாத ஆளுமைகொண்ட முழு மனிதமயமாக்கத்தால் முதிர்ந்துபண்பட்ட குலமுதுவர் ஆபிரகாம். அதனால் அவரை அருட்பெரும் சோதியாம் ஆதிபகவனின் திருவருள் பெற்றே திரும்பிய செம்மலர் என்று நீண்டநெடும் அடைமொழி தந்து காப்பியத்தில் நிலையான இடம்பெறச் செய்துவிடுகிறார் இறைமைக் கவிஞர் சாமிமுத்து அவர்கள்!

ஆபிரகாமின் ஆளுமையில் யாவே இறைவன், தமக்கே ஆளாகின்ற ஆட்செய்கின்ற ஆளுமையைக் கட்டியெழுப்ப முனைகிறார். தமது ஆணை, அவரில் செயல்பட இடம் தருகிறாரா? என்றே சோதிக்கின்றார். ஒருவேளை அரிதாகப் பிறந்த மகன் ஈசாக்கிற்கே தமது உள்ளத்தில் இனி முதலிடம்! ஆண்டவனுக்கு அடுத்த இடம் தருவதில் என்ன பிழை? என்றெல்லாம் சோதனை வரும்போது பிளவுபட்ட மனத்துடன் ஆண்டவன் ஆணையிட்டதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று ஆபிரகாம் தள்ளிப்போடவில்லை! ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம் என்னும் திருவிவிலிய வாக்கிற்கேற்றவாறு உடனே செயல்பட்டுச் சோதனையில் வெற்றி பெறுகிறார் என்று முழு மனித மயமாக்கம் என்னும் நூலை எழுதிய வாலன்டைன் டேவிடார் எழுதியுள்ளார். ஆதியாகம காவியக்கதை மாந்தர் ஆபிரகாமைச் சித்தரித்துள்ளார். சிறப்பு காலமெல்லாம் வாசகர் மனத்தில் முன்மாதிரியாகத் திகழச்செய்துவிடுகிறார். இரண்டாம் ஆதாமாகிய இயேசுவைச் சிலுவை மரணத்தின் மூலம் மீட்புபெறக் கொலைப்பட அனுப்பிய தந்தையின் வதைபடும் மனத்தை உணரச் செய்கிறார் கவிஞர்.

படைப்பாசிரியரது சித்திரிப்பில் இயற்கை இனங்கள் கதறினாலும், பதறினாலும், துயரத்தில் மூழ்கினாலும், கவிஞனே பதைப்புற்றாலும், கண்ணீரில் கலங்கநேர்ந்தாலும் ஆபிரகாம் மனத்தில் கடவுள் வார்த்தை மீதான கலக்கமற்ற பற்று, உறுதியாக இருந்தது என்ற படைப்பாக்கம் சிறந்தோங்குகிறது. திறன்மிக்க படைப்பாசிரியரை-காப்பிய ஆசிரியரது ஆழ்ந்திருக்கும் கவியுள்ளத்தைக் கண்டறிவது சாதாரண வாச்கருக்குச் சாத்தியமன்று என்கிறார் மைக்கேல் ரெபடியார் என்னும் திறனாய்வாளர்.

உயர்தளத்திலுள்ள இலக்கிய நிபுணத்துவம் கொண்ட, மரபுகளை அறிந்த, பயிற்சிமிக்க, விழிப்புள்ள வாசகன், இலக்கிய ஆர்வம் (அதாவது நல்ல இதயமும் பண்பட்ட சுவைத்திறனும்) கொண்டவனாக இருக்கவேண்டும். அப்போதுதான் அவனுடைய (வாசகனுடைய) இலக்கியம் சார்ந்த எதிர்வினை நம்பத்தகுந்ததாக அமையும். (கோபிசந்த நாரங், ப.129)

ஆதியாகம காவியத்தில் வெளிப்படையாகச். சொல்லாமலே நவில்தொறும் நூனயமாக மறைந்துள்ள, அருவமான, உள்ளடக்க ஒழுங்கமைவிலிருந்தே அதன் செம்பொருளைக் கண்டுகொள்ள இயலும்!

இலக்கிய அணிச்சிறப்பு

ஒரு காப்பியத்தின் பாடல்வரிகளில் சொல்லும் பொருளும் பிரிக்க இயலாதவாறு கலந்துள்ளன. அணிநய அழகு மிளிர கருத்தையும் கதையையும் கலந்து எழுதும்போது என்ன நேரிடுகிறது?

அதன் பன்முக அர்த்தங்களின் சாத்தியக்கூறுகளை மேலெழும்பச் செய்கிறது. அதாவது வானவில் போன்ற அர்த்தச் சாயல்களை உருவாக்குகிறது. அர்த்தத்தின் பன்முகத் தன்மை வியப்பை மேலிடச் செய்து, இந்திர ஜாலத்தை உருவாக்கும் நிலைக்கு இட்டுச் செல்கிறது. இப்படிப்பட்ட உச்சநிலை அனுபவத்தை எட்டும்போது, சாதாரணமாகத் தோன்றும் மொழி, அசாதாரணமாகிவிடுகிறது. சொல் தன் வழக்கமான பயன்முறையிலிருந்து விலகிச் சிறப்பாகப் பயன்படுகிறது. அது தன்னுடைய சாமானியத் தன்மையை உடைத்தெறிந்துவிட்டு அர்த்தங்களின் தீப வரிசையை அலங்காரமாக வைக்கிறது என்கிறார் அமைப்பு மையவாதம் பிதாமகர் சசூர் என்னும் மொழியில் அறிஞர் (கோபிசந்த் நாரங், ப.64)

ஆதியாகம காவியத்தில் என்ன எழுதுவது என்பதைவிட எப்படி எழுதுவது? என்னும் முனைப்போடு அதன் ஆசிரியர் படைப்பாக்கச் செயல்முறையைக் கையாண்டுள்ளார். கடவுள் கட்டளையை மீறி முரண்பாடாக ஆதிப்பெற்றோர் தவறிழைக்க நேரிட்டது. அதை முரண்தொடை அணியாகவே சித்திரிக்கும்போது கருத்துக்கேற்ற அணியழகு அமைகிறது. பாவம் செய்ததும் ஏவாள்நிலை இப்படி ஆயிற்று! என்பதை முரண்தொடை அணியாகத் தொகுத்துத் தொடங்குகிறார் காப்பிய ஆசிரியர்.

பட்டுடுத்தி வந்துவளோ பஞ்சை யானாள்!
பஞ்சணையை விட்டுழந்து பழிப்புக் காளானாள்! (2:24:1-2)

ஏவாளது தவிப்பை உவமைச் சித்திரமாகத் தீட்டி இக்காலத்தில் கண்களால் காணும் பெண்ணின் நிலையுடன் இயைபக் கற்பனையாய் உவமையாக்குகிறார். குப்பைமேடேறிப் பிச்சை ஏற்கும் பெண்ணுடன் ஒப்பிடுகிறார். முரண்தொடை அணியும், உவமை அணியும் அடுத்தமைந்த இயைபுக் கற்பனை அவலத்தின் உச்சம்தொடுகிறது.

கட்டுடலும் தளர்ந்தெலும்பு தோலுமாகக்
கண்ணொளியும் போய்மங்கிக் கலங்கி நோக
விட்டனைத்துச் சுகபோகம் வறுமைக் கோட்டில்

வீழ்ந்தாங்கே குப்பைபொதி மேடு தன்னில்
தட்டெடுத்துப் பிச்சைக்காய் நிற்பாள் ஒத்துத்
தகவிழந்தே முதல் பெண்ணாள் தவிக்கலானாள்! (2:24)

பொறாமையால் காயின் ஆபேலைக் கொலை செய்கிறான். அதைச் சொல்ல வந்தவர் ஒரு காட்சி உவமை மூலம் நடப்பதை உணர்த்திவிடுகிறார்.

ஒருகூட்டுப் பறவை தம்முள் ஒன்றுக்கு மட்டும்பொல்லா
தொருபுத்தி வந்தே கொத்த துடித்தொன்று சாய்வ தொத்தே

(6:37:1-2) என்று வினையுவமையாக வெளியிடுகிறார்.

அழுக்காறு என ஒருபாவி திருச்செற்றுத் தீயுழி உய்த்து விடும் (168) என்பதற்கு சான்றான இலக்கிய ஓவியம் இது.

பாவம் உலகில் பெருகி உலகை வெள்ளத்தால் அழிக்க முடிவு செய்கிறார். இறைவன் யாவே! தேவமனிதர் நோவா குடும்பத்தைமட்டும் காக்கிறார். நோவாவின் பண்புநலனை ஒரே தொடரில் உவமை கூறி மனத்தில் நிறுத்திவிடுகிறார், விலை போகா மெய்நெறியோன் என்கிறார்.

காற்றடிக்கும் திசைவளையுட, நாணல் போல
கடவுளடி நிழல்நின்ற நோவா வுள்ளம் (7:11)

கடவுள் இருப்பிடத்தையும் விஞ்சும் வானுயரப் பாபேல் பெருங்கோபுரம் கட்ட ஆணவ மனிதர்கள் முயன்றனர். மொழிக்குழப்பம் நேர்ந்தபோது பல திசைகளிலும் எவ்வாறு சிதறிக் குலைந்தனர் என்பதை, இலக்கணம் கல்லாத மாணவன் குன்று முட்டிய குருவி போலவும், குறிச்சி புக்கமான் போலவும் இடர்ப்படுவான்! என்று உரையாசிரியர் குறிப்பிட்டவாறு,

குன்றுமுட்டிய குருவிகளாய்க் கோவேன் றமுதே நிலை குலைந்தார் (7:47)

என்று மாற்றுப்பார்வையில் கையாளுகிறார். குன்று: இறைவன், குருவிகள்: பாபேல் கோபுரம் எழுப்பிய மக்கள். அறிவின் சிறுமை அது!

மரபு உவமைகளை மட்டுமன்றி ஆபிரகாமில் இறை நினைப்பில் மூழ்கிய அனுபவத்தை நீரினுள் மீன்போல் என்று உவமிக்கிறார்.

ஆபிரகாம்-சாரா மகன் ஈசாக்கிற்கு உற்றதுணையாக வரவிருப்பவள் இரபேக்கா என்று ஊழியர் உரைத்தனர். அதைக்கேட்ட அவனது மனமகிழ்ச்சியை, “கொய்திடத் தனக்கென மலர்ந்தபொன் மலரென”, “ஊறிடும் ஆமடி பாலென” என்றெல்லாம் பொருத்தமான உவமைகளை அடுக்கி உரைக்கின்றார் (15:51).

தொனிப் பொருள் சிறப்பு

தொனி என்பது என்ன? காவியம் சார்ந்த அழகியலுக்கு ஆனந்தவர்த்தனர் உருவாக்கியது தொனி. மொழியின் நேர்ப் பொருளிலிருந்து விலகிய அர்த்தத்தை வெளிப்படுத்துவதே தொனி. உணர்வின் வர்ணம் பெற்று மிளிர்வது தொனி. காவியத்தின் குறியீட்டுத்திறன் அழகியல் சார்ந்த இன்பமே தொனி. கவிதையின் சந்தநயத்தினின்றும் பொருளினின்றும் அழகு சார்ந்த நிலையே தொனி, நேர்ப்பொருளைக் காட்டிலும் உயர்ச்சியும் மேன்மையும் பெற்றது தொனி. உவமைகளைச் சரியாகக் கையாளும்போது தொனிப்பொருள் சிறக்கிறது.

வடமொழிக் காவியவாணர் ஆனந்தவர்த்தனர் சுவை நிறைந்த தொனிக் காவியங்கள், அணியழகு காரணமான சுவையால் இன்பநிலை ஏற்படுத்தும் காவியங்கள், பெயரளவில் சுவையுள்ள அல்லது அறவே இல்லாத காவியங்கள் என்று மூவகைப்படுத்துகிறார். (கோபிசந்த் நாரங், ப.354) ஆதியாகம காவியம் அணிநலங்கள் சிறக்கும் இரண்டாவது வகைக் காவியமாகும். கலையாக்கமாக உருவாகி அழகியல் இன்பம் பயக்கும் நோக்கத்தை நிறைவேற்றுகிறது. மொழியைக் கையாளும் கலைநுட்பத் திறனால் உண்டாக்குவது இது!

உலகைப்பெரு வெள்ளத்தால் இறைவன் யாவே அழிக்க அறச்சினம் கொண்டதேன்? இவ்வினாவுக்கு எடுத்துக்காட்டு உவமை மூலம் உடல் இச்சைக்கும் பெண்களின் தளிர்மேனிப் பளப்பளப்புக்கும் மயங்கி அதில் குளித்தெழுந்தவர்களது வீழ்ச்சியைச் சித்திரமாக்கும்போது அவலச்சுவை விஞ்சுகிறது.

நொங்குநுரை கொண்டோடும் காட்டு வெள்ளம்
நுதிக்கோட்டு யானையையே வீழ்த்திக் கொல்லும்!
பங்கமது பொலவரின் இச்சை யெல்லாம்
பாய்ந்தவரைத் தீவினையில் வீழ்த்திப் பொல்லா
அங்கநெளி வசைவதனல் மனத்தை விட்டே
ஆழ்பாவ நெருப்பாழி வீழ்த் தள்ளும் (7:16)

எது? காமஇச்சை! முறைகேடான காமத்துய்ப்பு!

“உடல் இச்சையால் பாவம் செய்து, ஆன்மாவைக் கொலைசெய்வோர் உடல் செத்த ஆன்மாவைச் சுமக்கின்ற சவப்பெட்டியாக உடலை ஆக்கிக்கொண்டோர்!” என்ற எட்வின் லூட்சரது வரிகளை ஒத்த சிந்தனை காப்பியத்தில் இடம்பெறுகிறது.

சவப்பொருளாய் மாந்தரெலாம் மாறிப் பாவம்
தாங்குமுயிர் தாங்கியவர் தாழல் ஆனார் (7:18)

காமத்தின் விளைவை உணர்த்தும் தொனிப்பொருள் புலப்படுத்தும் சொற்றொடர்கள் வீழ்த்திக் கொல்லும்! நெருப்பாற்றில் வீழத்தள்ளும் என்று உருவகச் சித்திரிப்பாகும்போது அதன் தீமையை இதற்குமேல் உருக்கொடுக்க மொழிவேறில்லை என்னும் நிலை உருவாகிறது. நோவாவைப் போன்ற நல்ல மனித வாழ்க்கை என்பது இன்பம் என்பது இறைவலுவில் அவர்வழி நடப்பதில்தான் இருக்கிறது. நிறைவேறாத முறைகேடான உறவு அல்லாத தொடர்புவழியில் தீய வேட்கைகளைத் தீர்த்துக்கொள்வதில் இன்பம் காணாத, தூய வழியில் வாழ்ந்து வாழ்வின் முடிவை அடைகிற நிலையே நிறைவாழ்வு என்று ஆதியாக காவிய ஆசிரியர் அறநெறிப்போதனை செய்யாமல், நிகழ்ச்சிகளது வருணனைகளின் ஊடாகவே உணரச் செய்வதில்தான் தொனிப்பொருள் சிறக்கிறது. கருத்தில் காணும் தொனி, பொருட்செறிவில் புலப்படும் தொனி, உணர்வில் மிளிரும் தொனி என அனைத்தாலும் ஆதியாகம காவியம் சிறப்புறுகிறது.

இறைபுகழ் போற்றலில் இறையனுபவம்

புகழ்ச்சி, போற்றுரை என்பன ஆன்மாவின் எழுச்சியாகக் கருதப்படுகிறது. மனிதனுக்குச் செய்துவரும் அருட்செயல்கள் அனைத்திலும் கடவுள் தம்மை வாழ்த்துக்கு உரியவராக வெளிப்படுத்துகிறார். புகழ்ச்சிப் பாக்கள் மகிழ்ச்சி ததும்பிய நிலையில் கடவுளை விவரிக்கும், அவருடைய உன்னத மகிமையை எடுத்துரைக்கவும் செய்கின்றன. புகழ்ச்சி கடவுளின் மேன்மையை அறிக்கையிடுதலாகும் என்கிறார் விவிலியக் களஞ்சியம் தியாகு (4:617)

இறை உன்னதத்தை உணரவல்லோர், இறைவனுடன் இணைந்து ஒன்றியங்குவோர் இறைவனை வியந்து மகிழ்ந்து புகழும் திறமுடையவர்.

ஆதியாகம காவிய வாசகர் எவரும் அதன் இலக்கியப் படைப்பாக்க அழகிலும், காப்பியச் சுவையிலும், அணி நலத்திலும், தொனிப்பொருளிலும் உள்ளத்தைப் பறிகொடுத்தாலும், படைப்பாசிரியரது ஆன்மீக அனுபவத் திளைப்பை இறைவனை 33 படலங்களிலும் ஒல்லும் வகையெல்லாம் உணர்ந்து நெகிழ்ந்து உள்ளுருகிக் காப்பிய நாயகனாம் இறைவனைப் போற்றும் திறத்தை வியக்காமல் இருக்க இயலாது! பக்தி இலக்கியம் பாடிய சைவ-வைணவ அடியார்களது உளநிலையை இங்கே தரிசிக்கலாம்.

தூண்டிடாநல் மணிவிளக்கே எம்மைத் தூக்கிச்
சுவர்க்கத்தில் வைத்தழகு பார்க்கின் றாயே! (2:39)

என்பது ஆதிபெற்றோர் வாழ்த்து.

முட்டிநீர் தள்ளினும் கட்டநின் தாள்களைப்
புரண்டிவண் அமுதே பொழுதெலாம் கிடப்போம்! (5:16)

என்பது வானவன் தேற்ற வரும்வரை ஏதேனுக்கு வெளியே இறைவேண்டல் நிலை.

போற்றி போற்றி புண்ணியா போற்றி!
வேற்றுமை அனைத்தையும் வீழ்த்துவாய் போற்றி!
படைப்பெலாம் காத்தருள் பொழிபவர் போற்றி! (5:24)

எனப் போற்றித் திருப்பாடல் தொடர்ந்து இசைப்பது வானவர் போற்றியுரை.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தத ழித்துப்
பாந்தமுடன் காத்துவரும் பரமா னந்தா!
சொல்லுதற்கோ முடிவதில்லை மண்ணில் எம்மைத்
தோள்நோவத் தூக்கித்தான் சுமந்து நாளும்
கொல்லுவதற்கே பறந்தவரும் பொல்லாப் பெல்லாம்
தூளாக்கித் தள்ளிவிட்டுத் துடைத்துக் கண்ணீர்
ப.ல்கவிடா தெமையாண்டுப் பொழியும் நித்தன்
மாகருணை இயற்கையடி பொங்கு தய்யா! (7:77)

இது போன்ற அன்பின் வேண்டுதல்.

தீண்டியே திளைத்திடத் தென்றலாய் உலவிடும்
திருவருள் மூவனை என்றுமே போற்றுமே!

இறைமெய்ஞ்ஞானத் திளைப்பின் வரிகள் இவை வாசிப்போம், மனமாற்றம் அடைவோம்! காப்பியக் கலைஞானம் கற்போம்! ஞானக்கலை இன்பம் மூழ்கி மெஞ்ஞானம் பெறுவோம்!

இருபத்து ஒன்றாம் நூற்றாண்டு மலர்ந்தபின்னும், சமயங்களின் நோக்கில் பக்திப் படைப்பிலக்கியங்கள் படைக்கும் காலம் முடிவுக்கு வந்துவிட்டது, சமயச் சார்பற்ற காலம் தொடங்கி விட்டது. இனிமேல் மனிதனே மையம்! மனித மையப் படைப்பிலக்கம் மட்டுமே வாழும், கடவுள் மையம் தகர்ந்துவிட்டது, வரலாற்றை இயக்குபவர் இறைவன் அல்ல! மனிதனே! மையம் என்ற ஒன்றே இல்லை! மகத்தான வரலாறு என்று எதுவும் இல்லை! மாபெரும் பண்பாடு என்றும் ஒன்றுமில்லை. முழுமை என்று எதுவுமில்லை! எல்லாமே பகுதி உண்மைகளே! என்றெல்லாம் தருக்கவாதங்கள் அனல்பரக்கும் இந்தப் பின்நவீனத்துவ யுகத்தில்தான் இவை அனைத்தையும் மீறி ஆதியாகம காவியம் முத்தமிழ் கவிமாமணி முனைவர் சாமிமுத்து எழுதி வெளியிட்டுள்ளார்.

அழகின் உன்னத வெளிப்பாட்டுக் கலைவடிவம் கவிதை! கவிதையின் உயர்ந்த சாதனை காப்பியம்! அந்தக் காப்பியத்தின் உயிர்த்துடிப்பான உள்ளடக்கம் இறைவார்த்தை அல்லது வார்த்தையாம் இறைமையின் புலப்பாடு! வெளிப்பாடு! அந்த வெளிப்பாட்டின் உயர்பயன் இறையனுபவம், அந்த இறை அனுபவம் முழு மனிதமயமாக்கத்திற்கு இட்டுச்செல்லும் திசைவழி! அந்தத் திசைவழியைக் கண்டுகொள்ள தமிழ் கூறும் நல்லுலக இலக்கிய வாசகருக்கான அழைப்பின் அறைகூவல்தான் ஆதியாகம காவியம்.

ஆதியாகம காவியம் கிறித்தவக் கோட்பாட்டுக்குக் காப்பிய உருக்கொடுத்துள்ள பனுவல் இலக்கியம் என்பது,

சித்தாந்தத்தின் ஏற்கெனவே உள்ள வாதப்பிரதிவாதங்களின் விளைவுதான் என்பது ஈகிள்டனின் கருத்து. இலக்கியம் சித்தாந்தம் சார்ந்த வாதப்பிரதிவாதங்களின் பிரதி பிம்பமாக, சித்தாந்தத்தின் தனிச்சிறந்த உற்பத்திப் பொருளாக வெளிப்படுகிறது (கோபிசந்த் நாரங், ப.்.257)

என்று குறிப்பிட்ட கருத்துக்கேற்ப ஆதியாகம காவியம் இறைபோதத்தின் திருவிவிலிய இலக்கியத்தின் பேரிலக்கியம். ஆதியாகம காவியம் என்கிற கலைப்படைப்பின் அழகியல் மதிப்பை மேலே விவாதித்த பன்முகக் கண்ணோட்டங்களில் அதன் இலக்கிய நுட்பவார்ப்புகளை நல்ல இதயங்கொண்ட இலக்கியச் சுவைஞன் இப்பனுவல் இடத்தையும் காலத்தையும் சென்று வாழப்போகிற மேதமைப் படைப்பு என்கிற முடிவுக்குத்தான் இறுதியாக வந்துவிடுவார்!

கருவி நூல்கள்

1. சாமிமுத்து, ச. ஆதியாகம காவியம், கிளாரா பதிப்பகம், திருச்சிராப்பள்ளி.
2. திருவிவிலியம், UBS & TNBCLC (Ed), பொது மொழிபெயர்ப்பு.
3. ஆனந்த் அமலதாஸ் (தொ.ஆ) மனிதனின் முழுமை, ரெய்மோன் பணிக்கர், (மொ.பெ.) பொன்னையா, வை, அ., வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல்.
4. அலோசியஸ் சேவியர், அ., பீட்டர் அபீர், அ. (தொ.ஆ) 21-ஆம் நூற்றாண்டில் விவிலியம், நற்செய்தி வெளியீடு, பூந்தமல்லி, சென்னை.

5. கிறிஸ்டி, ஆ.இ. யாதுமாகி, அழகியலின் பன்முகப் பார்வைகள், திருஇருதய குருகுலம், சென்னை.
6. கோபிசந்த் நாரங், அமைப்பு மையவாதம், பின் அமைப்பியல் மற்றும் கீழைக்காவிய இயல், (மொ.பெ.) பாலசுப்பிரமணியம், எச்., சாகித்ய அகாதெமி, சென்னை.
7. தியாகு, விவிலியக் களஞ்சியம், தொகுதி 1-5, தியான ஆசிரமம், சென்னை.
8. Erwin W. Lutzer, Seven Snares of the Enemy. Om Books, Secenderabad.
9. Jeevadhara, (ed) Jacob Parappally, Christ in Indian Poetry, 1 & 2, Nos. 219, 225, Kottayam, Kerala.

****

தஞ்சைப் புலவர் தாமஸ் படைப்புக்களில் கவித்திறன்

முனைவர் இரா. ஆரோக்கியசாமி
பேராசிரியர் (ஓய்வு)
அ.வீ.வா.நி.திரு புட்பம் கல்லூரி (தன்னாட்சி)
பூண்டி, தஞ்சாவூர்.

வீரமா முனிவர் என்னும் விடிவெள்ளியால் தோற்றுவிக்கப்பட்ட கிறித்தவச் சிற்றிலக்கிய வரலாறு தஞ்சைப் புலவர் தாமஸ் அவர்களால் இமயமென உயர்ந்து நிற்கிறது. வீரமாமுனிவர் அடைக்கல அன்னைக்குக் கற்கோயில் அமைத்ததோடு கவின்மிகு கலைக்கோயிலும் அமைத்துக் கலம்பகம் பாடினார். அன்னைக்கு விழா எடுத்து அலங்காரத்தேரில் அமர்த்தி வீதியுலா வரச் செய்தார். அவர் காட்டிய வழியில் தமிழகப் புலவர்களான அந்தோணிக்குட்டி அண்ணாவியார், வேதநாயகம் பிள்ளை போன்ற பெருமக்கள் அந்தாதி, சதகம், பதிகம், பிள்ளைத் தமிழ், மாலை போன்ற பல சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளனர். அந்த வரிசையில் தஞ்சைப் புலவர் தாமஸ்

1. வேளை நகர் அன்னையைப் போற்றும் ஆனந்தக் கும்மி
2. வேளை நவமணி மாலை
3. வேளை அந்தாதி
4. மரியன்னை மாலை
5. வேளை மரியன்னை பிள்ளைத் தமிழ்
6. நற்செய்தி நங்கையர் மாலை
7. நசராபுரி நாயகி மாலை
8. நசரை நான்மணி மாலை
9. மூவர் அம்மானை
10. திருவெல்லை மாலை
11. வேளைச் சகாய மாலை
12. பேரின்பத் தூதுப் பாடல்கள்
13. தெய்வ சகாயன் திருச்சரிதை
14. தஞ்சை வியாகுல மாதா பதிகம்
15. மனுக்குல வெண்பா
16. நன்று நாற்பது
17. சரணாஞ்சலி
18. கர்த்தர் புகழாரம்

19. கோட்டூர் மரியன்னை பதிகம்
20. கோட்டூர் அந்தாதி

ஆகிய இருபது சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார். இவை அனைத்தும் "ஏசுவின் அன்னைக்கு ஏற்றிய தீபங்கள்" என்ற பெயரில் ஒரே நூலாகத் தொகுக்கப் பெற்றுள்ளது.

இவற்றுள் பத்து நூல்களை மரியன்னையைத் தலைவியாகக் கொண்டே பாடியுள்ளார். அதிலும் வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதாவின் மீது புலவர் கொண்ட தனிப்பெரும் பக்தி மேம்பாட்டால் "வேளை" என்று குறிப்பிட்டு ஐந்து நூல்களைப் படைத்துள்ளார். புலவர் தாமஸ் அவர்களின் கவித்திறன் குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.

உலகில் ஓடும் நதிகளுக்கு இல்லாத தனிச்சிறப்பும் பெருமையும் இயோர்தான் ஆற்றுக்கு உண்டு. இந்த நதியில் இயேசு பெருமான் திருமுழுக்குப் பெற்றார் என்பது நாமறிந்ததே. அந்த நதியைப் பாட வந்த கவிஞர்,

மகிதலம் சுரக்கும் அமுதெனப் பரந்து
புகுதலம் கவரும் பொருள்பல சுமந்து
நறுமலர்க் குவையாம் திருமுகம் விளங்கத்
திரைக்கரம் திகழ நுரைத்துகில் புனைந்து
விழிக்கயல் உகள இடைக்கொடி துவளக்
கல்லெனும் அரவத்து ஒல்சிலம்பு அதிர
எல்லையில் உழவர் எதிர்கொள நடந்து
இருகரை மருங்கும் பெருவளம் சிதறிச்
சென்னெறிப் படரும் செல்வியாம் யோர்தான்
நன்னதி புரக்கும் பொன்னகர்க்கு இறைவ!

என்று வருணிக்கிறார்.

மண்வளம் பெருக நீர்வளம் சிறக்க வேண்டும். மலையில் பொழியும் மழை அருவியாகிப் பின் ஆற்று வழி வந்து உலகு புரந்தூட்டும் தாயாகிறது. எல்லையற்ற பயன் நல்கும் ஆறு கவிஞன் கண்களுக்குத் தொண்டின் உருவாய்த் திகழும் பெண்ணாகக் காட்சியளிக்கிறது.

இயோர்தான் ஆறு மண்மகள் மடி சுரக்கும் அமுதெனப் பிறக்கிறது. தான் செல்லுமிடமெல்லாம் பல பொருட்களையும் தன்னுள் அடக்கிக் கொள்கிறது. மணமிக்க மலர்களைத் தம் திருமுகமாகவும், அலைகளைக் கைகளாகவும், நுரையை ஆடையாகவும் புனைந்து கொள்கிறது. கயலாகிய கண்கள் துள்ள, கொடியிடை துவள, மோதும் அலையொலியே சிலம்பொலியாக

ஆர்ப்பரிக்க உழவர்கள் எதிர்க்கொண்டு வரவேற்பு நல்குகின்றனர். இவ்வாறு வழியெல்லாம் வளம்பல விளைவித்து நல்வழிச் செல்லும் நங்கையாக இயோர்தான் ஆறு விளங்குகிறது. இத்தகைய நல்ல நதியைப் பாதுகாக்கும் பொன்னகர்க்கு இறைவனே! என்று இயேசு பெருமானைப் போற்றுகிறார்.

நதியைப் பெண்ணாக, தாயாகக் காண்பது இந்திய மரபு. நம் நாட்டு நதிகள் பெண்பாற் பெயர்களைக் கொண்டே பெரும்பாலும் அழைக்கப்படுகின்றன. மலராகிய திருமுகம், அலையாகிய கைகள், நுரையாகிய ஆடை, விழியாகிய கயல், வளைந்தும் நெளிந்தும் ஓடிவரும் இடை, ஆர்ப்பரிக்கும் அலை ஒலியே சிலம்பொலி என்று தம்மை எழிலுறப் புனைந்து ஒயிலுடன் நடந்து வரும் அழுகு மங்கையாக இயோர்தான் நதியைத் தமிழக நதியாகவே கவிஞர் காண்கிறார்.

இந்த வருணனையில் தன் மயமாக்கல் என்னும் பண்பைக் காண்கிறோம். மகனைப் பயந்தும் கன்னியாய் விளங்கும் அன்னை மரி போலப் பொருள் பல சுமந்தும், பெருவளம் நல்கியும் தூய்மை கெடாத செல்வியாக இயோர்தான் விளங்குகிறது என்ற தொனிப் பொருளையும் கவிஞர் உணர்த்துவது அறிந்து இன்புறத்தக்கது.

இறைவனை ஒரு மாமன்னனாகக் கண்டு அவன் ஆளுகைக்கு உட்பட்ட நாட்டையும் அரசச் சின்னங்களையும் தாமஸ் பாடுகிறார்.

வையம்உன் நகரி சையம் உன் இல்லம்
பருதியும் மதியும் உன் இருசுடர் விளக்கம்!
கொண்டல்நின் ஊர்தி குளிர்கடல் முரசும்
வீக்கிய கொடிமுன் தூக்கிய சிலுவை
ஒன்பது கணமும் நின்பெரும் சேனை!
சொன்னநின் படைதான் மின்னலும் இடியும்
விசும்பு உன் கவிகை! வேதம் உன் இருக்கை
மன்பதை அனைத்தும் நின்குடி மக்கள்.

இந்த உலகம் இறைவனின் ஆட்சிக்கு உட்பட்ட நகரம், மலை அவன் வாழும் அரண்மனை, வெங்கதிரும் தண்மதியும் கண்கள் மேகம் வாகனம் ஆர்ப்பரிக்கும் குளிர் கடல் முரசு சிலுவை கொடி ஒன்பது வகை வானவர்கள் படை வீரர்கள் மின்னலும் இடியும் படைக்கருவிகள் வானம் கொற்றக் கொடை வேதம் சிம்மாசனம். மாந்தர் அவன் ஆளுகைக்கு உட்பட்ட குடிமக்கள். கவிஞர் தாமஸ், இறைவனே இந்த உலகின் தலைவன் என்பதையும் அவன் ஆணைக்கு உட்பட்டே இந்த உலகம் நெறி

தவறாமல் இயங்குகிறது என்பதையும் அதனை இயக்கும் பெருங்கணக்கனாக அவன் இருப்பதையும் உணர்த்துகிறார்.

யூதேய நாட்டின் மாமன்னனாகத் தாவீது விளங்கினான். அவனுக்கு அஞ்சிய அரசர்கள் யானை மீது திறைப்பொருட்களைச் சுமந்து வந்து அவன் காலடியில் தம்முடிபட வணங்கி எழுகின்றனர். அதனால் அவன் கால்களில் தழும்பு உண்டாகிறது. தம்மைப்பாடி வந்த புலவர்கட்குக் கணக்கற்ற பொருட்செல்வத்தை வாரி வழங்குகிறான். அதனால் அவன் கைகளில் தழும்பு உண்டாகிறது. மறைமொழியோடு இறைவன் திருப்புகழை எடுத்து மொழிவதால் அவன் நாவில் தழும்பு உண்டாகிறது. இறைவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்குவதால் அவன் நெற்றியில் தழும்பு உண்டாகிறது. போர்க்களங்கள் பலவற்றில் வீரப்போர் புரிந்ததால் மார்பில் தழும்பு உண்டாகிறது என்று தாவீது அரசனின் பெருமையைப் பாடுகிறார்.

வாரணத்து இறைகொணரும் மாமன்னர் முடிபட
  வணங்கியெழு கால் தாழும்பும்
வந்தபுல வோர்தமக்கு அந்தமுற வேபொருள்
  வழங்கிடு கரத் தழும்பும்
ஆரணத் தொடுபரவும் இறைவன் திருப்புகழ்
  அறைந்தநா விற்றழும்பும்
அவனடியில் வீழ்ந்துநிதம் அஞ்சலித் திடுதலின்
  அமைந்தநெற் றித் தழும்பும்
காரணத் தொடுபொருது வீரக் களங்கள் பல
  கண்டமார் பிற் றழும்பும்
காட்டுமொரு யூதேய நாட்டரச னாம்தவிது
  காவலன்

என்பது அப்பாடல்.

இப்பாடலில் ஒவ்வொரு காரணம் பற்றி தாவீது மன்னனின் உடலில் தழும்புகள் உண்டாகிறது என்று பாடுவது அறியத்தக்கது.

மாமன்னர்களுக்குக் குறுநில மன்னர்கள் திறைப் பொருள் தந்து பணிவதும் தம்மை அண்டி வந்த புலவர்கட்குப் பொருளை அள்ளி அள்ளி வழங்குவதும் அவர்கள் இறைவனைப் புகழ்ந்து போற்றி வணங்குவதும் களம்பல கண்டு வீரத்தழும்புகளை மார்பில் ஏற்பதும் பண்டைக்காலத் தமிழ் மன்னர்களின் வாழ்வியல் நிகழ்வுகளாகின்றன.

நம் நாட்டு மரபை நன்கு அறிந்த கவிஞர் தாமஸ் யூதேய நாட்டு மன்னன் தாவீதை இந்த அளவுகோலால் மேற்கண்டவாறு புனைந்து கூறும் திறன் அவர்தம் கவி ஆற்றலுக்குச் சான்றாகிறது.

மரியன்னையின் திரு உருவச் சிறப்பை வீரமாமுனிவர்,
மீனே தலைஅரும்ப வெண்மதியே தாள்அரும்ப
பானே உடல்அரும்பப் பாங்குஉருவைத் - தான்நேர்
உடைத்தாள் திருக்காவ லூர்அகத்து வைத்தார்
துடைத்தவர் வினைத்துயிரைத் தொக்கு

என்று திருக்காவலூர்க் கலம்பகத்தில் பாடுவார். வானத்து விண்மீன்கள் தானே வந்து தன் சிரசில் மணிமகுடமாய் இலங்கவும், வெண்மையான பிறை நிலவு தானே வந்து அவளுடைய திருவடிகளை அணியாகத் தாங்கவும், கதிரவனே வந்து திருமேனியில் ஆடையாக விளங்கவும், அழகு மிக்க உருவத்தை உடையவள் மரியன்னை என்று பாடுவார்.

இருபதாம் நூற்றாண்டுப் புலவர் தாமஸ்,

பாதிமதி சூடும்இரு பாதமும் கதிராடை
படுமேனியும் சிவந்த
பங்கய மலர்க்கரமும் அம்கயற் கண்களோடு
பவளத்தை ஒத்த இதழும்
சோதிமய மானமுடி சூழ்ந்திலகு சென்னியும்
சுடர்நுதலும் மதி வதனமும்

என்று மரியன்னையின் திரு உருவை எழிலுறப் பாடுவார். இப்பாடலில் திருவடி தொடங்கித் தலைவரையிலான பாதாதிகேச வருணனையைக் காண முடிகிறது.

"பெண்ணொருத்தி காணப்பட்டாள். அவள் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தாள்; நிலவின் மேல் நின்று கொண்டிருந்தாள்; தலையின் மீது பன்னிரு விண்மீன்களை முடியாகச் சூடியிருந்தாள்" (திருவெளிப்பாடு 12:1) என்று விவிலியம் கூறுகிறது. இதை நினைவில் கொண்ட வீரமாமுனிவர் மீன், வெண்மதி, பான் என்ற மூன்றையும் மரியன்னையின் அணிகளாக அமைத்துப் பாடினார்.

ஆனால் புலவர் தாமஸ், மீன், வெண்மதி, பான் என்ற மூன்றோடு பங்கய மலர்க்கரம், அங்கயற்கண், பவளத்தை ஒத்த இதழ், சுடர் நுதல், மதி வதனம் என்று அன்னையின் எழிலுறருவைப் பாடிப் பெருமிதம் கொள்கிறார்.

இப்பாடலைக் கடவுளுக்குரிய பாதாதி கேச வருணனையாக அமைத்து அவள் தெய்வத்தாய் என்பதைக் கவிஞர் நமக்கு உணர்த்துவது அவரின் தனித்துவமாகிறது.

திங்கள் தண்ணளி சுரக்கும் தன்மையது; ஞாயிறு சுட்டெரிக்கும் திறம் கொண்டது; விண்மீன் முன்னறிவிக்கும்

அடையாளமாகத் திகழ்வது. திங்கள், ஞாயிறு, விண்மீன் ஆகிய மூன்றையும் மரியன்னை தம் அணிகலன்களாகக் கொண்டுள்ளாள் என்பதால் அவள் தண்ணருள் சுரக்கும் தாயாகவும், தீமைகளைச் சுட்டெரிக்கும் தீயாகவும், வழிகாட்டும் விடிவெள்ளியாகவும் விளங்குகிறாள் என்பதன் அடையாளமே திங்கள், ஞாயிறு, விண்மீன் என்று உய்த்துணரலாம்.

உலகில் முதல் தாயான ஏவாள் புரிந்த தீவினையால் மனித குலம் இறையருளை இழந்தது. தான் படைத்த மனிதர்கள் மீது கருணை கொண்ட இறைவன் தன் திருமகனை மண்ணகம் அனுப்பி மனிதர்களைப் பாவச் சேற்றிலிருந்து மீட்கத் திருவுளம் கொண்டார். தேவகுமாரன் பூவுலகம் வர ஒரு தாய் தேவைப்பட்டாள். இப்புனிதமிகு பணியில் ஈடுபட தேவன் தேர்ந்து கொண்ட மாசற்ற மங்கை நல்லாள் மரியாள் ஆவாள். அன்னை மரியாள் இயேசுநாதர் என்னும் இறைமகனை ஈன்றெடுத்தாள். அவர், தம் குருதியால் பாவக்கறை கழுவி மனிதர்கள் இழந்த வாழ்வை மீட்டார். அதனால் இறைவனுக்கும் மனிதர்களுக்கும் மீண்டும் நல்லுறவும் புத்துயிரும் பூமியில் உண்டாயிற்று. இந்த நெடிய வரலாற்றை தாமஸ்

"அடிமைப் பிணிப்பவிழ்த்து உரிமைநிலை யிட்டமகள்"

என்று சுருங்கக் கூறி விளங்க வைக்கிறார்.

முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரம்
...... மாதவி மடந்தை
கானற் பாணி கனக விசயர்தம்
முடித்தலை நெரித்தது.

என்று நீர்ப்படை காதையில் மாடல மறையோன் சேரன் செங்குட்டுவனிடம் கூறுவதாக அமைந்துள்ளது.

சில சொற்களில் சிலப்பதிகார வரலாறு முழுமையையும் உணர்த்திய இளங்கோவடிகளைப் போல் புலவர் தாமஸ் அவர்களும் விவிலிய வரலாறு முழுவதையும் ஐந்து சொற்களில் அடக்கிக் கூறியிருப்பது ஆலமரம் அதன் விதையில் அடங்கி இருப்பதை ஒத்தது.

பாவத்திற்கு அடிமையாகி அதில் சிக்கிச் சுழன்ற மக்களுக்குத் தம் திருமகன் வழி இறைவனின் மக்களாகும் உரிமைப் பேற்றினை நல்கினாள் என்பதை "அடிமைப் பிணிப்பு" "உரிமை வாழ்வு" என்னும் சொற்களில் தெளிவாக உணர்த்துகிறார்.

இறைவன் இவ்வுலகப் பொருள் ஒவ்வொன்றையும் கை புனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்புடன் படைத்துள்ளான்.

படைப்பிற்கெல்லாம் மூலமாகத் திகழும் அவனை மனிதர்களின் எண்ணமோ, கை வண்ணமோ அளந்து கூற இயலாது. காலத்தொடு கற்பனை கடந்த இறைவன் ஒரு மனிதக் குழந்தையாக மண்ணகம் வந்தபோது அதனைத் தம் கொடுங்கையில் அணைத்துப் பால் என்னும் அமுதூட்டி வளர்க்கும் பேறு பெற்றவள் மரியன்னை என்பதை,

முத்தொழில் இயற்றுமொரு கத்தனைச் சித்தரொடு
முத்தர்பணி கின்ற முதலை
அகட்டினில் அடக்கி அமுதூட்டப் பிறந்த மகள்

என்று தாய்மைக்குரிய தனிப்பண்பைக் கூறி மரியன்னை இறைமகனை ஈன்றெடுப்பதற்காகவே படைக்கப்பட்டவள் என்பதையும் உணர்த்துகிறார்.

கவிச்செருக்கு மிக்க பாவலர்கள் தம் புலமையை வெளிப்படுத்தும் வகையில் தாம் உருவாக்கும் கவிதை மாளிகையைச் சொல்லென்னும் கலவை கொண்டு எழிலுறப் புனைவர்

அஞ்சிலே ஒன்றுபெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்றுஆறாக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்றுபெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான்

என்ற பாடல் ஒரு சான்று.

புலவர் தாமஸ்,

சீர்கொண்ட புவியெலாம் ஆகென்ற பொழுதிலே
சேரப் படைத்த முதலோன்
செப்பிரண் டாகமத்து ஒப்பிலாக் கத்தன்உச்
சிதமேவும் மூன்றாட் பரன்
ஏர்கொண்ட நானிலத்து ஐம்புல வழக்கறுத்து
எழுயோகி கட்கும் எட்டா
என்ஒன்பது இன்பத் தலத்தவ ரெலாம் பரவும்
ஏகபர னைத்துதில் பாம்.

என்று பாடுகிறார். இப்பாடலில் ஒழுங்கு பெற்ற இவ்வுலகை "ஆகுக" என்ற ஒரு சொல்லால் படைத்த முதல்வன் என்று சொல்லப்படுபவன் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகிய இரண்டு வேதாகம நூல்களில் கூறப்படும் தந்தை மகன் தூய ஆவி என்னும் மூன்றாகத் திகழ்பவன். அழகுமிக்க குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு நிலத்தும் மெய், வாய், கண், செவி, மூக்கு என்னும் ஐந்து புலன்களின் வேட்கையை அறுத்து

எழுகின்ற யோகிகட்கும் எட்டாதவன். ஒன்பது தலங்களில் வாழ்வோராலும் புகழப்படும் ஒரே கடவுள் என்று பாடுவதில் ஒன்று முதல் ஒன்பது எண்கள் வரை அமைத்து எண்ணலங்காரமாகப் பாடுகிறார். இப்பாடலில் கிறித்தவச் சமயக் கோட்பாடுகளை உள்ளடக்கிக் கூறுவது கவிஞரின் தனித் தன்மையாகிறது.

பேறாம் பதத்தினில் திங்களைச் சூடிப் பிறங்கு செவ்வாய்
மாறாத அற்புதன் தான்வியாழ மொத்த மலர்க்கை துன்ன
சீரான வெள்ளி கொண்டே சனியோட்டிச் செஞ்ஞா யிறிட்டு
நீராரும் வேளையாக தாய்தயை தான்நிதம் செய்கு வையே

என்ற பாடலில் திருவடிகளில் நிலவையணிந்து செம்மை நிறம் பொருந்திய வாயுடன் அன்பு மாறாத தம் சேயை அழகுமிக்க பொன்னொத்த மலர்க்கைகளில் ஏந்தி வெள்ளி என்னும் விண்மீனைச் சென்னியில் சூடித் துன்பம் நீக்கிக் கதிரவனை ஆடையாகப் புனைந்து மரியன்னை விளங்குகிறாள் என்று புலவர் பாடுகிறார்.

இப்பாடலில் திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி ஞாயிறு என்னும் நாட்பெயர்களை அமைத்து இருபொருள்பட அன்னையின் அழகைப் பெருமையுடன் பாடும் கவிஞரின் மதி நுட்பம் போற்றத்தக்கது. அத்துடன் அப்பாடலைச் சுவைப்பார்க்கும் உள்ள உவகைப் பொங்கி வழிகிறது.

திருவா சகம்படி யாய்மறை கேட்கிலை சென்ற லைந்தே
திருவா சகம்புரப் பாயென்று செல்வரைப் பாடி நொந்தாய்
திருவா சகஞ்ச மலர்ப்புனல் வேளையில் சென்று பணிந்
திருவா சகந்தவிர்ப் பாளன்னை நீ மனத் தேறு வையே!

என்ற பாடலில் திருவாசகம் என்ற ஒரே சொல்லை நான்கு அடிகளிலும் முதல் சொல்லாக அமைத்துக் கவிஞர் பல பொருள் தருமாறு பாடுகிறார்.

இறைவன் அருளிய திருவார்த்தைகளைப் படிக்கவும் மாட்டாய்; வேதத்தைக் கேட்கவும் மாட்டாய்; உலகைப் புரக்கும் செல்வமே வா என்று செல்வரைப் பாடி வருந்தினாய். அழகு மிக்க தாமரை மலர்கள் நிறைந்த நீர்நிலைகளைக் கொண்ட வேளாங்கண்ணி சென்று அன்னையைப் பணிந்திரு. வா, அவள் உலகத்துயர் நீக்குவாள். நீ மனம் தேறுவாய், என்று அழகாகப் பாடுவது, அறிந்து இன்புறத்தக்கது.

திருவாசகம், திருவா, திருவாச, (பணிந்)திருவா என்று திருவாசகம் என்ற சொல்லைப் பிரித்துப் பொருள் கொள்ளுமாறு

கவிஞர் பாடியிருக்கும் நுட்பம் அறியத்தக்கது.

உலகோர் வியக்கும் தமிழர் பண்பாட்டு நெறிகளில் கற்புக் கோட்பாடும் ஒன்று. சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் போன்ற காப்பியங்களின் தமிழர்தம் கற்பு நெறி சித்திரிக்கப்படுகிறது. வீரமாமுனிவர், அழிவில் கன்னி, சீருலாம் கன்னி, கன்னிச் சங்கு போன்ற தொடர்களால் மரியன்னையின் கன்னியும் தாயுமான நிலையைப் புகழ்ந்து போற்றுவார் புலவர் தாமஸ்.

"தயை பொறுமை சாந்தமொடு கற்பெனும் பேரழகு
தவழும் ஒரு பெண்ணரசி"
"கற்பும் தயையும் மனத்தாழ்வும் கனிவும்
பொறையும் ஒருங்கியைந்து
காணக் கிடக்கும் தவ வடிவு"
"கற்பில் பாருற்ற மாதர்தம் சென்னியணி"
"கற்பால் உயர்ந்த கருணாகரி"
"தெய்வத்தாய்"
"பெண்களில் பேறுடையாள்"

போன்ற தொடர்களால் அன்னையின் பெருமையைச் சிறக்கப்பாடுவார். அவரின் பல படியாக உயர்ந்து நிற்கும் குணச் சிறப்புக்களை,

"புகழைக் கடந்து உலக மயலைத் துறந்த மகள்"
"சிந்தையொடு வாக்கினுக்கு எட்டாத துயர்கொண்டு
தீராத வறுமையோடும்
போராடி நிறைதவப் புனலாடி வென்ற மகள்"
என்றும்
தமிழ்ப் பாடலுக்கு உள்ளம் உருகும் அன்னையை
"சங்கத்து இலக்கணக் கவிஞர் சொற்கு உருகும் தமிழ்க்கொடி"
"விண்ட புகழ் மண்டுதமிழ் கொண்ட வேளைக்கு இறைவி"

என்றும் புலவர் தாமஸ் பாடுகிறார்.

ஒவ்வொருவரும் தன்னை உணர வேண்டும். தன்னை உணர்ந்தவன் ஞானியாகிறான். தன்னை உணர்ந்த உயிர் தன் செயலுக்காக இரங்கி வருந்தும் அக்காலை மனமாற்றம் உண்டாகும். அந்நிலையில் இறையருளுக்காக ஏங்கும். அப்போது இறைவனும் காணாமற்போன மகனைக் கண்டடைந்த இன்பம் எய்தும் தந்தையாக மனம் மகிழ்வார். இந்த நிலையைப் புலவர் தாமஸ்

தந்தையொடு தாயைமதி யாதவன் சோதரர்
தமக்கன்பு செய்யாதவன்
தகுபண்பி னொடுநண்பு தன்னையறி யாதவன்
தன்பொருளில் ஒன்றையேனும்
வந்தவர்க்கு ஈயாத கஞ்சன்மற் றவர்பொருளை
வாரிக் கொணர்ந்த தீயன்
வாயளவி லேனும்ஒரு நேயமொழி பகராத
வன்கணன் வஞ்சநெஞ்சன்
இந்தவுல கத்தில்என் போல்ஒருவர் காண்பதற்கு
இல்லையென் றாலும் ஊறிவரும்
இணையிலா அன்பினொடு அணையிலாது ஊறிவரும்
இரக்கமதை எண்ணிவந்தேன்
வெந்தழல் புழுவாகி நொந்தான் இதயமதில்
வீற்றிருந்து ஆளவருவாய்
விஞ்சைமிகு தஞ்சைநகர் அஞ்சலிசெய் செஞ்சரண
வியாகுலப்பேர் அன்னையே.

என்று வருந்திப் பாடுகிறார்.

இப்பாடலில் மனிதர் புரியும் தீமைகளைக் கவிஞர் பட்டியலிட்டுக் காட்டுகிறார். தன்னிலை உணர்ந்து பாடும் கவிஞரின் இப்பாடல் நம்மையும் அந்த அன்னையிடம் செல்லத் தூண்டும் வரிகளாக உள்ளன.

புலவர் தாமஸ் அவர்களின் பாடல்களை நோக்கும் போது அவர் பாடும் வரம் பெற்ற பைந்தமிழ்ப் பாவலர் என்பதை அறிய முடிகிறது. அவர் பாடிய கவிதைகளின் வழி அவர் கிறித்தவத்தில் அதிலும் கத்தோலிக்க மறை உண்மைகளில் தன்னை மூழ்கடித்தவர் என்பதும் அதன் வழிப் பீறிட்டு எழுந்த உணர்வுகட்குச் சொல்லோவியம் தந்து கலைக்கோயில் அமைத்தவர் என்பதும் அதனால் கிறித்தவச் சமயமும் தமிழ்மொழியும் மணம் பரப்பும் சோலையாகத் திகழ்கிறது என்பதும் அறியப்படும்.

****

புராதன தமிழ்ச் சமூகமும் சங்க மரபுகளின் தோற்றமும்

முனைவர் சிலம்பு நா. செல்வராசு,
புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்,
பிப்மேட் வளாகம், இலாசுப்பேட்டை,
புதுச்சேரி - 605 008.

முன்னுரை

சங்க இலக்கியங்களைத் தோற்றுவித்த சங்க மரபுகளின் காலம் சங்ககாலத்திற்கும் முந்தியது. அந்த மரபுகளே இலக்கண வரையறைகளாகத் தமிழ் இலக்கண நூல்களில் இடம் பெற்றுள்ளன. சங்க மரபுகளைத் தோற்றுவித்த காலத்தை மீட்டுருவாக்கம் செய்வதும் அந்தக் காலகட்டங்களில் தோன்றிய சங்க மரபுகளை மீட்டுருவாக்கம் செய்வதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்லியல் அகழாய்வுகள் கி.மு.1000 ஆண்டு முதலே தலை சிறந்த பண்பாட்டைத் தமிழ்ச்சமூகம் பெற்றிருந்தது என்பதையும் அப்பண்பாடே சங்கப் பண்பாட்டிற்கு அடிப்படையாக இருந்திருக்க வேண்டும் என்பதையும் விளக்கியுள்ளன. ஆயின் கி.மு. ஆயிரம் ஆண்டில் வாழ்ந்த மக்களின் பண்பாட்டை அறிய மேலும் சில தரவுகள் தேவைப்படுகின்றன. ஏடறியா வரலாற்றுக் காலத்துச் சமூகம் இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்ற மீட்டுரு வாக்கங்கள் சமூக மானுடவியல் துறைகளில் நிகழ்ந்துள்ளன. இந்த மீட்டுருவாக்கங்கள் தரும் கோட்பாடுகள், எல்லாச் சமூகத்திற்கும் முற்றும் பொருந்துபவை என்று கூறிவிட முடியாது. ஆனால் முற்றும் பொருத்தமற்றவை என்று புறக்கணித்துவிடவும் முடியாது. எங்கெல்ஸ் (1884) எழுதிய குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம் எனும் நூல் தொல் சமூக மீட்டுருவாக்கத்தில் குறிப்பிடத் தகுந்த நூல் ஆகும். இந்நூல் தரும் பரிணாமவியற் கோட்பாடுகளின் பெரும்பகுதி, சங்க இலக்கிய ஆய்வுகளுக்குப் பொருந்தி இருப்பதை இக்கட்டுரையின் பிற்பகுதியைப் படிப்போர் உணரமுடியும். தொல் சமூகம் பற்றி எங்கெல்ஸ் (1884) தரும் தகவல்கள் வருமாறு:

வெப்பமண்டல அல்லது அரைவெப்ப மண்டலக் காடுகளில்தான் ஆதிமனிதன் வசித்து வந்துள்ளான். பெரும்பகுதி அவன் மரங்களில் குடியிருந்திருக்க வேண்டும். விலங்குகளுக்கு

நடுவே அவன் வாழ்ந்து வந்துள்ளதை இது விளக்குகிறது. பழங்கள், கொட்டைகள், கிழங்குகள் முதலியன அவனுக்கு உணவாயின. ஓசைச் சீருள்ள பேச்சு அமைந்ததே இந்தக் கட்டத்தின் முதன்மையான சாதனையாகும்.

மனிதனின் அடுத்த பரிணாமம் உணவுக்காக மீன்களையும் நெருப்பையும் பயன்கொள்வதிலிருந்து தொடங்குகிறது. இந்தப் புதிய உணவுமுறை மனிதனைத் தட்பவெப்ப நிலையிலிருந்தும் குறிப்பிட்ட ஒரு வட்டாரத்திலிருந்தும் விடுதலை செய்தது. மனிதன் ஆறுகளையும் கடற்கரை ஓரங்களையும் பின்பற்றி உலக நிலப்பரப்பின் பெரும்பகுதியை பரவிப்படர முடிந்தது. தொடக்கக் கற்காலத்தைச் சேர்ந்த கரடுமுரடான, பட்டை தீட்டப்படாத கருவிகள் இக்காலக் கட்டத்திற்குரியன. மனிதன் புதிதாகக் குடியேறிய பகுதிகளும் இடைவிடாத செயல் வேட்கையும் தீ உண்டாக்கும் திறமையும் புதிய உணவுப் பொருட்கள் கிடைக்க வழிகோலின. மாவு தரத்தக்க கிழங்குகளை வேக வைக்கும் முறை வழக்கில் இருந்தது. குண்டாந்தபடி, ஈட்டி முதலிய ஆயுதங்கள் உருவாக்கப்பட்டன. இறைச்சியும் அவ்வப்போது உணவுடன் சேர்த்துக் கொள்ளப்பெற்றன. இந்தக் கட்டத்தில் வேட்டைத் தொழில் முதன்மையான தொழிலாக உருவாக்கப்படவில்லை. உணவுப் பொருள்களுக்குரிய மூலாதாரங்கள் தொடர்ச்சியாகக் கிடைக்காதபோது மனித இறைச்சியை உண்ணும் முறை உண்டாகி இருக்கவேண்டும்.

மனிதனின் அடுத்த பரிணாமம் வில்லும் அம்பும் கண்டு பிடிக்கப்பட்டதிலிருந்து தொடங்குகிறது. இதனால் காட்டு விலங்கின் இறைச்சி அன்றாட உணவாயிற்று. வேட்டையாடுதலும் இயல்பாயிற்று. வில், நாண், அம்பு ஆகியவற்றை உருவாக்க நீண்ட அனுபவமும் கூர்மையான மதிநுட்பமும் இருந்திருக்க வேண்டும். அதன் விளைவாகப் பல இதரப் புதுப் படைப்புகளையும் அறிந்திருக்க வேண்டும். மரத்தால் செய்த கலயங்கள், நாரிலிருந்து கையால் நெய்த துணிகள், நார் அல்லது நாணல் கொண்டு முடைந்த கூடைகள், பட்டை தீட்டப்பட்ட கற்கருவிகள் ஆகிய வாழ்க்கைத் தேவைகளை உற்பத்திச் செய்வதில் தேர்ச்சி பெற்றிருந்ததை அறியமுடிகின்றது. இதுவரை கூறப்பட்ட வாழ்க்கைப் பரிணாமங்களைக் காட்டுமிராண்டி நிலை எனச் சமூகவியலார் குறிப்பிடுகின்றார்.

இதற்கு அடுத்த பரிணாமம் அநாகரிக நிலையிலிருந்து தொடங்குகிறது. இதன் தொடக்கத்தை மட்பாண்டங்கள்

பயன்படுத்தத் தொடங்கின காலமாக அறுதியிட்டுள்ளனர். கூடைகளும் மரப்பாத்திரங்களும் நெருப்பினால் எரிந்துவிடாமல் இருப்பதற்காக அவற்றின் மீது களிமண்ணைப் பூசியதிலிருந்து இந்தக் கலை தோன்றியது. களிமண்ணைப் பூசப்போய் உள்ளே பாத்திரம் இல்லாமல் உருவமைந்த களிமண்ணே பாத்திரமாகப் பயன்படக் கூடும் என்பது விரைவில் கண்டுபிடிக்கப்பட்டது. பரிணாம வளர்ச்சியில் இந்த முனைவரை ஒரு திட்டவட்டமான காலப் பகுதிக்குப் பிரதேச வித்தியாசம் எதுவுமின்றி எல்லா மக்களினங்களுக்கும் பொதுவாகச் செல்லத்தக்கது எனக் கருதமுடியும். இந்தச் சமூக அமைப்பில் மிருகங்களைப் பழக்குதல், வளர்த்தல், பயிரிடுதல் ஆகியன சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தன. கிழக்குக் கோளார்த்தத்தில் பாலும் இறைச்சியும் தரக்கூடிய விலங்குகளைப் பழக்குவதிலிருந்து அநாகரிக நிலையின் இடைக்கட்டம் தொடங்குகின்றது. கால்நடைகளைப் பழக்கி வளர்த்தல், பெரிய மந்தைகளைத் திரட்டி அமைத்தல் இந்நிலையின் முக்கிய கட்டங்கள் ஆகும். கால்நடை மந்தைகளை அமைத்தல் வசதியுள்ள இடங்களில் மேய்ச்சல் வாழ்க்கைக்கு இட்டுச் சென்றது. கால்நடைகளுக்குத் தீவனம் அளிக்க வேண்டிய அவசியத்தை முன்னிட்டுதான் தானிய சாகுபடி அறிமுகப்படுத்தப்பட்டது. பின்புதான் அதுவும் மனிதனுக்கு முதன்மைமிக்க உணவாயிற்று. இந்தக் கட்டத்தில் மனித இறைச்சியைத் தின்னும் பழக்கம் படிப்படியாகக் குறைந்து விட்டது. அது ஒரு மதச்சடங்காகவோ அல்லது மாந்தீரிக முறையாகவோ எஞ்சி நின்றது.

இதற்கு அடுத்த நிலை இரும்பு கனிமம் உருக்கப்படுவதிலிருந்து தொடங்குகின்றது. எழுத்துக்களைக் கண்டுபிடித்தல் இலக்கிய ஆவணங்களுக்கு அவற்றைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இந்தக் கட்டம் நாகரிக நிலையை நோக்கி முன்னேறியது. மாடுகள் இழுத்துச் செல்லும் இரும்புக் கலப்பைக் கொழுவை இக்கட்டத்தில் காண முடிகின்றது. இது பரந்த அளவில் நிலத்தை உழுது பண்படுத்துவதைச் சாத்தியமாக்கிற்று. இது தொடர்பாகக் காடுகள் வெட்டித் திருத்தி வயல்களாகவும் மேய்ச்சல் நிலங்களாகவும் மாற்றப்படுவதை அறியமுடிகின்றது. இரும்புக் கோடரியும் மண்வெட்டியும் இல்லாமல் விரிந்த அளவில் இதனைச் செய்திருக்க முடியாது. உற்பத்தியின் பெருக்கம், தொழில்நுட்பம், கலை, இலக்கிய, மொழி, பண்பாட்டு நிலைகளில் பெரும் மாற்றங்களைச் செய்திருக்க வேண்டும்.

இவ்வாறாக மனிதன் நாகரிக வாயிலில் நுழைந்தான் என்று எங்கெல்ஸ் (1884) மார்கனை மேற்கோள் காட்டி விளக்கி இருக்கிறார்.

இவ்வாறான மனித பரிணாம வளர்ச்சியின் சில கூறுகளைச் சங்க இலக்கியங்கள் எச்சங்களாகக் கொண்டு விளங்குவதை அறியமுடிகின்றது. அது பற்றிய சில தரவுகளை இங்கே குறிப்பிடலாம்.

சங்க இலக்கியங்கள் தமிழர் புராதன சமூகத்தின் எச்சங்களாகச் சிலவற்றைப் பதிவுசெய்திருக்கின்றன. வரலாற்றுக்கும் முற்பட்ட உணவு சேகரிப்பு நிலையையும், வேட்டை வாழ்க்கை நிலையையும், கால்நடை வளர்ப்பு நிலையையும் சங்க இலக்கியங்கள் பலவாறாக விளக்குகின்றன. உணவுசேகரிப்பு, வேட்டை வாழ்க்கை நிலையைக் குறிஞ்சித் திணைப்பாடல்கள் பதிவு செய்திருக்கின்றன. இச்சமூக அமைப்பின் திணை வாழ் மக்களைக் குறவர் என்றும் வேட்டுவர் என்றும் அவை குறிப்பிடுகின்றன. மலையும், காடும் சார்ந்த நில அமைப்பைக் குறிஞ்சிப் பாடல்கள் விவரிப்பதை அறிய முடியும். குறவர் தேன் எடுக்கும் நிகழ்ச்சியை இயற்கை வருணனையாகப் பல பாடல்கள் விளக்கியுள்ளன. (நற்.292: கலி. 39) மலை உச்சியிலும் உயர்ந்த மரங்களின் கொம்புகளிலும் உள்ள தேனையும், நிலத்தில் விளைந்து கிடக்கும் கிழங்குகளையும் தோண்டியெடுத்து அவற்றை நெய்தல் நிலமக்களிடம் தந்து பதிலியாக மீனையும் மதுவையும் பெற்று மகிழ்ந்துள்ளனர். (பொரு. 214, 215). வேங்கை மரத்தின் உச்சிக் கிளையில் உள்ள தேனைக் குறச்சிறுவர்கள் எடுத்துண்ட நிகழ்வுகளும் பரவலாகப் பதிவாகியுள்ளன (நற். 168). கலித்தொகைப் பாடல் ஒன்று (39) உணவுச் சேகரிப்புச் சமூக அமைப்பின் தொன்மம் ஒன்றைப் பதிவு செய்திருக்கிறது.

சிறுகுடியீரே சிறுகுடியீரே
வள்ளி கீழ்வீழா வரைமிசைத் தேன்தொடா
கொல்லை குரல் வாங்கி ஈனா மலைவாழ்நர்
அல்ல புரிந்து ஒழுகலான்

மலையில் வாழும் மக்கள் அல்லனவற்றைச் செய்து வாழ்ந்தால் வள்ளிக் கிழங்குகள் விளையாமல் போகும். அதுபோலவே மலையின் உச்சியில் தேனீக்கள் தேன்கூடு கட்டாமல் போகும் என்பது இப்பாடலின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் பொருளாகும். தீமைக்கும் சேகரிக்கப்பெறும் உணவுப்பொருள் கிடைக்காமைக்கும் ஆன உறவு விவரிக்கப் பெற்றுள்ளது. மறுபக்கமாக அச்சமூகத்தின்

உயிர் நாடியாக உச்சநிலையில் கிழங்கும் தேனும் இருந்தமையை உணரமுடிகின்றது. எனவேதான் உயர் நன்மைக்கும் இப்பொருள்களின் விளைச்சலுக்குமான நம்பிக்கைத் தொடர்புகள் அச்சமூகத்தில் உருவாக்கப்பட்டிருந்தன.

தேன் மட்டுமின்றி பல்வேறு கிழங்குகளும் உணவாகப் பயன்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. பாரிவள்ளல் வாழ்ந்த பறம்பு மலையில் உழவர் உழாது விளையும் நான்கு பொருள்களில் ஒன்றாக வள்ளிக்கிழங்கு குறிப்பிடப்பட்டுள்ளது (புறம். 109). உழவர் உழாது விளையும் பொருள் என்பது இயற்கையாக விளையும் பொருளைக் குறிக்கும். பன்றியானது மண்ணைக் கிண்டிக் கிளைத்த பள்ளங்களில் மகளிர் மீண்டும் கிளைத்து ஆமையின் முட்டையையும் ஆம்பல் கிழங்கினையும் உணவிற்காகச் சேகரித்து உள்ளனர் (புறம். 176). மன்னன் இரும்பொறையை வாழ்த்தும் புலவர், பழங்களும் கிழங்குகளும் உண்ண உண்ண அறாது எக்காலத்திலும் விளையும்படி வாழ்வாயாக என்று வாழ்த்தி உள்ளார் (பதி. 89). வள்ளல்களை நாடிச் செல்லும் பாணர்கள் இடைவழியில் பலா, இளநீர், வாழை, பனைநுங்கு, சேம்புக் கிழங்கு முதலியவற்றை உண்டனர் (பெரு. 355-362). நன்னனைக் காணச் செல்லும் பாணர்களுக்கு வேடர் தசைகளையும் கிழங்குகளையும் தந்து விருந்தோம்பியுள்ளனர் (மலை 422-426). மலைக் குன்றிடத்தே குழியைத் தோண்டும் வேட்டுவன் கிழங்கோடு நல்ல மணிகளையும் பெற்றுள்ளதைப் பாடல்கள் விவரிக்கின்றன. கானவர் கிழங்கு வேண்டி அகழ்ந்த குழிகளைச் சங்கஇலக்கியங்களில் (ஐங். 208, 270) பரவலாகக் காணமுடியும்.

இதுகாறும் கூறப் பெற்ற செய்திகள் யாவும் உணவு சேகரிப்பு நிலையின் எச்சங்களாகக் கொள்ளத்தக்கவை. இச்செய்திகள் குறிஞ்சித் திணைப் பின்புலத்தில் குறவர், வேடர், வாழ்வியல் நிகழ்வுகளாக அமைந்துள்ளதையும் மிக மிகக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

உணவு சேகரிப்பு நிலைச் சமூகத்தில் வில்லும் அம்பும் கண்டு பிடிக்கப்பட்டமை வேட்டை வாழ்க்கைக்கு வழி கோலிற்று. வேட்டை வாழ்க்கைநிலை பற்றியும் வேட்டையாடப்பெற்ற விலங்கின் இறைச்சி உணவு பற்றியும் சங்க இலக்கியங்கள் ஏராளமான தரவுகளைப் பதிவு செய்து உள்ளன.

கானவன் அம்பு எய்து கொன்ற முள்ளம் பன்றியின் இறைச்சியை வெட்டி எடுத்து அவன் மனைவி கொடிச்சி,

சிறுகுடியில் .வாழ்வோர் அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுத்த காட்சியை நற்றிணைப் பாடல் ஒன்று (85) விவரித்துள்ளது. இதே தொகுப்பின் 336ஆம் பாடல் கணவன் பன்றி ஏற்றையை வில்லினால் வேட்டையாடிக் கொண்டுவர அவன் மனைவி அதன் தசைகளை அறுத்துத் தன் குடியில் உள்ளோர்க்குக் கொடுத்துள்ளதைக் குறிப்பிடுகின்றது. வேட்டுவன் மானை வேட்டையாடி அதன் தசையைக் கொண்டு வந்து தர உழவர் மகளிர் அதற்குப் பதிலியாக வெண்ணெல்லைக் கொடுத்துள்ளனர். (புறம்.33). மறவர் அம்பு எய்து வேட்டையாடிய பன்றியின் இறைச்சியைச் சுரம் வழி வருவோர் பனைஓலைக் குடையிலே பெற்று உண்டுள்ளதைப் புறப்பாடல் ஒன்று விவரித்துள்ளது. (புறம்.177). கொலை செய்யும் வில்லினை உடைய வேட்டுவர் சிவந்த கோட்டினை உடைய ஆமான் ஊனினையும் யானையின் தந்தத்தையும் கொடுத்துக் கள்ளுண்டு களித்துள்ளனர் (பதி.30). மான் கூட்டங்களை வேட்டையாடித் தமையர் கொணர்ந்த தசைகளை உண்ணும் பொருட்டுப் பறவைகள் விரும்பி வர, அவற்றை அவர்தம் சகோதரியரான எயிற்றியர் விரட்டி ஊனினைக் காவல் செய்துள்ளனர். (ஐங்.365). இவ்வாறாக வேட்டை வாழ்க்கை நிலை பற்றிய ஏராளமான செய்திகளைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளதையும் அறிய முடிகின்றது.

இதுகாறும் கூறப்பெற்ற செய்திகளில் இருந்து பெறப்படும்.

பின்வரும் கருத்துகள் கவனத்திற்குரியன. அவை வருமாறு:

1. இதுகாறும் கூறப்பெற்ற செய்திகள் உணவு சேகரிப்பு நிலைச் சமூக அமைப்பையும், வேட்டைச் சமூக அமைப்பையும் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன.
2. இச்சமூக அமைப்பு, மலை, காடு சார்ந்த இடங்களில் அமைவு பெற்றிருந்ததை அறிய முடிகின்றது.
3. வேட்டைச் சமூக அமைப்பை வெளிப்படுத்தும் செய்திகளில் வில், நாண், அம்பு ஆகிய கருவிகள் இடம் பெற்றிருப்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.
4. இத்திணைவாழ் மக்களை வேட்டுவர், கானவர், குறவர் எனும் பெயர் கொண்டு பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.
5. எங்கெல்ஸ் குறிப்பிடும் சமூக பரிணாம வளர்ச்சிக் கருத்துக்களோடு மேற்கூறிய வாழ்க்கை முறை ஒத்து விளங்குவதை உணர முடிகிறது.
6. எனவே, தமிழரின் புராதன சமூகம், உணவு சேகரிப்பு, வேட்டை நிலையை அடிப்படையாகக் கொண்டு, மலை

அடிவாரங்களிலும், காடுகளிலும் அமைக்கப்பெற்ற சமூகமாக இருந்துள்ளதை அறிதல் வேண்டும். இச்சமூக அமைப்பே பின்னாளில் குறிஞ்சிச் சமூகமாகவும் குறிஞ்சித் திணையாகவும் பெயர் பெற்று இலக்கிய மரபாக நிலை கொண்டிருக்க வேண்டும் என்ற கருதுகோளை இங்கே முன் வைக்க முடியும்

உணவு சேகரிப்பு, வேட்டைச் சமூக அமைப்பை மேலும் விளங்கிக் கொள்ளத் தமிழகத்தில் வாழும் ஒரு சில பழங்குடியினர் வழக்காறுகள் துணை செய்கின்றன (இரா. முருகன், 2003).

அந்தமானில் வாழும் ஓங்கி பழங்குடியினரின் முதன்மையான தொழில் வேட்டையாடுதல் ஆகும். வேட்டைக்கு நாய்களைத் துணை கொள்கின்றனர். காட்டுப் பன்றியை விரும்பி வேட்டையாடுகின்றனர் பழங்கள், தேன், கிழங்கு போன்றவற்றைக் காட்டிலிருந்து பெறுகின்றனர். உணவு சேகரிக்கும் பழங்குடியினரான மலர்கள் தேன் எடுத்தல், காட்டுப் பொருட்களைச் சேகரித்தல, பன்றி, மான், உடும்பு, அணில் ஆகியவற்றை வேட்டையாடுதல் செய்கின்றனர். வேட்டைத் தொழிலை முதன்மையாகக் கொண்ட காடர் பழங்குடியினர் ஏலக்காய், தேன், தேன்மெழுகு, கூந்தற்பனை, நெல்லிக்காய், கடுக்காய் ஆகியவற்றைச் சேகரித்துச் சமவெளி மக்களிடம் விற்கின்றனர். காடுகளை ஒட்டியே வாழ்க்கை நடத்தும் இருளர்கள் வேட்டையைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்கள் கூட்டமாக வேட்டைக்குச் செல்வதைக் ‘கலப்பை வேட்டை’ என்றழைக்கின்றனர்.

புராதன தமிழ்ச் சமூகத்தின் கூறுகள் இன்றளவும் நிலவி வருவதற்கு மேற்கூறிய தரவுகள் எடுத்துக்காட்டுகள் ஆகின்றன. ஆக ஒரு சமூக அமைப்பு அதற்கு அடுத்த நிலையில் பரிணாமம் அடைகிறபோது முந்தைய சமூக அமைப்பு முற்றும் அழிந்து விடுவதோ அல்லது மாறிவிடுவதோ இல்லை புதிய அமைப்போடு பழைய அமைப்பும் ஏதேனும் ஒரு விதத்தில் உடன் வருவதாகவே கொள்ளுதல் வேண்டும்.

உணவு சேகரிப்பு, வேட்டை நிலையை அடுத்த பரிணாமமாகக் கால்நடை வளர்ப்பு நிலையை எங்கெல்ஸ் (1884) விளக்கி உள்ளார். இக்கால்நடை வளர்ப்புச் சமூகமே ‘ஆநிரை உடைமைச் சமூகமாகச்’ சங்க இலக்கியங்களில் பதிவாகி இருப்பதை அறிய முடிகின்றது.

ஆநிரைகளைக் கவர்ந்து செல்லும் நிகழ்ச்சிகளைத் தொல்காப்பியம் வெட்சித்திணையாக விவரித்துள்ளது. எனவே, தொல்காப்பியருக்கும் முன்னரே ஆநிரை வளர்ப்பு, காப்பு, கவர்வு, மீட்பு முதலிய தொல் சமூக நிகழ்வுகள் நடைபெற்று அவை

இலக்கிய மரபுகளாகவும் உருப்பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. ஆநிரை கவர்தல் மீட்டல் பூசலில் மாண்ட மறவர்களுக்கு நடுகல் எழுப்பும் முறையையும் தொல்காப்பியம் இலக்கணவரையறைப் படுத்தியுள்ளதை அறிதல் வேண்டும். நடுகல் எழுப்பும் முறை பெருங்கற்படைக் காலத்து நடைமுறை என்பதை இக்கட்டுரையின் முற்பகுதி விளக்கிற்று. எனவே, அக்காலத்திற்கும் முன்பேயே ஆநிரை உடைமைச் சமூகம் உருப்பெற்றுவிட்டதை உணர்தல் வேண்டும்.

ஆநிரை வாழ்க்கை முறை முல்லை நிலத்தில் அதாவது காடு சார்ந்த நிலவெளியில் திகழ்ந்ததாகச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. ஆயர் அல்லது இடையர் ஆநிரைகளை மேய்ப்பவராகத் திகழ்ந்துள்ளனர். புற்கள் உடைய அகன்ற இடத்தில் ஆநிரைகளை மேய்த்து மாலை வந்ததும் இருப்பிடத்திற்குத் திரும்பி உள்ளனர் (பதி. 21; அகம். 214). கொங்கர், மழவர் ஆகியோருடன் ஆநிரை பெரிதும் இணைத்துப் பேசப்பெற்றுள்ளது. கொங்கர் ஆநிரைகள் நிரம்ப உடையவர் என்றும் (பதி. 22) மேட்டுநிலத்தில் கொங்கரது ஆநிரைக்கூட்டம் பரந்து நிற்பது போல சேரனது படையில் யானைகள் பரந்து நின்றன என்றும் கூறப்பெற்றுள்ளது (பதி. 77). ஆநிரைகளைக் கவர்ந்து வரும் மழவர், தெய்வம் உறையும் வேப்ப மரத்தடியில் ஆவினைப் பலியிட்டுக் குருதியைத் தூவி அதன் ஊனினைப் புழுக்கி உண்டுள்ளனர் (அகம். 309). வெட்சியராகிய மறவர் ஆநிரைகளை விடியற்காலையில் கவர்ந்து சென்றனர். அதனை மீட்பதற்குச் சென்ற கரந்தையார் போரிட்டு வீழ்ந்தனர். அவ்வாறு மாண்ட கரந்தையார் உடல்கள் பாலை வழியில் கிடந்துள்ளதை அகப்பாடல் ஒன்று (அகம். 131) விவரிக்கிறது. இவ்வாறான ஆநிரை கவரும் பாடல்கள் பலவாகச் (புறம். 258, 260, 269; பெரு. 136-141; அகம்.7, 35, 113, 131, 239, 253, 342, 372. நற். 100) சங்க இலக்கியங்களில் பதிவாகி உள்ளதை அறிய முடிகின்றது. மேலும் ஆநிரை வளர்ப்பு முறைகள், பயன்கொள்ளும் வகைகள் ஆகியனவும் பதிவாகி உள்ளன.

இச்செய்திகளின் பெரும் பகுதியை முல்லைத் திணைப் பாடல்கள் வழி அறிய முடிகின்றது. முல்லைத் திணை ஆயர் வாழ்க்கையையும் காடு சார்ந்த சமவெளிப் பகுதியையும் விவரிப்பது. எனவே, தொல் தமிழரின் சமூகப் பரிணாம வளர்ச்சியைப் பின்வருமாறு பட்டியலிட இயலும்.

உணவு சேகரிப்பு நிலை வேட்டைச் சமூக அமைப்பு	குறிஞ்சிச் சமூக அமைப்பு (குறிஞ்சித் திணை)
கால்நடை வளர்ப்பு பராமரிப்புச் சமூக அமைப்பு ஆநிரை உடைமைச் சமூகம்	முல்லைச் சமூக அமைப்பு (முல்லைத் திணை)

ஆநிரைச் சமூக அமைப்பே வேளாண்மை உருவாகவும் நிலைபேறு கொள்ளவும் வழி வகுத்துள்ளது. இந்த வேளாண்மைச் சமூக அமைப்பைச் சங்க மருதத்திணைப் பாடல்கள் வெகுவாக விவரிக்கின்றன. வயலும் வயல்சார்ந்த இடங்களும், நீர் நிலைகளும் சூழ்ந்த மருத நிலம் மருதத்திணையின் அடிப்படையாகும். எனவே, தொல் தமிழர் சமூக அமைப்பின் பரிணாமத்தைச் சங்க அகப்பாடல்கள் வழியே பின்வருமாறு வரிசைப்படுத்த முடியும்.

குறிஞ்சித்திணை	வேடர், கானவர் குறவர் ஆகியோரின் வாழ்க்கை முறை, வேட்டை, உணவு சேகரிப்பு முறையை வெளிப்படுத்தும், புராதன சமூகத்தின் எச்சங்களைக் கொண்டது.
முல்லைத் திணை	இடையர், ஆயர் ஆகியோரின் வாழ்க்கை முறை, ஆநிரை வளர்ப்புப் பண்பாட்டை வெளிப்படுத்துவது.
மருதத் திணை	உழவர், உழத்தியர், கிழவன், கிழத்தி ஆகியோரின் வாழ்க்கை முறை, வயல் சார்ந்த பண்பாட்டை வெளிப்படுத்துவது.

மேற்கூறிய திணை வாழ்க்கையில் மருதத்திணை சங்க காலத்திற்கு உரியதாகவும் முல்லை வாழ்க்கையும் குறிஞ்சி வாழ்க்கையும் சங்க காலத்திற்கு முந்தைய தமிழ்ச் சமூக அமைப்பை விளக்குவனவாகவும் கொள்ளுதல் வேண்டும். இந்தத் திணைவழிப் பரிணாமம் எங்கெல்ஸ் (1884) சுட்டிய மனித பரிணாம வளர்ச்சியோடு பொருந்திப் போதலையும் உணர்தல் வேண்டும்.

முடிவுரை

மேல்குறிப்பிட்ட வேட்டைச் சமூக அமைப்பில் குறிஞ்சித்திணை மரபுகளும் ஆநிரை உடைமைச் சமூக அமைப்பில் முல்லைத் திணை மரபுகளும் வெட்சித் திணை மரபுகளும் வேளாண் சமூக அமைப்பில் மருதத் திணை மரபுகளும் ஏனைய போர் மரபுகளும் சங்க கால இறுதியில் அமைந்த வணிக சமூக அமைப்பில் பொருளீட்டலை மையப்படுத்திய பிரிவு சார்ந்த பாடல்களும் தோன்றின என்று முடிவு கூறுதல் முடியும்.

****

அகத்திணைக் கோட்பாடுகள்

முனைவர். க. சேக்மீரான்
எம்.ஏ.,(தமிழ்),எம்.ஏ.,(மொழி),எம்.எட்.,எம்.பில்.,பி.எச்.டி.,
தமிழ்இணைப் பேராசிரியர்
மாநிலக் கல்லூரி, சென்னை-5.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் பொருளதிகாரம் என்கிற மூன்று அதிகாரங்களைக் கொண்டது. இவற்றுள் உலக்மொழிகளுள் இல்லாமல் தமிழுக்கேவுரிய தனிச்சிறப்புக் கொண்டதாய் அமைவது பொருளதிகாரமாகும். இவ்வதிகாரம் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமயியல், செய்யுளியல், மரபியல் என்னும் ஒன்பதியல்களைக் கொண்டது.

பொருள் என்பதற்கான அகராதிப் பொருளை நோக்கினால் ஐம்புலன்களால் அறியும் பொருள், காட்டலாகாப்பொருள், குறிக்கோள்பொருள், குறிப்புப்பொருள் என பல வகையாய் விரியும். இவற்றுள் குறிக்கோள் பொருள் பற்றி தொல்காப்பியர் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் போன்ற இயல்களில் பேசுகிறார். ஐம்புலனால் அறியும் பொருள் பற்றி மரபியலிலும் காட்டலாகாப் பொருள் பற்றி பொருளியலிலும் குறிப்புப்பொருள் பற்றி அகத்திணையியல், பொருளியல், உவமயியலிலும் பேசுகிறார்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தைத் திறனாய்வு கண் கொண்டு பார்க்கிறபோது இரண்டாகப் பகுக்கலாம். 1. பாடுபொருள் பற்றியன, 2. கட்டமைப்புப் பற்றியன. பாடுபொருள் பற்றி அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல் ஆகிய இயல்களிலும் கட்டமைப்புப்பற்றி உவமயியல், செய்யுளியல் ஆகிய இயல்களிலும் மரபியலில் இரண்டையும் பற்றிப் பேசுகிறார்.

முப்பொருள் மரபு

கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன் தோன்றிய குடியாகக் கருதப்படும் தமிழ்க்குடி, நாகரிகம் அடைந்தப் பின்னால் மக்களின் வாழ்வொழுக்கங்களை வரையறை செய்வதற்காக எழுதப்பட்ட நூல் தொல்காப்பியமாகும்.. இதற்குச் சான்று பகர்வதர்க அமைவது திணை வகுக்கும்போது குறிஞ்சி, முல்லை,

மருதம், நெய்தல் என்று சுட்டாது. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று கூறுவதை நோக்கப் புலனாம். ஏனெனில் ஒருவனும் ஒருத்தியும் இருப்பதற்கு இடமிருந்தால்தான் கூடல், ஊடல் போன்றவை நிகழ்வதற்கு ஏதுவாகும் என்பதாலேயே முதலில் முல்லையைக் கூறினார் எனலாம்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்,
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்ற நூற்பாவினால் மேற்சொன்ன நாகரிகமடைந்த தமிழ்ச் சமுதாயத்தில் எழுந்ததே தொல்காப்பியம் என்பதற்குச் சான்று பகர்வதாகவுள்ளது.

அகமும் புறமும்

அகம், புறமென மனித வாழ்வை பகுத்துக் கொண்டு இலக்கணம் கூறுகிறார் தொல்காப்பியர், அகம் என்பதற்கு "அகமாவது ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்திற்குப் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கு ஒருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்தது என்று கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்து உணர்வே நுகர்ந்து இன்ப முறுவதோர் பொருள்" என்று விளக்கம் தருகிறார் உச்சிமேற்புலவர் நச்சினார்க்கினியர். அகமென்பது பொதுவாக காதல் என்பதைச் சுட்டும். காதலெலாம் அகமாகுமா என்கிற வினாவிற்கு வ.சுப. மாணிக்கனார் "தமிழ்க்காதல்" என்ற நூலில் விளக்கம் தருகிறார். அதில் காதலை மனிதக்காதல், மிருகக்காதல், தெய்வக்காதல் எனப்பகுத்து இவற்றுள் மனிதக்காதலே அகமென்பார். அஃதாவது மிருகக்காதலில் உடல்புணர்ச்சி உண்டே தவிர உள்ளப்புணர்ச்சி இல்லை. தெய்வக்காதலில் உள்ளப்புணர்ச்சி உண்டே தவிர உடல்புணர்ச்சி இல்லை. மனிதக்காதலில் மட்டுமே உள்ளப்புணர்ச்சி மற்றும் உடல் புணர்ச்சி உண்டு என்பதனால்தான் "உடல்புணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட உள்ளப்புணர்ச்சியே அகம்" என்கிறார். புறம் என்பது புறத்தார்க்குக் கூறும் வீரம், கொடை முதலியனவாம்.

அகத்திணை

அகத்திணை ஏழு வகைப்படும். இதனை

"கைக்கிளை முதலாய் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழு திணை என்ப"

என்று சுட்டுகிற தொல்காப்பியர் திணை ஏழு என்றும் அதில் அன்பின் ஐந்திணை என்றும் சுட்டுகிறார். இவற்றுள் குறிஞ்சிக்கும் முல்லைக்கும் மருதத்திற்கும் நெய்தலிற்கும் நிலம் சுட்டுகிற

தொல்காப்பியர் பாலைக்கு நிலம் இல்லை என்பதை

"நடுவண் ஐந்திணை நடுவணது ஒழிய,
படு திரை வையம் பாத்திய பண்பே"

நிலம், பொழுது இரண்டையும் முதற்பொருளென்றும் அந்நிலத்தில் வாழ்வன, அந்நிலம் சார்ந்து வாழ்வன கருப்பொருள் என்றும் பாகுபாடு செய்கிறார். அந்நிலம் வாழ்மக்கள் வாழ்வு உரிப்பொருளாகும். மற்ற உயிர்களின் காதல் வாழ்வு உரிப்புறத்ததாம்.

செய்யுள் வழக்கு

நாடக வழக்கு, உலகியல் வழக்கு இரண்டும் அறிந்த புலவர்களால் செய்யப்படுவது செய்யுள் வழக்காம். இதனை

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரியது ஆகும் என்மனார் புலவர்"

என்கிறார் தொல்காப்பியர். இவ்வாறு செய்யுள் செய்கிறபோது அறத்திற்கு மாறுபட்டது உலக வழக்கிலும் இருக்கலாம். நாடக வழக்கிலும் இருக்கலாம். அதைத் தவிர்த்து அறத்திற்கு உட்பட்டதை மட்டுமே செய்யுள் வழக்காக்க வேண்டும் என்பதை

"அறக் கழிவு உடையன பொருட் பயம் பட வரின்
வழக்கு என வழங்கலும் பழித்து அன்று என்ப"

என்கிறார் தொல்காப்பியர். உயர்ந்தோர் சொல்வதைக் கேட்டு அத்னைச் செய்யுள் வழக்காக்க வேண்டுமென்பதை

"உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்
வழக்கு வழிப்படுதல் செய்யுட்குக் கடனே" என்கிறார்.

கைக்கிளை

கைக்கிளை என்பது கை-சிறுமை, கிளை-உறவு. பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்பது இதன் பொருளாகும். அகத்திணை ஏழனுள் கைக்கிளை என்பது ஒரு தலைக்காமம். தலைமகன் மாட்டு மட்:டுமே தோன்றும் காதலைப்பற்றிப் பேசுவது. காமஞ்சாலா இளமகள் ஒருத்தியிடம் சென்று தடுத்தற்கு இயலாத துன்பத்தை எய்திய தலைமகன், தனக்கும் அவளுக்கும் உண்டாகும் நன்மைகளையும், தீமைகளையும் எடுத்துச் சொல்லி அவள் எதிர்மொழி கூறா நிலையிலும் இவன் சொல்லிச் சொல்லி இன்புறுதல் கைக்கிளை என்பதை,

"காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"

என்று சுட்டுகிறார் தொல்காப்பியர். அவர் கருத்தில் கைக்கிளை ஆண்மகனுக்கே உரியது. பின்வந்தோர் இதனைப் பெண்மக்கட்கும் உரியதென்றனர்.

பெருந்திணை

ஐந்திணைக் காமத்தில் மிக்கும் குறைந்தும் வரும். எண்வகை மணத்தில் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் ஆகியன இத்திணைப் பாற்படும். இஃது உலகினுள் பெருவழக்காய்ப் பயின்று வரும். ஐந்திணையாகிய ஒத்த கூட்டமும் பெருவழக்காயினும் அன்பு, குலம் முதலியன ஒத்து வருதல் உலகில் அரிது. எனவே சிறுபான்மையாகவே வரும். பெருந்திணையாவது பொருந்தாக் காமம். தலைமகன் தலைமகளைப் பெற மடல் ஏறுதல், அகவையால் ஒவ்வாதவரை மணத்தல், வலிந்து கொள்ளும் மணம், காம உணர்வினைத் தெளியாமல் கலங்கல் ஆகிய இந்நான்கும் பெருந்திணையின் பாற்படும் என்பதை,

"ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇ
செப்பிய நான்கும் பெருந்திணை பெறுமே"

என்று மொழிகின்றார். கைக்கிளை, பெருந்திணைக்குரியவராக அடியவர், வினைவலர், ஏவல்மரபினர் ஆகியோரைக் குறிப்பிடுவர். பிறர்க்கு அடிமைத் தொழில் செய்து ஒழுகுவோர் அடியவர், பிறர் ஒருவரை எதிர்பார்க்காது தம் தொழிலைத் தாமே செய்து முடிப்பவர் வினைவலர். பிறர் ஏவிய தொழிலைச் செய்து வாழ்வோர் ஏவல் மரபினர். இதனை,

"அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்"
"ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை அவரும் அன்னர்".

என்னும் நூற்பாக்களுக்கு உரை வகுக்கும் இளம்பூரணரின் "இவர் அகத்திணைக்குரியர் அல்லரோவெனின், அகத்திணையாவன அறத்தின் வழாமலும், பொருளின் வழாமலும், இன்பத்தில் வழாமலும்

இயலல் வேண்டும். அவையெல்லாம் பிறர்க்குக் குற்றேவல் செய்வார்க்கு அரிதாகலானும், அவர் நாணும் குறைபாடுடையராகலானும் குறிப்பு அறியாது வேட்கை வழியே சாரக் கருதுவோராகலானும் இன்பம் இனிது பிறரேவல் செய்யாதார் என்பதனாலும் இவர் புறப்பொருட்கு உரியவராயினர் என்க'' என்ற உரையினால் அறியலாம்.

ஐந்திணை ஒழுக்கம்

தொல்காப்பியனார் கைக்கிளை, பெருந்திணைகளைச் சில நூற்பாக்களில் விளக்க அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்னும் நான்கு இயல்களிலும் மெய்ப்பாட்டியல், உவமையியல் செய்யுளியல் என்னும் மூன்று இயல்களின் சில நூற்பாக்களிலும் ஐந்திணை ஒழுக்கத்தினைப் பற்றிப் பேசுவார். இதற்குரிய காரணத்தை ஆராயும் ந. சுப்புரெட்டியார் "ஒருதலைக் காமமாகிய கைக்கிளையிலும், ஒவ்வாக் காமமாகிய பெருந்திணையிலும் இருவர்பாலும் ஒத்த அன்பினைக் காண்டல் அரிது என்பதை உணர்தல் வேண்டும். இத்தகைய பொருத்தமற்ற கூட்டுறவுகள் எந்நாட்டிலும் எக்காலத்திலும் காணப்பெறுபவையே பொருந்தாத செயல்களைக் குறிப்பாகச் சுட்டியும், விலக்கியும் பொருத்தமுடைய நற்செயல்களை வெளிப்படையாக எடுத்துரைத்து விளக்கியும் மக்களை நல்வழிப்படுத்துவதே சிறப்புடைய நூலின் குறிக்கோள் ஆகும். இதனை உளங்கொண்டே ஆசிரியர் தொல்காப்பியனார் தம் நூலில் அன்பின் ஐந்திணையை விரிவாகவும், ஏனைய இரண்டினைக் குறிப்பாகவும் விளக்கியுள்ளார் என்பதை நாம் உய்த்துணர வேண்டும்'' என்று குறிப்பிடுகின்றார்.

இருவகைக் கைகோள்

ஐந்திணையையும் களவுநெறி, கற்புநெறி என இருவகையாகப் பகுத்துக் கூறுவார் தொல்காப்பியர். களவுநெறியென்பது பெருமையும் உரனும் மிக்க தலைமகனும், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் இவற்றால் சிறந்த தலைமகளும் ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின் காரணமாக நாட்டம் இரண்டும் காரணமாக நாட்டம் இரண்டும் அறிவுடம்படுத்த, அறிவுடம்பட்டுக் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றித்தம்முள் தாமே கூடி இன்புற்று வாழும் வாழ்வே களவு வாழ்வாகும். இக்களவு காமப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியற்கூட்டம் என நான்கு வகைப்படும் என்பார் தொல்காப்பியர்.

காமப்புணர்ச்சியாவது ஊழ்பட்ட தலைமகனும் தலைமகளும் நெஞ்சம் கலந்து ஒன்றுபடும் நிலை. ஒன்றே வேறே என்றிரு

பால்வயின் ஒன்றியுயர்ந்த பாலது ஆணையின் காரணமாகத் தலைமகளை எதிர்ப்பட்ட தலைமகன் தலைமகளை விண்மகளோ அன்றி மண்மகளோ என ஐயுறுவான். ஐயுற்றவன் கூந்தலில் வண்டு மொய்த்தல், இழைநெகிழ்தல், கண் இமைத்தல் முதலிய பலவற்றை நோக்கி அவளை மணமகளே எனத் தெளிவான். தெளிந்தவன் தன் காமக்குறிப்பினை அவளுக்கு உணர்த்தி அவள் கண்கள் காட்டும் குறிப்பினால் அவள் தன் வேட்கையைத் தெளிவான். தெளிந்தவன் அவளை இரந்து பின்னின்று அவள் உடம்பாட்டினைப் பெறுவான். உடம்பாட்டினைப் பெற்றவன் அவளை அச்சம், மடம், நாணம், இவற்றினின்றும் நீக்கித் தெளிவுபடுத்துவான். தெளிவுபடுத்திய பின் தலைமகளின் மெய்தொட்டுப் பயிறல் முதலாயவற்றை நிகழ்த்தி இறுதியில் தலைமகளைக் கூடுவான்.

உடன்போய் மீண்ட தலைமகன் தலைமகளை, தலைமகளின் பெற்றோரும் உற்றோரும் மற்றோரும் கொடுப்பக் கொண்டு இல்லறம் நடத்துதலே கற்புநெறி எனப்படும். இக்கற்புநெறி மலிதல், புலத்தல், ஊடல், ஊடல் உணர்த்தல், பிரிவு, புணர்வு என அறுவகையான இயலும். மலிதல் என்பது தலைமகனும் தலைமகளும் இல்லிருந்து மகிழ்ச்சியுடன் இல்வாழ்க்கை நடத்துதலைக் குறிக்கும். புலவி, ஊடல், ஊடல்உணர்வு என்பன பரத்தையிற் பிரிவின். விளக்கங்கள். பிரிவு தலைமகன் பிரிந்து செல்லுதலையும் புணர்வு பிரிந்து சென்ற தலைமகன் மீண்டு வந்து தலைமகளைக் கூடுதலையும் குறிப்பன.

மனித வாழ்வின் நோக்கம்

களவு வழிப்பட்ட கற்பு வாழ்க்கை வாழும் நோக்கத்தைப் பற்றித் தொல்காப்பியர் கூறுகிறார். அதாவது காமநுகர்ச்சியெல்லாம் முடிந்த இளமையது கடைசியெல்லையில் இன்பம் பொருந்திய மக்களை விட்டு நீங்கி, அறஞ்செய்கின்ற துறவறச் சுற்றமொடு தலைவனும் தலைவியும் அறம், பொருள், இன்பங்களில் சிறந்த வீட்டின்பத்தைத் தலைப்படுதல் கடந்த களவு, கற்பு ஆகியவற்று ஒழுக்கங்களின் பயனாகும்.

“காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களோடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே”.

****

மலைபடுகடாம் - ஓர் அறிமுகம்

கலைஞானி முனைவர் ப. ஆறுமுகம்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
தூய வளனார் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

தொல்காப்பிய இலக்கணத்திற்கு முற்றிலும் பொருந்த அமைந்த நூல் மலைபடுகடாம். பெருங்கௌசிகனார் பாடிய 583 அடிகளை உடையதும், ஆசிரியப்பாவால் அமைந்தது மலைபடுகடாம். இதனைக் கூத்தர் ஆற்றுப்படை எனக் குறிப்பர்.

நவிரமலை திருவண்ணாமலைக்கு வடமேற்கில் இன்றும் உள்ள திரிசூலகிரி. பருவத மலை என்றும் வழங்குவர்.

"கலம் பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ" – (50) என்பது கூத்தர் தலைவனை விளித்தமை கூறும் கூத்திற்கு இசை பாடுவோரும் ஆடுவோரும் இன்றியமையாதவர் என்பதால், தலைமைக் கூத்தன், பாணர்களுடனும், விறலிக்ளுடனும் வந்தான்.

எதிர்ப்பட்டவன் கூத்தன்,

"யான் அவண் நின்றும் வருதும்" – (53)

பரிசுபெற்று வருபவன் கூத்தனுக்கு எதிர்ப்படுகிறான். இது நல்ல நிமித்தம் என்று பரிசுபெற்றவன் கூறுகிறான்.

"நன்னன் சேய் நன்னற் படர்ந்த
கொள்கையொடு உள்ளிகிர்சேறிர்" – (64 – 66)

என்பது நன்னனிடம் ஆற்றுப்படுத்தல்.

ஆற்றின் அளவு என்பது வழி புலம் என்பது வழிநிலம். வளம் சுரக்கும் நாடு என்பது நன்னனது நாடு. மலை, சோலை இடைப்படுவழிகள். வளம் சுரக்கும் நாடு ஆகியன சூற்றிடைக்காட்சிகள்.

பெற்ற பெருவளம் என்பது ஆறு மலையில் இருந்து பல பொருள்களை அடித்துவருவதும், கடலில் சென்று சேர்வதும் உவமை. "மீமிசை நல்யாறு கடல் படர்ந்தாங்கு யாம் அவன் நின்று வருதும்" (51 – 52)

மலையில் இருந்து கடல் நோக்கி ஓடும் ஆறு பல பொருள்களை அடித்து வருதல் போல் கூத்தன் நன்னனிடம் பரிசு பெற்று வருவதற்கு உவமை.

இதுவே பெருவளம் ஏர் உழவர்க்குப் புதுநீர் போன்றவன் நன்னன்.

பரிசு பெற்றவன், எதிர்ப்படுபவனின் நல்ல காலம் கூறுகிறான். "பொழுது எதிர்ந்த புள்ளினிர் மன்ற" – (66) இதன் பொருள், புறப்படும்பொழுது எதிர் வரும் கூத்தனை உணர்த்தி நல்நிமித்தம் ஆயிற்று. நன்னன் எதிர்பாராது கொடுக்கும் மேகம் இனிச் சொன்ன பக்கம் காணலாம்.

தொல்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை என ஆறு படை உடையவன் நன்னன். தொல்படை சிறப்புடையது. மறவரை வழியில் காணலாம். நன்னனின் பழைய ஊர் முதலைவாழ் கிடங்கு சூழ்ந்தது.

இதனைத்தாண்டின் பெரிய கொல்லைகளைக் காணலாம். முசுண்டை, தினை, வரகு, அவரை இவைகளைக் காணலாம். தயிர் சிந்தியது போன்று அவரைப் பூக்கள் வீழ்ந்து கிடக்கும். இவ்வுவமை காய்களுக்குப் பொருந்தாது. "விளைதயிர்ப் பிதிர்வு வீக்கு என்பதில் வீ என்பதே விழுந்த பூ. அரும்பு, போது, மலர், அலர், வீ என்பன மலரின் ஐந்து நிலைகள்.

வாதிடுபவன் பேசும்போது கை நீட்டிப் பேசுவது போல் வரகு காய்த்தது.

ஐவகை நெல்லும், வெண்ணெல்லும் காய்த்தன. கரும்பும் மூங்கில்நெல் அவல் இடிக்கும் பதமுற்றும் காணப்படும்.

கவலைக்கிழங்கு பெண் யானையின் கால் போல் இருக்கும். மாவாகும் நிலைபெறும். நாவற்கனிகள் விழும். அவ்விடம் விளையும் பொன்னே சாம்பூநதம். (சம்பு – நாவல்) நீர் வறட்சி நீக்கும் உயவைக் கொடிகள் படர்ந்திருக்கும் ஊறுநீர் உயவைக் கூவைக் கிழங்கு நீர் ஏறித்திரண்டது. ஆசினிப்பலாவின் பழம் மத்தளம் போல் தொங்கும் நெல்லரிதாள் மேல் நீல மலர் பூத்தது.

விளையாடும் யானைக்கன்றுகளின் பிணைந்தகைகள் போல் தினைக்கதிர் தோன்றியது. யானையின் முகத்தில் வேல் பாய்ந்தது போல் வாழைக்குருத்து துருகல்லில் மோதியது. மாம்பழம் சுவையால் பிறவற்றை உண்ணவிடாது. உண்ணுநர் தடுத்தன மீதமா. இவைதாண்டின் சிறுகுடிவரும் காந்தள் மலர்விழ, இறைச்சித்துண்டாய் நினைத்த பருந்து எடுத்துச் சென்று கீழேபோகும்.

பாடியவரையும் பாடப்பட்டோரையும் அழிப்பது ஆனந்தக்குற்றம். இதனை மருங்கின் மங்கலம் என்பார். சொற்குற்றம் எனப்து பொருள் தீயின் அன்ன செங்காந்தள்" – 145

தீ – சொற்குற்றம் என்றவர் ஆளவந்த பிள்ளை ஆசிரியர். நச்சினார்க்கினியர் உரைகூறும் கதை இது.

குறமகள் சமைத்த உணவு கிடைக்கும். நெல்லால் செய்தகள் ஈத்தோப்பி நறவு என்பதும் இதுவே. அரிசிக்குள்ளும் உண்டு.

குவளையில் தெய்வம் வாழும் தொடுதல் கூடாது. வெதும்பி நடுங்க வேண்டும். விரைந்து செல்ல வேண்டும். நிலநாடு அடுத்து வரும். பன்றிப் பொறி(கல்) கண்டுசெல்ல வேண்டும். பாம்புக்குழி பார்த்து அகல வேண்டும். கவண்கற்கள் வீசப்படுவதும், மந்திகள் பாய்வதும் பார்த்துச் செல்ல வேண்டும். மரங்களில் ஒதுங்கிச் செல்ல வேண்டும். நீர் குத்தும் இடங்களில் முதலைகள் வாழும் கொடிகளைப் பிடித்துக்கொண்டு வழுக்காது செல்ல வேண்டும். சிறுமூங்கிலும், எருவைக்கோலும் ஊன்றிச் செல்ல வேண்டும். பழைய மதிலுடைய ஆலயங்களைக் கண்டால் இசை எழுப்பாது செல்ல வேண்டும்.

மழை பெய்து கொண்டே இருக்கும். தேன் இறால் சில மலர்கள் இவை கண்டால் விரைந்து செல்ல வேண்டும். அன்றேல் வழிதப்பும். வழியில் அடிபட்டு வீழ்ந்த பன்றியைக் காணின் சுட்டு உண்ண வேண்டும்.

இரவில் செல்வதை விட்டுப் பகலில் செல்ல வேண்டும்.

யானையை விழுங்கும் பெரும்பாம்பு கிடக்கும்.

பூவும், பழமும், அக்கிளி உடைய மரமும் பார்த்துச் செல்லவேண்டும். நீளும் காம்புடைய பூ தீமைதரும்.

இரவில் குகையில் தங்கி இளைப்பாறலாம். விடியல் உணர்ந்து செல்ல வேண்டும்.

மரக்கூட்டம் மிகுதியான இடத்தில், கற்களில் நின்று கல் என இசை எழுப்ப குறவர் வருவார். வழி காட்டுவார். நீரில் விழுந்தவனைத் தூக்குதல்போல் விரைந்து வருவார், உணவு தருவார், வழிகாட்டுவார்.

பலதிறப்பட்ட ஓசைகள் எழும். கடாம் என்பது ஓசை. மதம் என்பது பொருள். மலை போன்றது யானை. அதனிடம் எழுவது கன்னமதம், கபாலமதம், பீஜமதம். மதம் வெளிப்படும்போது யானைகள் பிளிறும். மலைபடுகடாம் எனும் தலைப்பிற்கு ஏற்பப்பல ஓசைகளைக் காட்டுகிறார்.

மகளிர் குடைந்தாடும்போது நீரில் எழும் ஓசை அருவிவீழ் ஓசை கேட்கும்.

ஆண்யானையைப் பிடிக்கத் திணைத்தலைவன் கூட்டமாய் வளைத்து எழுப்பும் ஓசை, முள்ளம்பன்றி குத்திய உடற்புண்ணோடு கானவர் அழும் ஓசை புவிதாக்க ஏற்பட்ட புண் ஆற, கொடிச்சியர் பாடும் பாடல் ஒலி, வேங்கை மலர் பறிப்பார். 'புலி புலி' என விளையாடும் ஓசை. (புலி – வேங்கைமலர்) பெண்யானை மீது புலிபாய, அவ்வியானை பிளிறும் ஓசை. தழுவுதல் மறந்த மந்தியின் குட்டி, குழியில் விழக் குரங்குக் கூட்டம் கத்தும் ஓசை.

கண் ஏணியில் ஏறிய வேட்ர், தேன் எடுத்து, இடையூறுகளை நீக்கும்போது எழுப்பும் ஓசை.

விடியற்காலம், மன்னனுக்குப் பொருள்களைத் தர வரும் குறவர் கள்ளை உண்டு, மான்தோல் போர்த்த சிறுபறை முழக்கி, மகளிரோடு, எழுப்பும் ஓசை. காட்டாற்றில் சிக்கிய யானையைச் சினம் அடக்கிக் கந்திலேகட்டப் பாகர் எழுப்பும் ஓசை.

"அப்புது அப்புது", "ஆது ஆது", ஐ, ஐ என்பன வடமொழி தழுவிய யானை பாஷை ஒலிக்கும் (சீவக சிந்தாமணி).

மூங்கில் கருவி தட்டை கொண்டு கிளி ஓட்டும் மகளிர் எழுப்பும் ஓசை.

கோவலர், குறவர் ஆரவாரும் செய்ய, எருதுகள் மோதும் ஓசை, சிறுவர் பலாவிலிருந்து பரல் நீக்க, பரப்பி, கன்றுகளைக் காந்தள் துடுப்பால் விரட்டி மிதிக்க விடும் ஓசை, கரும்பாலைகளில் சாறு பிழியும் ஓசை, தினை குற்றும் மகளிர் எழுப்பும் வள்ளைப் பாட்டின் ஓசை, சோம்பையும், மஞ்சளையும் விதைத்தவர் அவற்றைப் பன்றிகள் தோண்டாமல் இருக்க, பறை அடிக்கும் ஓசை, மலையானைக்கு உவமை. அங்கு எழும் கடாம் எனும் ஓசை, மத்நீர்க்கு ஒப்பு. என்வே, மலைபடுகடாம் ஆயிற்று.

வாய்நிறைய உண்டு, கண் குளிரக்கண்டு, காது குளிரக் கேட்டது நன்னன் நாட்டு வளம். இதுவே நவிரமலை வளம்.

பழைய் உறவினர் போல், புதியவரையும் வரவேற்று உபசரிப்பவர் அவன் நாட்டு மக்கள்.

இடைப்படும் தெய்வங்களிடம் கிடைப்பதில் பங்கு தருவதாய் வழிபட்டுச் செல்ல வேண்டும்.

கருவிகள் நனையா வண்ணம் குகைகளில் மழை பெய்யும்போது புக வேண்டும்.

காமரத்தைத் ஊன்றும் தடியாகக் கொண்டு செல்ல வேண்டும். அந்தி மாலையிலும் செல்லலாம். முன்செல்பவர்களைப் பற்றிச் செல்ல வேண்டும். மெல்லச் செல்ல வேண்டும்.

வளைத்த மூங்கில் எகிறித் தாக்காமல் பார்த்துச் செல்ல வேண்டும். நடுகற்களின் முன் யாழை இயக்கி, வாழ்த்திச் செல்ல வேண்டும். இளைப்பாற வேண்டிய இடத்து இளைப்பாறி, அஞ்சாமல் செல்லலாம். இடையர் மகள், வழியில் உண்ணப் பசும்பால் தருவர், பாற்சோறும் தருவர். தோற்படுக்கையில் (ஆட்டுத்தோல்) படுத்து, தீ சுற்றிலும் காக்க, உறங்க வேண்டும். வேடர்களிடம் நன்னனிடம் போவது கூறினால் வழிகாட்டுவர். தசையும் கிழங்கும் உண்ணத்தருவர். மழைநீரில் குளித்தும், குடிக்க மொண்டு கொண்டும் செல்ல வேண்டும். மூங்கில் அரிசிச் சோறு, நெல்லரிசிச்சோறு, அவரை விதை, புளியங்கூழ் உண்ணக்கிடைக்கும் புல் குடிசை வாழ் மக்கள் தருவர். தினைமாவும், கறிவிரவுநெய் சோறும் உண்ணக்கிடைக்கும். விடியற்காலம் பறவைக்குரல் கேட்டுச் செல்ல வேண்டும். நீர் வளம் மிக்கது நவிரமலை, கதவுகளில் நீர் வந்து மோதும். பெண்யானையின் கை போன்ற வரால், பகன்றைப் பூவால் செய்த கள்ளோடு பழையவர் விற்பர். துதிக்கை போன்றது வரால் மீன் அதன் துண்டு, இசைக்கருவியின் கள் போன்றது. ஏர் மங்கலப் பாட்டிற்கு ஏற்ப இசைபாடித் தங்கிச் செல்ல வேண்டும்.

சேயாற்றின் கரை வழியே செல்ல வேண்டும். நன்னனின் ஊரில் பெரிய தெருக்களும் சிறிய தெருக்களும் உண்டு. கோபுர வாயிலில் ஐயம் கொள்ளாமல் புக வேண்டும். பலரும் உம்மை விருந்தாய் அழைப்பர். கோபுரவாயிலில், மானின் கன்றும் யானைக் கன்றும், வருடையும், கீரியும், உடும்பும், சுக்கான் கல்லில் திரியும். அக்கல் சுரக்கைப் பரப்பியது போன்று சிவப்பாக இருக்கும். மயில், கோழி, சேவல், மாம்பழம், நறைக்கொடி, கிழங்கு, கருப்பூரம் (காய்), அழகிய மணிகள், யானைத்தந்தங்கள் மிளகு கட்தெளிவு (மூங்கில்குழாயில்) மூங்கில் குழாயில் எருமைத்தயிர், தேன்கூடு (சக்கரம்) ஆசினிப்பலா இவற்றைத் தலைவாசலில் காணலாம்.

முன்றிலை அடைய வேண்டும். கடவுளை வாழ்த்த வேண்டும். நன்னன் முன்னோர் பெருமையைப் பாட வேண்டும் வெற்றியைப் புகழ வேண்டும். நன்னன் இனிதாய்ப் பார்ப்பான். இதை அறியா ஆடை தந்து பெண்நாய் கொணர்ந்த ஊனோடு நெல் அரிசிச் சோறு தந்து அவர்களில் தலையானவன் பொற்றேரை பெறுவான். தேர், யானை, குதிரை தருவான். முதல் நாளே பரிசு கொடுத்துப் போகவிடுவான். இவையே பெற்ற பெருவளம். மலைபடுகடாத்தில் ஓர் அரிய செய்தி உள்ளது. ‘‘புள்மகார்’’ என்பன இரு சொற்கள். புள் எனின் வளையல்.

ஆணோ, பெண்ணோ மகார். ஒருபெண் வளையல் அணிந்திருப்பாள். மணமாகி முதற்குழந்தை பிறந்தவுடன் வளையல் அணிவதை விட வேண்டும். இதனைத் தொடர்புபடுத்திப் புள்மகார் எனப்பாடியதாய் உரைகாரர் கூறினார்.

உவமைகள் பொருத்தம் மிகவும் உடையவை. சிதறியதயிர் போல் அவரையின் வெள்ளைப் பூக்கள் விழுந்து கிடந்தனவாம், காட்டில் உதவிகேட்டு இசை எழுப்பினர், வேடர் உதவிட விரைந்து வருவர். நீரில் விழுந்தவனைக் காக்க விரைதல் இங்கு உவமை ஆகிறது. குட்டியானைகள் விளையாடும்போது தும்பிக்கைகள் இணைந்து வளைதல்போல் தினைக்கதிர் ஒன்றுடன் ஒன்று பிணைந்து இருந்தது.

பலர் வழி அறிய, புல்லைத் தடவி, நாற்சந்தி உள்ள இடத்தில் முடிபோடல் பழக்கத்தில் பண்பாடு.

விடியலில், அந்தியில் செல்ல வேண்டும் என்பது அறிவுரை, அனுபவ உரை. பாறை ஏறியும், மரம் ஏறியும் இசை முழக்கி, விலங்குகளை விரட்டலும், வழியில் உதவி பெறலும் சிறந்த உத்தி காமரத்தண்டும், மூங்கில் குச்சியும், எருக்கின் கோலும் ஊன்றிச் செல்லல் அநுபவ உரை. முன் நடப்பவனின் கைபற்றிச் செல்லல் வேண்டிய ஒன்று.

சில பூக்கள், (காம்பு நீளும்) சில மலர்கள், சில மரங்கள் தெய்வம் ஏறி நின்று, தீண்டினால் துன்பம் தருவது புரியாத ஒன்று. பங்கு தருவதாய்த் தெய்வத்திடம் வேண்டல் அக்கால, இக்கால வழக்கம். வளைத்த மூங்கில் விடுபட்டுப்பின் வருபவரைத் தாக்கல் சொல் ஓவியம். நெற்கள்ளும், நெல்லரிசிக்கள்ளும், பகன்றைப் பூவால் செய்த கள்ளும் காலங்கடந்த வாழ்வியல்.

சிவனும், திருமாலும், நான்முகனும், முருகனும், வருணனும் சங்ககால வழிபடு தெய்வங்கள், ஆடிப்பாடித் தொழில்செய்வது பண்டைக் கால மரபு. பெயர் விடுபட்ட தெய்வங்கள் பல.

பெருங்கௌசிகன் பிறந்தது மதுரை அருகே வழிகாட்டியது திருவண்ணாமலை அருகே உள்ள நவிர மலை.

வரலாற்றில் பெண்கொலை செய்த நன்னன் இம்மன்னனோ? இப்பாடலில் மாம்பழம் உண்ண உண்ணத் தெவிட்டாதது.

மலைபடுகடாம் பெயர் அமைப்பால் சிலேடை பெற்று, ஒலிப்பட்டியல் காட்டி, உவமையால் சிறப்புற்று ஆற்றுப்படைகளில் சிறந்த வழிகாட்டியாம்!

****

புவி வெப்பமடைதல் - விளைவும் தீர்வும்

பேராசிரியர் தி.வெ.இராசேந்திரன்,
தமிழாய்வுத் துறை
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி–17

புவி வெப்பமடைந்து வருகிறது. இதனால் பனிமலைகள் உருகுகின்றன. கடலின் நீர்மட்டம் உயருகிறது. இதன் விளைவு கடலோர நகரங்கள் யாவும் கனாக் காணும் காலங்களில் மட்டும் காணமுடியும்.

புவிமண்டலம் நாளுக்கு நாள் வெப்பமடைவதற்கு என்ன காரணம்? வானில் பறக்கும் விமானங்கள், தரையில் விரையும் வாகனங்கள், கடலில் உலவும் பெரிய கப்பல்கள் ஆகியன விடும் நச்சு வாயுக்களே புவியின் வெப்பத்திற்கு முதன்மையான காரணமாகும்.

மேற்கிந்தியத் தீவுகளில் அமைந்திருக்கும் ஒரு நாடு டிரினிடாட் - டொமாகோ என்பதாகும். இதன் தலைநகரான ஃபோர்ட் ஆப் ஸ்பெயினில் 2009 ஆம் ஆண்டு நவம்பரில் 'காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்ட மாநாடு நடைபெற்றது. அதன் மையக் கருத்து என்னவெனில் தட்பவெப்ப மாற்றம் காரணமாக நச்சு வாயு வெளியேற்றத்தை ஒவ்வொரு நாடும் எந்த விழுக்காட்டில் குறைத்துக் கொள்ளுவது என்பதைப் பற்றியதாம். இந்தக் கருத்துப் படிவத்தில் வளரும் நாடுகளுக்கும், வளர்ந்த நாடுகளுக்கும் மிகப் பெரும் கருத்து வேறுபாடு நிலவுகிறது. இருப்பினும், இதில் ஒருமித்த கருத்து உருவாக வேண்டும் என்பதில் அனைத்து நாடுகளும் உறுதியாக இருப்பது வரவேற்க வேண்டிய செய்தியாகும்.

இதில் முழுமையான, நல்லதொரு முடிவு காண டென்மார்க் தலைநகரான கோபன்ஹேகனில் 2009 டிசம்பர் 18,19 ஆம் நாட்களில் பன்னாட்டுத் தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுவதற்கு முன்பாகச் சீனா ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதாவது 2020 ஆம் ஆண்டிற்குள் நச்சு வாயு வெளியேற்றத்தின் அளவை தங்கள் நாட்டில் 45 விழுக்காடு குறைத்துக் கொள்ளுவோம் என அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து அமெரிக்காவும் 17 விழுக்காடு நச்சுவாயு

வெளியேற்ற த்தைக் குறைத்துக் கொள்ள முன் வந்துள்ளது. காமன்வெல்த் நாடுகளின் கூட்டமைப்பில் கலந்து கொண்டு பேசிய இந்தியத் தலைமையமைச்சர் மாண்புமிகு மன்மோகன்சிங் அவர்கள் பின்வரும் கருத்தை உறுதியாகத் தெரிவித்தார்.

"நச்சு வாயு வெளியேற்றம் தான் புவிமண்டலம் வெப்பமடைவதற்குக் காரணம். உலக அளவில் நிலவும் இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணும் சுமையை, அழுத்தத்தை அனைத்து நாடுகளும் எப்படிப் பகிர்ந்து கொள்ளுவது என்பது தான் முதன்மையாக விவாதிக்கவேண்டிய கருத்தாகும். இந்தக் கொள்கையில் அனைத்து நாடுகளும் சமமான பங்களிப்பைத் தருவதாக இருந்தால், இது தொடர்பான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடுவதை எவ்விதத் தடையுமில்லை" எனக் குறிபிட்டுள்ளார். (தினமலர் 29-11-2009 THE HINDU 29-11-2009)

இதற்குக் காரணம் அமெரிக்கா, சீனா, போன்ற வல்லரசு நாடுகள் வெளியேற்றும் நச்சுவாயுக்கள் விழுக்காட்டினைப் பார்க்கையில், இந்தியா வெளியிடும் நச்சுவாயுக்களின் அளவீடு மிகவும் குறைவானதேயாம். எனவே தான், அனைத்து நாடுகளும் இந்தக் கொள்கையில் சமமான பங்களிப்பைத் தரவேண்டும் என்றார் இந்திய பிரதமர்.

இவ்வாறு மாநாடுகளும், வாதப் பிரதிவாதங்களும் நிகழ்ந்து விட்டால் புவிவெப்பம் அடைவது தடுக்கப் பட்டுவிடுமா என்றால் அது சாத்தியமில்லை. இது ஒவ்வொரு உலகக் குடிமகனும் சிந்திக்க வேண்டிய, செயலாற்ற வேண்டிய பொருண்மையாகும். மாநாடுகள் விழிப்புணர்வைத் தரும். செயல்பாடுகள் தான் நன்மையைத் தேடித் தரும்.

இதற்கு முன் மாதிரியாக, உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டைச் சேர்ந்த மாணவனுக்கும் அந்தந்த நாடுகள் புவி வெப்பமடைவதன் தீமையைக் கற்றுத் தர வேண்டும். ஒவ்வொரு மாணவனும் தாவரங்களின் மேன்மையை உணர்வதுடன், தன் வீட்டிலோ அல்லது வீதியிலோ ஒரு மரக்கன்றினையாவது நடுவதற்குக் கற்றுத் தருவதடன் அதைக் கட்டாயச் சட்டமும் ஆக்க வேண்டும். அப்பொழுதுதான், மரங்கள் இல்லாவிட்டால் காற்றுத் தூய்மையடையாது என்ற பொன்மொழியை மனிதகுலம் உணர்ந்து கொள்ள முடியும்.

ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணம் கூற வந்த வள்ளுவர்,

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிங் கைந்து" (திருக்குறள்.74-738)

என்கிறார்.

ஒரு மனிதன் நல்ல உடல் நலத்துடன் வாழவேண்டுமாயின், தாவரங்கள் சூழ்ந்த பகுதியில் வாழ வேண்டும். குறிப்பாக வேப்பமரம், தென்னை மரம் போன்றவை உயிர்க்காற்றை அதிகமாக வெளியிடும் தன்மை கொண்டவை. இக்காற்றைச் சுவாசித்தால் மனிதனுடைய உடல் நலம் பெருகும். வலிவுறும். இது அறிவியலாளர் கூறும் உண்மை. மேலும் வயல்காடுகளும், பல்வேறு மரஞ்செடி கொடிகளும் நிறைந்துள்ள பகுதியில் கதிரின் வெப்பம் முழுமையாக இருக்காது. காற்றும் தூய்மையாக இருக்கும்.

இன்று பெருகிவரும் மக்கள் தொகையைக் காரணம் காட்டி பல்வேறு இடங்களில் விளைச்சல் நிலங்களையும், மதிப்பு வாய்ந்த மரங்களையும் நாம் அழித்து வருகிறோம். அடுக்குமாடிக் குடியிருப்புகளையும், தொழிற்சாலைகளையும், கல்வி நிறுவனங்களையும் உருவாக்கி வருகிறோம். இதன் வாயிலாக மனிதனுக்கு வீடு கிடைக்கலாம். அதே நேரத்தில் பூமியின் சூடும் அதிகரிக்கும் என்பதை மறந்துவிடக் கூடாது. மக்கட்பெருக்கம் அதிகமாகிவிட்டது. எனவே, உணவின் தேவையையும் நாம் அதிகரிக்க வேண்டும் எனச் சொல்லி மூன்று போகம் விளையக் கூடிய வளமான வயல் காடுகளில் எல்லாம் வேதிப் பொருட்களால் உருவாக்கப் பட்டச் செயற்கை உரங்களை மண்ணில் தூவுகிறோம். இதனால் குறுகிய காலத்தில் சாகபடி நடக்கும். ஆனால், மண்ணின் உயிர்த்தன்மை சாகடிக்கப்பட்டு, விளைச்சலும் பாதிக்கப்பட்டு,பூமியும் வெப்பமடைந்து விடுகிறதே! இதை யார் காப்பாற்றுவது ? மன்னர்கள் காலத்தில் ஏரிகளும், குளங்களும் உருவாக்கப்பட்டதே. அது எதற்காக? அழகுக்காக மட்டுமன்று. கோடைகாலத்தில் மக்களின் தாகம் தீர்க்கப்படவும், ஏரிப்பாசனமும், குளத்துப் பாசனமும் சீராக நடைபெற வேண்டும் என்ற நல்லெண்ணத்தினாலான்றோ.... இன்று உயர்பதவியில் இருக்கும் சிலர் நயவஞ்சக மனிதர்களால் ஏரிகளும், குளங்களும் இருந்த சுவடுகளே இல்லாமல் அழிக்கப்பட்டுத் தனிப்பட்ட சிலரின் ஏகபோக உரிமையாக மாற்றப்பட்டு விட்டது எத்துணை பெரிய கொடுமை.ஏரிகளுக்கும், குளங்களுக்கும் மூடுவிழா நடத்தினால், பூமாதாவின் மூளைமார்பிலோ சூடுவைப்பதாகத் தானே பொருளாகும். நீருக்காக நிலத்தைப் பிளக்கிறோம் எனக் கூறி, ஆழ்குழாய் அமைக்கப் பூமித்தாயின் மார்பைத் துளைக்கிறோம்.

வீடு கட்டவும் , தொழிலகம் அமைக்கவும் ஆற்று மணலை எல்லையின்றி அள்ளுகிறோம். பிறகு எப்படித் தூய்மையான தண்ணீர் நமக்குக் கிடைக்கும்?
இந்த நெருக்கடிகளைத் தாங்க முடியாத பூமித்தாய் நமக்குத் தந்த சவுக்கடிகள்தான் கடல் சீற்றமும், நிலநடுக்கமும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இந்த நிலை இவ்வாறு தொடர்ந்து கொண்டே போனால் இயற்கையின் இன்பங்களையெல்லாம், இலக்கியத்தில் மட்டுமே நாம் காணமுடியும்!

'தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக் கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத் தெண்திரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின் வண்டுகள் இனிது பாட மருதம் வீற்று இருக்கும் மாதோ' (கம்பராமாணம் : நாட்டுப்படலம் - 04) என்று கம்பன் காட்டும் இயற்கையின் பேரெழில் பூமியின் வெப்ப நிலையால் எழுத்து வடிவில் காணும் நிலைக்குத் தள்ளப்பட்டு விடுமோ என்ற அச்சத்தை நமக்கு உருவாக்குகிறது.

மரங்களும், செடிகளும், கொடிகளும், மலர்களும் பூமித்தாயின் அணிகலன்கள். இவைகள் மனிதரால் பாதுகாக்கப்பட வேண்டியவை. அழிக்கப்படுமாயின் பூமாதாவின் உணர்வில் வெப்பம் ஏறும். அது நம் தட்பவெப்பத்தை மாற்றும்.

"பன்னீர் வாசனையானதுதான்
ஆனால்
எத்துணை பேருக்குத் தெரியும் ?
அது ஒரு
ரோஜாவின் கண்ணீர் என்று"

இயற்கையின் அழிவைக் கண்டு ஒரு புதுக் கவிஞர் எழுத்துகளை இப்படி ஏவுகணையாக்குகிறார்.(தினமலர்,பெண்கள் மலர்,28.11.09)

முடிவாகக் கூறவேண்டுமானால்

புவிவெப்பமடைவதைத் தடுக்க ஒவ்வொரு உலகக் குடிமகனும் முன் வரவேண்டும்
நாம் பயன்படுத்தும் செல்பேசிகளிலிருந்து வெளியேறும் கதிர்வீச்சுகளால், புவி சூடாவதுடன் - நிலத்தடி நீரும் மாசுபடுகிறது என்கிறனர் நீர்வள அறிஞர்கள்.

2012 ஆம் ஆண்டில் எட்டாயிரம் டண் செல்பேசிக் கழிவுகள் உலகம் முழுக்கச் சேரும். இதனால் கடும் வெப்பமயம் தோன்றும்

என 'டெலாய்ட்' என்ற உலகளாவிய ஆலோசனை நிறுவனம் நம்மை எச்சரித்து உள்ளது. மேலும், நிலம் சூடாவதற்குப் பெரும் காரணங்களுள் ஒன்றாகக் கருதப்படுவது பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடுகள் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

வானத் தந்தை தன் செல்ல மகளான பூமியின் தாகத்தைத் தீர்க்க அவ்வப்பொழுது மழை நீரை அனுப்புகிறான். அது பூமிக்குள் ஆழமாகச் சென்று ஊடுருவாமல் தடுப்பதில் இந்தப் பிளாஸ்டிக் பொருட்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. இதனால் பூ மகள் வெளியிடும் பெரும் மூச்சே சூறாவளிகளாகவும் பயங்கரப் புயல்களாகவும் வெளியாகின்றன! வாகனங்களின் நச்சுப்புகை, பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு, தாவரங்களின் அழிவு, ஆறுகளில் காணப்படும் மணல் தட்டுப்பாடு, பல்வேறு அறிவியல் கண்டுபிடிப்புகளால் தோன்றும் கதிர்வீச்சுகள் புவி வெப்பமடையக் காரணங்கள் ஆகும்.

இதைத்தடுக்க வேண்டுமானால் உலக நாடுகள் அனைத்தும் சுற்றுப்புறச் சூழலைக் காக்க கடுமையான சட்டங்களைத் தங்கள் நாடுகளில் நடைமுறைப் படுத்த வேண்டும்.

கோடிக்கணக்கான மரக்கன்றுகள் ஒவ்வொரு நாட்டின் தரைப்பகுதிகளிலும் தடையின்றி நடப்பட வேண்டும். இது மானுடத் தர்மமாக உலகம் முழுவதும் பின்பற்றப் பட வேண்டும். அப்பொழுது – பூமி குளிர்ச்சியடையும். மனிதம் மலர்ச்சி அடையும்.!

****

அறநூலாரின் நீராதாரச் சிந்தனைகள்

முனைவர் டே.கிறிஸ்துமணி
தமிழ்த்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி.

மனிதகுலம் உயிர் வாழ்வதற்குத் தேவையான இயற்கை வளங்களான நீர், நிலம், காற்று ஆகியவை மாசுபட்டு வரும் இக்காலகட்டத்தில் சுற்றுச்சூழல் பிரச்சனையில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்று நீர். பண்டைத் தமிழர் இயற்கையோடு இயைந்த வாழ்வை நடத்தினர். ஐம்பெரும்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தின் வாழ்த்துப் பாடலில் 'மா மழை போற்றுதும்' என நீருக்கு ஆதாரமான மழையைப் போற்றுவது சிந்தனைக்குரியது.

பொதுவாக அறநூல்கள் அறக்கருத்துக்களையும் செயல்பாடு சார்ந்த ஒழுக்கங்களையும் வலியுறுத்துவதைத் தம் நோக்கமாகக் கொண்டவை. எனினும் அறநூல்களில் இயற்கை சார்ந்த விழிப்புணர்வு, சுற்றுபுறச் சூழல்பற்றிய சிந்தனைகள் போன்றவையும் இடம் பெற்றுள்ளன. பதினெண் கீழ்கணக்கு அறநூல்களில் அமையும் நீராதாரச் சிந்தனைகளை ஆய்வுசெய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

நீரின்றி அமையாது உலகு.

உலகம் இடையறாது நிலைபெற்று விளங்குவதற்கு மழை இன்றியமையாதது என்பதை உணர்ந்த வள்ளுவர் வானை 'அமிழ்தம்' என்பர். நீர் இல்லாத உலகத்தைக் கற்பனை செய்தும் பார்க்க முடியாத வள்ளுவர் கடவுள் வாழ்த்து எனும் அதிகாரத்தைத் தொடர்ந்து வான்சிறப்பு எனும் அதிகாரத்தில், நீர் இல்லாவிட்டால் உலகம் நிலைபெறாது (20), தாவரங்கள் முளைக்காது (16), பெரிய கடலும் தன் நீர்மை குன்றும் (17) உழுவுத்தொழில் நடைபெறாது (14) என நீரின் தேவையை உணர்த்துகின்றார். இதனை

நீர் இன்று அமையாது உலகுஎனின் யார் யார்க்கும்
வான் இன்று அமையாது ஒழுக்கு – குறள். 20

எனும் குறள் விளக்குகின்றது.

இக்கருத்தனையே, 'வானத்துளி நோக்கி வாழும் உலகு' என நான்மணிக்கடிகையும் (26), 'மாரி வளம் பொய்ப்பின் ஊர்க்கு இன்னா' என இன்னா நாற்பதும் சுட்டிச செல்கின்றன.

உவமை நிலையில் நீர் பற்றிய சிந்தனைகள்

மக்கள் குளிக்க, குடிக்க, துவைக்க போன்ற செயல்களுக்குப் பயன்படும் நீர்பற்றிய சிந்தனைகள் அறநூல்களில் உவமை நிலையிலும் அமைந்துள்ளன. ஒரு அறத்தை விளக்குவதற்கு எத்தனையோ பொருள்கள் இருப்பினும் நீர் பற்றிய சிந்தனைகளை உவமைகளாகப் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது. சான்றாக, நாலடியார் 'ஈயாமை' எனும் அதிகாரத்தில் சான்றோர் வறுமையிலும் பிறருக்குக் கொடுப்பர் என்ற கருத்தை விளக்குவதற்கு கடல் பெரிதாக இருந்தாலும் அது குடிநீராகாது. ஆனால் கிணறு சிறிதாகக் இருந்தாலும் பிறர் குடிக்கப் பயன்படும் எனக் கடல் நீரையும், கிணற்று நீரையும் ஒப்பிட்டுக கூறுகின்றது. (நாலடி. 275)

வள்ளுவர் ஒருவனின் அகத்தூய்மைக்கு வாய்மையே முக்கியம் என்பதை வலியுறுத்த ஒருவனின் புறத்தூய்மைக்கு நீர் இன்றியாமையாதது எனும் உவமையால் விளக்குகின்றார். இக்கருத்தை,

புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை
வாய்மையால் காணப்படும் - குறள்.

எனும் குறள் விளக்குவதாக அமைகின்றது.

மேலும் மக்களின் ஊக்கத்தின் அளவைப் பொறுத்தே அவர் தம் உயர்வு அமையும் என்பதை 'வெள்ளத்து அனைய மலர் நீட்டம் எனும் உவமையால் விளக்குகின்றார். நீர் குறைவாக இருப்பின் மலர்த்தாளினது நீளமும் குறையும் எனவே நீர்வளத்தைப் பொறுத்தே தாவரங்களின் செழிப்பு அமையும் என்பது புலனாகும்.

வேளாண்மையில் நீர்

நீர் வளம் இன்றி வேளாண்மைத் தொழில் நடைபெறாது. ஓரறிவுடைய புல் முதலான சிறிய தாவரங்கள் கூட நீர் இன்றி முளைக்காது என்பதை வள்ளுவர்,

விசும்பின் துளி வீழின் அல்லால்மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண் பரிது – குறள். 16

எனும் குறளில் விளக்குகின்றார்.

நிலம் வளம் பெற நீர் தேவை. நீரால் நலம் பொருந்திய

நிலத்தில் நெற்பயிற்கள் செழிக்கும் என்பதை 'நில நலத்தால் நந்திய நெல்லே போல்' என நாலடியார் கூறுகின்றது. (179)

மழையினைப் பெற்றால் கிழங்குகளை உடைய தாவரங்கள் அனைத்தும் முளைக்கும் என்பதைப் பழமொழி நானூறு,

தழங்குரல் வானத்துத் தண்பெயல் பெற்றால்
கிழங்குடைய வெல்லாம் முளைக்கும் - பழமொழி. 97,

என்ற அடிகளில் எடுத்துரைக்கின்றது.

மழை வளத்தால் மலையும் வளம் பெறும் என்ற கருத்து பழமொழி வாயிலாகச் சுட்டப்படுகின்றது.

மழையினால் தாவரங்கள் தளிர்க்கும் என்றும் விதைகள் நீர் இருந்தால் தான் முளைக்கும் என்றும் நீரின் இன்றியமையாமையை நான்மணிக்கடிகை வலியுறுத்துகின்றது. சான்றாக,

'பெய்ய முழங்கத் தளிர்க்கும் குருகிலை' (நான்மணி. 35)
'.. வித்தின்
முளைக்குழாம் நீர் உண்டேல், உண்டாம் - நான்மணி. 64

எனும் அடிகள் அமைகின்றன.

நீர்பாய் மடை அறின் நீள்நெய்தல் வாடும் (41) எனவும் 'பொய்யா நலம் கெடும் நீர் அற்ற பைங்கூழ் (43) எனவும் நான்மணிக்கடிகை எடுத்துரைக்கின்றது.

நீரை மிகுதியாகக் கொள்ளாத ஏரியின் கீழ் அமைந்த நெற்பயிற்கள் வளராது. என நாலடியரும் (171) நீர் வளம் இல்லாத குளத்தின் கீழ் அமைந்த நெற்பயிர்கள் அழியும் என நான்மணிக்கடிகையும் நவில்கின்றன. (81)

ஒரு நிலத்தின் இயல்பை அதிலுள்ள நீரின் அளவைக் கொண்டு மதிப்பிடலாம் எனும் கருத்து நான்மணிக்கடிகையில்,

.... அகல் நீர்ப்
பிலத்து இயல்பு புக்கான் உரைக்கும்; நிலத்து இயல்பு
வானம் உரைத்து விடும். (நான். 68)

என்ற அடிகளில் அமைகின்றது.

ஒரு ஊர் சிறப்புப் பெறுவதற்கு அங்கு கிடைக்கும் பண்டங்கள் எனவும் விளைவதற்கு அடிப்படையாக அமைவது விளை நிலங்கள் எனவும் அவ்விளைநிலங்களின் செழிப்புக்கு அடிப்படை நீர் எனவும் நான்மணிக்கடிகை கூறுகின்றது. இதனை

'நீரான் வீறுஎய்தும் விளைநிலம்; நீர் வழங்கும்
பண்டத்தால் பாடுஎய்தும் பட்டினம்' – நான்மணி. 83,

எனும் அடிகள் விளக்குவதாக அமைகின்றன. நெற்பயிர்கள்

செழித்து வளர நீர் தேவை என்பதை இனியவை நாற்பது, 'வறனுழக்கும் பைங்கூழ்க்கு வான் சோர்வு இனிதே (15) எனச் சுட்டுகின்றது. சிறுபஞ்சமூலமும் வேளாண்மைக்கு நீர் அடிப்படை என்பதை,

வார் சான்ற கூந்தல்; வரம்பு உயர, வைகலும்
நீர் சான்று உயரவே, நெல் உயரும் - சிறுபஞ்ச. 44,

என்ற அடிகளில் விளக்குகின்றது.

நாட்டின் பாதுகாப்பிற்கு அரண் தேவை. நீர், மண், மலை, காடு ஆகியவற்றைக் கொண்டது அரண் என்பதை வள்ளுவர்,

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண் - குறள். 712,

என்று கூறுகின்றார். இங்கு நீர் அரணை முதலாவதாகக் குறிப்பிடுகின்றார். இதனையொத்து சிறுபஞ்சமூலமும்,

நீண்டநீர், காடு, களர், நிவந்து விண்தோயும்
மாண்ட மலை, மக்கள் உள்ளிட்டு - சிறுபஞ்ச. 47,

என்பவற்றைக் குறிப்பிடுகின்றது. காடும், மலையும் ஒரு நாட்டிற்கு அரண் எனில் அவற்றிற்கும் ஆதாரமாக விளங்குவது நீரன்றோ!

குளம் அமைத்தல் :

நில வளத்தைப் பாதுகப்பதில் ஆறுகள், குளங்கள், ஏரிகள் மற்றும் நீர் நிலைகள் ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை தூர்ந்து போகாமல் பாதுகாப்பதும், குளங்கள் ஆகியவற்றை உருவாக்குவதும் நமது கடமையாகும். குளங்கள் அமைக்கும் செயல் அறநூல்களில் இடம் பெற்றுள்ளன. மக்களுக்குப் பயன்படும் கிணறு முதலியவற்றை அமைத்தவர்கள் சாவாஉடம்பு எய்துவர் என்ற கருத்து திரிகடுகத்தில் இடம் பெறுகின்றது. இதனை

'உண்ணுநீர்க் கூவல் குறையின்றித் தொட்டானும் -
சாவா உடம்பெய்தினர் (திரி. 16)

எனும் அடிகள் விளக்குகின்றன. இக்கருத்தினையே சிறுபஞ்சமூலமும்,

குளம் தொட்டு காவு பதித்து, வழிசீத்து,
உளம் தொட்டு உழுவயல் ஆக்கி – வளம் தொட்டுப்
பாகு படும்கிணற்றோடு என்று இவை பாற்படுத்தான்
ஏகும் சுவர்க்கம் இனிது. சிறுபஞ்ச. 64,

என வலியுறுத்துகின்றது.

நீர் வளங்களைப் பெருக்கி, அவற்றைப் பாதுகாப்பவன் பாடலும் ஆடலும் பயின்று செல்வந்தனாய் தன்குடும்பத்துடன்

மகிழ்ந்து வாழ்வான் என்பதை ஏலாதி,

உண்நீா் வளம்குளம் கூவல் வழிப்புரை,
தண்ணீரே அம்பலம் தான் பாற்படுத்தான் - பண்நீர
பாடலொகு ஆடல்பயின்று, உயர் செல்வனாய்
கூடலொகு ஊடல உளான் கூர்ந்து. ஏலாதி. 51.

எனும் பாடலில் எடுத்துரைக்கின்றது.

'காவோடு அறக்குளம் தொட்டல் மிக இனிதே; இனி. 23, என இனியவை நாற்பதும் குளம் அமைத்தலை வலியுறுத்துகின்றது.

சுற்றுச் சூழல் பாதுகாப்பு :

அறநூல்கள் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை நமக்குத் தருகின்றன. மனிதன் ஐம்பூதங்களையும் பாதுகாக்கத் தவறினால் அவனது ஐம்புலன்களும் கெடும் எனப் பல ஆண்டுகளுக்கு முன்பே ஆசாரக்கோவை எச்சரிக்கின்றது. இக்கருத்தை,

ஐம்பூதம் ....
தம்பூதம் எண்ணாது இகழ்வானேன், தம் மெய்க்கண்
ஐம்பூதம் அன்றே கெடும் - ஆ. கோ. 15 ,

எனும் அடிகள் விளக்குவதாக அமைகின்றன.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் மரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மரங்களை நடுதல் அறச்செயலாகக் கருதப்பட்டது. சாலையோரங்களில் மரங்களை நாட்டுவது நன்று எனும் கருத்து சிறுபஞ்சமூலத்தில்,

நன்று, தளி சாலை நாட்டல் - சிறுபஞ்ச. 61,

எனும் அடியில் சுட்டப்படுகின்றது.

மேலும் இரவில் மரங்கள் கரியமிலவாயுவை வெளியிடுவதால் அம்மரங்களின் கீழ் இரவில் தங்குதல் கூடாது என்ற கருத்து ஆசாரக் கோவையில் இடம் பெறுகின்றது. (13)

நீர் மாசுறுதலைத் தடுத்தல் :

நீர்த்துறைகளில் துணிகளைத் துவைத்தல், விலங்குகளைக் குளிப்பாட்டுதல் போன்ற செயல்கள் நீரை மாசுபடுத்துகின்றன. நீரை மாசுபடுத்தும் செயல்களை ஆசாரக்கோவையும் இன்னா நாற்பதும் கண்டிக்கின்றன. சான்றாக 'துறையிருந்து ஆடை கழுவுதல் இன்னா (23) என இன்னா நாற்பதும், 'உடுத்த ஆடையை நீருள் பிழியார் என ஆசாரக்கோவையும் சுட்டுகின்றன.

மக்கள் நீராடுகின்ற நீர்த் துறைகளில் நீந்துதல், உமிழ்தல்,

விளையாடுதல் போன்ற நீரை மாசுபடுத்தும் செயல்கள் கூடாது என்ற கருத்தும் ஆசாரக்கோவையில் இடம் பெற்றுள்ளது.

பூமியன் கால்பங்காக அமையும் கடல் மற்றும் ஆறுகள், குளங்கள், ஏரிகள் போன்ற இயற்கை வளங்கள் பல்வேறு சூழல்களாலும் மனித செயல்பாடுகளாலும் பாதிப்படைந்து வருகின்றது. இத்தகைய நிலை நீடிக்குமானால் பின்வரும் தலைமுறையினர் மிகப்பெரும் பிரச்சனைகளை எதிர்கொள்ள நேரிடும். எனவே தான் நீராதாரங்களைப் பாதுகாத்து அவற்றைப் பராமரிக்க வேண்டியதன் தேவையை பதினெண் கீழ்கணக்கில் அறநூல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

****

சுதேசமித்ரன் இதழ் தொகுப்பில் வெளிவந்த கவிதைகளில் சூழலியல் சிந்தனைகள்

ஜா அருணா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
பிஷப் ஹீபர் கல்லூரி.
திருச்சிராப்பள்ளி 620 017.

மனித நாகரிகம் மேம்பட மேம்பட சுற்றுப்புறச் சூழலும் மெல்லமெல்ல சீர்கெட தொடங்கி விட்டது. உயிர்களில் ஆதிக்கத் தன்மைக் கொண்ட பிரானி மனிதன். இவன் வாழ மற்ற உயிரினங்களை அழிக்க வேண்டிய, பாதுகாக்க வேண்டிய சூழலுக்கு உள்ளாக்கப்படுகின்றான். ஒன்றை ஆக்குவதும், அழிப்பதும், பாதுகாப்பதும் இன்றைய மனிதனுக்குக் கைவந்த நிலையாகிவிட்டது. (அல்லது) அவசியமாகிவிட்டது. இன்று மனிதனால் எண்ணற்ற கண்டுபடிப்புகளும், கோட்பாடுகளும் வகுத்து உருவாக்கப் பட்டிருக்கின்றன. அவையாவும் இயற்கையை சுறறுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் அமைந்திருக்கின்றனவா என்றால் பெரும்பாலும் இல்லை என்றே கருதமுடிகின்றது.

"உயிருக்கும், உடைமைக்கும் வழிகாட்டும் இயற்கைக்கு முன்னுரிமை கொடுக்காத
எந்தக் கோட்பாடும், கண்டுபடிப்பும் காலப்போக்கில் மறைந்து போகும்"

(சா. கந்தசாமி, நிகழ்காலத்திற்கு முன்பு)

என்றுச் சுற்றுச் சூழலை மையமாகக் கொண்டு சா கந்தசாமியால் எழுதப்பட்ட நிகழ்காலத்திற்கு முன்பு என்ற நூலின் அறிமுகவுரையில் பேராசிரியர் சுபாசு குறிப்பிடுவது மேற்கூற்றை நிரல்படுத்தும் உயிரையும், உடைமையையும் போற்றி பாதுகாக்கும் இயற்கையை மனிதன் பாதுகாக்கத் தவறினால் நிச்சயம் அழிந்தே போவான் எனபதையும் கருத்தை மேற்கூறிய சான்று ஆழப்பதிக்கன்றது.

இயற்கையைப் பாதுகாக்க மனித் நாகரிகம் தவறினாலும், அதை நோக்கிய செயல்பாட்டினை அவன் மேற்கொள்ளவில்லை என்றாலும், சூழலியல் பற்றிய நற்சிந்தனை ஒவ்வொரு கலைஞனின் உள்ளத்திலும் பசுமரத் தாணியைப் போல பசுமையாகப்

பதிந்துள்ளது உண்மை. அதனாலேயே அவனது படைப்பில் அவை அவனையும் மீறி தலைதூக்க ஆரம்பிக்கின்றது. இதனைச் சங்கக்கவிஞர்கள் முதல் இக்காலத்தில் எழுதும் இளங் கவிஞர்களின் கவிதைகளில் காண இயலும். கபிலர் குறிஞ்சிப் பாட்டைப் பாடும் போது இயற்கைச் சூழலை அவர் சித்தரித்துக் காட்டும் விதம் என்றும் படிப்பவர் நெஞ்சை விட்டு நீங்காதவை.

நிகழ்கால இளங்கவிஞர்களின் கவியாற்றலைப் பாரெங்கும் பறைசாற்றிய பெருமை இதழ்களுக்கு உண்டு இதில் சுதேசமித்திரன் குறிப்பிடத்தக்கது. இந்த இதழ் தொகுப்பில் புதுப்புது இளங்கவிஞர்களும், புகழ்ப்பெற்ற கவிஞர்களும் கவி பாடியுள்ளனர். அயவர்களது கவிதைப் பொருள், கவிதைக் களன் வெவ்வேறாக இருந்தாலும், மாசுமறுவற்ற சூழலைத் தம் மனக்கண்களால் கண்டு அதில் பதிவு செய்ய முயன்றுள்ளனர். சூழலியல் பற்றிய அவர்களது சிந்தனையை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இயற்கை மயக்கம் / காதல் மயக்கம்

பா. வளர்மதி என்ற பெண் எழுத்தாளர் 'மன்னிப்பாய்" என்ற தலைப்பில் எழுதி வெளியிட்டுள்ள கவிதையில், ஒரு பெண் ஆடவனைக் கண்டு, காமுற்று அவன்பால் காதல் கொள்வதாகக் கவிதைப் பொருள் அமைந்துள்ளது. இத்தகைய கவிதையில், இக்கவிஞர் தன் காதல் மயக்கத்தைக் காதல் மயக்கம் என்று நேரடியாகக் கூறாது, மாசற்ற இயற்கைக் கண்டதனால் வந்த ஒரு புதுமயக்கம் என்று கூறி தன் பெண்மையைப் பாதுகாக்கப் முயலுகின்றார்.

இன்று பெரும் நகரங்களில் சூரியன் தோன்றி மறைவதைக்கூட காணமுடியாத அளவிற்கு வானுயற கட்டடங்கள் உருவாகி விட்டன. இயற்கைக் காற்றுக்கும், இயற்கைக்கும் பஞ்சமேற்பட்டு விட்டன. மலர்ந்த மலரிடம் இருக்கும் நறுமணத்தைக் கவர்ந்து வரும் காற்றைக் கற்பனையில் மட்டு:மே கண்டு, மயங்குகின்றார் கவிஞர் இதனை;

“பொழுதாக பொஜதாக வெயில் சாயும்
புதுமலரின் மணம் பரப்பித் தென்றல் தோயும்
....
அழகு மிக்க ஆம்பலைப் போல் சிட்டு ஒன்றின்
அருங்காதல் கண்டதனில் ஈடுபட்டு
எழுதுகின்ற எண்ணம்தான் மறந்தே நானும்
எழிற்காட்சி தனிலொன்றி மயங்கி நின்றேன்”

என்ற கவிதை வரிகள் விளக்கிக்காட்டும். இப்பாடலில் நல்லதொரு பொய்கையும், மாலைப்பொழுதும், காதல் கொண்ட இரு சிட்டுக்களும் மாசற்ற இயற்கையும் மறைந்து போன சூழலை நம் மனத்தினில் ஆழ்த்துக்கின்றார்.

சூழல் பாதுகாப்பு

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க எவ்வளவுதான் முயன்றாலும் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் இன்றும் தள்ளாடுகின்றான். இந்தச் சிந்தனையாக மட்டும் இருந்தால் போதாது ஒவ்வொரு மனிதனுக்கும் வரவேண்டும் என்பதை விட செயலில் இறங்க வேண்டும் என்பதே பொருத்தமானது. சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் காரணிகள் பலப்பல உருவாகிவிட்டன. அவற்றில் மிகவும் கொடுமையானது, வாகனங்கள் கிளப்பி விடும் புகைமலையும், கசிவும், மண்பரப்புமாக இருந்த நம் தமிழகம் இன்று வாகனங்கள் புகையைத் தளிளச் செல்லும் தார்ச்சாலைகளாயின. உயிர் வாழ்க்கைக்கு மிக முக்கியமான காற்றினால் ஆஸ்துமா, ஒவ்வாமை போன்ற பல கொடிய நோய்களுக்கு ஆளாகியுள்ளோம். வாகனங்களைத் தவிர்த்து கால் நடையாகவே பயணம் செய்ய வேண்டும் என்ற உயரிய எண்ணத்தைக் கவிஞர் செந்தாமரை, 'நிலைதிருந்ததேன்? என்ற கவிதையில் ஆழமாகப் பதிவு செய்துள்ளார்.

"அலைந்தேன் அவளின் இடந்தேடி
அலைந்தேன் ஊர்கள் பலகோடி
மலையும் நதியும் பல கடந்தேன்
மணபரப் பெங்கும் மிக நடந்தேன்."

என்பது அக்கவிதை வரிகள். இவற்றின் பொருள் தன் காதலியின் இடம் தேடி அலைந்த காதலனின் நிலைமையைப் பற்றிக் குறிப்பிடுவது. அடுத்த வீட்டுகுச் செல்வதாக இருந்தாலும் வாகனத்தை எடுத்துச் செல்லும் இக்காலக்கட்டத்தில், நடந்தே பல ஊர்களையும், மலைகளையும், நதிகளையும் சென்று தேடியதைக் காணும் போது சூழலைப் பாதுகாக்கும் எண்ணம் மெல்ல இக்கவிதையில் நிழலிடுகின்றது.

இழந்து கட்ட சூழல்

'இதய தாகம்' என்ற கவிதையில் மு. உலகநாதன் என்ற கவிஞர் இழந்து போன தன் காதலின் சோக கதையைக் கவிதையில் குறிப்பிடும் போது, இழ்ந்து போன சுற்றுச்சூழலை மையப்படுத்துகின்றார். இதனை;

"மதிமுளைத்தே ஒளிபரப்பும் உலகில் - என்
மன அரங்கில் இருள்கவியும் நிலைதான்
பொதியவிழ்ந்து மணம் வீசும் மலர்கள் - அப்
பூமணத்தை எவர்நுகர்வார் இந்நாள்?"

என்ற கவிதை வரிகளில் வெளிப்படுகின்றது. செயற்கை மலர்களைக் கண்டே வளர்ந்து வரும் இன்றைய இனம் தலைமுறைக்குச் இயற்கை மலர்களைக் காண்பது அரிது. அதிலும், செடியில் பூத்த மலர்களைக் காண்பதும், அம்மலர் வீசும் நறுமணத்தை நுகர்வதற்கும் அவர்கள் கொடுத்து வைத்தவர்கள் அல்லர். மக்கள் நெரிசலில் மனதும் நசுங்கி போன மனிதர்களுக்குச் செடிகள் வளர்ப்பதற்கும், அவற்றை கண்டு இரசிப்பதற்கும் முடியாமல் போய்விட்டது. மறைந்து போய் கொண்டிருக்கும் இந்தச் சூழலைத்தான் ஏக்கத்தோடு பகிர்ந்து கொள்கின்றார். கவிஞர். மு. உலகநாதன். தென்றல் வீசுவதும், புன்னைமரம் மீதிருந்து குயில் இனிய இசை மீட்டுவதும், நம் மனதில் பதிநதுவிட்டு இயற்கை காட்சி. அவை முற்றிலுமாக அழிந்து போன, அழிக்கப்பட்ட இன்றைய நிலையை நொந்து புலம்புகின்றார்.

தண்ணீர் பிரச்சனை

நிலத்தடி நீரினைக் கொஞ்சம் கொஞ்சமாக குழாய் போட்டுக் காலிசெய்து விட்டோம். இன்று எங்கும் உப்பு நீர் புகுந்து குடிப்பதற்குக் நல்ல நீர் இன்றி வாடுகின்றோம். வற்றாத ஜீவநதிகளின் தேசம் நம் பாரதத்தேசம் இன்று நதிகளில் வீடுகளைக் கட்டி வசிக்க தொடங்கி விட்டோம். நதிகள் வற்றியதால் நிலவளம் சீர்குலைந்து விட்டது. இத்தகவலை 'பகுத்தறிவு' என்ற கவிதையில் கருக்கை கவி.அ.ஆ.சாமி நயம்பட, தாத்தாவும் பேரனும் உரையாடிக் கொள்வதைப் போன்ற பாணியில் குறிப்பிடுகின்றார். இதனை;

"தண்ணிக்குத் தாளம் போட்டுத் தரித்திரமடையும் இந்த
மண்ணிலே வசிக்க எந்தன் மனமது கூடவில்லை"

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன. இந்த கருத்தைக் கருமலைத் தமிழ்சங்கம் தன் கவிதையில் பதிவு செய்கின்றார்.

"ஆயிரமாம் ஆண்டுகளாய்ச் சேர்த்து வைத்த
அடிநீரைக் குழாய் வழியே காலிசெய்தோம்."

என்ற கவிதை வரிகளால் அறிய முடிகின்றது. மேலும், இந்தக் கவிதையில், ஓசோன் படலம்..ஓட்டை விழுவதற்குக் காரணமான நிலையையும் எள்ளல் நடையில் பேசப்படுகின்றது. வேற்றுக்

கிரகங்களைக் காணவேண்டி ராக்கெட் போன்ற வாகனங்களைப் பயன்படுத்துவதினால், அறிவியல் வளர்வது ஒருபுறம் இருந்தாலும், மறுபுறம் சூழல் கெடுவதை இங்குக்கவிதையில் புலப்படுத்துகின்றார்.

“பாட்டனே சொல்லக்கேளு பகுத்தறிவாலே கண்ட
பாட்டமில்லா ராக்கெட்டில் வானத்தில் பறந்து சென்று
தாட்டிகமாக நானும் சந்திரலோக மாந்தர்
கூட்டத்தில் பழகி அங்கே குடித்தனம் நடத்தப் போறேன்”

என்று பாட்டனைப் பார்த்துப் பேரன் ஏளனமாகச் சொல்லும் கவிதை வரிகள் இன்றைய பகுத்தறிவுச் சிந்தனைக்குப் பாதை வகுத்துக் கொடுத்தாலும், அதன் நோக்கம் அழிவை ஏற்படுத்தும் என்பதைப் கவிதை பாட்டன் வாயிலாகப் பாடியுள்ளார். அது,

“ராக்கெட்டில் பயணம் செய்த நாய்குரங் கிவைகளாவி
போக்கிற்று என்று கூறல் பொய்யடா”

இயற்கை வாழ்க

‘பொங்கல் வாழ்க’ என்ற கவிதையில் கோவி.மணிசேகரன் இயற்கையை வாழ்த்தி வரவேற்கின்றார். நல்லதொரு இயற்கைக்கு இவர் வரவேற்பளிப்பதோடு வாழ்த்துதலையும் தெரிவித்துக் கொள்ளும் பாங்கு போற்றற்குரியது. திங்கள் வாழ்க என்றும், நல்லதொரு சூழலைக் கொண்ட தமிழகம் வாழ்க என்றும், அச்சூழலில் வாழ்ந்த இலக்கியங்கள் வாழ்க என்றும் இறுதியில் உழவர்களை வாழ்க என்று வாழ்த்துகின்றார்.

“நெல்லேர் உழவர் வாழியவே
நீல வான் மழை வாழியவே
சொல்லேர் உழவர் வாழியவே
சொல்லும் செயலும் வாழியவே”

என்று கூறி கவிதையை முடிகின்றார். இவ்வுலகின் இடுக்கண்களாகக் கருதப்படுபவர் ‘நெல்லேர் உழவரும் சொல்லேர் உழவரும் என்பதை இங்கு மையப்படுத்துகின்றார். சுற்றுச்சூழலைப் பேணி பாதுகாப்பவர் நெல்லேர் உழவர் என்றால் அவற்றைப் பல தலைமுறைகளுக்கு வழிநடத்திச் செல்பவர்கள் சொல்லேர் உழவர்கள் (புலவர்) என்றால் அது மிகையன்று. நச்சுப்புகைக் கலக்காத நீல வானும், மழையும் நல்லதொரு சூழலுக்குச் சிறந்ததொரு ஆதாரமாகும். அத்தகைய வானையும், மழையையும் வரவேற்று வாழ்த்துகின்றார்.

புவி வெப்பமடைதல்

'மண்ணின் மனம்' என்ற கவிதையில் 'திருவள்ளூர் தாயு' என்ற கவிஞர் காலம் மாசுப் படுவதை மிக நேர்த்தியான முறையில் பதிவு செய்துள்ளார். பொறுமைக்கு எடுத்துக்காட்டாகப் புலவர்கள் பூமியை மேற்கோளாக்கி வந்ததை இக்கவிஞர் சாடுகின்றார். இங்கே பூமியே மக்களைப் பார்த்து, நம் மக்களால் பூமி நாளும் அசுத்தப்படுவதை நேரடியாகவே சாடுகின்றது.

"சகிப்பதற்கில் தீமைகளைச் சீச்சீ! எண்ணிச்
சின்னேரம் என்றுள்ளம் சீறிப் பொங்கித்
தகிக்கின்ற எரிமலையாய் மாறும் தீயைத்
தான் வீசி வீசிப்பெருங் கோபம் கொள்ளும்"

என்ற வரிகளால் அறியமுடிகின்றது. நம் வசதிக்காக நிலத்தைப் பல்வேறு நிலைகளில் பயனுக்குள்ளாக்குவதினால், நிலத்தில் விரிசல்களும் வெடிப்புகளும் தோன்றுகின்றன. பூமியின் இறுக்கத்தன்மையினால், 'பூகம்பம்', 'செம்மண்' போன்ற அழிவுகள் ஏற்படுகின்றன. இவையும் மனிதனின் மிதமிஞ்சிய செயல்பாடுகளினால் தோன்றுகின்றது என்று கூறப்படுகின்றது. இதனைக் கவிதையில்,

"என்றன்மனம் புண்ணாகி யுடலம் ஆடும்.
இங்கதனைப் பூகம்பம் என்பீர் நீவிர்!
கன்றிவிடும் என்றனுடல் கொதிக்கும் வெப்பக்
கடுமூச்சால் கண்டிடும் நீர் 'செம்மண்' என்பீர்"

என்று கூறுவதை அறியமுடிகின்றது. புவி வெப்பமடைதலும் இங்கே கூறப்படுகின்றது. இவ்வாறு மனிதனால் அடிக்கடி பூமி வெப்ப மடைந்தாலும் எவ்வளவுதான் மேகம் குளிர்ந்த நீரைப் பொழிந்தாலும், காற்றினை வீசி வெப்பத்தை தணித்தாலும் இந்த மனிதர்கள் விடுவதாயில்லை. மேலும், மேலும் மண்ணை மாசுபடுத்துவதிலேயே குறியாயிருக்கின்றனர் என்பதை,

"என்மீது இரக்கத்தைக் கொண்ட மேகம்
இனிமை நீர் ஊற்றும் அக்காற்றும் சேரும்
என்னத்தான் அவை என்மேல் தவழ்ந்திட்டாலும்
என்வெப்பம் தணிந்திடுமோ? தணிவதெந்நாள்."

என்ற கேள்வியல் முடிக்கின்றார். புத்தாண்டு வாழ்த்துப் பாடலில் பாலபாரதி ச.து.சு.யோகி என்ற கவிஞர் நல்லதொரு இயற்கைச் சூழலை வரவேற்கின்றார் நமக்குச் சுதந்தரமும் வலிமையும்

ஞானமும் மட்டுமே இருந்தல் போதாது நல்லதொரு இயற்கைச் சூழலும் தேவையென்ற கருத்தைப்,

“பூக்கள் பூத்தன புள்ளினம் பாடின
புன்மைக் காரிருட் பொய்மைகள் ஓடின
தேக்கும் ஞானத் திடமும் வலிமையும்
சேர்க்கும் இன்பச் சுதந்திரம் போற்றுவோம்.”

என்ற பாடலில் ஆழமாகப் பதிவு செய்துள்ளார்.

இவ்வாறு, சுதேசமித்திரன் இதழ் தொகுப்பில் வெளியான 22 கவிதைகளில் கவிதைப் பொருளும், களனும் வேறுவேறாக இருந்தாலும் சுற்றுச்சூழலைப் பற்றிய சிந்தனைகளை ஆங்காங்கே விதைத்து விட்டுச் சென்றுள்ளனர். நல்லதொரு சூழலில் வாழவில்லையென்றாலும் அவற்றை மனப்பதிவு செய்துள்ளார். சூழலியல் பற்றிய கருத்துக்கள் இக்கவிதைகளில் நேரடியாகக் கூறப்படவிலலை என்றாலும், உவமைக் காட்டுவதின் வாயிலாகவும், எள்ளல் முறையிலும் காதல் வெளிப்பாட்டிலும், எதார்த்த நிலையிலும் ஆங்காங்கே வெளிப்பட்டுச் சிறக்கின்றன.

****

